

திருநாரையூர்,
பொல்லாப் பிள்ளையார்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-ஆவது குரு மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

நாள்மங்கல விழாமலர்

துன்முகி - ஐப்பசி 15

31—10—1956.

பதிகயி லாய பரம்பரை நந்திக்குக்
கதிதரும் கல்லாற் கடவுள்உப தேசம்.

வெளியீடு எண் 377.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

மெய்கண்ட சாத்திரம்

(சைவ சித்தாந்தம்)

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-ஆவது குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்
பணித்தருளியவாறு இப் பதிப்பு வெளியிடப்பெற்றது.

உரிமைப் பதிவு] 1956 [தருமபுர ஆதீனம்

முதற் பதிப்பு 1942:
இரண்டாம் பதிப்பு 1956:

பதிப்பாளர் :-

தருமபுர ஆதீனம்
திருக்கடவூர்த் தேவஸ்தானம் கட்டளை விசாரணை
ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

இப் பதிப்பைப் பல பிரதிகளுடன் ஆராய்ந்தவர்:
தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி, முதுபெரும் புலவர்,
வித்துவான்
திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

பதிப்பகம் :
ஞான சம்பந்தம் அச்சகம்,
தருமபுர ஆதீனம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருவேதுணை

அணிந்துரை

'வெளி' என்பது வெள்ளென விளங்கும் பரப்பு. அதை விண், வான், விசும்பு, ஆகாயம் முதலிய பல சொற்களாற் குறிப்பர். அவ்வெளி 1. புறவெளி, 2. அகவெளி, 3. அறிவுவெளி, 4. அருள்வெளி என்று நான்காகும். புறவெளியினும் அகவெளி பெரியது. அதனினும் அறிவும், அதனினும் அருளும் பெரியனவாம். அருள்வெளியே ஏனைய மூன்றினும் பெரியது.

திருவருள் வெளியிலேயே யாவும் உள. 'அருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்' எனின், அதன் பெருமையை யாரே அளவிட வல்லார்?

"விண்ணிறைந்த வெளியாய்என் மனவெளியிற் கலந்தறிவாம்
வெளியி னூடும்
தண்ணிறைந்த பேரமுதாய்ச் சதானந்த மானபெருந்
தகையே நின்பால்
உண்ணிறைந்த பேரன்பால் உள்ளுருகி மொழிகுளறி
உவகை யாகிக்
கண்ணிறைந்த புனல் உகுப்பக்கரமுகிழ்ப்ப நின்னருளைக்
கருத்தில் வைப்பாம்"

(தாயுமானவர். பொருள் வணக்கம். 10)

'சுகாரம்பப் பெருவெளி' (ஷ 1) என்றவற்றில் முன் குறித்த வெளி பலவும் வெளியே. மறைவில்லை.

விண் வெளி மண்ணிலும் நீரிலும் தீயிலும் காற்றிலும் ஊடுருவி நிற்கின்றது. நிற்பினும், வெளிப்படையாகத் தெரிகின்றதோ? மண்ணைக் குடைந்து காண வெளிப் படும். நீருள் முழுக இடந்தரக் காணலாம். தீயிலும் தான் பற்றும் பொருளளவு வெளி உண்டு. தன்பால் அகப்பட்ட பொருட்குப் புறத்தே உலவும் காற்றிலும் அப் பொருளின் அளவு இடங்கொடுத்தது எது? வெளிதானே! அதுவே ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றுன விண் என்னும் மெய்ப் பொருள். அது பரப்பில் மண் முதலிய நான்கன்அளவினும் பெரியது. எல்லா மெய்ப்பொருளும் ஒடுங்கும் முறையில், சிறியது பெரியதில் ஒடுங்கும். தோன்றும் முறையில் பெரியதிலிருந்து சிறியது தோன்றும். அவை மாயையி னின்று தோன்றி ஒடுங்குகின்றன. அம் மாயை தங்கும் இடம் முழுமுதற் பொருளினது மறைப்பாற்றல் (திரோதான சத்தி). அதன் நிலையான வுருவம் திருவருள். திருவருளே உயிர்கட்கு அழுக்கு(மலம்)அகற்றித் தன்னைக் காட்டத் திரோதான சத்தியாகின்றது. திருவருள் கதிரோளியும் திரோ தானம் விளக்கொளியும் போலும்.

அவ் வருள்வெளியிலிருந்து விண்வெளிக்கு உட்பட்ட மண்ணுலகில் வாழும் மக்களுயிர்க்கு ஆசிரியர் வாயிலாக உணர்வு வரும் வழி(பரம்பரை)யே திருக்கைலாய பரம்பரை என வழங்கப் பெறுகின்றது. திருக்கைலாயம் அருள் வெளியில் இறைவன் வீற்றிருக்கும் இடம். அருள்வெளி யாகிய அப்பெருவெளியதே திருக்கைலாயம். மண்ணுலகிற் குத் திருவருள் விளங்கியது எவ்வாறு? அதுதான் அரு ளாறு. அருளாறு (ஞானபரம்பரை)தான் திருக்கைலாய



தருமபுர ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

பரம்பரை. ஞானம் என்றதால் எல்லாம் அப் பரம்பரையே எனத் துணிவர் பிறர். ஞானம் பல வேருய் விளங்குதலின், அப் பல்வேறு ஞானத்துக்கும் முதலாயுள்ள திருவருளாகிய சிவஞான பரம்பரை ஒன்றே திருக்கைலாய பரம்பரை ஆகும். ஏனைய ஞான பரம்பரையேல்லாம் முப்பத்தாறு தத்துவங் களுள் ஒன்ருன காலத்திற்குட்பட்டன ஆதலின், திருக் கைலாயத்தை எட்டிப் பார்க்கும் வன்மையில்லாதன.

திருக்கைலாயத்தில் இறைவன் திருநந்திதேவர்க்குச் சிவநேறியைஒதியருளினுன். அவர்சனற்குமாரமுனிவர்க்கும் அவர் சத்திய ஞான தரிசநிகட்கும், அவர் பரஞ்சோதி மாமுனிகட்கும் அருளினர். அந்நால்வரும் அகச்சந்தான குரவர் ஆவர். அப்பரஞ்சோதி மாமுனிகள் வானத்திற் செல்லுங்கால் மண்ணுலகில் இறங்கி, மேய்கண்டதேவ நாயனுர்க்கு அருளினுர். அவர் சகலாகம பண்டித ராய்த் திகழ்ந்த அருணந்திதேவ நாயனுர்க்கு அச் சிவஞான போதத்தை அருளினுர். அவ்வருளாசிரியர் ‘ சிவஞான சித்தி ’ என்னும் நூலைச் சேய்தருளினுர். அது முதல், ‘ சிவநேறியைச் சிவஞான சித்தி நேறி ’ என்றனர். ‘ சிவஞான சித்திநேறி மவுனுேபதேச குரு ’ என்றருளிய தாயுமானுர் திருவாய்மோழியாலும் அது விளங்கும்.

தருமைத் திருமடாலயத்தின் முதலாசிரியர் குருஞான சம்பந்தர். அவர்க்கு வாய்த்தது அச் சிவஞான சித்தி நேறி. அதனுல் அக் குருபரம்பரை திருக்கைலாய பரம்பரை என்பது நன்கு விளங்கும். இவ்வுண்மையைச் சிவஞானுநுபவம் உடையவரே உணர வல்லார். நூலறிவு மட்டும் உடையவர், வேறு எல்லாம் அறிய வல்லராயிருப் பினும், இவ்வுண்மையை உணர வல்லராதல் அரிது. நூல் மரபு வேறு. உபதேச மரபு வேறு.

"... ... ... முன்னாள்
இறைவன் அரு ணந்திதனக் கியம்ப நந்தி
கோதில் அருட் சனற்குமா ரற்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன்கொண்டு
தீதகல எமக்கு அளித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே"

என்று அருணந்திதேவ நாயனார் அருளியது கொண்டு திருக்கைலாய பரம்பரையின் உண்மையைத் தெளியலாம். 'அவ்வழி' 'ஞானநூல்' 'குருநாதன் கொண்டு அளித்த நூல்' என்றவை சிவஞான பரம்பரையை விளக்கி நிற்றல் அறிக.

அத்துவிதம் கூறும் சமயம் சிற்சிலவே. அவற்றுள், திருக்கைலாய பரம்பரையின் விளங்கும் அத்துவிதமே சுத்தம். அதனால் அது 'புனிதமேனும் அத்துவிதமெய்' எனப்பட்டது. படவே ஏனையர் அத்துவிதம் யாது எனலும் ஏனையர் கண்டதும் காணாததும் யாவை எனலும் தாமே புலனாம். ஆகவே, 'பொய்கண்டார் காணாப் புனிதமேனும் அத்துவித மெய்கண்டநாதன்' என்னும் உண்மைச் சீர்த்தி யுடையவராய் அவர் விளங்குவதில் யாதுதடை? அதுமுதல் சிவநெறியில் தோன்றிய அருள் நூல்களை 'மெய்கண்ட நூல்கள்' என்று உணர்வுடையோர் வழங்கி வந்தனர். அவ்வழக்கமே இன்றும் 'மெய்கண்ட சாத்திரம்' என்பதற்கு ஏதுவாயிற்று.

இம் மெய்கண்ட சாத்திரப் பதிப்பு, தருமையாதீனத்தின் வெளியீடுகளுள் 52-ஆவதாய் இருப்பினும் இரண்டாவது முறையாய் வெளிவருகின்றது. முதற்பதிப்பு, அடியேனை யும் ஆதீனப் புலவரென ஆட்கொண்டருளிய இருபத்து



தருமபுர ஆதீனம் 25-ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

நான்காவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையினுல் வெளிவந்தது. அது கிடைத்தற்கு அரிதாயிற்று, அதனுல் அப்பெருமானுர் திருவடி மரபில் வந்து சிறந்து விளங்கும் இருபத்தைந்தாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், 2-ஆவது முறையாகப் பதிப்பிக்க அருளினுர்கள். இப்பதிப்பு, சைவருலகிற்குச் சாலப்பயன் அளிக்கும். அப்பயன் அடையும் அனைவருமே இக்குரு நாதரை மறவார் ஆயின், அடியேனே மறப்பேன்? இக்குரு மணியின் பெருங்கருணை, ஆரணியிலிருந்தேனை இஞ்ஞான புரியில் இருத்தியது. பல்கலைக் கல்லூரியிற் பேராசிரியர் ஆக்கியது. 'ஞானசம்பந்தம்' அருளித் துணையாசிரியராக நியமித்தது. கல்லூரித் தலைமையைத் தந்தது. இவை எல்லாவற்றினும் சிறந்தது என்று அடியேன் உள்ளம் இன்பப் பெருங்கடலுள் திளைக்கும்படி, இம் மெய்கண்ட சாத்திரப் பதிப்பில் ஈடுபடுத்தியது. இத்தனையும் அருளிய அத்தனும் அச் சொக்கலிங்க மூர்த்திக்கு எத்தனை நன்றியுடையேனே அறியேன்.

வாழ்க அவர் திருவடி மலர்கள். வயங்குக மடாலயங்கள். வளர்க சிவநேறி. வழங்குக மெய்கண்ட சாத்திரம். ஆழ்க தீயது. அரன் நாமமே சூழ்க எல்லா (வுயிர்களு)ம்.

அடியார்க்கு அடியன்,

தருமையாதீனம்,
25—10—1956.

முத்து. சு. மாணிக்கவாசகன்.

PREFACE.

The Fourteen Siddhantha Shastras are the most authoritative works expounding the Saiva Siddhantha System of philosophy. They belong to the 12th, 13th, and 14th centuries of the Christian Era. The first of them, *Tiruvunthiyar* is a short and cryptic work of Tiruviyalur Uyyavandadeva Nayanar written in 1147 A. D. It is composed in a very attractive metre, which children employ while singing to the butterfly and contains several philosophic maxima in mystic language. The style reminds one of the prince of mystics St. Tirumoolar. The next work, *Tiru-kalittru-ppadiyar* is the work of Tirukadavoor Uyyavandadeva Nayanar, written in 1117 A. D. It follows Tiruvunthiyar faithfully, and explains in a fuller measure. the aphorisms of the earlier work. These two works are in a way, the precursors of Meikanda Deva's classical and immortal work.

The most important of the fourteen group is undoubtedly Meikanda Deva's *Sivagnana Bodham.* The Life of Meikanda Deva and the origin of his work are too well known to need repetition. He belonged to the first half of the 13th century A. D. In recent times, a good deal of research has been directed to the

question, whether Meikanda Deva is an original author or a mere translator. The older orthodox view seems to be that he found the original in twelve sanskrit sutras of the Raurava Agama, while the modern view holds that there is considerable disparity between the sanskrit sutras and his own sutras and vital difference in many essential aspects. A decision on this question, acceptable to all parties, has yet to be made.

Meikanda Deva stands at the head of the *Santhana Paramparai*. His preceptor, St. Paranjothi is the last link in the Celestial Chain (called the Aghachandanam). Arulnandi Sivacharya, who was Meikanda's father's family preceptor, became the cheif disciple of Meikanda Deva. His elaborate treatise, the *Sivagnana Siddhiyar* deals exhaustively with the tenets of other systems of philosophy, refutes the conclusions which they adumbrate, sets out in great detail the doctrines if the Saiva Siddhantha System, and takes care to answer all the criticisms which could possibly be levelled against them. It is thus a very valuable piece of polemical literature.' Arulnandhi Sivacharya is also the author of the *Irupa Irupahthu* which contains many eulogistic references to his master.

Among the forty-nine disciples of Meikanda Deva was one Manavachakam Kadanthar of Tiruvathikai. whose book called the *Unmai Vilakkam* ranks as the

sixth of the series. It is a manual which catalogues the tatwas, deals with the Panchakshara as embodied in the Nataraja idol, and the way to salvation.

Umapathy Sivacharya, one of the traditional-three-thousand-priests of the Chidambaram Temple is a prolific author who accounts for the remaining eight of the series. These eight go by the collective name of *Siddhantha Ashtakam*. Of these *Sivaprakasam* stands foremost, and *Tiruvarul Payan* and *Sankalpa Nirakaranam* come next; *Vinavenba, Pottrippahrodai, Kodikkavi, Nenjuviduthoothu, and Unmainerivilakkam* are the remaining five. These five are small pieces dealing with some special aspects of the system. There is a tradition about the occasion for singing the Kodikkavi. The author gives the saka year for the composition of *Sankalpa Nirakaranam* as 1235 from which its date has been calculated as 1313 A. D.

Of these fourteen shastras, Sivagnana Bodham, Sivagnana Siddhiyar and Sivaprakasam are the three mostly studied and referred to by other authors. They form a class by themselves and are respectively called the Primary, the Secondary, and the Derivative (முதல், வழி, சார்புநூல்கள்), and it is for these three works that we find several commentaries. Of all the commentaries on the Sivagnana Bodham the best is the Bashyam of Sivagnana Swamigal. An unpublished commentary on the Sivagnana Siddhiyar called the

*"Gnanabbharanavilakkam" by Sri-la-Sri Velliambalavana Munivar of the Dharmapuram Mutt is the most exhaustive treatise based on this work. The best commentary on the Sivaprakasam is that of Sivaprakasa Swamigal of Madurai.

Let us now pass on to consider some of the eternal truths which the fourteen shastras teach us. From very ancient times, man has studied the environments around him, postulated the existence of God, listed His actions and attributes, discussed the relationship of the Universe unto Himself, and prayed to God to bless him with eternal happiness. All men are not alike, so are their thoughts and conclusions. We therefore find considerable divergence of opinion on several of these fundamental matters. The fourteen shastras divide the Universe into three eternal categories Pati, Pasu and Pasa. They co-exist for all times. Of these Pati or God has two aspects, the transcendental and the immanent. He has eight attributes namely self control, purity, intuition, omniscience, freedom, grace, omnipotence, and happiness. All these are perfect and absolute in Him. He is the Supreme Lord of the Universe and the Supreme Regulator of the destinies of the soul. He is the Supreme Director of the Panchakrityas or the five great cosmic actions (Creative Evolution, Protection, Transformative Extinction, Involution and Blissful Absorption). In all these

*The Work is in Press.

actions He is indissolubly united to Shakti. He is the Efficient Cause, His Shakti is the Instrumental Cause, and Maya the Material Cause. This theory of causation is based on Sata-Karyavadha and differs from other theories like the Maya-vadha and the Ekatmavadha.

The soul is as perennial as God Himself. It has five stages of consciousness called the Jagratha, the Swapna, the Sushupti, the Turiya, and the Turiya-theetha. In these stages, it is related to the 96 tatwas in various groups. The soul is called Pasu because it is in immemorial bondage. Deliverance from this bondage is the working of Pasa which is subdivided into Anava, Karma, and Maya. These are the three malas or impurities. Anavamala is the root cause of the soul's misery and is also called the Moola Mala. It may, in a way, be likened to the instinct of self-assertion found in the human and other species of creation. Maya is the great cosmic illusion and karma is the chain of action and reaction. Though all the three are bonds or bandhas, they differ among themselves in this way that Anava is Pratibandha (the Inimical Bond), Maya is Sambandha (the allied Bond), and Karma is Anubanda (the Appendix Bond). When these bonds fall off, the soul passes through three definite stages viz., Iruvinai-oppu or Samatwa Buddhi, Malaparibhaga and Saktini-padha, and becomes a Jeevanmukta and attains Sayujya.

There are four well defined processes by which the above results are achieved in easy grades. These

processes are known as Charya, Kriya, Yoga, and Gnana. Each of these has four sub-divisions bearing these very names. These sixteen grades, like the steps of a ladder, are discussed in detail and the benefits which the soul derives from them are clearly defined. The company of salved souls, the wills desires and actions of such souls, and the ways in which God bestows His grace on them are all clearly set. out The essence of Panchakshara or the holy Five Letters, the methods of chantation and their effect on the soul and its encasement are all set out in great detail, in such a way, that it takes one's breath away.

The importance of a spiritual preceptor, the indispensable necessity for his initiation and upadesa, and the methods which he adopts are fully described and none is left in doubt as the futility of unaided self-endeavour.

These and hundreds of other matters are found in the Fourteen Shastras. They represent the cream of Tamilian thought and Tamilian self realisation. They are unique in several respects and go far beyond the limits which other well known systems have reached.

The Dharmapuram Adheenam deserves the grateful thanks of the saivite world for bringing out this bare text edition of the *Fourteen Shastras* and for marking a very low price for the book in these troublous times of paper scarcity. The present head of the Mutt is

doing his level best for the propagation of the Saiva-faith in all possible ways. The series of publications which has seen the light of day, since the ascent of His Holiness Sri - la - Sri Shunmuga Desika Gnanasambanda Paramacharya Swamigal on the holy gadi of the Dharmapuram Adheenam Mutt, has served to dispel darkness in the minds of hundreds of saivites and has flooded them with the light of the Lord The present publication will rank along with these and occupy a very prominent place.

May the authors of the Fourteen Shastras and the Lord whose grace they abound in, bless all the readers of this book and bestow on them the choicest favours. May peace prevail in every quarter of the Globe.

Om Shanti ! Shanti !! Shanti !!!

Mylapore, 5—12—42.

M. Balasubrahmanya Mudaliar, (B. A., B. L.,)
Advocate & Honorary Secretary of
The Madras Saiva Siddhantha Mahasamajam.

போய்கண்டார் காணப் புநிதமேனும் அத்துவித
மேய்கண்ட நாதன்அருள் விளங்குந் திருக்கோலம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருவியலூர் உய்யவந்ததேவ நாயனுர்

அருளிச்செய்த

1. திருவுந்தியார்

அகளமா யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததேன் றுந்தீபற
   தானுகத் தந்ததேன் றுந்தீபற. 1

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
உழப்புவ தேன்பேணே உந்தீபற
   ஒருபொரு ளாலேயேன் றுந்தீபற. 2

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாராரேன் றுந்தீபற
   பிறப்பிறப் பில்லையேன் றுந்தீபற. 3

[1]இங்ஙு னிருந்ததேன் றேவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ங னிருந்ததேன் றுந்தீபற
   அறியும் [2]அறிவதன் றுந்தீபற. 4

---

[1]எங்ஙன். [2]அறிவதேன்று.

ஏகனு மாகி அநேகனு மானவன்
நாதனு மானனென் றுந்தீபற
நம்மையே ஆண்டானென் றுந்தீபற. 5

நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே [1]தந்தானென் றுந்தீபற. 6

உள்ளம் [2]உருகில் உடனுவர் அல்லது
தேள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற. 7

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தே[3]செல்க உந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற. 8

ஆக்கில்அங் கேயுண்டாய் அல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் [4]பரமதன் றுந்தீபற
[5]பாவனைக் கெய்தாதென் றுந்தீபற. 9

அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற. 10

தாக்கியே தாக்காது நின்றதோர் [6]தற்பரம்
நோக்கிற் குழையுமென் றுந்தீபற
[7]நோக்காமல் நோக்கவென் றுந்தீபற. 11

---

1 தந்ததென்று. 2 உருகி. 3 செல. 4 பரமதென்று. 5 பாவனைக் கெய்தான். 6 தற்பரன். 7 நோக்காமை நோக்குமென்று.

மூலே யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பேரியரேன் றுந்தீபற
தவத்தில் தலேவரேன் றுந்தீபற. 12

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவம் உந்தீபற
தேடும் [1]இடமதன் றுந்தீபற. 13

கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை யுடனேநின் றுந்தீபற
உன்னேயே கண்டதேன் றுந்தீபற. 14

பற்றை அறுப்பதோர் பற்றிணப் பற்றில்அப்
பற்றை அறுப்பரேன் றுந்தீபற
[2]பாவிக்க வாராரேன் றுந்தீபற. 15

உழவா துணர்கின்ற யோகிகள் ஒன்ருேடுங்
[3]தழுவாமல் நிற்பரேன் றுந்தீபற
[4]தாழ்மணி நாவேபோல் உந்தீபற. 16

திருச்சிலம் போசை ஒலிவழி யேசென்று
நிருத்தனேக் கும்பிடேன் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற. 17

மருளுந் தேருளும் மறக்கும் அவன்கண்
அருளே [5]மறவாதே உந்தீபற
அதுவேயிங் குள்ளதேன் றுந்தீபற. 18

---

[1]இடமதேன்று. [2]பாவிக்கில் வாராதேன்று. [3]தழுவாது. [4]தாழ்ந்த மணிநாப்போல். [5]மறவாதேன்று. 14, 15 ஆம் பாட்டுக்கள் பிரதிகளில் முன் பின்ஞக மாறியிருக்கின்றன.

கருத்துவ தன்[1]முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனேன் றுந்தீபற
உன்ன அரியனேன் றுந்தீபற. 19

இரவு பகலில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற. 20

சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்கு
அல்லனும் ஆனுனேன் றுந்தீபற
அம்பிகை பாகனேன் றுந்தீபற. 21

காற்றினை மாற்றிக் கருத்தைக் [2]கருத்தினுள்
[3]ஆற்றுவ தாற்றலேன் றுந்தீபற
[4]அல்லாத தல்லலேன் றுந்தீபற. 22

கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமேன் றுந்தீபற
வீடும் எளிதாமேன் றுந்தீபற. 23

எட்டுக்கொண்டார் தமைத் தொட்டுக்கொண் டேநின்றார்
விட்டார் உலகமேன் றுந்தீபற
வீடேவீ டாகுமேன் றுந்தீபற. 24

சித்தமுந் தீய கரணமுஞ் சித்திலே
ஒத்ததே ஒத்ததேன் றுந்தீபற
ஒவ்வாத தொவ்வாதேன் றுந்தீபற. 25

---

[1] முன்னங். [2] கருத்தினில். [3] ஆற்றுதல். [4] அல்லாத தல்லா தென்று.

உள்ளும் புறம்பும் [1]நினைப்பறில் உன்னுள்ளே
மோள்ளா அமுதாமேன் றுந்தீபற
முளையாது பந்தமேன் றுந்தீபற. 26

அவிழ இருக்கும் [2]அறிவுடன் நின்றவர்க்கு
அவிழும்இவ் வல்லலேன் றுந்தீபற
அன்றி அவிழாதேன் றுந்தீபற. 27

வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களேன் றுந்தீபற
[3]பேறுவதங் கேன்பேணே யுந்தீபற. 28

சோல்லும் இடமன்று சோல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக்கேன் றுந்தீபற
என்றால்நாம் என்சேய்கோம் உந்தீபற. 29

வீட்டில் இருக்கிலேன் நாட்டிலே போகிலேன்
கூட்டில்வாள் சார்த்தி[4]நின் றுந்தீபற
கூடப் படாததேன் றுந்தீபற. 30

சாவிபோம் மற்றைச் சமயங்கள் [5]புக்குநின்று
ஆவி [6]யருதேயேன் றுந்தீபற
அவ்வுரை [7]கேளாதே உந்தீபற. 31

துரியங் கடந்தஇத் தோண்டர்க்குச் சாக்கிரந்
துரியமாய் நின்றதேன் றுந்தீபற
[8]துறந்தார் அவர்களேன் றுந்தீபற. 32

---

1 நினைப்போழியினுள்ளே, நினைப்பறின்நின்னுள்ளே, நினைப் போழியில் உன்னுள்ளே, 2 அறிவுடையார்கட்கு. 3 பேறுவ திங்கு. 4 என்று. 5 புக்கிருந்து. 6 அருததேன்று. 7 கேளாதேன்று. 8 துறத்தார்.

பெற்றசிற் றின்பமே [1]பேரின்ப மாம்அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது [2]பந்தம்என் றுந்தீபற. 33

பேரின்ப மான பிரமக் கிழத்தியோடு
ஓரின்பத் துள்ளானேன் றுந்தீபற
உன்னையே [3]ஆண்டானேன் றுந்தீபற. 34

பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டாரேன் றுந்தீபற
காணுதார் காணுரேன் றுந்தீபற. 35

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாமேன் றுந்தீபற
நாதற் கிடமதேன் றுந்தீபற. 36

சென்ற நெறியெல்லாஞ் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற
[4]நீசெயல் [5]செய்யாதே உந்தீபற. 37

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற. 38

அதுஇது [6]என்னு தனைத்தறி வாகும்
அதுஇது என்றறிந் துந்தீபற
அவிழ்ந்த [7]சடையாரேன் றுந்தீபற. 39

---

[1]பேரின்பமாய். [2]மாயை. [3]ஆண்டதேன் றுந்தீபற.
[4]நீசில. [5]செல்லாதே. [6]என்னு. [7]சடையான்.

அவனிவ னுன[1]தவனருளா லல்லது
இவனவ னுகானென் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற. 40

முத்தி [2]முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழ முண்ணுதே உந்தீபற. 41

அண்ட [3]முதலாம் அனைத்தையும் உட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே உந்தீபற
[4]குறைவற்ற செல்வமென் றுந்தீபற. 42

[5]காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற. 43

சிந்தையி னுள்ளும்என் சென்னியி னுஞ்சேர
வந்தவர் வாழ்கவென் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற. 44

வைய முழுதும் மலக்கயங் கண்டிடும்
உய்யவந் தானுரை உந்தீபற
உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற. 45

---

[1]அவனருளல்ல(து). [2]முதற்கொடி. [3]முதலாய். [4]குறைவற நின்றதென்று, குறைவற்று நிற்றதென்று. [5]காயத்து.

திருவுந்தியார் கருத்துள்ள திருக்களிற்றுப்படியார் திருவெண்பாக்கள்

உந்தியார்	களிற்றுப்படியார்	உந்தியார்	களிற்றுப்படியார்
1	4 - 5	23	42 - 43
2	6 - 7	24	44 - 45
3	8	25	46 - 50
4	9 - 10	26	51 - 52
5	11	27	53 - 56
6	12 - 13	28	57
7	14 - 21	29	58 - 62
8	22	30	63 - 64
9	23 - 24	31	65 - 68
10	25	32	69 - 75
11	26	33	76
12	27 - 28	34	77
13	29	35	78 - 79
14	30	36	80 - 81
15	31	37	82 - 83
16	32	38	84
17	33	39	85 - 91
18	34	40	92
19	35	41	93 - 94
20	36 - 37	42	95 - 96
21	38 - 40	43	97 - 99
22	41	44	100

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனுர்

அருளிச்செய்த

2. திருக்களிற்றுப்படியார்

அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் - அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் [1]நிற்பார் அவர். 1

தம்மில் தலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மில் தலைப்படுதல் தாமுணரின் - தம்மில்
நிலைப்படுவர் ஒரிருவர் நீக்கிநிலை [2]யாக்கித்
தலைப்படுவர் தாம்அத் தலை. 2

என்னறிவு சென்றளவில் யானின்று அறிந்தபடி
என்னறிவி லாரறிக என்றுருவன் - சொன்னபடி
சொல்லக்கேள் என்றுருவன் சொன்னுன் எனக்கதனைச்
சொல்லக்கேள் யானுனக்குச் சொல். 3

---

[1]நிற்பர். [2]ஆக்கில், ஆகத்.

அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போல்உலகில் தங்கி - நிகளமாம்
ஆணவ மூல மலம்அகல [1]ஆண்டனன்கண்
மாணவக என்னுடனும் வந்து. 4

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே யுணர்வெங்கே - பாகத்து
அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு. 5

சாத்திரத்தை [2]ஓதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே [3]வாய்க்குநலம் [4]வந்துறுமோ - ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் [5]தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு. 6

இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்தும் [6]நீக்குவதிங் - கென்றால்
உருவுடையான் அன்றே உருவழியப் பாயும்
உருவருள வல்லான் [7]உரை. 7

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவரே
[8]அண்டத்தின் அப்புறத்த தென்றதே - அண்டத்தின்
அப்புறமும் இப்புறமும் ஆறிவுஞ் சென்றறியும்
எப்புறமும் கண்டவர்கள் இன்று. 8

---

[1]ஆண்டான்காண். [2]ஓதவே. [3]வாய்த்தவளம். [4]வந்துறுமே. [5]தணிந்திடுமே. [6]நீங்குவதெங்கு, நீக்கினதாங்கு. [7]உணர். [8]அண்டத்ததப்புறத்தது.

அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனுகிச்
[1]சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றதிலை - இன்றிதனை
[2]யிவ்வா றிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது. 9

ஒன்றுங் குறியே குறியாத லால்அதனுக்
கொன்றுங் குறியொன் றிலாமையினுல் - ஒன்றோ
டுவமிக்க லாவதுவுந் தானில்லை [3]ஒவ்வாத்
தவமிக்கா ரே[4]யிதற்குச் சான்று. 10

ஆற்ருல் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றிஅவ் வாற்ருன் மறித்தாற்போல் - தோற்றிப்
புலன்களெனப் போதம் [5]புறம்பொழியும் நந்தம்
மலங்களற மாற்றுவிக்கும் வந்து. 11

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனைஅன் றேவிக் கராங்கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண். 12

தூங்கினரைத் [6]தூய சயனத்தே விட்டதற்பின்
தாங்களே சட்ட உறங்குவர்கள் - ஆங்கதுபோல்
ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதற்பின் அப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார். 13

உள்ள முதலனைத்தும் [7]ஒன்ற ஒருவவரில்
உள்ளம் உருகவந் [8]துன்னுடனும் - தெள்ளி
உணருமவர் தாங்கள் [9]உளராக என்றும்
[10]புணருமவ னில்லாப் பொருள். 14

---

[1]சென்றவர்க்குள். [2]எவ்வாறு. [3]ஓவாத். [4]அதற்குச். [5]புறம்பொழியில். [6]துய்ய. [7]ஒன்ற உருகவரில், ஒன்ற உருக வரும், ஒன்ருய் உருகவரின். [8]துன்னிடனும். [9]உளராகில். [10]புணருவானில்லாப்.

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் [1]நானழியும் - வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே [2]தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு அரன். 15

மேல்வினையே யென்ன [3]வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டும் - சொல்லிற்
சிவதன்மம் [4]ஆம்அவற்றிற் சென்றதிலே [5]செல்வாய்
பவகன்மம் நீங்கும் படி. 16

ஆதியை [6]அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் [7]செய்வனவும் - வேதியனே
நல்வினையாம் [8]என்றேம் நமக்கும்எளி தானவற்றை
மேல்வினையே என்றதுநாம் வேறு. 17

வரங்கள்தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினுல் அன்றுகறி யாக்க - இரங்காதே
கோல்வினையே செய்யுங் கோடுவினையே [9]யானவற்றை
வல்வினையே என்றதுநாம் மற்று. 18

பாதக மேன்றும் பழியேன்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் - சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலால் தான். 19

---

[1]நானழிய. [2]தலைப்படுவன். [3]வியனுள்ளார்கட்கரிய, வியனுலகுளோர்க்கரிய. [4]ஆகுமிதிற், ஆமதினிற். [5]செல்வார். [6]அர்ச்சித்தாறங்கமும். [7]செப்பினவும். [8]இன்று. [9]யானதனை. 19 ஆம் பாட்டு பிரதிகளில் முன் பின்னுக மாறியிருக்கின்றது.

செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐய இதுஅமுது [1]செய்கென்று - பையவிருந்து
ஊட்டி அறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை
நாட்டியுரை [2]செய்வதென்னோ நாம். 20

செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டார் - ஐயா
உழவும் [3]தரிசும் ஒருமுகமே யானால்
இழவுண்டோ சொல்லாய் [4]இது. 21

ஆதார யோகம் நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே - ஆதாரத்து
ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருளாம் ஒன்று
ஆக்காப் பொருளேஒன் றும். 22

ஆக்கி ஒரு[5]பொருளை ஆதாரத் தப்பொருளை
நோக்கி அணுவில் அணு[6]நெகிழப் - பார்க்கில்
இவனுகை [7]தானொழிந்திட் டேகமாம் ஏகத்து
அவனுகை ஆதார மாம். 23

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற்
[8]கொண்டவனும் அப்பரிசே கூறுபடும் - கொண்ட
இருபொருளும் [9]அன்றியே இன்னதிது [10]என்னாது
ஒருபொருளே யாயிருக்கும் உற்று. 24

---

[1]செய்கவெனப். [2]செய்வதே. [3]தனுசும், தனிசும். [4]இதற்கு. [5]பொருளா. [6]நிகழப் பார்க்கில், நிகழப் பார்க்க. [7]காணொழிந்திட்டு. [8]கொண்டதுவும். [9]இன்றியே. [10]என்ன. 20 ஆம் பாட்டு பிரதிகளில் முன் பின்னாக மாறியிருக் கின்றது.

அஞ்சேழுத்து மேஅம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்சேழுத்தை ஆருகப் [1]பேற்றறிந்தே - அஞ்சேழுத்தை
ஒதப்புக் குள்ள மதியுங் கேடில்உமைகோன்
கேதமற [2]வந்தளிக்குங் கேள். 25

ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினிலும்
தாக்கித்தான் ஒன்ருேடும் தாக்காதே - நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனுய்
[3]நிற்கை நிராதார மாம். 26

காண்கின்ற தோர்பொருளேக் காண்கின்ற யோகிகளே
காண்கின்ருர் காட்சியறக் கண்ணுதலைக் - காண்கின்ருர்
காண்பானுங் காணப் படும்பொருளும் [4]அன்றியே
காண்கையினுற் கண்டனரோ காண். 27

பேசாமை பேற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் - பேசாதே
எண்ணுென்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்
உண்ணின்றும் போகான் உளன். 28

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற இடஞ்சிவமாம் - [5]நாட்டற்று
நாடும் பொருளனைத்தும் நானு விதமாகத்
தேடுமிடம் அன்று சிவம். 29

[1]பெற்றிருந்தும், பெற்றிருந்தவ். [2]வந்தளிப்பன். [3]நிற்க. [4]இன்றியே. [5]நாட்டுற்று. 25, 26 ஆம் பாட்டுக்கள் பிரதிகளில் முன் பின்னுக மாறியிருக்கின்றன.

உணராதே யாதும் உறங்காதே [1]உன்னிப்
புணராதே நீபோதுவே நிற்கில் - உணர்வரிய
காலங்கள் செல்லாத [2]காலத்துடன் இருத்தி
காலங்கள் மூன்றினையும் கண்டு. 30

பற்றினுட் பற்றைத் துடைப்பதோரு பற்றறிந்து
[3]பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற - [4]பற்றதனைப்
பற்றுவிடில் அங்நிலையே தானே பரமாகும்
[5]அற்றமிது சொன்னேன் [6]அறி. 31

அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்று
அறிவின் அறிவவிழ்த்துக் கொண்டவ் - வறிவினராய்
வாழ்ந்திருப்பர் [7]நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான். 32

ஓசையெலாம் அற்றல் ஒலிக்குந் திருச்சிலம்பின்
ஓசை [8]வழியேசென் ருேத்தொடுங்கின் - [9]ஓசையினின்
அந்தத்தா னத்தான் அரிவையுடன் அம்பலத்தே
[10]வந்தோத்தா னத்தான் மகிழ்ந்து. 33

‡சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
[11]சார்புணர்தல் தானே தியானமுமாம் - சார்பு
கெடவொழுகல் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று. 34

---

[1]உன்னிற். [2]காதலுடன். [3]பற்றைப். [4]பற்றதனிற் பற்றிவிடில். [5]மற்றம், மற்றும். [6]மதி. [7]நீத்தவர்கள். [8]வழிச்சென்றங் கோத்தொடுங்கின். வழியோற்றிச் சென்ருேத்தொடுங்கில். [9]ஓசையுடன். [10]வந்தத்தானத்தான். [11]சார்புணரத். சார்புணர்வு. 30, 31ஆம் பாட்டுக்கள் பிரதிகளில் முன் பின்னுக மாறியிருக்கின்றன. ‡ குறள் மெய்யுணர்தல் 9.

அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யே[1]நிற்க முன்னிற்கும் - சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு. 35

உண்டேன்னில் உண்டாகும் இல்லாமை இல்லையேனில்
உண்டாகும் ஆனமையில் ஓரிரண்டாம் - உண்டில்லை
என்னும் [2]இவைதவிர்ந்த இன்பத்தை எய்தும்[3]வகை
உன்னில்அவன் உன்னுடனே யாம். 36

தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல [4]உடம்பாம் முதல்நான்கும் - மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் [5]பரிசறுப்பார் பார். 37

எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர்கோட் பாடுடைய
அத்தனையும் சென்றங்(கு) அளவாதே - சித்தமேனும்
[6]தூதுதனைப் [7]போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார். 38

சாம்[8]போழுதில் ஏதும் சலமில்லை சேத்தாற்போல்
ஆம்போழுதி லேஅடைய ஆசையறில் - [9]சோம்பிதற்குச்
சோல்லுந் [10]துணையாகும் சோல்லாத தூய்நேறிக்கட்
சேல்லும் துணையாகும் சேன்று. 39

---

[1]நிற்கில். [2]அவை. [3]நிலை என்னில் அவனுடனே. [4]உடம்பாய. [5]துரிசறுப்பார். [6]தூதுவனைப். [7]போக்கிற்போய்த். [8]போழுதும். [9]சோம்பு. [10]துணையாகச்.

[1]வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
*வேண்டின்அஃ தோன்றுமே வேண்டுவது - வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால். 40

அரண உணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றில்
கரணமும் காலும்கை கூடும் - புரணமது
கூடாமை யுங்கூடும் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து. 41

இன்றிங் கசேதனமாம் இவ்வினைகள் ஓரிரண்டும்
சென்று [2]தோடருமவன் சென்றிடத்தே - என்றுந்தான்
[3]தீதுறுவன் ஆனல் [4]சிவபதிதான் கைவிடுமோ
மாதோருகூ றல்லனே மற்று. 42

அநாதி சிவனுடைமை யால்எவையும் ஆங்கே
அநாதி யெனப்பெற்ற அணுவை - அநாதியே
ஆர்த்த துயரகல அம்பிகையோடு எவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண். 43

தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பாம் மஞ்சனநீர் தாமாட்டித் - தம்மையோரு
[5]பூவாக்கிப் [6]பூவழியா மற்கோடுத்துப் பூசித்தால்
[7]ஓவாமை யன்றே உளன். 44

---

[1]வேண்டும். [2]தோடருமிவன். [3]தீதோருவன். [4]சிவாபதி. [5]பூவாகப். [6]பூவழியாதே, பூவோழியாதே. [7]ஓவாதேயாங்கே உளன்.

*குறள் - அவாவறுத்தல் 2.

தன்னைப் பெறுவதன்மேற் பேறில்லைத் தானென்றும்
தன்னைத்தான் பெற்றவன்தான் ஆரேன்னில் - தன்னாலே
எல்லாந்தன் னுட்கோண்டு கோண்டதனைக் கோள்ளாதே
எல்லாமாய் நிற்கு மிவன். 45

துன்பமாம் எல்லாம் [1]பரவசனாய்த் தான்துவளில்
இன்பமாம் [2]தன்வசனா யேயிருக்கில் - என்பதனால்
நின்வசனா யேயிருக்கில் [3]நின்னுடனும் நேரிழையாள்
தன்வசனா யேயிருப்பன் தான். 46

சேத்தாரே கேட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ
டோத்தாரே யோக[4]பர ரானவர்க - ளேத்தாலு
மாராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் சேல்வர்அதன் பின். 47

கண்ணுங் கருத்துங் கடந்ததோரு பேறேயுங்
கண்ணுங் கருத்துங் களிகூர - நண்ணி
வடமடக்கி நிற்கும் வடவித்தே போல
உடனடக்கி [5]நிற்பர்கா ணுற்று. 48

வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்போருளை
யூனகத்தே யுன்னுமதே [6]னேன்றனையேல் - யானகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்[7]முதலா
வாதனமே யன்றோ வதற்கு. 49

---

[1]பரவசமாய்த். [2]தன்வசமாய்த், தன்வசனாய்த்தானிருக்கில். [3]நின்வசமாம். [4]பராரானார். [5]நிற்பர்கள். [6]என்றமையால். [7]முதலாம்.

கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் - [1]சொல்லு
மகமார்க்கத் தாலவர்கண் மாற்றினர்கா ணையா
சகமார்க்கத் தாலன்றே தான். 50

உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினொடுங் - தெள்ளி
அறிந்தொழிவா யன்றியே யன்புடையை [2]யாகிச்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய். 51

†கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பினைக் - கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்று
[3]யாமறியு மன்பன் றது. 52

அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
அவிழ்ந்த மனத்தா லவிழ்க்க - வவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல். 53

சுரந்த திருமுலைக்கே துய்ய[4]சிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு. 54

---

[1]சொல்லில். [2]ஆயின். [3]ஆரறியும். [4]திருஞானம்.

†திருவாசகம். திருக்கோத்தும்பி. 4.

அன்பேயேன் னன்பேயேன் றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழியு - மன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்வதெல்லாஞ்
[1]சார்த்தும் பழமன்றே தான். 55

எல்லா ரறிவுகளின் ருற்பரிய மென்னறிவு
செல்லு மிடத்தளவுஞ் சென்றறிந்தேன் - வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்று
ளேதமறக் கண்ட திது. 56

வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம்
வித்துமத னங்குரமு மெய்யுணரில் - வித்ததனிற்
காணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலற்ருர் பேறு. 57

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று [2]நானன்று - நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான். 58

செய்யாச் செயலையவன் செய்யாமற் செய்ததனைச்
செய்யாச் செயலிற் செலுத்திரு - லெய்யாதே
மாணவக வப்பொழுதே வாஞ்சைக் கோடிவளர்க்கு
மாணவமு [3]மற்ற தறி. 59

---

[1]சாற்றும். [2]நானேன்று. அற்ருல், இத்தால்,

ஏதேனுங் காலமுமா மேதேனுந் தேசமுமா
மேதேனுந் திக்கா சனமுமா - மேதேனுஞ்
[1]செய்த லொருவலுமாஞ் செய்யாச் செயலதனைச்
செய்யாமற் செய்யும் பொழுது. 60

செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துபல
ரெய்தற் கரியதனை யெய்தினர்க - ளையோநாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு. 61

இப்பொருள்கள் யாதேனு மேதேனு மொன்றுசெய்த
லெப்பொருளுஞ் செய்யா தொழிந்திருத்தன் - மெய்ப்
[பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலா
முண்டிருப்ப தென்னோ வுரை. 62

வீட்டிலே சென்று வினை[2]யொழிந்து நின்றிடலேன்
நாட்டிலே நல்வினைகள் [3]செய்திடலேன் - கூட்டில்வாட்
சாத்தியே நின்றிலையேற் றக்கனுர் வேள்விசெய்த
மாத்திரமே யாங்கண்டாய் வந்து. 63

சிவன்முதலே யன்றி முதலில்லை யென்றுஞ்
சிவனுடைய தென்னறிவ தென்றுஞ் - சிவனவன
தென்செயல தாகின்ற தென்று மிவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான். 64

---

[1]செய்வானொருவனுமாம், [2]ஒழித்து நின்றாலும். [3]செய் தாலும். பா. 62-இல் யாவேனும் என்றிருத்தல் வேண்டும்.

இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுட
ஞேன்றுசோலி மன்றத்து நின்றவரா - ரின்றிங்கே
யங்க முயிர்பேறவே பாடு மடியவரா
ரேங்குமிலே கண்டா யிது. 65

விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கண் மீண்டுந்
தேரிந்துந் தேரியாதும் நிற்பர் - தேரிந்துந்
தேரியாது நிற்கின்ற சேயிழைபா லேன்றும்
பிரியாது நின்றவனேப் பேற்று. 66

ஆதனமு மாதனியு மாய்நிறைந்து நின்றவனேச்
சேதனனேக் கோண்டே தேளிவுற்றுச் - சேதனனேச்
சேதனனி லேசேலுத்திச் சிற்பரத்த ராயிருப்ப
ரேதமறக் கண்டவர்க ளின்று. 67

தாமடங்க விந்தத் தலமடங்குந் தாபதர்கள்
தாமுணரி லிந்தத் தலமுணருந் - தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து. 68

துரியங் கடந்தசுடர்த் தோகையுட னேன்றும்
பிரியாதே நிற்கின்ற பேம்மான் - றுரியத்தைச்
சாக்கிரத்தே சேய்தருளித் தான்சேய்யுந் தன்மைகளும்
[1]ஆக்கியிடும் அன்பர்க் கவன். 69

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனேதாளம் பாலேநேய்த - லேடேதிர்வேப்
பேன்புக் குயிர்கோடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தேன்புகலி வேந்தன் சேயல். 70

---

[1] ஆக்கிடுவன்.

கோல்கரியி னீற்றறையி னஞ்சிற் கோலைதவிர்தல்
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல்- நல்ல
மருவார் மறைக்காட்டின் வாசல்திறப் பித்தல்
[1]திருவாமு ராளி சேயல். 71

மோக மறுத்திடின்நாம் முத்தி கோடுப்பதேன
ஆகமங்கள் சோன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றோண்டன் [2]றோண்டுகளே
யேதாகச் சோல்லுவேன் யான். 72

[3]பாய்பரியே றநதப் பரமானந் தப்பயனேத்
தூயதிரு வாய்மலராற் சோற்சேய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசேய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தே. 73

அம்மையிலு மிம்மையிலு மச்சந் தவிர்த்தடியா
ரேம்மையுமா யேங்கு மியங்குதலான் - மேய்ம்மைச்
சிவயோக மேயோக மல்லாத யோக
மவயோக மேன்றே அறி. 74

மன்னனரு ளேவ்வண்ண மானுடர்பான் மாணவக
அன்ன வகையே அரனருளும் - என்னி
லடியவ்ரே யேல்லாரு மாங்கவர்தா மோப்பி
லடியவரே யேல்லா மறி. 75

---

[1]திருவாகீ சன்றன் சேயல். [2]தோண்டதனே. [3]பாய்பரி யோன்தந்த......பயனே.

உடம்புடைய யோகிகள்தா முற்றசிற் றின்ப
மடங்கத்தம் [1]பேரின்பத் தாக்கத் - தோடங்கி
முளைப்பதுமோன் றில்லை முடிவதுமோன் றில்லை
யிளைப்பதுமோன் றில்லை யிவர். 76

பேரின்ப மான பிரமக் கிழத்தியுட
ஞேரின்பத் துள்ளானை யுள்ளபடி - பேரின்பங்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த வின்னமுத
முண்டவரே யுண்டார் சுவை. 77

நங்கையினு ணுமனைத்துஞ் செய்தாற்போ ருடனைத்து
நங்கையினுற் செய்தளிக்கு நாயகனும்- நங்கையினு
நம்பியாய்த் தானடுவே நாட்டப் பேறுமிதுகா
ணெம்பெருமா ஞர்த மியல்பு. 78

போன்னிறங் கட்டியினும் பூணினும் நின்ருற்போ
லங்நிற மண்ணலு மம்பிகையுஞ் - செங்நிறத்த
ளேங்நிறத்த ளாயிருப்ப ளேங்கள் சிவபதியு
மங்நிறத்த ஞயிருப்ப ஞங்கு. 79

தாரத்தோ டொன்ருவர் தாரத்தோர் கூருவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர் - தாரத்தி
ஞதாந்தத் தேயிருப்பர் [2]நாற்ருனத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு. 80

ஒன்றுரைத்த தோன்றுரையாச் சாத்திரங்க ளோன்ருக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவா - லின்றுரைக்க
வேன்ஞ லியன்றிடுமோ வேன்போல்வா ரேதேனுஞ்
சோன்ஞற்ரு னேறுமோ சோல். 81

---

[1]பேரின்பத்தாக்கிற். [2]நாற்ருனத்தே யிருப்பர்.

யாதேனுங் காரணத்தா லெவ்வுலகி லெத்திறமு
மாதேயும் பாக னிலச்சினையே - யாதலினுற்
பேதமே செய்வா யபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின். 82

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுணின் ருடன் மகிழ்ந்தானுஞ் - சென்றுடனே
யெண்ணுறுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்றுநும்
பேண்ணுறநின் ருடும் பிரான். 83

சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச் - சிவமேன்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி. 84

அதுவிது வேன்று மவனுனே யேன்று
மதுநீயே யாகின்று யேன்று - மதுவானே
னேன்றுந் தமையுணர்ந்தா ரேல்லா மிரண்டாக
வோன்றுகச் சோல்லுவரோ வுற்று. 85

† ஈருகி யங்கே முதலோன்று யீங்கிரண்டாய்
மாருத வேண்வகையாய் மற்றிவற்றின் - வேரு
யுடனு யிருக்கு முருவுடைமை யேன்றுங்
கடனு யிருக்கின்றுன் காண். 86

---

†திருஞான. தேவாரம். திருவீழிமிழலை. பண் - நட்ட பாடை. 2.

உன்னுதராத் தேகிடந்த கீட முறுவதெல்லா
[1]முன்னுடைய தேன்ஞய்நீ யுற்றனேயோ - மன்னுயிர்க
ளவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்றசிவன் பால். 87

அவனே யவனி [2]முதலாயி ஞனு
மவனே [3]யறிவாய்நின் ருனு - மவனேகா
ஞ்ஞகிப் பேண்ஞ யலியாகி நின்ருனுங்
காஞமை நின்ருனுங் கண்டு. 88

இன்றுதா னீயேன்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
அன்றித்தா ஞனுன்னைக் கண்டேஞே - வேன்ரு
லருமாயை யீன்றவள்தன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து. 89

கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப் - படியி
லருத்திசெய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லாங்
கருத்துக்குச் சேயனுய்க் காண். 90

*சிவனெனவே தேறினன்யா னென்றமையா லின்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பி-லவனிதனி
லுப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையா
லப்படியே கண்டா யவன். 91

---

[1]உன்னுடைய தேன்ஞ. [2]முதலாகி நின்ருனும். [3]அறிவா யிஞனும்.

*திருவாசகம். திருவண்டப்பகுதி. அடி 62.

அவனிவனுய் நின்ற தவனருளா லல்ல
தேவனவனுய் நிற்கின்ற தேழா - யவனிதனிற்
ரேன்றுமரப் புல்லூரி தோல்லுலகி லம்மரமா
யின்றிடுமோ சோல்லா யிது. 92

முத்தி முதற்கோடிக்கே மோகக் கோடிபடர்ந்
தத்தி பழுத்த தருளேன்னுங் - கத்தியினுன்
மோகக் கோடியறுக்க முத்திப் பழம்பழுக்கு
மேகக் கோடியேழுங்கா ணின்று. 93

அகளத்தி லானந்தத் தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் [1]ரேன்றி - நிகளத்தைப்
போக்குவதுஞ் சேய்தான்றன் போன்னடியேன் [2]புன்றலேமே
லாக்குவதுஞ் சேய்தா னவன். 94

[3]குற்றமறுத் தேன்னேயாட் கோண்டருளித் தோண்டனே
றுற்ற தியானத் துடனுறைவார் - முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பார்யான் மற்ரேன்றைக் கண்டிடினக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து. 95

ஆளுடையா னேந்தரமு மாளுடையா னேயறியுந்
தாளுடையான் ரேண்டர் தலேக்காவ - ளுளுந்
திருவிசலூ ராளுஞ் சிவயோகி யின்றேன்
வருவிசையை மாற்றினுன் வந்து. 96

தூலத் தடுத்த பளிங்கின் றுளக்கமேனத்
தூலத்தே நின்று துளங்காமற் - காலத்தாற்
ருளேத்தந் தேன்பிறவித் தாளே யறவிழித்தார்க்
காளன்றி யேன்மா றதற்கு. 97

---

[1] தங்கி. [2] புன்தலேயில். [3] இதில் ஒருமை விளேயான பாடங்கள் உள, உரையை நோக்கின் அவை போருந்தா.

இக்கணமே முத்தியினை யெய்திடினும் யானினைந்த
அக்கணமே யானந்தந் தந்திடினு - நற்கணத்தார்
நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை யெப்போழுது
மாயிருத்த லன்றியிலேன் யான். 98

என்னை யுடையவன்வந் தென்னுடனு யென்னளவி
லென்னையுந்தன் னுளாகக் கோள்ளுதலா - லென்னை
யறியப்பெற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
சேறியப்பெற் றேன்குழுவிற் சென்று. 99

சிந்தையிலு மென்றன் சிரத்தினிலுஞ் சேரும்வகை
வந்தவனை மண்ணிடை [1]நான் வாராமற் - றந்தவனை
மாதினுட னேத்திறமும் வாழ்ந்திருக்க வேன்பதலா
லேதுசோலி வாழ்த்துவே னின்று. 100

ஆதார மாகி அருளோடு நிற்கின்ற
சூதான இன்பச் சுகவடிவை—ஒதாமல்
உள்ளவர்கள் கூடி உணர்வோழிய நிற்பதலால்
தேள்ளவா ராதே சிவம்.

போருளும் மனையும் அறமறந்து போக மறந்து புலன்மறந்து
கருவி கரண மவைமறந்து கால மறந்து கலைமறந்து
தரும மறந்து தவமறந்து தம்மை மறந்து தற்பரத்தோடு
உருகி உருகி ஒருநீர்மை யாயே விட்டார் உய்யவந்தார்.

---

[1] நாம். நான் என்று முன் இருத்தலால் ஈற்றில் யான் என்ற பாடம் போருந்ாது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

சிவஞானபோதச் சிறப்புப்பாயிரம்

நேரிசை யாசிரியப்பா

மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருள்தீர்ந்
தருந்துயர்க் குரம்பையி னுன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

"நூல் செய்தான் பாயிரஞ் செயற்பாலனல்லன்...இந்தப் பாயிரஞ்செய்தார் யாவரேனில், இதன் வழி சிவஞான சித்தி என்னும் நூலைச் செய்தாரும் அவர் மாணுக்கராகிய நாற்பத் தோன்பது பெயரிற் சண்பைத் தலைவன் நாயனுருமாகிய அருணந்தி தேவதம்பிரான்" என்பது பாண்டிப் பெருமாள் விருத்தியுரை.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

மெய்கண்டதேவ நாயனுர்

அருளிச்செய்த

3. சிவஞான போதம்

மங்கல வாழ்த்து

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார் – தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

1. போதுவியல்பு

1. பிரமாணவியல்

முதற்சூத்திரம்

அவனவ ளதுவேனு மவைமூ வினைமையிற்
ரேற்றிய திதியே யோடுங்கிமலத் துளதா
மந்த மாதி யேன்மனர் புலவர்.

என்பது சூத்திரம்.

வார்த்திகப் போழிப்பு

கருத்துரை :—என்னுதலிற்றேவேனின், சங்கார காரணனு யுள்ள முதலேயே முதலாக வுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துத னுதலிற்று.

உரை வகை:—இதன் போழிப்பு [1]உரைத்துக் கோள்க.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, உளதாய் ஒருவனேருத்தியோன் றேன்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாச முடைத் தேன்றது.

ஏது:—தோற்றமு மீறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

---

[1] விரித்துரைத்து.

உதாரணம்:—

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னேதாரோ
வொன்றேன்றிற் றேன்றி யுளதா யிறக்கண்டு
மன்றேன்று முண்டேன்ன வாய்ந்து.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தி யில்லை யென்றது.

ஏது:—இல்லதற்குத் தோற்ற மின்மையின், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின்.

உதாரணம்:—

இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்—இலயித்த
தத்திதியி லேன்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்று ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மம்புழுப்போல் [1]வேண்டுருவந் தான்
[2]கூட்டானே மண்போற் குளிர்ந்து. [கொடுத்துக்

நோக்காது நோக்கி நோடித்தன்றே காலத்திற்
றுக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னுக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
[3]கண்டவனி னிற்றின்றுங் கட்டு.

---

[1]வேண்டுருவைத். [2]கூட்டானே, கூட்டரனே. [3]கண்ட வணில்.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனி, சங்காரமே முதலென்றது.

ஏது:—சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

உதாரணம்:—

ஒன்றலா வொன்று லுளதாகி நின்றவா
ரென்றலா வொன்றிலவை யீருத—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தோழும்பாகு மங்கு.

இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோ வெனின், புனருற்பவம் வருமா றுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, இவ் வான்மாக்கள் பலவும் முதல்வன் றானேயாய் நிற்கு மென்றது.

ஏது:—அத்துவிதமேன்ற சொல்லானே ஏகமேன்னில், ஏக மேன்று சுட்டுவதுண்மையின் அத்துவித மேன்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு.

உதராரணம்:—

கட்டு முறுப்புங் கரணமுங் கோண்டுள்ள
மிட்டதோரு பேரழைக்க [1]வேன்னேன்றுங்—கோட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா [2]யல்லனுமா மங்கு.

ஒன்றேன்ற தோன்றேகா ணேன்றே பதிபசுவா
மோன்றேன்ற நீபாசத் தோடுளேகா—[3]ணேன்றின்று
லக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத்தேன்னு மிருக்கு.

பண்ணேயு மோசையும் போலப் பழமதுவு
மேண்ணுஞ் சுவையும்போ லேங்குமா—மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளோன்றேன்னு
தத்துவித மேன்றறையு [4]மாங்கு.

அரக்கோடு சேர்த்தி யணேத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகேன்ப னின்று.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினே முதல்வனுணேயின் வருமேன்றது.

---

[1]ஏனேன்றுங்(கு). [2]யல்லனும், யல்லனுமாய், [3] ஒன்றின் றேல். ஒன்றின்றுள். [4]அங்கு.

ஏது:—ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினை யாகலான்.

உதாரணம்:—

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தாஞ் சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
பேராம லூட்டும் பிரானி னுகராரே
லார்தா [1]மறிந்தணைப்பா ராங்கு.

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் [2]செய்கமலத் தாம்.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாக்கள் மாறிப்பிறந்து வருமென்றது.

ஏது:—தோற்றமு மீறும் உள்ளதற் கல்லது உளதாதல் இன்மையான்.

உதாரணம்:—

கண்ட நனவைக் கனவுணர்விற் றுன்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினுற்—கண்செவிகேட்

[1] அறிந்தணைப்பர். [2] செய்கை மலர்த்தாம்

டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான்.

அரவுதன் றேலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது.

நான்காமதிகரணம்

மேற்கோள்:—இனி, நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

ஏது:—அவன் ஏகாநேக மிரண்டு மின்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

உதாரணம்:—

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டேன்னி
லெங்கு முளனன் றேவற்றேவனு—மங்க
ணவையவனன் றில்லைப் போன்ஞேளிபோ லீச
னவையுடைமை யாளாநா மங்கு.

மூன்ருஞ் சூத்திரம்

உளதில தேன்றலி னெனதுட லேன்றலி
னைம்புல னேடுக்க மறிதலிற் கண்படி
னுண்டிவினை யின்மையி லுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோ வெனின், ஆன்மப் பிரகாசம் உணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—ஈண்டு ‡இலதென்றலின் ஆன்மா வுளதென்றது.

பொழிப்புரை:—எவற்றினையும் அன்றன்று எனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ் வான்மாவா மென்றது.

உதாரணம்:—

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்சேழுத்தாய்
நின்றோன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
தற்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

---

‡"ஈண்டு மேற்கோளொன்றாயினும் எழுவகை மதங்களை வேறுவேறு மறுக்கும் ஏதுக்க ளேழாகலான், ஆன்மா வுள தென்னு மேற்கோள் அவற்றோடு தனித்தனி கூட்டியுரைக்கப் பட்டு ஏழ்அதி கரணமாயிற்று இச்சூத்திரமென்றுணர்க. இச் சூத்திரத்திற் கூறிய ஏதுவே ஏது; மேற்கோளு மதுவே யாகலின், ஏனைச் சூத்திரங்களுட் போல வேறே ஏதுக்கூற வேண்டாமையின், இவை ஏதுவாமாறும் இவற்றான் மேற் கோளைச் சாதிக்குமாறும் விளங்க வுணர்த்தி வலியுறுத்துதல் மாத்திரையே இவ்வதிகரணங்களுட் கூறப்படுவதென்க" என்பது சிவஞானமாபாடியம்.

இரண்டாமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:— இனி எனதுடலென்றலின் ஆன்மாவுள தென்றது.

பொழிப்புரை:— என்பதி என்மனை யென்ருற் போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ் வான்மாவா மென்றது.

உதாரணம்.—

எனதென்ற மாட்டி னெனதலா தென்ன
துனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேரு முணர்.

மூன்ருமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:— இனி ஐம்புலனறிதலின் ஆன் மாவுள தென்றது.

பொழிப்புரை:–ஐம்புலனுகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின் இவ் வைந்தினுலும் ஐம்பயனு மறிவதுளதாகலின் அதுவே அவ் வான்மாவா மென்றது.

உதாரணம் :—

ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி
யன்றும் புலனுய வஞ்செழுத்தை—யொன்றறித
லுள்ளதே யாகி லதுநீ தனித்தனிகண்
டுள்ளலவை யொன்றல்லே யோர்.

நான்காமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—இனி, ஒடுக்கமறிதலின் ஆன்மா வுள தேன்றது.

பொழிப்புரை:—கனவின்கட் கனவு கண்டாமேன்றுங் கண்டில மேன்றும் நிற்பதுளதாகலின் அதுவே அவ் வான்மாவா மேன்றது.

உதாரணம்:—

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்போறிக டாங்கிடப்பச்
சேவ்விதி னவ்வுடலிற் [1]சேன்றடங்கி—யவ்வுடலின்
வேறுன்று கோண்டு விளையாடி மீண்டதனை
மாறலுடல் நீயல்லை மற்று.

ஐந்தாமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—இனிக் கண்படில் உண்டிவினை யின்மையின் ஆன்மாவுள தேன்றது.

பொழிப்புரை:—ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக் கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத் துன்பஞ் சீவியா நிற்பதுள தாகலின் அதுவே அவ்வான் மவா மேன்றது.

உதாரணம்:—

கண்டறியு மிவ்வுடலே காட்டோடுங்கக் காணுதே
யுண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யோடுங்கா [2]துடனண்ணி
லுள்ளதா முண்டிவினை யூன்.

---

[1]சேன்றேடுங்கி, [2]துடன்மன்னி.

ஆருமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—இனி, உணர்த்தவுணர்தலின் ஆன்மா வுளதென்றது.

பொழிப்புரை:—அவன் அறிந்தாங் கறிவனென் றறிவிக்க வறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

உதாரணம்:—

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—யறிந்த
தேதுவறிவு மன்ருகு மெய்கண்டா ஞென்றி
னதுவதுதா னென்னு மகம்.

ஏழாமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—இனி, மாயா வியந்திர தநுவினுள் ஆன்மாவுள தென்றது.

வேறும் ஓர் ஏது:—அவைதாம் வெவ்வேறு பெயர்பற்று நிற்றலான்.

உதாரணம்:—

கலையாதி மண்ணந்தங் காணிலவை மாயை
நிலையாவாந் தீபமே [1]போல—வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லது[2]தநுவாந்
தானத்தின் வேருகுந் தான்.

---

[1]போலும், [2]தனுவாய்.

2. இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்

அந்தக் கரண மவற்றினுென் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோ வெனின், இதுவு மது.[1]

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, இவ்வான்மாவாவது அந்தக்கரணங் களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களிலொன்றன் றென்றது.

ஏது:—அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம்:—

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி [2]னல்லன்—மனமே
லுதித்தோன்றை யுள்ள முணர்த லதனி
லுதிக்குங் [3]கடற்றிரையை யோத்து.

---

[1] ஆன்மப். [2] அல்ல, [3] கடற்றிரையே.

[1]சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேரு
மவ்வேரும் போதுபோ லாங்கு.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்து—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா
நண்ணிய விந்துவோடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரம னதிதெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி. இவ்வான்மாச் சகச மலத்தினு லுணர்வின்றேன்றது.

ஏது:—அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கோடு நிற்றலான்.

உதாரணம்:—

மாயா தநுவிளக்கா மற்றுள்ளங் காணுதே
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தோன்ருங் காட்டம்
றன்னைமல மன்றணைதல் தான். [போற்

மூன்ருமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாச் சாக்கிரஞ் சோப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுய் நிற்குமேன்றது.

ஏது:—அதுதான் மல [1]சோருபத்தின் மறைந்து அருப சோருபியாய் நிற்றலான்.

உதாரணம்:—

[2]ஒன்றணையா மூலத் துயிரணையும் நாபியினிற்
சேன்றணையுஞ் சித்த [3]மிதயத்து—மன்றவே
யையைந்தா [4]நன்னுதலிற் கண்டத்து வாக்காதி
மேய்யாதி விட்டகன்று வேறு.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் [5]கண்டதுவே
யவ்வவற்றி [6]னீங்கலது வாங்கு.

ஐந்தாஞ் சூத்திரம்

விளம்பிய வுள்ளத்து மேய்வாய் கண்முக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

என்பது சூத்திரம்.

---

[1]சோருபத்திலே. [2]ஒன்றணையான், [3]இதயத்தின். [4]நண்ணுதலிற் கண்டத்தின், நன்னுதலிற் கண்டத்தின், கண்டத்து நன்னுதலின். [5]கண்டடைவே. [6]நீங்கிலது.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என் னுதலிற்றோ வெனின், இவ்வான்மாக் களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணரு மென்றது.

ஏது:—அவற்றினுன் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லது அவை ஒன்றையும் விடயியாவாகலான்.

உதாரணம்:—

ஐம்போறியை யாண்டங் கரசா யுள[1] நிற்ப
வைம்போறிக ளுள்ள மறியாதா—மைம்போறியிற்
காணுதேற் காணுது காணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா சேவி.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, இதுவுந் தமது முதலாலே யுணரு மென்றது.

ஏது:—இவ்வான்மாத் தன்னுலே யுணரு மிந்திரியங்களைப் போலத் தானுந் தன்னை யுணராது நிற்றலான்.

---

[1] நிற்க.

உதாரணம்:—

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணுன் சிவனசத்தை யின்று.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—[1]மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு [2]மைம்புலனைக்
[3]கண்டுடனுய் மன்னுதலைக் காண்.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றரனன்றே யில்லை யருட்கண்ணார் கண்ணுக்
கிரவிபோ [4]னிற்குமர னேய்ந்து.

ஆருஞ் சூத்திரம்

உணருரு [6]வசத்தேனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே

என்பது சூத்திரம்

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற் றோவெனின் சத்து மசத்தும் வரைசெய் துணர்த்துதனுதலிற்று.

---

[1]வெய்யோனிற், [2]ஐம்புலனுங். [3]கண்டுடனு நன்னுதலிற். நிற்பனும், [5]அசத்தேன

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, அறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்தென்றது.

ஏது:—அவைதாம் [1]பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம்:—

[2]அசத்தறியாய் கேணீ யறிவறிந்த [3]வேல்லா
மசத்தாகு மெய்கண்டா ஞுயின்—அசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரி[4]னவை யின்ருமா ஞேப்பு.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்கு மணுதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமேன்று உணரற்பாற்று.

ஏது:—பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மை யானும்.

உதாரணம்:—

எண்ணிய சத்தன் றசத்தன்ரு மேன்ருலேன்
கண்ணி யுளதேன்றன் மேய்கண்டா—னேண்ணி
யறிய [5]விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மேய்சிவன்ரு ளாம்.

---

[1]பிரகாசாப் பிரகாசமா நிற்றலான். [2]அசத்தறியா. [3]தேல்லாம். [4]இவை. [5]இரண்டாய்.

[1]உணர்ப வசத்தாத [2]லோன்றுணரா தோன்றை
யுணருநீ தானுணரா [3]யாயி—[4]லுணருமுனிற்
ருனிரண்டா மெய்கண்டான் றன்னு லுணர்தலாற்
ருனிரண்டாய்க் காணுன் றமி.

[5]பாவகமேற் ருனசத்தாம் பாவநா தீதமேனிற்
பாவகமா மன்றேன்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்த ருனேன்னிற் பாவகமாங் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ்.

அறிய விரண்டல்ல ளுங்கறிவு தன்னு
லறியப் படானறிவி னுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்ருனைக் கண்ணறியா மெய்யேன்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

அதுவேன்னு மோன்றன் றதுவன்றி வேறே
யதுவேன் றறியறிவு [6]முண்டே—யதுவேன்
றறிய விரண்டல்ல ளுங்கறிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம்.

---

[1]உணர்வதசத்தால். [2]என்றுணரா. [3]யாகில், தாயின். [4]உணரும் எனில், உணருருவில். [5]பாவகமென்ருன். [6]உண்டால்.

2. உண்மையியல்பு

3. சாதனவியல்

ஏழாஞ் சூத்திரம்

யாவையுஞ் சூனியஞ் சத்தேதி [1]ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோ வேனின். [2]மேலதற்கோர் புறனடை யுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டுச், சத்தினிடத் தசத்துப் பிரகாசியா தென்றது.

ஏது:—மெய்யினிடத்துப் போய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம்:—

அந்நியமி லாமை யரற்கோன் [3]றுணர்வின்ரு
மந்நியமி லானசத்தைக் காண்குவனே—லந்நியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று.

---

[1]ஆதலிற். [2]மேலதற்கே. [3](று)அறிவின்ரும்,

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, அசத்தினுக் குணர்வின் றென்றது.

ஏது:—அது தான் நிருபிக்கி லின்றுகலான்.

உதாரணம்:—

பேய்த்தேர்நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தே ரசத்தாகும் பேற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
[1]கண்டுணர்வா ரில்லதேனக் காண்.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனி, *இருதிற னறிவுள திரண்டலா வான்மா வேன்றது.

பொழிப்புரை:—இவ்விரண்டினையு மறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டன்பாலு முளதாயுள்ள அதுவே அவ்வான்மாவா மேன்றது.

---

[1] கண்டுணராது.

* "ஈண்டுச் சத்தேதிர் நில்லாத அசத்துஞ் சத்துந் தம்முளொன்று ஞென்றறியப் படாமையான் ஆன்மாவாலும் அறியப் படாதவழி அவை பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாகலான், இரண்டலா வான்மா இருதிற னறிவுளதேயாம்; தம்முளொன்று ஞென் றநுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையு மநுபவிக்குங் கண்போலுமேன அநுமானங் கூறிக்காண்க" —என்பது சிவஞான மாபாடியம்.

உதாரணம்:—

அருவுருவந் தானறித லாயின்ழயா யான்மா
வருவுருவ மன்ருகு முண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்ருது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் ருேக்கு.

மயக்கம துற்றும் மருந்திற் றேளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசி—லசத்துமலை
நீயறிந்து செய்வினைகள் நீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமைதான்.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத
லஞ்ஞான முள்ள [1]மணைதல்காண்—மெய்ஞ்ஞானந்
தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்
ருனே யுளமுளவாய்த் தான்.

எட்டாஞ் சூத்திரம்

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டங்கிய மின்மையி னரன்கழல் செலுமே

என்பது சூத்திரம்

வார்த்திகப் போழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்ருே வெனின், ஞானத்தினை யுணரு முறைமையினை உணர்த்துத னுதலிற்று.

[1] அணைதலால்.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞானம் நிகழுமென்றது.

ஏது:—மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கோடா வாகலான்.

உதாரணம்:—

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றூர்சூழ் சொல்லுமாங் கண்டு.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனும் ஞானத்தை வந்து.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாயுணர்த்து மென்றது.

ஏது:—அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொருபியாய் நிற்றலான்.

உதாரணம்:—

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணேறியிற்
குறையுடைய சோற்கொள்ளார் கோள்பவத்தின் வீடேன்
குறைவில்சகன் சூழ்கோள் பவர்க்கு.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றானே யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணராவேன்றது.

ஏது:—அவைதாம் பளிங்கிலிட்ட வன்னம்போற் காட்டிற் றைக் காட்டி நிற்றலான்.

உதாரணம்:—

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
போய்ப்புலனை வேறுணர்ந்து போய்போய்யா மேய்
மேய்ப்போருட்குத் தைவமாம் வேறு. [கண்டான்

நான்காமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையு மென்றது.

ஏது:—ஊசல் கயிறற்ருற் ருய்தரையேயாந் துணையான்.

உதாரணம்:—

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சேன்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று.

எவ்வுருவுந் தானேன்னி லேய்துவா ரில்லைதா
ளிவ்வுருவின் வேறே லிறையல்ல—னேவ்வுருவுங்
கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

ஐம்போறியி னல்லையேனு மந்த தரசிவனை
யைம்போறியை விட்டங் கணைசகல—னைம்போறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
னீங்கானை நீங்கு நினைந்து.

ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தேனப் பாச மோருவத்
தண்ணிழலாம் பதிவிதி யேண்ணுமஞ் சேழுத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோ வெனின், ஆன்மசுத்தி பண்ணுமா றுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, அம்முதலை ஞானக் கண்ணினாலே காண்க வென்றது.

ஏது:—அவன் வாக்குமனாதீத கோசரமாய் நிற்றலான்.

உதாரணம்:—

நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா
ரென்னா மெனவறிவா ரின்று.

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணா—காட்டிய
வுள்ளந் தனைக்காணா வுள்ளத்தின் கண்ணாய
கள்ளன்றா னுள்ளத்திற் காண்.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, *அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்றுகாண உளதாய் நிற்பது ஞானசொரூப மென் றுணரற்பாற்று.

---

* இதனுள் ஏது சொற்பல்காமைப் பொருட்டு ஏகதேச வுருவகமாக வைத்து உடம்பொடு புணர்த்து ஓதப்பட்டது. சிவஞானமாபாடியம் பார்க்க.

உதாரணம்:—

நிற்குணனய் நின்மலனய் நித்தியா நந்தனய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானு வறிவா யளவிறந்து தோன்ருனே
வானே முதல்களேயின் வந்து.

சுட்டி யுணர்வதனேச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லே யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனுற் போய்விட்டுப் போம்.

கண்டதை யன்றன் றேனவிட்டுக் கண்டசத்தா
யண்டனே யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணேந்த
வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி னுண்கருட
சானத்திற் றீர்விடம்போற் ருன்.

மூன்ருமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப் படி யுச்சரிக்க வேன்றது.

ஏது:—இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கேனக் கோள்க.

உதாரணம்:—

அஞ்சேழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனே
யஞ்சேழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்சேழுத்தாற்

குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு.

இந்துவிற் பானுவிலி ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே
காட்டாக்கிற் ரேன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டானு மோதஞ் சேழுத்து.

மண்முத னுளமலர் வித்தை கலாருப
மேண்ணிய வீசர் சதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்ரு ணேர்.

---

4. பயனியல்

பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே யாகிய வந்நேறி
யேக னுகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னேடு வல்வினை யின்றே

என்பது சூத்திரம்

வார்த்திகப் போழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்ரே வேனின், பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்தேகனுகி நிற்க வேன்றது.

ஏது:—அவ்வாறு நிற்கவே யானென தென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை யணையு மாகலான்.

உதாரணம்:—

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
ருனெனவோன் றின்றியே தானதுவாய்-நானெனவோன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானு மிறை.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, இறைபணி வழுவாது நிற்க வென்றது.

ஏது:—அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானுகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியாவாகலான்.

உதாரணம்:—

நாமல்ல விந்திரியம் நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை— யாமென்னி
னேத்தநுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்.

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்ச்—சார்ந்தடியார்
தாந்தானுச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபான்
முன்சேய் வினைமாயை முண்டிடினும்—பின்செய்வினை

மாயையுட னில்லாது மற்றவன்ருன் மெய்ப்பொருளே
யாயவத ளுலுணரு மச்சு.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
[1]மவர்திற நீங்கா ரதற்கு.

சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
[2]னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கேரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணேயார் சத்தணேவா ராங்கு.

பதினென்ருஞ் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்ருே வெனின், பரமேசுரனது சீபாதங்களே யணேயுமா றுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றது.

1அரனடி. 2இதமிருத்தல்.

ஏது:—இவ்வான்மாக்கள் அவனையின்றி யமைந்தோன்றை யும் விடயியாவாகலான்.

உதாரணம்:—

ஐந்தையு மோக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தையும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மொன்றொன்றுப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றொன்றுப் பார்க்கு முணர்ந்து.

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த போற்பினு—னேகமா
யுள்ளத்தின் கண்ணுனு னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுனே வுற்று.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனிப், பத்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணையுமென்றது.

ஏது:—அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

உதாரணம்:—

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணுர்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணுற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

மன்னு மிருளே மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் ருன்.

நசித்தோன்றி னுள்ளம் நசித்தலா லோன்ரு
நசித்திலதே லோன்ருவ தில்லே—நசித்துமல
மப்பணேந்த வுப்பி னுளமணேந்து சேடமாங்
கப்பின்ரு மீசன் கழல்.

போன்வாண்முன் கோண்மூவிற் புக்கோடுங்கிப் போயகலத்
தன்வாளே யேங்குமாங் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

பன்னிரண்டாம் சூத்திரம்

சேம்மலர் நோன்ருள் சேர லோட்டா
வம்மலங் கழீஇ யன்பரோடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனேனத் தோழுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் போழிப்பு

கருத்துரை:–என்னுதலிற்ரே வேனின், அசிந்திதனுய் நின்ற பதியைச் சிந்திதனுகக் கண்டு வழிபடுமா றுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, ஆணவம் மாயை கான்மிய மேன்னு மலங்களைக் களைக வேன்றது.

ஏது:—அவைதாம் ஞானத்தையுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்து மாகலான்.

உதாரணம்:—

புண்ணிய பாவம் போருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் கட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மேய்ஞ்ஞானிக் காகா விடு.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:-இனிச், சிவபத்தர்களோ டிணங்குக வேன்றது.

ஏது:—அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்.

உதாரணம்:—

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னுலுணரு
மேய்த்தவரை மேவா வினை.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவா லயத்தையும் பரமேசுரனேனக் கண்டு வழிபடுக வேன்றது.

ஏது:—அவன்மற் றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம்:—

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தார் தம்பா னிகழுந் ததிநேய்போற்
பாசத்தார்க் கின்றும் பதி.

கண்டதோரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுருத்
தானதுவா யன்றுனன் றனதுவாய்த் தோன்றுனே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு.

நான்காமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்விடங்களின் வழிபடுக வேன்றது.

ஏது:—நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனு மாகலான்.

உதாரணம்:—

அதுவிது வேன்ற ததுவல்லான் கண்டார்க்
கதுவிது வேன்றதுவு மல்லான்—போதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றேழு.

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தோழவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றேழு.

தன்னை யறிவித்துத் தான்றானுச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னுச்செய்துந் தைவமேன்றுந் தைவமே
மானே தோழுகை வலி.

நூற்கு அதிகாரிகள்

சிவமேன்னு மந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாங் கண்வாசகத்திற்—சிவமுண்டா
மோன்று மிரண்டு மலத்தார்க்கிங் கோண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு.

சிறப்புப்பாயிரம்

எந்தை சனற்குமர னேத்தித் தோழவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மேய்கண்டான் றாரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

சூர்ணிக்கோத்து

முதற்சூத்திரம்

1.—சகம் பிறப்பு இருப்பு இறப்பாகிய முத்தொழிலை யுடையது.
2.—அது அரனாலே உடையது.
3.—மற்றிருவரும் முத்தொழிற்படுவர்கள்.

இரண்டாஞ்சூத்திரம்

1.—அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.
2.—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.
3.—உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.
4.—அரன் சருவ வியாபகன்.

மூன்றாஞ்சூத்திரம்

1.—இல்லையென்கின்ற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.
2.—எனது உடல் என்று பொருட்பிறிதின்கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேராய் உயிருண்டு.
3.—ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கும் வேராய் உயிர் உண்டு.

4.—கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே, அக் கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.

5.—நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவுஞ் சரீரத்துக்குப் புசிப்புந் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.

6.—மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.

7.—எல்லாத்தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

நான்காஞ்சூத்திரம்

1.—அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினாலன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

2.—மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.

3.—உயிர் மூன்றவத்தைப்படும்.

ஐந்தாஞ்சூத்திரம்

1.—உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும்.

2.—அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

ஆறாஞ்சூத்திரம்

1.—உயிரறிவினாலே அறியப்பட்டதெல்லாம் அழியும்.

2.—அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

ஏழாஞ்சூத்திரம்

1.—அரன் பாசத்தை அநுபவியான்.

2.—பாசம் அரனை அநுபவியாது.

3.—உயிர் அவ்வரனை அடையும்; அநுபவிக்கும்.

எட்டாஞ்சூத்திரம்

1.—உயிருக்கு நல்லறிவு தவத்தினலேயே வரும்.

2.—உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

3.—உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினலே தன்னை யும் அறியமாட்டாது.

4. உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்ருல் தன்னையும் அறியும்.

ஒன்பதாஞ்சூத்திரம்

1.—உயிர் அரன் ஞானத்தினலேயே அரனைக் காணும்.

2.—உயிர் பாசத்திலே பற்றற்ருல், அரன் வேளிப்படுவன்.

3.—பஞ்சாக்ஷரசேபம் பண்ணினல், வாசனமலம் போம்.

பத்தாஞ்சூத்திரம்

1.—அரனுடன் ஒன்ருகி நில்.

2.—உன்ருேழிலேல்லாம் அரன் பணி என்று கோள்.

பதினேராஞ்சூத்திரம்

1.—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்.

2.—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கமாய்ப் போவன்.

பன்னிரண்டாஞ்சூத்திரம்.

1.—மும்மலங்களையுங் களைக.

2.—சிவஞானிகளுடனே கூடுக.

3.—சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே தேறி வழிபடுக.

4.—வழிபடாமையை ஒழிக.

ஆக சூத்திரம் 12-க்குச் சூர்ணிக்கோத்து 39.

முற்றுப்பெற்றது.

உ

குருபாதம்

சிவஞானபோதம்

स्त्रीपुंनपुंसकादित्वाज्जगतः कार्यदर्शनात् ।
अस्ति कर्ता स हृत्वैतत्सृजत्यस्मात्प्रभुर्हरः ॥ १ ॥

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.

अन्यः सन् व्याप्तितोऽनन्यः कर्ता कर्मानुसारतः ।
करोति संसृतिं पुंसामाज्ञया समवेतया ॥ २ ॥

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே

नेतितो ममतोद्रेकादक्षोपरतिबोधतः ।
स्वापे निर्भोगतो बोधे बोद्धृत्वादस्त्यणुस्तनौ ॥ ३ ॥

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா

आत्मान्तःकरणादन्योऽप्यन्वितो मन्त्रिभूपवत् ।
अवस्थापञ्चकस्थोऽतो मलरुद्धस्वदृक्क्रियः ॥ ४ ॥

அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே

विन्दन्त्यक्षाणि पुंसार्थान्नः स्वयं सोऽपि शम्भुना ।
तद्विकारी शिवश्चेन्न कान्तोऽयोवत्स तन्नयेत् ॥ ५ ॥

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

अदृश्यं चेदसद्भावो दृश्यंचेज्जडिमा भवेत् ।
शम्भोस्तद्व्यतिरेकेण ज्ञेयं रूपं विदुर्बुधा ॥ ६ ॥

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

नाचिच्चित्सन्निधौ किन्तु न वित्तस्ते उभे मिथः ।
प्रपञ्चशिवयोर्वेत्ता यः स आत्मा तयोः पृथक् ॥ ७ ॥

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

स्थित्वा सहेन्द्रियव्याधैस्त्वां न वेत्सीति बोधितः ।
मुक्त्वैतान् गुरुणाऽनन्यो धन्यः प्राप्नोति तत्पदम् ॥ ८ ॥

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

चिद्दृशात्मनि दृष्ट्वेशं तीर्त्वा वृत्तिमरीचिकाम् ।
लब्ध्वा शिवपदच्छायां ध्यायेत्पञ्चाक्षरीं सुधीः ॥ ९ ॥

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

शिवेनैक्यं गतः सिद्धस्तदधीनस्ववृत्तिकः ।
मलमायाद्यसंस्पृष्टो भवति स्वानुभूतिमान् ॥ १० ॥

அவனே தானே யாகிய வந்நெறி
யேக ஞகி யிறைபணி நிற்க
மலமாயை தன்ஞெடு வல்வினை யின்றே

दृशोर्दर्शयितेवात्मा तस्य दर्शयिता शिवः ।
तस्मात्तस्मिन् परां भक्तिं कुर्यादात्मोपकारके ॥ ११ ॥

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

मुक्त्यै प्राप्य सतस्तेषां भजेद्वेषं शिवालयम् ।
एवं विद्याच्छिवज्ञानबोधे शैवार्थनिर्णयम् ॥॥ १२ ॥

செம்மலர் நோன்ருள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

முற்றும்.

திருத்தவத்துறையூர்,
ஸ்ரீ அருணந்தி தேவ நாயனர்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருத்துறையூர் அருணந்திதேவ நாயனுர்
அருளிய

சிவஞானசித்தியார் பரபக்கம்

கணபதி வணக்கம்

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
ஞல்வாயைங் கரத்த ஞறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தருமோருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் போடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருக்கோட்டு மயன்றிருமால் செல்வமுமோன்
ேரேவேன்னச் செய்யுந் தேவே.

பாயிரம்

சிவவணக்கம்

ஆதிநடு வந்தமிலா வளவில் சோதி
யருண்ஞான மூர்த்தியா யகில மீன்ற
மாதினையு மொருபாகத் தடக்கி வானேர்
மகுடசூ ளாமணியாய் வையம் போற்றப்

பாதிமதி யணிபவளச் சடைகடாழப்
 படரொளியம் பலத்தாடும் பரனுர் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
 தளராத பேரன்பு வளரா நிற்பாம்.

சத்திவணக்கம்

ஈசனரு ளிச்சையறி வியற்ற லின்ப
 மிலயமோடு போகமதி கார மாகித்
தேசருவ மருவுருவ முருவ மாகித்
 தேவியுமாய்த் தேசமோடு செல்வ மாகிப்
பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப்
 பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்
டாசகலு மடியருளத் தப்பனுட னிருக்கு
 மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். 2

விநாயகர் வணக்கம்

இயம்புநூ லிருந்தமிழின் செய்யு ளாற்ரு
 லிடையூறு தீர்ந்தினிது முடிய வேண்டித்
தயங்குபே ரொளியாகி யெங்கும் நின்ற
 தலைவனுர் மலைமாது தன்னோ டாடிப்
பயந்தவைங் கரநாஞ்ண் முக்கணிரு பாதப்
 பரியவோரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயந்தனடிக் கமலங்க ணயந்து போற்றிக்
 கருத்திலுற விருத்திமிக்க காதல் செய்வாம். 3

குமாரக்கடவுள் வணக்கம்

அருமறையா கமமங்க மருங்கலைநூ றோிந்த
 வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருளை

திருமறைமா முனிவர்முனி தேவர்கள்தந் தேவன்
சிவனருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன் கையிற்
பூநீர்தோண் டோவாது போற்றுமடி யவர்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன்
கழலிணைக ளேஞ்சிரத்திற் கருத்தில் வைப்பாம். 4

குருவணக்கம்

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர்இ தயகமல முகைக ளெல்லாங்
கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம். 5

அவையடக்கம்

மாலயன்மா மறையறியா வாதி மார்க்கம்
வையகத்தா கமவேத மற்று முள்ள
நூலையெலா முணர்ந்திறைவன் கழலே நோக்கு
நோன்மையருந் தவர்முன்யா னுவலு மாறு
வேலையுலா வுந்திரைகள் வீசி யேறி
வேறேழு மொன்ருகி நின்ற போது
சாலவுமான் குளப்படியிற் றங்கி நின்ற
சலமதுதா னேரேன்னுந் தன்மைத் தாலோ. 6

இதுவுமது

நீடுபுக ழுலகுதனின் மைந்தர் மாதர்
நேயமோடு தாம்பயந்த புதல்வர் வாயிற்
கூடுமொழி மழலையோடு குழறி யொன்றுங்
குறிப்பரிதா யிடினுமிகக் குலவிப் போற்றி
மாடுநமக் கிதுவென்று கொண்டு வாழ்வர்
அதுபோல மன்னுதமிழ்ப் புலமை யோரேன்
பாடுகவிக் குற்றங்கள் பாரா ரிந்நூல்
பாராட்டா நிற்பர்அருட் பரிசி னாலே. 7

நூற்சிறப்பு

சுத்தவடி வியல்பாக வுடைய சோதி
சொல்லியவா கமங்களெலாஞ் சூழப் போயு
மொத்துமுடி யுங்கூட வோரி டத்தே
யொருபதிக்குப் பலநெறிக ளுளவா னற்போற்
பித்தர்குண மதுபோல வொருகா லுண்டாய்ப்
பின்னொருகா லறிவின்றிப் பேதை யோராய்க்
கத்திடுமான் மாக்களுரைக் கட்டிற் பட்டோர்
கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார். 8

நூற்குஅதிகாரியும் நூல்வழியும்-நூற்பெயரும்

போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே
பொருந்திநே ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
வேநெறி யெனுமவர்கட் கறிய முன்னா
ளிறைவனரு ணந்திதனக் கியம்ப நந்தி
கோதிலருட் சனற்குமா ரர்க்குக் கூறக்
குவலயத்தி னவ்வழியெங் குருநாதன் கொண்டு
தீதகல வெமக்களித்த ஞான நூலைத்
தெர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே. 9

நூற்கருத்து

இறைவனையு மிறைவனு லியம்பு நூலு
மீண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி
முறைமைகளும் பேத்தமோடு முத்தி யெல்லா
முதுலகி லெமக்கியன்ற முயற்சி யாலே
சிறையுலவும் புனல்நிலவத் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோ லுண்டாய போய்கோண் மார்க்கத்
துறைபலவுங் கடாவிடையாற் சொல்லிப் போக்கித்
துகள்தீர இந்நூலிற் சொல்ல கிற்பாம். 10

நூல்

உலகாயதன்மதம்

இந்திர புரோகித னியம்புமோரு நூலின்
றந்திர மேனுதறி வினேடரு ளிலாமற்
சந்தணை புயத்துமண மாலைக டயங்க
வுந்தியுல கத்திலுல காயத னுரைப்பான். 1

ஈண்டளவை காட்சிமன மாதியிரு மூன்றுய்
வேண்டுமனு மானமுத லானபல வேண்டா
பூண்டபோருள் பூதமவை புகல்கடின சீதந்
தீண்டரிய வெம்மைசல னத்தினேடு சேர்வே. 2

சாற்றுபேய ரானவை தலம்புனல் கனற்பின்
காற்றுமேன லாமிவை கலந்தகுண மோதி
ஞற்றமிர தம்முருவ நற்பரிச மாகும்
போற்றுமிவை நித்தவியல் பாமிவை புணர்ப்பே. 3

ஒத்துறு புணர்ச்சியி னுருக்கள்பல வாகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மாபோற்
புத்திகுண நற்போறி புலன்களிவை யேல்லா
மித்தில்வரு நீரினி லேழுங்குமிழி யோத்தே. 4

பூதமதி ஞேன்றுபிரி யப்புல னிறக்கு
நீதியினி னிற்பன நடப்பனவு் முற்போ
லோதும்வகை யாகியுறு காரிய முலந்தா
லாதியவை யாமிதனே யறிவதறி வாமே. 5

இப்படி யன்றிக் கன்ம முயிரிறை வேறுண் டேன்று
சேப்பிடு மவர்க்கு மண்ணேர் சேய்திடுங் குற்ற மேன்னே
வோப்பிலா மலடி பேற்ற மகனேரு முயற்கோம் பேறித்
தப்பிலா காயப் பூவைப் பறித்தமை சாற்றி ஞரே. 6

சேய்திடுங் கன்ம மேல்லாஞ் சேய்தவர் தம்மைப் பற்றி
யேய்திடு மேன்னி னிங்கே மாய்ந்திடு மேய்வ தேங்ஙன்
மேய்தரு தூலங் கேட்டுச் சூக்கமாய் மேவு மேன்னி
லையனே தீபம் போஞ லதனேளி யாவ துண்டோ. 7

மாய்ந்துபின் வயலி லிட்ட வைதழை பலிக்கு மாபோ
லேய்திடுங் கன்ம மேன்னி லிட்டிடத்திசையு மேனி
யோய்ந்துவந் தவரையுண்ணப்பண்ணுஞ்சோறுதரத்தற்ருல்
வாய்ந்திடும் பலம் வயிற்றிற் கோண்டிடும் வழக்குவைத்தாய்

உருவமும் உணர்வுஞ் சேய்தி யோத்திரா கன்மமேன்னின்
மருவுகை விரல்க டம்மின் வளர்வுடன் குறைவுண் டாகி
வருவதிங் கேன்ன கன்மஞ் சேய்துமுன் மதியி லாதாய்
பேருகுபூ தங்க டம்மின் மிகுகுறைப் பேற்றியாமே. 9

இன்போடு துன்ப மெல்லா மெய்துவ கன்மமென்னி
னன்புனல் சந்தனுதி நணுகவு வணுக வொண்ணு
மின்போலி யழலி னேடு மேவவு நன்மை தீமை
யென்செய்த தியம்பி டாய்நீ யிவையெலா மியல்ப தாமே.10

காயத்தின் குணமதன்றிக் கண்டதான் மாவுண் டாயின்
மாயத்திற் சொல்லிடாதே மனமுத லாறி னுக்கு
நேயத்ததாக வேண்டு மன்றியே நிகழ்த்து முண்மை
தேயத்தின் முயற்கோம்:பேல்லை செப்புவோர் செய்தி யாமே.

அருவமே இறைவ னுகி லறிவின்ரு காய மாகு
முருவமே யென்னிற் பூதக் கூட்டத்தி னேருவ னுகு
மருவிய விரண்டுங் கூடி நிற்பவ னேன்னின் மண்மே
லிருவிசும் பொருகல் லேந்தி நிற்குமோ வியம்பிடாயே. 12

பூதத்தே யன்ன மாகி யன்னத்தா லுடம்பு புத்தி
பேதித்தே மனமு மாகிப் பிரிந்தமை திருந்த வின்று
வேதத்தே யுரைக்க வென்னே மேதினி யோர்க ளெல்லாங்
கேதத்தே வீழ்ந்து வேறு நெறியல கேட்கு மாறே. 13

போகத்தை மண்ணிற் கண்டு விட்டுப்போய் விண்ணிற் கொ
மோகத்த ராகி யல்லன் முயனறுழன் முட ரெல்லாங் [ள்ள
தாகத்திற் றண்ணீர் கண்டு விட்டுப்போய்த்தண்ணீர்கேட்டுச்
சோகித்தே யுண்ணவெண்ணித் துயருறு வார்க ளந்தோ 14

வாழவே வல்லை வாமி வலக்கைதா வென்னு யிர்க்குத்
தோழனீ யுன்னையொப்பார் சொல்லிடி னில்லைகண்டாய்
கோழைமா னுடர்தீ தென்னுங் கொலைகள வாதி கொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றினுயே15

ஈசனு ரயனுர் மாலோ டிந்திரன் றேரிவை மார்பாற்
பேசோணு வகைக ளேல்லாஞ் செய்தன்ரு பெரியோ ராணு
ராசையா லவர்போ ணுமு மாகவே வேண்டு மாயின்
வாசமார் குழலா ரோ்டும் வல்லவா கூடி வாழ்மின். 16

தையலா ருட லாடத் தாமவ ரோடுங் கூடிச்
செய்யதா மரையை வேன்ற சீறடி செம்பஞ் சூட்டி
மேய்யேலாம் பாதஞ்சூடும் வேடத்தார் மெய்யிற் கூடா
மையன்மா னுடர்போய்ம் மார்க்க வேடத்தே மாய்கின்ருரே.

வாசமார் குழலி ஞர்கண் மணியல்குற் றடத்தே மூழ்கி
நேசமார் குமுதச் சேவ்வா யமுதினே நிறைய வுண்டு
தேசுலா மணிமேன் ருேண்மேற் சேர்ந்துவீற் றிருந்தி டாதே
மாசுலா மனத்தோ ரேல்லா மறுமைகோண் டழிவர் மன்னே.

மதிநிலா நுதலாரோடு மணிநிலா முன்றி லேறி
முதிர்நிலா வேறிப்பச் சேவ்வா யிளநிலாமுகிழ்ப்ப மோய்த்த
கதிர்நிலாவடங்கோள்கோங்கைக்கண்கண்மார்பகலமூழ்கும்
புதுநிலா வியநன் போகம் விடுவர்புன் சமயத் தோரே. 19

ஊடுவ துணர்வதுற்ற கல்விமங்கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துண்ர்வு:கேட்டுக் குணமேலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின்ப முத்தி யித்தினின் ருர்கண் முத்தர். 20

வீட்டினே யுளதேன் ருேடி மேலிவதிங் கேன்னே வீடு
காட்டுவோர்கண்டோர்கேட்டோர்கரியவையுண்டேற்காட்டீர்
நாட்டினி லரச ஞணக் கிசையவே நடந்து நாளு
மீட்டிய பொருள்கோண் டிங்கே யின்பத்து ளிசைந்தி டீரே.

உலகாயதன்மதமறுதலை

உள்ள தாவது கண்ட தென்றுரை
கொண்ட தென்னுல கத்துநீ
பிள்ளை யாய்வளர் கின்ற நாளுனைப்
பெற்ற தாயொடு தந்தையைக்
கள்ள மேபுரி கால னுருயி
ருண்ண வின்றேரு காளை யாய்
மேள்ள வேயுள ரென்று கொண்டு
விளம்பு மாறு விளம்பிடே. 1

இடித்து மின்னி யிருண்டு மேக
மெழுந்த போதிது பெய்யுமென்
றடுத்த தும்மகில் சந்த முந்தி
யலைத்து வார்புன லாறுகொண்
டெடுத்து வந்திட மால்வ ரைக்க
ணிருந்து கொண்டல் சொரிந்த தென்று
முடித்த தும்மிவை காட்சி யன்றனு
மான மென்று மொழிந்திடே. 2

காண்ட லேயனு மான மாவதுங்
காட்சி முன்னதுங் காட்சியேற்
பூண்ட பூத வுடம்பி னுள்ளெழு
போத மென்கொடு கண்டனை
மாண்ட வாயின் மனங்கொண் ஞான
முணர்ந்த தும்மனு மானமென்
நீண்டு பூத மியைந்த திவ்வுட
லென்ப தென்பிர மாணமே. 3

பழுதி லாமறை கண்ட நூல்பழு
 தின்றி யுண்டது பாரின்மேன்
மொழிவர் சோதிட முன்னி யின்னது
 முடியு மென்பது முன்னமே
யழிவி லாதது கண்ட னம்மவை
 யன்றி யுஞ்சில வாக மங்களி
னெழுதி யோர்படி யென்று கொண்டிரு
 நிதியெ டுப்பது மெண்ணிடே. 4

பூத மானவை நித்த மென்று
 புகன்ற தென்னை யுருக்களா
யாத லோடழி வாகு மாதலி
 னுக்கு வோர்வர வேண்டிடுங்
காத லோடு கடாதி மண்கோ
 டியற்று வோருளர் கண்டனஞ்
சீத நீரி லெழுந்த கோப்பு
 ணிகழ்ந்த மாருதச் செய்கையே. 5

நீரின் வந்தெழு கோப்பு ணீரது
 வாயெ ழுந்நிகழ் பூதமு
மோரின் வேறுணர் வாயெ ழாவவை
 பூத மாகி யுதித்திடுந்
தேரி னூறடை காய்செ றிந்தவை
 சேர வேறு சிவப்பெழும்
பாரி னிற்பிரி யாது புந்தி
 பழிப்பு டம்பு கிடக்கவே. 6

கூறு சேர்வையின் வந்த போது
 சிவப்பெ னுங்குண மொன்றுமே
வேறு வேறு புலன்கு ணங்க
 ளுடற்கண் வந்து விளைந்ததே

னூறு காயடை கூடும் வேறுரு
வன்ற றுலென னேக்கிநீ
தேறு பூத செயற்கும் வேண்டு
மொருத்த னென்று தேளிந்திடே. 7

ஆன வைம்பொறி யுண்டி நித்திரை
யச்ச மைதுன மாதியா
வூனின் வந்திடு முன்பி லாதவை
யென்று ரைக்கி னுலூதைபோல்
வானின் வந்திடு மாத ராணலி
யாகி மானுட ராதியா
யோனி பன்மையு மின்று பூத
முறும்பு ணர்ச்சியோர் தன்மையே 8

ஐந்து நான்கோரு மூன்றி ரண்டுட
னேன்ற தாயுட லங்களின்
வந்தி டாவுணர் விந்தி யங்களும்
வன்ன பன்மையு மின்மையாம்
புந்தி யோடிய வன்ன போக
குணங்கள் பூத புணர்ச்சிதான்
றந்தி டாதிவை பேத மாயிட
வந்த வாவினை தந்தவா. 9

அறிவு பூதம தேன்னின் வேறு
புறத்த றிந்தமை கண்டிலஞ்
சேறிவு தானுட லத்தே னிற்சவ
மான போதுட றேருமோ
குறிகோ ளாதுடல் வாயு வானது
கூடி டாமையி னேன்னினீ
பிறித ராதுயிர் நிற்க ஞான
முறக்க மேன்பிற வாததே. 10

அறிவு டற்குண மென்னி லாணைய
தாதி யந்த மெறும்பதா
முறுமு டற்பேரி தான வற்றி
னுதித்தி டும்பேரி தாகவே
சிறுவு டற்சேறி ஞான முஞ்சிறி
தாயி டும்பரி ணுமமும்
பேறுமு டற்சிறி தாவ தேன்பேரி
தாவ தேன்சில பேசிடே. 11

போத மும்மேலி வாகி யும்மலி
பூத மானவை கூடலிற்
பேத மோடு பேருத்து டற்கள்
சிறுத்த பேற்றிமை யேன்றிடி
னேது டற்பேரி தான வுஞ்சிறி
தாயி டாசிறி தானவு
நீதி யிற்பேரி தாயி டாமுன
முள்ள தன்மையி னீடுமே. 12

இயல்பு காணிவை யேன்னின் வேறிசை
பேண்ணே டாணிரு தன்மையாஞ்
சேயல்கோ ளாவிவர் சேய்தி காரண
மாக வந்து சேனிப்பதே
னியல்ப தாமுடல் பூத காரிய
மாவ தும்மிலே யாகுமான்
மயல தாம்வினை யாலோ ருத்தன்
வகுத்த தன்மையின் வந்ததே. 13

கார ணம்மவை யேன்ற தேன்னை
கடாதி போனிகழ் காரியம்

நேர ணைந்து சமைந்து நின்றிடு
மென்ப தும்மது நேர்கிலோம்
போர ணைந்திடு மொன்றுெ டொன்று
பொருந்து மாயின் வருந்தியும்
நீர ணைந்தொரு தீயி னின்றது
கண்ட தாயி னிகழ்த்திடே. 14

பூத் மேவு புணர்ச்சி யேபுரி
காய காரண மாகுமேற்
காத லாணொடு பெண்ணு மேவு
புணர்ச்சி காரண மாவதே
ஞுதி யேயுல கத்தி லாணொடு
பெண்ணு மாயணை காரிய
நாத ஞுயகி யோடு கூடி
நயந்த காரண மென்பரே. 15

கந்தம் வெம்மை கலந்தி டும்புனல்
கன்ம மென்செய்த தென்றனை
சந்த னந்தழல் சார நீரிரு
தன்மை யுற்றிடு மாறதோர்
தந்த கன்ம மிரண்ட ணைந்து
தருஞ்சு கத்தொடு துக்கமுஞ்
சிந்தி யாவெழு சீவ னுற்றிடும்
வேறு டற்கிலை தேறிடே. 16

இன்ப மெய்தி யிருந்து நீவினை
யில்லை யிங்கியல் பென்றிடிற்
றுன்ப மெய்திடு வானேன் மற்றிது
சொல்லி டாய்சொல வில்லையேன்

முன்பு செய்திடு கன்ம மேன்றறி
கன்ம மும்முதல் வன்னறிந்
தன்பி ஞலுறு விக்கு மப்பய
ஞங்க மைப்போ டநாதியே. 17

அநாதி யேலமை வின்றே னின்மல
மாயை கன்ம மணுச்சிவ
னநாதி கன்ம மணுக்கள் செய்ய
வறிந்து கன்ம முடற்சேயா
வநாதி காரிய மாமு டல்க
ளசேத னம்மணே யாவறிந்
தநாதி யாதி யமைக்க வேண்டு
மமைப்பி னேடு மநாதியே. 18

காணே ஞுகர ணங்க ளுக்குயிர்
கண்டி டாமையி னின்றேனிற்
காணு மோகடங் கண்ட கண்ணினைக்
கண்டு நிற்பதுங் கண்ணதே
காணே ஞுதுயிர் தானு மிப்படி
கண்டி டுங்கர ணங்களைக்
காணே ஞுகர ணங்க ளுக்குயி
ருண்மை யாவதுங் கண்டிடே 19

அங்கி யானது தானு மோன்றை
யணைந்து நின்று நிகழ்ந்திடும்
பங்கி யாதுயிர் தானு மிப்படி
பற்றி யல்லது நின்றிடா
தேங்கு மார்தயி லத்தை யுண்டெழு
தீப மான தெரிந்திடு
மங்க தாமுட னின்று கன்ம
மருந்தி யாருயி ராவதே. 20

அறிவு தானுட லத்தின் வேறது
வாயி றந்து பிறந்திடி
னறிவு முன்புள திங்கு வந்து
மறிந்தி டாமைய தேன்னேனி
னறிவை யோகன வத்து நீங்ன
வத்தை யன்றுத ரத்திருந்
தறியு மவ்வறி வோம யக்கறி
வாத லாலறி யாதுகாண். 21

இறந்தி டும்மறி வேபி றந்திடு
மென்ப திங்கிசை யாதேனி
னுறங்கி டும்பொழு தின்றி நின்றுணர்
விங்கு தித்திடு மாறதோர்
பிறந்த விவ்வுடல் போக வேறுடல்
பின்பு வந்தமை பேசிடின்
மறந்தி டுங்கன வத்தில் வேறுடல்
வந்த வாறு மதித்திடே. 22

கரணம் வாயு விடத்த டங்க
வடங்கி வந்தெழு காரிய
மரண மான விடத்து மற்றிவை
மாய்ந்து பின்பு வருஞ்சேயல்
கிரண மார்கலே கேட்டு திப்ப
விறப்பி னேடு பிறப்பையுந்
தரணி யோர்கண் மதிக்கு ரைப்ப
ருயிர்க்கு மிப்படிச் சாற்றிடே. 23

பூத மானவை காரி யங்கள்
போலிந்து மன்னி யழிந்திடு

மாத லாலொரு நாத னிங்குள
னென்ற றிந்துகோ ளையனே
பேத மான கடாதி மண்ணினில்
வந்த வாறு பிடித்திடிற்
கோதி லாத குலால னுல்வரு
செய்கை யென்று குறிப்பரே. 24

வேத னாரண னார ணம்மறி
யாவி ழுப்பொருள் பேதைபாற்
றூத னுயிரு கான டந்திடு
தோழன் வன்மைசெய் தொண்டனுக்
காத லாலடி யார்க ளுக்கெளி
யான டிக்கம லங்கணீ
காத லாலணை யீண்டன் வேண்டின
விம்மை யேதருங் கண்டிடே. 25

பொன்கு லாவு மணிக்க லன்கண்
மலம்பு கிற்கை பொருந்திடா
மின்கு லாமிடை யார்க டாமுல
கத்தின் வேட்கை விடும்பொருள்
புன்பு லான்மல மூத்தி ராதி
பொசிந்து நாறு புலைக்கல
மென்கொ லாமிவர் மேல்வி ழுந்த
திவற்றி னென்பெற வெண்ணியே. 26

தோலி ரத்த மிறைச்சி மேதை
யெலும்பு மச்சை சுவேதநீ
ராலெ டுத்த முடைக்கு ரம்பை
யழுக்கி னேடு புழுக்குழா

நூலோ ழுக்கிடு கோழை யீர
    னுரைக்கு மூத்திர பாத்திரஞ்
சேல டர்த்தகண் ணுர்க ளென்பது
    தேர்ம லத்திர டிண்ணமே. 27

ஆசை யுற்றுழல் சூக ரங்க
    ளசுத்த மேவி யளைந்துதின்
றேசு கித்தன வாயி டுஞ்சுக
    மேழை யோடுறு மின்பநீ
மாச தற்றருளிர் நித்த சுத்த
    வளந்த ருஞ்சுக வாரிகா
ணீச னுக்கடி மைத்தி றத்தி
    னியைந்து நாம்பெறு மின்பமே. 28

குரோத மேகுண மாயி ருந்தவர்
    சாந்தி நன்மை குறிக்கோளா
ரராக மேயணை வார்க ளாசை
    யறுத்த வின்ப மறிந்திடார்
பராவு தேவர் பராவு தூய
    பராப ரன்னடி பற்றிநீ
விராவு மெய்யில் விடாத வின்பம்
    விளைந்தி டும்மிது மெய்ம்மையே. 29

காம மாதி குணங்க ளச்சுக
    மென்று கொண்டனை காதலாற்
றூம மாரழ லங்கி சீத
    மலிந்த போது சுகந்தரு
நாம மார்தரு சீதம் வெம்மை
    நலிந்த போது தருஞ்சுகஞ்
சேம மாகிய வின்ப மாமிகு
    தெய்வ நன்னெறி சேரவே. 30

படிக்கு நூல்கள் சிவாக மம்பசு
 பாச மோடு பதித்திற
மேடுத்தி யம்புவ தீசன் வார்கழ
 லேத்தி டுந்தொழி லென்றுமே
விடுத்தி டும்பொருள் காம மாதிகள்
 வேண்டி டும்பொரு ளீண்டருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மல
 ஞேடு நின்றிடன் முத்தியே. 31

---

2. பௌத்தரிற் சௌத்திராந்திகன்மதம் I

நீதியார் வேத நூலி னெறியலா வறங்க ளுளு
மோதியோ ரைந்து சீல முடையரா யுடல முடிப்
போதிநீண் மரத்தின் மேவு புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதா னிலாத கோள்கைச் சௌத்திராந் திகன்முன்
 சாற்றும். 1

முழுதுணர்ந் துலகிற் கோறன் முதற்செயன் முனிந்து
 மற்றும்
பழுதிலா வருளி ஞலே பரதுக்க துக்க ஞகித்
தோழுதுவா னவரும் போற்றத் தோல்பிட கங்க ளான
வழுவிலா கமங்கள் சொன்ன மாதவ ஞத ஞவான். 2

மருவிய வளவை காட்சி மானமேன் றிரண்டி வற்ருற்
கருதிய பொருள்கண் ஞான ஞேயமாய்க் கணத்திற் பங்கம்
வருமுரு வருவம் வீடு வழக்கென நான்க தாகித்
தருமவை யோன்றி ரண்டாய்த் தாம்விரிந் தேட்டி ஞமே. 3

உருவியல் பூத மோடங் ‡குபாதான ரூப மாகு
மருவியல் சித்தங் கன்ம மேன்றிரண் டாகும் வீட்டின்
மருவியல் குற்றங் கந்த மேனவழங் கிடும்வ ழக்கி
னிருவிய லுள்ள தோடங் கில்லதா மியம்புங் காலே. 4

மண்புன லனல்கால் பூதம் வலிகந்த மிரத வன்ன
மேண்டரு முபாதா னந்தா னிவையிரு நான்குங் கூடி
யுண்டோரு போருளு ரூப முருபுல னுபாங்க மோடக்
கண்டது சித்தங் கன்ம நன்றுதீ தேன்றல் காணே. 5

குற்றவீ டராக மாதி குணங்களைக் குறைத்த லாகு
மற்றவீ டுருவ மாதி யைந்தையு மாய்த்த லாகுஞ்
சோற்றருந் தோகைதோ டர்ச்சி மிகுத்துரை யேன்று மூன்ரு
யுற்றிடும் வழக்கி ரண்டு மோன்றுமுன் ருகி யாரும். 6

ஒருவனேன் ருேதப் பட்டா னுருவாதி யைந்துங் கூடி
வருபவ னேன்று ரைத்த ருேகையுண்மை வழக்க தாகு
முருவமங் காதி யாய வைந்தையு மோருவ னின்று
தருவது தோகையி னின்மை வழக்கதாஞ் சாற்றுங் காலே 7

காரண காரி யத்தின் ருேடர்ச்சியாய்க் கால மூன்றின்
சோர்வரத் தோன்றுங் கேட்டு வழியேன்கை தோடர்ச்சி யுண்மை
யோர்தரி ஞேருவ னேயேக் காலத்து முள்ளா னேன்று
தேர்வது தோடர்ச்சி யின்மை வழக்கதாஞ் சேப்புங் காலே. 8

தோற்றிய போருள்க ளேல்லா நாசமா மேன்று சோல்லு
மாற்றமுன் னுரைத்தன் மற்றை மிகுத்துரை வழக்கினுண்மை
போற்றிய போருள்கண் கட்குப் போனது போன்மு திர்ந்து
வேற்றுமைப் பட்ட தேன்கை மிகுத்துரை யில்வ ழக்கே. 9

‡ உபாதாயம் என்பதும் பாடம்,

உள்வழக் கில்வ ழக்குள் ளதுசார்ந்த வுள்வ ழக்கோ
டுள்ளது சார்ந்த வின்மை வழக்குட னின்மை சார்ந்த
வுள்வழக் கின்மை சார்ந்த வில்வழக் கேன்றோ ராறு
‡முள்வழக் குளதுண் டேன்கை முயற்கோடின் றில்வ
[ழக்கே. 10

உணர்வுசார்ந் துணர்வு திக்கை யுள்ளது சார்ந்த வுண்மை
யுணர்வுபி னின்று மேன்கை யுள்ளது சார்ந்த வின்மை
யுணர்வுமுன் பின்றித் தோன்ற லில்லது சார்ந்த வுண்மை
யுணரினில் லதுசா ரின்மை யுள்ளங்கை யுரோம நாணே. 11

வான்முதல் ஐந்தும் அநித்தியம் எனல்

சொன்னநால் வகையு மன்றிச் சொல்லிடும் பொருள்க
[ளெல்லா
மென்னையோ வறிகி லோம்பித் தெறியோ வான மான்மா
மன்னுகா லங்க டிக்கு மனமோடு வாக்கி றந்திட்
டுன்னுமோ ரிறையு முண்டேன் றுரைப்பது நித்த மன்றே. 12

1. வானம்

ஈங்குவான் செயற்கு வாரா தியம்பிய பொருள்க ளெல்லாந்
தாங்குவா னுளதே யென்னிற் றரித்திடா தருவ மாத
லோங்குவா ஞேசைக் காதி யெனிலதங் குருவின் கூட்ட
நீங்குவா னின்றி யெங்கு நின்றதே லெங்கு மின்றே. 13

2. ஆன்மா

போதமுண் டுயிர்கட் கென்னில் வாயிலும் புலனு நாலு
மாய்தலின் றேட்டுத் தீட்டுக் கலப்பினி லறியு மென்னி
லேதமுண் டிரவிற் பச்சை சிவப்புட னேய்ந்த போது
கேதநின் றேன்னே வென்னு மையமுன் கிடத்த லாலே. 14

‡ உள்வழக் குணர்வுண் டேன்கை என்பதும் பாடம்.

அறிந்திடா வாயி லின்றே லறிவின்று மைந்தும் பற்றி
யறிந்திடு மறிவுண் டேன்னி லைந்தினு மறிவோன் ருக
வறிந்திட வேண்டுஞ் சார்பி னறிந்திடு மேன்னி லுன்னே
யறிந்திலோம் புத்த னேன்றிங் கழகிது சோன்ன வாறே. 15

ஞானமே யங்க ளன்றி ஞாதுரு வேன்று சோல்ல
வானதிங் கறிவோ வன்றே வன்றேனி லவனி போலுங்
தானதிங் கறிவே யேன்னிற் சமைத்திடு நன்ப ருப்புப்
போனகந் தனக்குத் தானே கறியேனப் புகன்ற தாமே. 16

உயிரினை யருவ தேன்னி னுருவுட னுற்று நில்லா
துயிரினை யுருவ தேன்னி லுடலினி லுடல டங்கா
துயிரினை யணுவ தேன்னி லுடல்பல துவார மோடு
முயிரினை நித்த மேன்னி லுணர்வுத யாந்த மின்றே. 17

எங்குமாய் நின்ற தான்மா வேன்றிடி னேங்கு மின்றுந்
தங்கிடு நிறைவு தத்தஞ் சரீரங்க டோறு மேன்னின்
மங்கிடு முடலத் தோடே வடிவினி லோரி டத்தே
யங்கது நின்ற தேன்னி லடிமுடி யறிவின் றுமே. 18

3. காலம்

சாற்றிய கால மிங்குத் தங்கிய வாறி தேன்னே
தோற்றுவித் தளித்துப் போக்குந் தொழிலிவை கால
[மேன்னிற்
போற்றிய போருளிற்புக்குப் பிணங்கிடும் போருட்பினின்றுந்
தேற்றிய வில்வ ழக்குத் திரவியத் தியல்பி னுமே. 19

4. திக்கு

எனக்குநீ கிழக்கி ருந்தா யாகின்மேற் கேன்று யேன்பா
லேனக்குமேற் கிருந்தா னேன்பாற் கிழக்கேன வியம்புந்
[திக்குத்
தனக்குநாங் கோள்வ தேப்பாற் சாற்றிடா யில்வ ழக்குத்
தனக்குள தாகு முண்மை தானில தாகு மன்றே. 20

5. இறை

உலகினைப் படைத்தா னென்ரு யொருவனிங் குள்ள தாகி
லுலகினைப் படைக்க வேண்டா வில்லையேற் படைக்க
[வொண்ணு
வுலகினுக் குபாதா னந்தா னுள்ளதாய்க் காரி யத்தா
முலகினைப் படைக்கி லங்கு முளதில தாவ துண்டே. 21

உள்ளது கடாதி போல வுதிப்பித்தா னென்று ரைக்கின்
மேள்ளவே யெங்கு நின்று விதித்தன னுலகின் மீது
வள்ளரு னின்ரு னென்னில் வந்ததா முலக முன்னே
தள்ளிடா தெங்கு நிற்கி லெங்குமுன் றந்த தாமே. 22

இல்லது கருணை யாலே யியற்றின னிறைவ னென்னிற்
கோல்லரி யுழுவை நாகங் கூற்றமுங் கொண்டு தோற்ற
வல்லவன் கருணை யென்னே வலியினல் வேண்டிற்
[றெல்லாம்
பல்கவே படைத்தா னுயிற் பித்தரைப் பணிந்தி டாயே. 23

பேறுவதிங் கென்ப டைத்துப் பெற்றது விளையாட் டென்னிற்
சிறுமழ விறைய தாகுஞ் செய்திடுங் கன்மத் தென்னி
னுறுபெருங் கன்மஞ் செய்வோர் முன்புள ராவ ருண்மை
யறிவுறின் ஞால மெல்லா மநாதியென் றறிந்தி டாயே. 24

உருவோடு நின்ரு னென்னி லுருவமுன் படைத்தார் வேண்டு
முருவவ னிச்சை யென்னி லுலகெலா மிச்சை யாகு †
முருவுல கத்து ளோர்கட் குறுவது கன்மா லென்னி
லுருவுடை யோர்கட் கெல்லா முற்றது கன்மத் தாமே. 25

அருவேனிற் பவத்தி னின்று மேடுத்திடா னுகா யம்போன்
மருவின நிழல்போ லென்னின் மருவினேர்க் காகு மாட்சி

† சித்தியார் சுபக்கம் 1, 39, பார்க்க.

பெருகிய வறிவுண் டேன்று பேசிடி னேசத் தோடுங்
கருதிட வுருவம் வேண்டு மில்லையேற் கருத லின்றே. 26

எங்கணூ லநாதி யாக விறைவனுண் டேன்னு மேன்னி
னுங்கணூ லுரைப்பா ரின்றி யோதுவ தழகி தாகு
மங்கவன் றன்னை நூல்கோண் டறிந்தன மவனைக் கோண்டே
யிங்குநூ லறிந்தோ மேன்னி னீதோராச் சரிய மாமே. ‡ 27

உற்றேழு மரங்க ளாதி யுயிரின்றிப் பூத ரூபம்
பற்றியிப் பாரின் மீது பாங்கினுற் பலவு மாகிப்
புற்றேடு மயிர்கோம் பாதி போலவே தோன்றி மாயு
மற்றுள யோனி கட்குப் பயனேன வழங்கு மன்றே. 28

கோன்றிட லாகா தேன்றுங் கோன்றவை கோண்டு நாளுந்
தின்றிட லாகு மண்ணே டோத்திடுஞ் சேத்த வேல்லா
மோன்றிய வாச முட்டி யுண்ணிநீர் வைத்த வர்க்கோ
சேன்றுநின் றுண்ட வர்க்கோ புண்ணியஞ் சேப்பி டாயே. 29

அழித்திடு மராகமாதி யகற்றிநல் லறங்கள் பூரித்
திழித்திடும் புலன்கள் போக்கி யின்போடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை யேட்டையும் பாரித் தேல்லா
மோழித்திடு ஞான சீல சமாதியி னுறுதி யாமே. 30

ஓங்கிய வுருவ மோடும் வேதனை குறிப்பி னேடுந்
தாங்குபா வனைவிஞ் ஞானந் தாமிவை யைந்துங் கூடிப்
பாங்கினுற் சந்தா னத்திற் கேடுவது பந்த துக்க
மாங்கவை போன்றக் கேடா யழிவது முத்தி யின்பம். 31

‡ சிவஞானபாடியம் சிறப்புப்பாயிரவுரை பார்க்க.

சௌத்திராந்திகன்மதமறுதலை

அனைத்தினையு முணர்ந்தானெம் மிறைவ னென்றிங்
கறியாது புத்தநீ யறைந்தா யென்று
மனைத்தினையு மறிந்திடா னளவி லாமை
யொன்றென்று வனைத்தினையு மறிந்தா னென்னி
னனைத்தினையு மளவிறந்த தென்ன வேண்டா
வளவிலா ஞானத்தா லறியின் ஞான
மனைத்தினையு மறியாது கணத்திற் றேன்றி
யழிதலா றறிந்தமையின் ருகு மன்றே. 1

சிலபொருளை யுணர்ந்தவற்றின் றிறத்தே யோட்டிச்
சிந்திப்ப னெப்பொருளு மென்னிற் சென்று
பலபொருளா யொன்றுபல பேத மாகிப்
பயின்றுவரு மாதலாற் பார்க்கு மாறென்
னுலகுதனி லொருபொருளங் குணரும் போதி
லுற்றுணர்த லாராய்த றெளித லுண்டாய்
நிலவுமத னுலுணர்வு பன்மை முன்பி
னின்றிடா தெருபையெல்லா நினைப்பதெங்கே, 2

முத்திநலங் கண்டறங்கண் மொழிந்தா னுயின்
முதன்முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ண
மொத்திடுந்தே னெய்கூட்டி யுண்டிறந்தோ னொருவ
னுலகினில்வந் திதுதீதென் றுரைத்தா லொக்குஞ்
செத்ததுபி னென்றுரைக்கிற் கதியிற் செல்லாத்
தொனுரை நீர்பெருகிச் சென்ருராகு
மத்தினள வறியாதிக் கரையோர் தம்மை
யக்கரைக்கே செல்லவிடு மாசை யாமே. 3

நீர்போல நின்றுயிர்கட் களித்தி டாதே
  நெருப்பாய துயர்ப்பிறப்பி னிகழ்ந்து நின்று
பாரோர்கட் களித்தபடி வனையிற் பட்ட
  பலகலைமான் கண்டோருநீள் கலைபாய்ந் தோடி
நேரேசென் றவ்வலைக்கே நேர்ந்தா லொக்கு
  நீள்பாவக் குழியில்விழு நீர்மை யாகு
மாரோவிங் கவனேப்பா றறத்தை யாக்கப்
  பிறந்தறமாக் கினனேன்னி லடங்க வாமே. 4

அலகிறந்த யோனிகளிற் புகுந்த வெல்லா
  மறத்தையளித் திடவேன்னி லவற்றி னெல்லா
நிலவுவது கன்மத்தா லாகு மன்றி
  நினைந்ததோ ரிச்சையினு னிகழ்ந்தா னுகி
னுலகுதனி லுள்ளோர்க்கு மதுவே யாகு
  மொருத்திவயிற் றினிலிருந்தங் குதரந் தள்ளித்
தலமதில்வந் தானேன்னிற் றுயைக் கோன்றுன்
  றருமத்தை யுன்றேனக்குச் சாற்றி டேலே. 5

அரியினேடு நரியுழுவை யாதி யாக
  வானபோ தறந்திரிந்து கோறலாதி
பரிவினேடுஞ் செய்தனனு மில்லை யாகிற்
  பசிதனக்குத் தின்பதவன் பழுதை யோதான்
கருதிலவன் பரதுக்க துக்க னுகிற்
  *கணவனிழந் தோர்கட்குங் கண்ணி குத்தித்
திரியுமவர் துயரினுக்கு மிரங்கு வோன்றன்
  செயலறத்துக் கழகியதாஞ் செப்புங் காலே. 6

---

* கணவனிறந்தோர் என்பதும் பாடம்.

ஒருபொருளைத் தேடியதற் குரையுந் தேடி
யுரைப்பதன்மு னுணர்விறக்கு முனக்கு நூலென்
மருவிவரும் சந்தான வழியி லென்னின்
வாயுரைத்த தேயுரைத்து வழங்கு மாகும்
பெருகுவது கேட்டேன்னி லதுபோ லாம் பின்
பித்துரைத்த தறியாது பேதை சொல்லுந்
தருவது நூலெப்பரிசு முதனடுவோ டிறுதி
தான்விருத்த மின்றியது சாற்றி டாயே. 7

முன்னுகப் பலவறங்கள் பூரித்தெம் மிறைவன்
முழுதுணர்ந்திங் கருளினு லுயிர்கண்முத்தி யடையப்
பின்னுகப் பிடகநூ லுரைத்தா னென்று
பேசினு யிவன்முன்பு பேரறங்கள் புரிநூல்
சொன்னுரா ரிவனைப்போன் முன்னெருவ னென்னி
லவனுக்குச் சொன்னுரா ரெனத்தொடர்ச்சி யாகி
யன்னுய்பி னநவத்தைப் படுமொருவ னின்ரு
மாரோவுன் பாழியிருப் பாரிதனை யறையே 8

இந்நூலைச் சொன்னவன்ரு னிங்கிருந்தா னென்னி
லிவனிருத்தி யேத்துமவ னெங்கிருந்தா னெவனே
வந்நூலோ குருவந்த வடைவுமுனக் கில்லை
யடைவுதரின் முடிவின்க ணுநாதி போதன்
சொன்னுனு மவைவேதா கமங்க ளாகுஞ்
சுருக்கியூண் டவம் புரியச் சொல்லுவதெல் லோரும்
உன்னூல்கண் கழுவாதே யுதிப்பதன்முன் புலாலோ
டுண்பானே ரூன்பிரிய னுரைத்ததொரு நூலே. 9

முன்னூலும் வழிநூலுஞ் சார்பு நூலு
மூன்ருகு முலகத்து மொழிந்த நூல்கள்

ளிந்நூலி னுன்னூலிங் கெந்நூ லென்னி
லிந்நூல்கா ணெந்நூலென் றியம்ப மாட்டா
யுன்நூலு மொருநூலா யுரைப்ப தென்னே
யுலண்டுநூல் பருத்திநூல் சிலம்பி நூல்க
ளந்நூலு மல்லாத பொய்ந்நூல் கொண்டிங்
கறநோற்றுத் திரிந்தவா றழகி தாமே. 10

புத்தனவன் பொன்றக்கெட் டுப்போனு னென்று
போற்றுவதிங் காரைநீ பொய்த்தவஞ்செய் புத்தா
செத்தவர்க்குச் சிலகிரியை செய்ய விங்குச்
செய்தவர்க்குப் புண்ணியமா மென்று செப்பி
னித்தமுயி ராதலாற் பலிக்குஞ் செய்தி
நினைந்துதரு வானுமுள னுனக்கிவ்வா றில்லை
வைத்தசுடர்த் தீபமற மாய்ந்தக்கா லதற்கு
மருவுதிரி நெய்கூட்டு மதிகேடுன் வழக்கே. 11

†நூலுரைத்தா னொருவனுள னென்றனுமா னத்தா
னூல்கொண்டிங் கறிந்தாற்போ னூலா நூலின்
பாலுரைத்த பொருள்களெல்லா மனுமான மென்னிற்
பரலோக பாதாள லோகங்க ளொருசொல்
லாலுரைத்த நூலின்றி யறையா யின்றே
லவையறிந்த படியெனுன தனுமான மன்றுன்
மேலுரைக்கும் பிரமாண முனக்கில்லை காட்சி
யனுமானம் விட்டபொருள் விளக்குவதா கமமே. 12

எப்பொருளு மநித்தமென வியம்பிடுவை யநித்த
மில்லதற்கோ வுள்ளதற்கோ வுளதிலதா னதற்கோ

---

†இச்செய்யுள் சிவஞானசுவாமிகளால் சித்தியார் சுபக்கம் அளவை க. உரையில் எடுத்தாளப் பட்டது.

சேப்பிடினில் லதற்கில்ல தேன்று மில்லை
சேன்றடைவ துள்ளதற்கே லுள்ளதேன்று முண்டா
மப்படிதா னுளதிலதா மப்போருளுக் கேன்னி
னுளதிலதா காதிலது முள்ள தாகா
திப்போருளுக் கநித்தமிலே யேன்றேன்றைக் காட்டா
யேனிற்றேன்றும் போருணின்றிங் கிறுதி யாமே. 13

அங்குரம்வித் தின்கேட்டிற் றேன்றுமது போல
வணைத்துருவுங் கேட்டுவழி யாகு மேன்னி
னங்கவற்றுக் காக்கக்கே டறைந்தா யேல்லா
மநித்தமேனு முரைமறந்தா யருகனுமா ளுய்நீ
யிங்குமுளை யிலைமரமா யேழுந்தீண்டிச் சேல்லா
திறந்ததே யேழுந்தபடி நில்லா தேன்னின்
மங்கியிடா தேபால தருணவிருத் தையாய்
வரும்வடிவு திரிந்துநின்று மாயுங் காணே. 14

உடல்பூத மேனிலேன்றுக் கோன்றுபகை யோன்று
வுதிரசுக் கிலமேன்னின் மரத்திநுளுக் கல்லி
னிடமாகத் தவளையுரு வந்தவா றியம்பா
யிருவினைகா ணேனில்வினைக ளிரண்டுருவாய் நிற்குந்
திடமாக வன்னமுரு வேனிலுண்ண வுண்ணச்
சேன்றுவள ருங்காயந் தேயுமுணர் வேன்னின்
மடவோனே யருவுணர்விங் கசேதனமா யுருவாய்
வளராது வருமில்லா தேனின்மலர்வான் வருமே. 15

என்றுமிலா தோன்றின்றுய் வருமுருவம் வித்தி
னேழுமரம்போ லேனின்வித்தி னுண்டாய்நின்றேழுங்கா
ணின்றதேல் வித்தின்மரங் கண்டதில்லை யேன்னி
† னேற்கமுகாய் நீளாது நேல்லாயே நீளு

---

† இது சிவஞான பாடியம் 1, 2-ல் எடுத்தாளப்பட்டது.

மோன்றிலொன்றங் கிலாமையினு லுதியாகா ரணம்பெற்
றுதிப்பதுகா ரியமதுவு முள்ள தாகு
மன்றமதிக் கலைபோலக் கந்த மைந்து
மருவியுள தேனுமுரையு மறந்தனையோ வின்றே. 16

உருவமேலாம் பூதவுபா தாய சுத்தாட்
டகவுருவ மேன்னினீ யுலவத் துக்கு
மருவுமன லோடுநீர் மண்கந்த மிரதம்
வன்னமிலை வன்னிக்கு வளிநீர்மண் வாசங்
தருமிரத மிலைநீர்க்குத் தழல்கான்மண் கந்தந்
தானில்லை தலத்தினுக்குச் சலமனல்கால் கூடி
வருவதிலை யிந்திரிய விடய மான
மாபூதங் களுமறியாய் மதிகேட் டாயே. 17

மருத்தேண்ணேய் தனின்மருந்து நின்றுற் போல
மறைந்தேட்டுஞ் சூக்குமமாய் மருவு மேன்னிற்
றிருத்துமவன் மருத்தேண்ணேய் சேர்த்தாற் போலச்
சேர்போருள்வே றுண்டேல்லா வுருவு மேட்டும்
போருத்தியதே லோருதன்மை யாம்போருள்க ளோன்றின்
குணமோன்றிற் புகாதறைகை போருளறியாய் பூத
வுருப்போருள்வே றுபாதானப் போருள்வேறு காட்டா
யுபாதாயம் பூதகுணங் குணகுணியா முலகே. 18

அழிந்துணர்வை யுணர்வுதரு மேனினழிந்த தாக்கா
தாமுணர்விற் போருள்வினை களணையா வாகு
மழிந்திடுவ தாக்கியேனின் முன்னேருகா லத்தே
யறிவிரண்டு நில்லாதங் கறக்கே டின்றி
யழிந்துணர்வை யுணர்வுதரு மேனினித்தா நித்த
மடையுமுணர் வுனக்கநித்த மாயே சேல்லா

தழிந்தேருவை யாக்குவது போலாக்கு மேன்னி
லாம்போருள்வே றழிந்துசத்தி கிடந்தாக்கு மவையே.

கேடிலாச் சந்தானத் தேபலிக்கு மேன்று
கிளக்கினீ சந்தான நித்த மாகு
மோடுநீர் போலழிந்தா முணர்வோழுக்க மேன்னி
லோழுகுநீ ரிட்டதேல்லா முடன்கழிதல் போலத்
தேடுபோருள் சீலம்பா வனேகுறிவிஞ் ஞானஞ்
சேன்றவுணர் வோடேகு நின்றுணர்வி னேயா
நீடுநீர் முன்னேழுகிக் கேடாதுநிறைந் தோடு
நிகழுணர்வுங் கேடின்றி நினேந்துசேலுங் காணே. 20

சந்தானங் காரணமோ காரியமோ விரண்டின்
றன்மையதோ காரணமுங் காரியமு நித்தம்
வந்தாருஞ் சந்தானந் தோடர்ச்சியேனி னதற்கும்
வருநித்தந் தோற்றக்கே டடைதலின்மற் றேன்றே
லேந்தான கந்தங்க ளன்ருய் நித்த
மடைபோருளா மறிவுமறி வடைவு மன்றிச்
சிந்தாமுன் பின்னுகிப் பின்முன் னுகித்
திரிந்துவருந் திரிவறிந்து தேரா தேரே. 21

ஒருகாலத் துணர்வுகேட்டா மேனினுதிப்பீ றேன்று
மோருபோருளின் றிரிவுனக்குக் கால மானல்
வருகால நிகழ்காலங் கழிகால மேன்று
வழங்குவதேன் போருள்வரவு நிலேகழிவா லன்றேற்
றிரிகாலஞ் சேப்பிடாய் போருட்சேயலு மோன்றுஞ்
சேயன்மூன்று மோருகணத்தே சேரு மேன்னிற்
றருகால மூன்ருகுந் தாமரைநூ றிதழிற்
றள்ளுசி யுங்கால மூன்றினேயுந் தருமே. 22

உணர்வுகா ரணமுணர்வுக் கேனினித்த முணர்வுக்
குண்டாகி நின்றுணர்வை யுதிப்பி யாதிங்
குணர்வுசந் தானவிடத் தொழிந்தாற் பின்னை
யுண்டாகா துடலுணர்வுக் குபாதான மென்னி
னுணர்வுடலி னிடையறா துதிக்க வேண்டு
முடலுணர்வின் வினையினா லுணர்வுதிக்கு மென்னி
னுணர்வுவினை யுளதொடுங்கா துணர்வுதருஞ் செய்தி
யுணர்வைவினை தரினொருவன் செயல்வினையின் றாமே.

வினையுணர்வு தரும்வினையை யுணர்வுதரு மென்று
விளம்பினீ யுணர்வுபோல் வினையி னுக்கு
நினைவுவரு மொன்றையொன்று நிகழ்த்தி டாபின்
னிலையின்மை யானிகழ்த்திக் கெடுதல் செய்யா
கனல்விறகிற் பிறந்ததனைப் பொடிசெய் தாற்போற்
கருத்தும்வினை யிற்றோன்றிக் கழிக்கும்வினை யென்னின்
முனமுணர்வு பிறந்தளவே வினைகெடுக்கு முன்பி
னுதியாது முகிழ்நெருப்பின் விறகுதியா வாறே. 24

பேயுநர கருஞ்சுரரும் பிரமருமா யுலகிற்
பிதாமாதா வாதார மொன்று மின்றிக்
காயமொடு தாம்வருவ ரென்றுரைப்பை காயங்
காரியமாய் வருதலினாற் காரணமுண் டாகு
மாயுமுணர் வோசுத்த வட்டகமோ கன்மம்
வடித்ததோ வடிவுசெய்து வைத்தாரு முண்டோ
வாயுமறி வுண்டாகி லறைந்திடா யுலகுக்
காதிதுணை நிமித்தகா ரணமறிவ தறிவே. 25

உருவாதி கந்தங்க ளைந்துங் கூடி
யொருவன்வே றொருவனிலை யென்றுரைக்கும் புத்தா

வுருவாதி யைந்தினையு முணர்பவர்யா ரென்ன
வுணரும்விஞ் ஞானமென்றாய் ஞானமுணர்ந் தவரா
ருருவாதி பொருள்காட்டித் தனைக்காட்டுஞ் சுடர்போ
லுணர்வுபிறி தினையுணர்த்தித் தனையுணர்த்து மென்னி
னுருவாதி பொருளினையுஞ் சுடரினையுங் காணு
முலோசனம்போ லுணர்வுபொரு ளுணர்பவன்வே
றுண்டே. 26

காயமுட னிந்திரிய மனநா னென்று
கதறுவாய் காயமுறக் கத்தறியா வாகும்
வாயில்களு மப்படியி னுென்றையொன்றங் கறியா
மனங்கணத்திற் கெடுங்கால மூன்றின்வர வறியா
தாயுமுணர் வாகியுடல் பொறிமனமுன் றறிந்தங்
கவைநானல் லேனென்று மறிந்துமனத் தாலே
யேயுமொரு பொருள்கருதி யிந்திரியப் பாலே
யிசைவித்துக் காயத்தா லியற்றுவதான் மாவே. 27

கழிந்தவுணர் வேபின்னு மியானறிந்தே னென்று
கருதலினவ் வுணர்வறிந்த தேன்னின் முன்னே
மொழிந்தமொழி நான்மொழிந்தே னென்றால் வாய்தான்
மொழிந்ததோ மொழிந்தவன்வே றுறைற் போல
வெழுந்தவுணர் வெல்லாங்கொண் டியானறிந்தே னென்ற
தேதுவதுதா னுயிருணர்வால் வாக்கான் மற்றை
யொழிந்தகா யந்தன்னு லுணர்ந்துரைத்துச் செய்திங்
குணர்வினுக்கு மாதார மாய்நிற்கு முயிரே. 28

இந்திரிய வீதியெழுஞ் சித்த நெஞ்சத்
தெழுஞ்சித்த மெனவிரண்டு மொன்றுகெட்டே யொன்று
வந்தெழுவ தெனிற்கனவிற் கண்டபடி நனவின்
வாய்திறவார் நனவுகண்ட படிகனவிற் காணு

ரந்தனுரு வன்னங்க ளறிந்திடா னன்றே
யறிகனவு மிறந்துணர்வு மழிந்துறக்க மடைந்தா
லுந்துவதோர் சந்தான மில்லையுணர் வுதிப்ப
வுயிர்கனவு நனவினையு முணருங் காணே. 29

ஒருகாலத் தோரிடத்தி லோருணர்வேற் செவிதா
னென்றுணரா திருசெவியு முணரு மோசை
யொருகாலத் திருகண்ணு மிருசெவியு மனமு
மொருவனைக்கண் டவனுரைகேட் டுணர்ந்திடுமைம்
மொருகாலு முணராவுள் ளுணர்வின்றிப் பொறிக [பொழியு
ளொன்றொன்று வுணர்வதுவுள் ளுணர்வைந்து முணரா
வொருகாலும் பொறிவிகற்பித் துணராவுள் ளுணர்வுக்
குள்ளதுகாண் விகற்பமிரண் டும்முணர்வ துயிரே. 30

அருவுணர்வு மாயாறு மாறி மாறி
யங்கங்கே தோன்றியிடி லகத்துநிலை யின்றி
யுருவினொடு பாலதரு ணவிருத்தா வத்தை
யுண்டாகா துறக்கத்தி னுடல்தட்ட வழைப்ப
வருவதுணர் வெங்கிருந்து நெஞ்சிலிருந் தென்னின்
வாயில்வினை யறிந்தெழுப்ப வாயுவறி யாதாந்
திரியொழிய விடிஞ்சில்தொடத் தீபமெழா தடக்கஞ்
சென்றபொழு தாலுணர்வு நின்றநிலை செப்பே. 31

இச்சைவெறுப் பியற்றலின்ப துன்ப ஞான
மிவையணுவின் குறியாகு மிவற்றி லிச்சை
நச்சிநுகர்ந் தொருபழத்தை யினங்கண்டு முன்பு
நானுகர்ந்த கனியினின மென்றுநச்சல் பின்பு
மெச்சவெறுப் பாதிகளு மிப்படியே யாகு
மிவைமுன்பும் பின்புமுணர்ந் திடுத லாலே
நிச்சயகர்த் தாவொருவ னுளனென்று நல்லோர்
நிறுத்திடுவர் வெறுத்திடுவர் நின்னுடைய பொருளே. 32

எப்பொருட்கு மிரந்தரமா யிடங்கொடுத்து நீங்கா
திருள்வெளிதா னன்றியிரண் டினுக்குமிட வகையா
யொப்பில்குணஞ் சத்தமதாய் வாயு வாதி
யுதித்தொடுங்க நிற்கும்வா னுயிர்முன்னே சொன்னேஞ்
செப்பிடுங்கா லம்பொழுது நாளாதி யாகித்
திரிவிதமாய்த் தீமைநன்மை செய்யுந் திக்குத்
தப்பில்குணக் குக்குடக்குத் தெற்குவடக் காதி
தானுகித் திரியாதே நின்றுபலந் தருமே. 33

காரியமா யுலகமெலா மிருத்த லாலே
கடாதிகள்போற் காரியகர்த் தாவொருவன் வேண்டு
மாரியமா யறம்பொருளோ டின்பம்வீ டெல்லா
மறைந்துயிர்கட் கறிவுசெய லளிப்பதுநூ லந்நூல்
கூரியரா யுள்ளவர்க ளோத வோதிக்
கொண்டுவர லான்முன்னே குற்ற மின்றிச்
சீரியபே ரறிவுடையோன் செப்ப வேண்டுஞ்
செயலினுக்குங் கரிவேண்டுஞ் சிவனுளனென் றறியே.

மரங்களுயி ரல்லவென்று மறுத்துச் சொன்னுய்
வாடுதல்பூ ரித்தலான் மரங்களுயி ராகுந்
திரங்குநீர் பெருதொழியிற் பெறிற்சிரத்தை சேருஞ்
சீவனல வெனிலுலகிற் சீவ னெல்லா
முரங்கொள்வ தூண்பெறிற் சோருமுண் பெருவே
லுலர்ந்தமர நீர்பெற்ரு லுய்யாதுள் ளுயிர்கள்
கரந்தசினை முட்டைகட்கு வாயிலின்று வாயில்
கண்டிலதேற் †பூத்துக்காய்த் தெழன்மரங்க
[ளுயிரே. 35

†பூத்துக்காய்த் தெழலான்மரங்க ளுயிரே - என்பதும் பாடம்

ஒருமரத்தி னுயிரோன்றேற் கோம்போசித்து நட்டா
லுய்யுமுயி ரோன்றுபல வாமோ வேன்னிற்
கருமரத்தின் வித்துவேர் கோம்புகோடி கிழங்கு
கண்கலந்து கோள்ளுமுயி ரண்டம் வேர்ப்புத்
தருபிறப்புச் சராயுசங்கள் சனனமும்பேற் ருற்போற்
ருனடையு முற்பீசந் தலநடவா தேன்னிற்
பேருநிலத்திற் காலிலார் நடப்பரோ பேதாய்
பிறப்பின்வித மநேகங்காண் பேசுங் காலே. 36

தின்னுமது குற்றமிலே சேத்ததேனும் புத்தா
தின்பையேனக் கோன்றுனக்குத் தீற்றினர்க்குப் பாவ
மன்னுவதுன் காரணத்தாற் றின்று தார்க்கு
வதைத்தோன்றை யிடாமையினுல் வதைத்தவர்க்கே
மேன்னிலுனே யூட்டினர்க்குப் பாவஞ் சேர [பாவ
வேன்னதவம் புரிகின்ருய் புலால்கடவுட் கிடாயோ
வுன்னுடல மசுசியேன நாணி வேரு
ருடலுண்ணி னசுசியேன வுணர்ந்திலேகா ணீயே. 37

குடைநிழலுங் கண்ணடிச் சாயையும்போற் பிறப்புக்
கோள்ளுமுணர் வேன்னிற்கா ரணமழிய வழியு
மடைநிழலுங் கந்தமைந்து மழியுமுனக் கிங்கே
யவையழிந்தா லருங்கதியி னணேயுமுணர் வின்ரு
மிடைகனவி னேழுமுணர்வு நனவுணர்வா ளுற்போ
லேழுமுணர்வு கன்மத்தா னிணேந்துகதி யேன்னின்
மிடைசினேயு மந்தனுமுட் டையுமுயிர்விட் டக்கான்
மேவுவதேன் பிறப்பினுடல் விடாதுகன்ம வுணர்வே.

ஐந்துகந்தஞ் சந்தானத் தழிதல்பந்த துக்க
மறக்கேடுகை முத்தியின்ப மேன்றறைந்தாய் கந்த

மைந்துமழிந் தான்முத்தி யணேபவர்யா ரேன்ன
வணேபவர்வே றில்லேயேன்ரு யார்க்குமுத்தி யின்ப
மைந்தினுணர் வினுக்கேன்னி லழியாதவ் வுணர்வுண்
டாகவே யேவ்விடத்து முருவாதி கந்த
மைந்துமுள வாமதுவும் பந்த மாகி
யரந்தைதரு முத்தியின்ப மறிந்திலேகா ணீயே. 39

அநாதிமுத்த ஞய்ப்பரஞ யசலஞ யேல்லா
வறிவுதோழி லனுக்கிரக முடையவரன் கன்ம
நுஞதிகமற் ரேத்தவிடத் தேசத்தி நிபாதம்
நுழைவித்து மலங்களேலா நுங்க நோக்கி
மஞதிகர ணங்களேலா மடக்கித் தன்னே
வழிபடு[1]நா லறிவருளி மாக்கருணேக் கையா
லிஞதபிறப் பினினின்று மேடுத்து மாரு
வின்பமுத்திக் கேவைப்ப னேங்கண்முத்தி யிதுவே. 40

யோகாசாரன் மதம்*

போதமே போருளாய்த் தோன்றும் போருளதா யேழலாற்
†வாதனே யதஞற் கூடி வருதலால் வடிவி லாமை [போதம்
யாதலாற் [2]கனவு போலுஞ் சகமுள தறிவே யர்மேன்
ரேதிஞ ஞேதா ஞய வுணர்விஞல் யோகா சாரன். 1

---

[1]'நல்லறிவு' என்னும் பாடம் போருந்தாமையை உரை நோக்கி அறிக. [2]கனவே,

றவமுதலி யோக போகந் தரிப்பவ னல்லன் ருனே
யிவைபெற வியைந்து மோன்று மியைந்திடா வியல்பி ஞனே

இரண்டாஞ் சூத்திரம்

உலகேலா மாகி வேரு யுடனுமா யோளியா யோங்கி
யலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து சேல்லத்
தலைவனு யிவற்றின் றன்மை தனக்கேய்த லின்றித் தானே
நிலவுசீ ரமலனுகி நின்றன னீங்கா தேங்கும். 1

முதலதிகரணம்

ஒன்றேன மறைக ளேல்லா முரைத்திட வுயிர்க ளோன்றி
நின்றன னேன்று பன்மை நிகழ்த்துவ தேன்னை யேன்னி
னன்றவை பதிதா னேன்றேன் றறையும் அக்கரங்க டோறுஞ்
சேன்றிடு மகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே. 2

உருவோடு கருவி யேல்லா முயிர்கோடு நின்று வேருய்
வருவது போல வீச னுயிர்களின் மருவி வாழ்வன்
றருமுயி ரவனே யாகா வுயிரவை தானு மாகான்
வருபவ னிவைதா னுயும் வேறுமாய் மன்னி நின்றே. 3

இரண்டாமதிகரணம்

இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்தி றந்து
வருவது போவ தாகு மன்னிய வினைப்ப யன்க
டருமரன் றரணி யோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவுங் கன்ம பலன்களு மறுமைக் கண்ணே. 4

இருவினை யென்னை யின்பத் துன்பங்க ளியல்ப தென்னி
னேருதன்மை யியல்புக் குள்ள தொருவனுக் கிரண்டு செய்தி
வருவதென் மலருந் தீயு மருவலின் வாசம் வெம்மை
தருவதே னீரேன் செய்து தானியல் பாகு மன்றே. 5

தன்னியல் பொழியப் பூவுந் தழலும்வந் தணைய நீரின்
மன்னிய திரண்டு செய்தி வருமிரு வினையி னுனு
முன்னிய வின்பத் துன்ப முறுமுயி ருணர்வில் லாத
துன்னிய வசித்தை யின்பத் துன்பங்கள் சூழ்ந்திடாவே. 6

இம்மையின் முயற்சி யாலே யிருநிதி யீட்டி யின்ப
மிம்மையே நுகர்வர் செய்தி யிலாதவர் பொருளு மின்றி
யிம்மையே யிடரு ழப்பர் வேறிரு வினைய துண்டே
லிம்மையின் முயற்சி யின்றி யெய்திட வேண்டு மிங்கே 7

இருவினைச் செயல்கா ணிம்மை யிரும்பொரு ளின்பம் வேண்டி
வருவினை செய்யுங் காலை மடிவரு மடியு மின்றித்
தருவினை யதனி லத்தந் தானறுந் துயருந் தங்கு
மொருவினை செய்யா தொரு முடையரிவ் வுலகத் துள்ளே 8

பேறிழ வின்ப மோடு பிணிமுப்புச் சாக்கா டென்னு
மாறுமுன் கருவுட் பட்ட தவ்விதி யனுப வத்தா
லேறிடு முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ யினிச்செய் கன்ம மேலுடற் சேரு மென்றே. 9

உடற்செயல் கன்ம மிந்த வுடல்வந்த வாறே தென்னின்
விடப்படு முன்னு டம்பின் வினையிந்த வுடல்வி ளைக்குந்
தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொன்றுதொட்டநாதி வித்தி
னிடத்தினின் மரம ரத்தின் வித்தும்வந் தியையு மாபோல்.

முற்செயல் விதியை யிந்த முயற்சியோ டனுப வித்தா
னிச்செயல் பலிக்கு மாறெ னிதமகி தங்கண் முன்ன
ரச்செய லானு லிங்கு மவைசெயின் மேலைக் காகும்
பிற்செயா தனுப விப்ப தின்றுபின் றேடருஞ் செய்தி. 11

மேலைக்கு வித்து மாகி விளைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல நாஞ்செயும் வினைக ளெல்லா
மேலத்தான் பலமாச் செய்யு மிதமகி தங்கட் கெல்லா
மூலத்த தாகி யென்றும் வந்திடு முறைமை போடே. 12

இதமகி தங்க ளென்ப திகன்மன வாக்குக் காயத்
திதமுயிர்க் குறுதி செய்த லகிதமற் றதுசெய் யாமை
யிதமகி தங்க ளெல்லா மிறைவனே யேற்றுக் கொண்டிங்
கிதமகி தத்தா லின்பத் துன்பங்க ளீவ னன்றே. 13

இறைவனிங் கேற்ப தென்னை யிதமகி தங்க ளென்னி
னிறைபர னுயிர்க்கு வைத்த நேசத்தி னிலைமை யாகு
மறமலி யிதஞ்செய் வோருக் கநுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி யகிதஞ் செய்யி னிக்கிர கத்தை வைப்பன். 14

நிக்கிர கங்க டானு நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
யிக்கிர மத்தி னுலே யீண்டற மியற்றி டென்ப
னேக்கிர மத்தி னுலு மிறைசெய லருளே யென்றும். 15

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரேல்லாம் பார்த்திடிற் பரிவே யாகு
மிந்தநீர் முறைமை யன்றோ வீசனுர் முனிவு மென்றும். 16

செயல்களே பலத்தைச் செய்யுந் தெய்வம் வேண்டாவிங்
கேன்னின்
முயலுமிச் செயல்க ளிங்கே முழுவது மழியு மெங்கே
பயனளிப் பனவ ழிந்தே பலன்களைப் பண்ணுங் கேட்ட
வயலிடுந் தழையுந் தின்னு மருந்தும்பின் பலிக்கு மாபோல்.

செய்க்கிடுந் தழையுந் தின்னுந் திரவிய மதுவும் போல
வுய்த்திடுஞ் செய்தி கெட்டே யுறுவிக்கும் பலத்தை
யென்னின்
வைத்திடுஞ் சோறும் பாக்கு மருந்தினர் வயிற்றின்
மாய்ந்தான்
மேய்த்திடும் பலமு னக்கு மலமலால் வேறு முண்டோ. 18

திரவிய முவமை யன்று செய்திக்கட் டிரவி யங்கள்
விரவிய விடத்தே வீந்து பலந்தரு மிம்மை யம்மை
பரவிநீ பார்நீ ரங்கி பாத்திரத் திட்ட வெல்லாங்
கரவிடு மிங்கே யெங்கே பலன்கொளக் கருதினுயே. 19

செய்தவர் மனத்தே யெல்லாச் செய்தியுங் கிடந்து பின்ன
ரெய்தவே பலன்க ளீனு மென்றிடி னிருஞ்சு வர்க்கம்
போய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த
தையனே யழகி துன்சொ லிந்திர சால மாய்த்தே. 20

தானஞ்செய் பொருட ரித்தோர் செய்தவர் தக்க செய்தி
யூனம்பின் னுறவே காண்டும் பலமுறு விப்பான் வேண்டு
மீனமில் செய்தி யீச னிடும்பணி யிவைநாஞ் செய்தா
னூனங்க ளதிக நோக்கி நுகர்விப்பன் வினைநோய் தீர. 21

உலகுடல் கரணங் கால முறுபல நியதி செய்தி
பலவிவை கொண்டு கன்மம் பண்ணுவ துண்ப தானு

னிலவிடா திவைதாஞ் சென்று நினைந்துயிர் நிறுத்திக்
கொள்ளா
தலகிலா வறிவ னுணை யணைத்திடு மருளி னாலே. 22

ஒழுக்கமன் பருளா சார முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள் வந்தித்தல் வணங்கல்
வாய்மை
யழுக்கிலாத் துறவ டக்க மறிவோடர்ச் சித்த லாதி
யிழுக்கிலா வறங்க ளானு லிரங்குவான் பணிய றங்கள். 23

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ் செயலற மானுல் யார்க்கு
முனமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் னிலையா
மன்றே. 24

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னுர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே. 25

இங்குநாஞ் சிலர்க்குப் பூசை யியற்றினு லிவர்க ளோவந்
தங்குவான் றருவா ரன்றே லத்தெய்வ மத்த னைக்கா
ணெங்கும்வாழ் தெய்வ மெல்லா மிறைவனு ணையினு னிற்ப
தங்குநாஞ் செய்யுஞ் செய்திக் காணைவைப் பால ளிப்பன்.

காண்பவன் சிவனே யானு லவனடிக் கன்பு செய்கை
மாண்பற மரன்றன் பாத மறந்துசெ யறங்க ளெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன விதியறம் விருப்பொன்
றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.

தாபர சங்க மங்க ளென்றிரண் டுருவி னின்று
மாபரன் பூசை கோண்டு மன்னுயிர்க் கருளை வைப்ப
னீபரன் றன்னை நெஞ்சி னினைவையே னிறைந்த பூசை
ஆய்பரம் போருளை நாளு மர்ச்சிநீ யன்பு செய்தே. 28

அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே. 29

மறைகளீ சன்சோ லச்சோல் வழிவாரா வுயிரை வைக்குஞ்
சிறைகண்மா நிரய மிட்ட பணிசெய்வோர் செல்வத் தோடு
முறையுமா பதிக ளும்ப ருலகங்கள் யோனிக் கேல்லா
மிறைவனு ணையினு லின்பத் துன்பங்க ளியைவ தாகும். 30

ஆணையா லவனி மன்ன னருமறை முறைசெய் யாரை
யாணையிற் றண்டஞ் செய்து மருஞ்சிறை யிட்டும் வைப்ப
னுணையின் வழிசேல் வோருக் கரும்பதி செல்வ நல்கி
யாணையும் வைப்ப னேங்கு மாணையே யாணை யேகாண் 31

அரசனுஞ் செய்வ தீச னருள்வழி யரும்பா வங்க
டரையுளோர் செய்யிற் றீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சோல்வழி நடப்பர் தூயோர்
நிரயமுஞ் சேரா ரந்த நிரயமுன் னீர்மை யீதாம். 32

அருளினு லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யி
னிருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
போருளுலாஞ் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலா மலங்க டீர்க்கு மருந்திவை வயித்யன் நாதன். 33

மருத்துவ னுரைத்த நூலின் வழிவரிற் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிக டப்பிற் றப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யா துறும்பிணி சென்றுந் தீர்ப்ப
னுரைத்தநூற் சிவனு மின்னே யுறுங்கன்ம் மூட்டித் தீர்ப்பன்.

மண்ணுளே சிலவி யாதி மருத்துவ னருத்தி யோடுந்
திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாங்
கண்ணிய கட்டி பாலுங் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்ப
னண்ணலு மின்பத் துன்ப மருத்தியே வினைய றுப்பன். 35

பூதனு சரீரம் போனாற் புரியட்ட ரூபந் தானே
யாதனு சரீர மாகி யின்பத்துன் பங்க ளெல்லா
நாதனு ராணை யுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்துத்
தீதிலா வணுவா யோனி சேர்ந்திடுஞ் சீவ னெல்லாம். 36

உடல்விடா யோனி பற்றி யுதிப்பினு முதிக்கு மோன்றிற்
படர்வுரு துறும்பா பவத்தாற் பாடாணம் போற்கி டந்து
கடனதாங் காலஞ் சென்றுற் கடுநர கதனில் வீழ்ந்தங்
கிடருறு முருவங் கன்மத் தளவினி லேடுக்கு மன்றே. 37

பன்னக மண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
துன்னுதோன் முட்டை யாக்கை துறந்துசெல் வதுவே
வுன்னிய வுயிர்க டுல வுடல்விட்டு வானி னூடு [போல
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல். 38

தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனுந் தந்து
நன்மைதீ மையினு மின்பத் துன்பினு நாடிக் காண
முன்னமே யான்மா வின்றன் மும்மலத் தோன்ற தாகிக்
கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும் 39

இருவினை யநாதி யாதி யியற்றலா னுகர்வா லந்தம்
வருமலஞ் சார்ந்து மாயா வுருவுகண் மருவி யார்த்துத்
தருசெயன் முறைமை யாலே தான்பல பேதங் காட்டி
யருவதாய் நின்ற ரன்ற னுணையி னமர்ந்து செல்லும் 40

சங்கமந் தாப ரங்க டத்தங்கன் மத்துக் கீடா
அங்குரு யோனி மாறு மச்சுமா ருதிங் கேன்னி
னிங்குமா னுடரி யற்றும் புண்ணியத் தின்ப வீட்ட
மங்குவான் சுரர்க ளாயோ நரர்களா யருந்து வாரோ 41

நரர்களாய்த் துய்ப்ப ரேன்னி னரர்பதி சுரரு லோகஞ்
சுரர்களாய்த் துய்ப்ப ரேன்னிற் சோன்னவச் சழிவு மாகுஞ்
சுரர்களாய்ப் பலன்க டுய்த்துத் தாமிங்குத் தோன்றும் போது
நரர்களாய்ப் பிறப்பர் ஞாலத் தமரராய் நண்ணி டாரே. 42

வண்டுக ளாகி மாறு மயிர்க்குட்டி மற்றோர் சேந்துப்
பண்டைய வுருவந் தானே வேட்டுவ னுய்ப்பி றக்குந்
கண்டுகோள் யோனி யேல்லாங் கன்மத்தான் மாறு மேன்றே
கோண்டன சமய மேல்லா மிச்சோனீ கோண்ட தேங்கே. 43

அகலியை கல்ல தானு ளரிபல பிறவி யானுன்
பகலவன் குலத்திற் றோன்றிப் பாரேலா முழுது மாண்டு
நிகரிலா வரச னுகுஞ் சிலந்திநீ டுலகம் போற்றச்
சகமதி லேலிதா னன்றோ மாவலி யாய்த்துத் தானே. 44

சேப்பினுய் மாற வேறு சிலர்விதி யாலே கன்மால்
வைப்புறுமி யோனி யேல்லா மாறிவந் திடாவிங் கேன்னி
னேப்படி யானுஞ் சேய்திக் கிறைகரி யாவ னேன்றே
முற்பட மோழிந்தே னேல்லா முதல்வன்றன் விதியே யாகும்

அவ்வவ யோனி தோறு மவ்வவ வுலகந் தோறும்
செவ்விதி னறிந்து கன்மஞ் சேர்ந்திடா சீவன் சேரா
இவ்வகை தம்மிற் சேர்வு மிறைசெய லானுற் செய்த
எவ்வுரு வுந்தங் கன்மான் மாற்றுவ னிறைவன் ருனே. 46

மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேநின் றென்னிற்
கூறிய சூக்கு மத்தா முருவேனிற் குறியோன் றென்னின்
வேருேரு குறியா மாரம் வீரசங் கிலியு மாகுந்
தேறுநீ யோருவ ஞலிச் சேயலேலாஞ் சிவனு லாகும். 47

சூக்குமங் கேட்டுத் தூலந் தோன்றிடா சூக்கு மத்தி
ஞுக்கியோ ருடல்கி டப்ப தின்றுட லாக்குந் தன்மைக்
கோக்கிய சத்தி யுண்டா யுடறருங் கால முற்று
நீக்கிட மரம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்து மாபோல். 48

விதிப்படி சூக்கு மத்தே யுருவரும் வினையா லிங்கே
யுதித்திடா வுருவ மாக வுருவரு மரங்கள் வித்திற்
கதித்தெழு மரமும் வித்துங் கழியும்பின் னழியுஞ் சூக்க
மதிக்கெழு கலைகள் போல வருவது போவ தாமே. 49

தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல தற்கு
மூலமா னதற்கு மூல மோகினி யதன்மு தற்ருன்
மேலதாம் விந்து சத்தி சிவமிவை மிசையா மெல்லாஞ்
சாலவின் ருகு மான்மாச் சிவத்தினைச் சார்ந்த போது. 50

மூன்ருமதிகரணம்

அரன்விதி யருள தென்றே யறைந்தன னதுவு முன்னே
தரைநர கருந்து றக்கந் தனுகர ணுதி யெல்லாம்
வருவதுஞ் செய்த நாதி மலங்களிம் மருந்தாற் றீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங் கயமுஞ் சூட்டும். 51

எழுமுடல் கரண மாதி யிவைமல மலம லத்தாற்
கழுவுவ னேன்று சொன்ன காரண மென்னே யென்னிற்
†செழுநவை யறுவை சாணி யுவர்சேறி வித்த முக்கை
முழுவதுங் கழிப்பன் மாயை கோடுமல மோழிப்பன்
[முன்னேன் 52

நித்தமா யருவா யேக நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமுமு யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே.

மாயையிற் கால மோடு நியதிபின் கலாதி தோன்று
மாயவக் கால மூன்ரு யாக்கியு மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கேல்லாங் காலசங் கையினேப் பண்ணி
நாயக ஞணே யாலே நடத்திடுஞ் சகத்தை யேல்லாம். 54

நியதிபின் ருேன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கு
மயர்விலாக் கலேபின் ருேன்றி யாணவ மோதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி தேரிவிக்குஞ் சிறிதே வித்தை
யுயர்கலே யதனிற் ருேன்றி யறிவினே யுதிக்கப் பண்ணும்55

விச்சையி னராகந் தோன்றி வினேவழி போகத் தின்க
ணிச்சையைப் பண்ணி நிற்குந் தோழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமுன் மருவி யான்மா
நிச்சயம் புருட ஞகிப் போதுமையி னிற்ப னன்றே. 56

வருங்குண வடிவாய் மூல ப்ரகிருதி கலேயிற் ருேன்றித்
தருங்குண மூன்ரு யோன்றிற் ருன்மூன்ருய் மும்மூன் ருகு

† 'செழுநவ வறுவை' என்பது பாடபேதம்,

மிருங்குண ரூப மாகி யியைந்திடு மேங்கு மான்மாப்
பெருங்குண வடிவாய்ப் போக சாதனம் பேந்த மாமே. 57

சித்தமா மவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்தியவ் வியத்திற் றேன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும் 58

ஆங்காரம் புத்தி யின்க ணுதித்தகந் தைக்கு வித்தா
யீங்கார்தா னென்னே டோப்பா ரேன்றியா னென்ன தேன்றே
நீங்காதே நிற்குந் தானு மூன்றதாய் நிகழு மேன்பர்
பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தைச தந்தா னென்றே. 59

மனமது தைச தத்தின் வந்தோரு பொருளை முந்தி
நினைவதுஞ் செய்தங் கைய நிலைமையி னிற்கு மாங்கே
யினமலி சோத்தி ராதி கன்மவிந் திரிய மெல்லா
முனமுறை செய்த வைகா ரிகந்தரு மேன்பர் முன்னோர். 60

நற்சேவி துவக்குக் கண்ணு நாசியைந் தினையு நல்லோர்
புத்தியிந் திரிய மேன்று புகன்றன ரிவைத மக்குச்
சத்தநற் பரிச ரூப விரதகந் தங்க ளைந்தும்
வைத்தனர் விடய மாக வடைவினின் மருவு மேன்றே. 61

வாக்கோடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளேனநி னைந்தே
யாக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்த
மூர்க்கமா ரைந்து மைந்தின் றேழிலேன வோதி னரே. 62

வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவி யாகு
மோயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகு
மாய்வார்கட் கராக மாதி யவற்றினுட் கருவி யேன்பர்
மாயாடன் வயிற்றி வற்றூற் றுடக்குண்டு வாழு மான்மா. 63

ஓசைநற் பரிச ரூப விரதகந் தங்க ளேன்று
பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தி
னேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனுற் காண்டு
மாசைசேர் மனுதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான். 64

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னுத்
தோற்றும்வான் வளிதீ நீர்மண்டோடக்கியே யோன்றுக் கோன்றங்
கேற்றமா மோசை யாதி யிருங்குண மியைந்து நிற்கு
மாற்றவே விடய பூத மங்காங்கி பாவத் தாமே. 65

இரந்தர மாகி வான்ரு னிடங்கோடுத் திடுஞ்ச லித்துப்
பரந்தவை திரட்டுங் காறீச் சுட்டோன்று வித்தல் பண்ணு
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்சேயு நீர்மண் டானு
முரந்தரு கடின மாகித் திரித்திடு முணர்ந்து கோள்ளே. 66

மண்புன லனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகுந்
தண்பிறை மூன்று கோணந் தகுமறு கோணம் வட்டம்
வண்போன்மை வேண்மை சேம்மை கறுப்போடு தூம வன்ன
மேண்டரு மேழுத்துத் தானும் லவரய வவ்வு மாமே. 67

குறிகள்வச் சிரத்தி னேடு கோகந தஞ்சு வத்தி
யறுபுள்ளி யமுத விந்து வதிதேய்வ மயன்மா லாதி
சேறிபுக ழீச னேடு சதாசிவம் பூத தேய்வ
நேறிதரு கலையைந் திற்கு நிகழ்த்துவ ரிந்த நீர்மை. 68

சுத்ததத் துவங்க ளேன்று முன்னமே சோன்ன வைந்து
மித்தகை மையினி யம்பு மிவைமுப்பத் தோன்று மாகத்
தத்துவ முப்பத் தாறுஞ் சைதன்னி யங்க ளைந்து
சித்தசித் தான்மா வோன்று முப்பது மசித்தே சேப்பில். 69

ஐந்துசுத் தத்தின் கீழேழ் சுத்தாசுத் தம்ம சுத்தந்
தந்திடும் புமான்கீ ழெண்முன் றுயதத் துவஞ்சீ வர்க்கு
வந்திடும் பிரேர காண்ட மருவுபோ சயித் திரத்தோ
டந்தமி லணுக்க ளுக்குப் போக்கிய காண்ட மாமே. 70

தத்துவ ரூப மாகுந் தருமரு வுருவ மெல்லாந்
தத்துவந் தூல சூக்க பரங்களு மாகி நிற்குந்
தத்துவந் தன்னிற் சாரு மணுக்கள்சா தாக்கி யத்திற்
றத்துவ சத்தஞ் சாருஞ் சகலமுந் தத்து வங்காண். 71

தத்துவ மெண்முன் றுஞ்சேன் றுன்மதத் துவத்தோ டுங்கும்
வித்தையி னேடுங்கு மாறுஞ் சிவத்தினி னேடுங்கு மூன்று
நித்ததத் துவமிம் மூன்று மென்பர்க ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தோ டுங்குந் தோற்றமு மிதுபோ லாகும்.

நான்காமதிகரணம்

மோய்தரு பூத மாதி மோகினி யந்த மாகப்
போய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மேய்தரு சைவமாதி யிருமூன்றும் வித்தை யாதி
எய்துதத் துவங்க ளேயு மோன்றுமின் றெம்மி றைக்கே. 73

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீச
னுவந்தரு ளுருத்தி ரன்றுன் மாலய னேன்றி னேன்றுய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மோன்று
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னேன்பர். 74

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னுகி
யோத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யோருத்தி யாகு
மேத்திற நின்று னீச னத்திற மவளு நிற்பள். 75

சத்திதா னுத மாதி தானுகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னுதி யாகுந் தரும்வடி வான வேல்லாஞ்
சத்தியுஞ் சிவமு மாகுந் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றேல்லாமாஞ் சத்தி தானே.

சிவஞ்சத்தி தன்னே யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரேல்லா மீன்றும்
பவன்பிர மசாரி யாகும் பான்மோழி கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றேரியு மன்றே.

தனுகரண புவன போகந் தற்பரம் பந்தம் வீடேன்
றணுவினே டேல்லா மாகி யடைந்திடுந் தத்து வங்க
ளினிதறிந் திவைநி வீர்த்தி முதற்கலே யிடத்தே நீக்கி
நனிபர முணர்ந்தோ னந்தத் தத்துவ ஞானி யாவன். 78

எல்லாமாய்த் தத்து வங்க ளியைந்ததேன் னணுவுக்
[கேன்னிற்
றேல்லாய கன்ம மேல்லாந் துய்ப்பித்துத் துடைத்தற் கும்பி
னில்லாமை முற்று வித்து நீக்கவுங் கூடி நின்ற
போல்லாத வாண வந்தைப் போக்கவும் புகுந்த தன்றே. 79

ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனு யாதி
யன்றதா யான்மா வின்ற னறிவோடு தோழிலே யார்த்து
நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்சேம் பினிற்க
[ளிம்பேய்ந்
தேன்றுமஞ் ஞானங் கரட்டு மாணவ மியைந்து நின்றே. 80

மலமேன வேறேன் றில்லே மாயாகா ரியம தேன்னி
னிலகுயிர்க் கிச்சா ஞானக் கிரியைக ளேழுப்பு மாயை
விலகிடு மலமி வற்றை வேறுமன் றதுவே ருகி
யுலகுடல் கரண மாகி யுதித்திடு முணர்ந்து கோள்ளே. 81

மாயையே யான்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்குந்
தூயவப் பரிதி தன்னைச் சுடர்முகின் மறைத்தாற் போலப்
போய்முகி லகலச் சோதி புரிந்திடு மதுவே போலக்
காயமு மகல ஞானத் தொழில்பிர காச மாமே. 82

பரிதியை முகின்ம றைப்பப் பாயொளி பதுங்கி ஞற்போ
லுருவுயிர் மறைக்கின் ஞானக் கிரியைக ளொளிக்கு மாகுங்
கருதிடு மிச்சா ஞான காரியங் காயம் பெற்ருன்
மருவிடு முயிர்க்குக் காயம் வந்திடா விடின்ம றைப்போ. 83

போதகா ரியம றைத்து நின்றது புகன்ம லங்கா
ஞேதலாங் குணமு மாக வுயிரினுள் விரவ லாலே
காதலா லவித்தை சிந்தத் தருங்கலை யாதி மாயை
யாதலா லிரண்டுஞ் சோதி யிருளென வேரு மன்றே. 84

புருடன்றன் குணம வித்தை யெனிற்சடம் புருட னுகுங்
குருடன்றன் கண்ணின் குற்றங் கண்ணின்றன் குணமோ [கூருய்
மருடன்றன் குணம தாகி மலமசித் தாகி நிற்குந்
தெருடன்றன் குணம தாகிச் சித்தென நிற்குஞ் சீவன். 85

மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போன்
மம்மர்செய் தணுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
போய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணு
மிம்மல மூன்றி ஞேடு மிருமல மிசைப்ப னின்னும். 86

மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்று
மேயுமும் மலங்க டத்தந் தொழிலினை யியற்ற வேவுந்
தூயவன் றனதோர் சத்தி திரோதான கரிய தென்று
மாய்வரிம் மலங்க ளைந்து மணுக்களை யணைந்து நிற்கும். 87

மலமாயை கன்ம மாயே யந்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பிற் றங்கியித் தரைகீழ் மேலு
நிலயாத கோள்ளி வட்டங் கறங்கென நிமிடத் தின்க
ணலமாரு மிறைவ னுணை யாலுயிர் நடக்கு மன்றே. 88

அண்டஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ
டேண்டரு நாலேண் பத்து நான்குநூ ருயி ரத்தா
லுண்டுபல் யோனி யெல்லா மோழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடிற் கடலேக் கையா னீந்தினன் காரி யங்காண். 89

நரர்பயி றேயங் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லோழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா னுகுந்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்சேய்சா தியினில் வந்து
பரசம யங்கட் சேல்லாப் பாக்கியம் பண்ணே ணுதே. 90

வாழ்வேனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வேனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பேற லரிது சால யுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னுனேப் போற்றுவா ரருள்பேற் றுரே. 91

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனேயர்ச் சிப்ப
ருனேடுத் துழலு மூம ரோன்றையு முணரா ரந்தோ. 92

கருவினு ளழிவ தாயுங் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனு யழிவ தாயுந்
தருணனு யழிவ தாயுந் தானரைத் தழிவ தாயும்
உருவமே யழிவே யானு லுள்ளபோ தேபா ருய்ய. 93

ஒருபுல னுகரும் போதங் கோன்றிலே யோன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடு மேல்லா மாறு
மோருபோழு துணரி னுண்டா மல்லதிவ் வல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும்பின் மாயு மன்றே. 94

அரிசனம் பூசி மாலே யணிந்து போன் னுடை சாத்திப்
பரிசனம் பின்பு சேல்லப் பாரகர் பரிக்கக் கோட்ட
வரிசின்ன மூதத் தோங்கல் வந்திட வுணர்வு மாண்டு
பேரியவர் பேச்சு மின்றிக் கிடத்தலாற் பிணத்தோ டோப்பர்

பிணத்தினே யோத்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள் போல
வுணக்கியே யுழல்வீ ருங்க ளுடலுயி ருணர்வு மேல்லாங்
கணத்திடைத் தோன்றி மாயுங் காயமேன் றறிந்தோ ருக்கால்
வணக்குறீ ரானே யேன்றும் வானவர் வணங்க வைப்பன். 96

மூன்ருஞ் சூத்திரம்

உயிரேனப் படுவ திந்த வுடலின்வே றுளதா யுற்றுச்
சேயிருறு மிச்சா ஞானச் சேய்திக ளுடைய தாகிப்
பயில்வுறு மின்பத் துன்பப் பலங்களு நுகரும் பார்க்கிற்
றுயிலோடு மஞ்ச வத்தைப் படுமுண்மை துரியா தீதம். 1

உடலின்வே றுயிரே னிந்த வுடலன்ருே வுணர்வ தேன்னி
னுடல்சவ மான போது முடலினுக் குணர்வுண் டோதா
னுடலினின் வாயுப் போனு லுணர்ச்சியின் றுடலுக் கேன்னி
னுடலினின் வாயுப் போகா துறக்கத்து முணர்வ தின்றே. 2

அறிவதைம் பொறியே யென்னி னுறக்கத்தி னறியா வாகு
மறிவது மொன்றேன் ருக வொன்றேன்ரு யறியு மென்னி
னறிவுக ளொன்றை யொன்றங் கறிந்திடா வைந்தை யுங்கொண்
டறிவதோன் றுண்ட தான்மா வைம்பொறி யறிந்தி டாவே.3

அறிந்திடும் பிராண வாயு வடங்குதல் விடுதல் செய்தா
லறிந்திடா துடலு றக்கத் தறிவின்மை கரண மின்மை
யறிந்திடு முதலி யாகி னதுநிற்கக் கரணம் போகா
அறிந்திடும் பிராணன் றன்னை யடக்கியும் விட்டு மான்மா. 4

இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்

உணர்வன கரண மேன்னி லோன்றையோன் றுணரா
வெவ்வே
றணைதருஞ் செயல்க ணுன்கு மறிந்தவை யடக்கி யாக்கிப்
புணருமுட் கருவி யாக்கிப் புறக்கரு வியினும் போக்கி
யிணைதரு மிவற்றின் வேரு யானேன தேன்ப தான்மா. 1

முதலதிகரணம்

கருவியா மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு
மருவியான் மாவே யென்ன வருந்தீப மேனத்தே ரிந்தங்
கோருவியான் மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையு
ணர்ந்தோர்
தருமிது பசுஞா னம்பின் சிவஞானங் தனக்கு மேலாம். 2

அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்
சேவ்விய விந்து நாதஞ் சித்தமோ டுள்ள மாகு
மோவ்வேனு மேழுத்தா மைந்து முணர்வுதித் தோடுங்கு
மாறும்
பவ்வமுந் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந் தோன்றும்.

அயனரி யரனு மீசர் சதாசிவ மதிதேய் வங்க
ளுயவரு மவ்வோ டுவ்வு மவ்விந்து நாதங் கட்குப்
பயனுறு மஞ்சி லான்மாப் பரவிடி லசித்தாம் பார்க்கிற்
சயமுறு வளியி ரண்டுங் தவிர்த்துறிற் ருனுங் தோன்றும். 4

ஆன்மாவின் வடிவு தானே யநேகார்த்தக் கூட்ட மென்னிற்
பார்ப்பார்கட் கான்மா வின்ருய்ப் பலபொரு ளுண்மை யாகுஞ்
சேர்ப்பாய பலவே யுண்மை யென்றிடிற் சென்றி வற்றை
யோர்ப்பான் வேறுணர் வோர்க்கெல்லா முணர் பொருள் வேறதாமே. 5

இரண்டாமதிகரணம்

அறிவிச்சை செயல்க ளெல்லா மடைந்தனல் வெம்மை யும்போற்
குறியுற்றங் கேகா நேக குணகுணி பாவ மாகி
நெறியுற்று நிற்கு மென்னி னிகழ்புலன் கரண மெல்லாஞ்
செறிவுற்றங் கறிவு கொள்ள வேண்டுமோ சீவ னுர்க்கே.

குணங்களை யின்றி யொன்ருங் குறியுடைத் தான்மா வென்னி
னிணங்கிடா விச்சா ஞானக் கிரியைக ளிவையு டற்கட்
பிணங்கிடுஞ் சந்நி திக்க ணெனிற்பிணத் துறக்கத் தின்ரு
முணங்கிடுங் கரண மென்னிற் சந்நிதி யொழிந்த தன்றே. 7

சந்நிதி குணம தாகுந் தானென்போ லென்னிற் காந்த
முன்னிரும் பென்ரு யீர்க்கு முறைமையுண் டகற்ற லின்ரு
முன்னுத லொடுங்க லோட லிருத்தலே கிடத்த னிற்ற
லென்னுமித் தொழில்கண் மற்று மியற்றுவ தான்மா வென்னே. 8

உருவுயி ரென்னி னிந்த வுடலினுட் காண வேண்டும்
வருவது பரிணு மத்தா யநித்தமாம் பூத மாகுங்
கருவினி னுழையு மாறுங் காட்டிட வேண்டுங் கண்ணின்
மருவிடா தென்னி னுன்றன் வாயினு லுருவன் றென்னே. 9

சூக்கும வுருவ தேன்னிற் றூலகா ரமண தாகு
மாக்கிய மனுதி தன்மாத் திரைவடி வசேத னம்பி
னீக்கிய சூக்கு மத்தே நிற்பதோ ருருவுண் டேன்னி
னுக்கிடு முருவ மேல்லா மசித்துமா யநித்த மாமே. 10

அருவுரு வேன்னி லான்மா வருவுரு வாவ தின்ரு
முருவரு வாகா தாகு மோருபோருட் கிரண்டு தன்மை
வருவது மில்லை காட்ட வன்னிபோன் மருவு மேன்னி
னுருவமுங் காண வேண்டு முண்மையு மோழிந்து போமே.

சந்திரன் வடிவு போலத் தானரு வுருவ மேன்னின்
வந்துநங் கண்ணிற் றேன்றும் வடிவுள தாமு யிர்க்கு
மிந்தவூ னுருவந் தானு யேழுவது முயிரே யேன்னிற்
பந்தமா யசித்தா யான்மாப் பவுதிக மாகு மன்றே. 12

அருவவி காரி யான்மா வாகாயம் போல வேன்னி
னுருவினைக் கட்டி யாட்டி யோட்டிமீட் டுலாவப் பண்ணி
மருவிநிற் பித்தி ருத்திக் கிடத்திமண் புரட்டி மற்றும்
பேருவிகா ரங்க ளேல்லாந் தருவதேன் பேசி டாயே. 13

அசித்தேனி னுணரா தான்மா வசித்துச்சித் தாகு மேன்னி
னசித்துச்சித் தாகா தாகுஞ் சித்தசித் தாவ தில்லை
யசித்தோரு புறமா யோன்றிற் சித்தோரு புறமாய் நில்லா
தசித்துருச் சித்தே யேன்னி னசித்தடைந் தறிவ தின்ரும்.

உயிரினை யணுவ தேன்னி னுடல்பல துவார மோடும்
பயில்வுறக் கட்டு ணுது பாரமுந் தரித்துச் சேல்லா
தயர்வுறு மசித்தாய்ப் பூத வணுக்களி னேன்ற தாகு
மியல்புறு மவய வத்தா லணுவுரு விறக்கு மன்றே. 15

உடலினி னேக தேசி யுயிரேனி னுருவாய் மாயும்
படர்வுறு மறிவின் றெங்குஞ் சுடரொளிப் பண்ப தென்னிற்
சுடர்தோடிற் சுடுவ தெங்குந் தோட்டிட மறிவுண் டாகு
மடர்புல னிடத்து மோக்க வறிவேழ வேண்டு மன்றே. 16

உருவினி னிறைந்து நின்றங் குணர்ந்திடு முயிர தென்னின்
மருவிடா துறக்கம் வாயி லறிவோக்க வழங்க வேண்டும்
பெருகிடுஞ் சுருங்கும் போதம் பேருடற் சிற்று டற்கண்
வருமுடற் குறைக்க வோக்கக் குறைந்துபின் மாயு மன்றே.

எங்குந்தான் வியாபி யாய்நின் றுணருமிவ் வான்மா
வேன்னிற்
றங்கிடு மவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்
பங்கமார் புலனேன் றேன்றுப் பார்த்திடல் பகரல் வேண்டு
மிங்கேலா மோழிந்தா னிற்ப தெங்ஙன மியம்பல் வேண்டும்.

சுத்தமா மான்ம சித்தைத் துகளுடன் மறைத்த தென்னின்
வைத்துரு துடற்கண் வாயில் கரணங்கள் வழியான் ஞான
மோத்துறு மலமற் றுலு முறுமலம் வீடு மின்றும்
பேத்தமு மடையான் முத்த னுய்ப்பிர காச னுமே. 19

அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றுய்
வசித்திட வரும்வி யாபி யேனும்வழக் குடைய னுகி
ஞ்சித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய னுகிப் பசுவேன நிற்கு மான்மா 20

மாயையின் வயிற்றுண் மன்னி வருஞ்சேயன் ஞான மிச்சை
யேயுமக் கலாதி மூன்று லேகதே சத்தி னேய்ந்திங்
காயுமுக் குணங்க ளந்தக் கரணங்க ளாதி யேல்லாங்
காயபேத் தங்க ளாகிக் கலந்துட னிற்கு மான்மா. 21

சூக்கும தேகி யாகித் தூலரு பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள வவத்தையுட் டங்கி யெங்கும்
போக்கோடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவ
மாக்கியும் பலன்க ளெல்லா மருந்தியு நிற்கு மான்மா. 22

மருவா னந்தம் விஞ்ஞான மனுேபி ராண னன்னமய
முருவாந் தன்மை யுண்டாய்மு னுேன்றுக் கொன்று
சூக்குமமாய்
வருமா மன்ன மயம்பற்றி மாயை முதற்கா ரணமாகு
மருவா யான்மா வைங்கோசத் தார்ப்புண் டவற்றி
னகம்புறமாம். 23

தோற்பாவைக் கூத்துந் தோல்லே மரப்பாவை யியக்க
முஞ்சீர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேருய்ச் செலுத்துவோர் செய்தி
தானும்
பார்ப்பாய வேடங் கட்டி யாடுவோர் பரிசு போலு
மார்ப்பாய காயந் தன்னே யான்மாநின் ருட்டு மாறே. 24

என்னுடல் போறிபி ராணன் கரணமேன் னுணர்வேன்
றக்காற்
றன்னின்வே ருகு நீயேன் றன்மனே யென்ற வேல்லா
நின்னின்வே ருகு மென்னி னீங்கிடா விவையிங் கேன்னி
னுன்னின வாகு நீயா முகிர்மயி ருகவுங் காண்டி. 25

போன்னணி யாடை மாலே போதுமே லான போதிங்
கேன்னணி யானேன் றுன்னி யிருந்தனே பிரிந்த போது
நின்னணி நீயு மல்ல வாயினே காய நின்னி
னன்னிய மாகு முன்னே யறிந்துநீ பிரிந்து பாரே. 26

உடலியா னல்லே னிந்த வுணர்வுயா னல்ல வான
கடனியா தேன்னின் வேறு கண்டுணர் வேன்ன தேன்கை

யிடரிலா வென்ற னுன்மா வென்றபோ தான்மா வேறே
திடனதா வுயிரை வேறு கண்டிடார் செப்ப லேகாண். 27

புந்தியை மனம தென்று மனமது புந்தி யென்றுஞ்
சிந்தையைச் சீவ னென்றுஞ் சீவனைச் சிந்தை யென்று
முந்தனை யான்மா வென்று மான்மாவை முந்த னென்றும்
வந்திடு மென்ற னுன்மா வென்றது மற்றேன் றைக்காண்.

அறிவுடல் சிந்தை யான்மா வணைதலா லான்மா வென்ப
ரேறிசுடர் விளக்கி ருக்கு மிடத்தையும் விளக்கேன்
றுற்போற்
போறிபுலன் கரண மெல்லாம் புலப்படு மபேத மாகிப்
பிறிதரா தறிவ தான்மா வறிபொருள் பின்ன மாமே. 29

கண்டுணர் புருடன் வேறு கனவுகண் டோடுங்கிக் காய
முண்டியும் வினையு மின்றிக் கிடந்துயிர்த் திடவு ணர்ந்து
கண்டிடுங் கனவுஞ் சோல்லி யோடுக்கமுங் கருதி வேரு
யுண்டியும் வினையு முற்றிங் குணர்த்திட வுணரா நிற்கும்.30

புருடனே யறிவ னுகிற் போறிபுல னுதி போதந்
தருவதே னறிவு மாயா தனுகர ணுதி பற்றி
வருவதிங் கரைதி யாக மலத்தினின் மறைந்து நிற்ப
னருவனு யிவற்றே டாளு மமைச்சரு மரசும் போல்வன் 31

மூன்ருமதிகரணம்

படைகோடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லிற்
கடைதோறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்ன
ரடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா
வடலினி லஞ்ச வத்தை யுறுமுயிர் காவ லாக 3

சாக்கிர முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னி
லாக்கிய விருபத் தைந்து களத்தினிற் சுழுனே மூன்று
நீக்கிய விதயந் தன்னிற் றுரியத்தி லிரண்டு நாபி
நோக்கிய துரியா தீத நுவலின்மூ லத்தி னென்றே. 33

இருவகை சாக்கி ராதி யவத்தைக ளியல்பு தானு
மொருவகை கீழே நூக்கி யுற்பவங் காட்டு மொன்று
பெருகமே னேக்கித் தீய பிறப்பறுத் திடுமி யோகிற்
றருவதோர் சமாதி தானுந் தாழ்ந்துபின் சனனஞ் சாரும். 34

அறிதரு முதல வத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ்
சேறிதருங் கரணந் தன்னிற் செயற்றுறுங் கண்டு
கோண்ணீ
பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளா லாங்கே
குறியோடு மஞ்ச வத்தை கூடுவர் வீடு கூட. 35

ஐந்துசாக் கிரத்தி னுன்கு கனவினிற் சுழுனே மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டோன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந் தோறு
முந்திடுங் கரணந் தன்னிற் செயற்றுறு முணர்ந்து கோள்ளே

கேவல சகல சுத்த மேன்றுமுன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமேய் போறிக ளேல்லாங்
காவலன் கோடுத்த போது சகலனு மலங்க ளேல்லாம்
மோவின போது சுத்த முடையனுற் பவந்து டைத்தே. 37

அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்க ளோடுஞ்
சேறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் சேயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கோள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னேடும் வியாபிகே வலத்தி லான்மா. 38

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாம் விடயந் தன்னிற்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு ழன்று
திரிதருஞ் சகல மான வவத்தையிற் சீவன் சென்றே. 39

இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே. 40

ஐந்தாஞ் சூத்திரம்

பொறிபுலன் கரண மெல்லாம் புருடனு லறிந்தான் மாவை
யறிதரா வவையே போல வான்மாக்க ளனைத்து மெங்குஞ்
செறிதருஞ் சிவன்ற னுலே யறிந்திடுஞ் சிவனைக் காணு
அறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறி வித்து நிற்பன்

இரண்டாமதிகரணம்

இறைவனே யறிவிப் பானே லீண்டறி வேவர்க்கு மொக்குங்
குறைவதி கங்க டத்தங் கன்மமேற் கோமான் வேண்டா
முறைதரு செயற்குப் பாரு முளரிகட் கிரவி யும்போ
லறைதரு தத்தங் கன்மத் தளவினுக் களிப்ப னுதி. 2

அறிந்திடு மான்மா வொன்றை யொன்றினு லறித லானு
மறித்தமை மறத்த லானு மறிவிக்க வறித லானு
மறிந்திடுந் தன்னை யுந்தா னறியாமை யானுந் தானே
யறிந்திடு மறிவ னன்ரு மறிவிக்க வறிவ னன்றே. 3

கருவியாற் பொருளாற் காட்டாற் காலத்தாற் கருமந் தன்னு
லுருவினு லளவா னூலா லொருவரா லுணர்த்த லானு
மருவனு யுண்மை தன்னி லறியாது நிற்ற லானு
மொருவனே யெல்லாத் தானு முணர்த்துவ னருளி னாலே.4

கருவியும் பொருளுங் காட்டுங் காலமுங் கருமந் தானு
முருவமு மளவு நூலு மொருவரு முணர்த்த லின்றி
யருவனு யுலக மெல்லா மறிந்தவை யாக்கி வேறு
யொருவனே யுயிர்கட் கெல்லா முயிருமா யுணர்த்தி நிற்பன்.

இறைவன்றன் சந்நி திக்க னுலகின்றன் சேட்டை யென்னு
மறைகளு மறந்தாய் மாயை மருவிடான் சிவன வன்க
னுறைதரா தசேத னத்தா லுருவுடை யுயிர்கட் கெல்லா
நிறைபரன் சந்நி திக்க ணீடுணர் வுதிக்கு மன்றே. 6

உலகமே யுருவமாக யோனிக ளுறுப்ப தாக
இலகு பே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னுதன். 7

தெரிந்துகொண் டோரோவொன் றுகச் சென்றைந்து புலனும் பற்றிப்
புரிந்திடு முணர்வி னூடும் போகமுங் கொடுத்தி யோனி
திரிந்திடு மதுவுஞ் செய்து செய்திகண் டுயிர்கட் கெல்லாம்
விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்.8

அருளது சத்தி யாகு மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன். 9

ஆறுஞ் சூத்திரம்

அறிவுறும் பொருளோ வீச னறிவுரு தவனே வென்னி
னறிபொரு ளசித்த சத்தா மறியாத தின்று மெங்குஞ்
செறிசிவ மிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கு
நெறிதரு சத்தின் முன்ன ரசத்தெலா நின்றி டாவே. 1

முதலதிகரணம்

ஆவதா யழிவ தாகி வருதலா லறிவு தானுந்
தாவலா லுலகு போகந் தனுகர ணாதி யாகி
மேவலான் மலங்க ளாகி விரவலான் வேறு மாகி
யோவலா லசத்தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்2

மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வு
மெண்டரு பூத பேத யோனிக ளியாவு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் கனக்கமு திரதங் காட்டி
யுண்டுபோ லின்றும் பண்பி லுலகினை யசத்து மென்பர். 3

இரண்டாமதிகரணம்

உணராத பொருள்சத் தென்னி னுருபய னில்லை தானும்
புணராது நாமுஞ் சென்று பொருந்துவ தின்று மென்றுந்
தணவாத கரும மொன்றுந் தருவது மில்லை வானத்
திணரார்பூந் தொடையுமி யாமைக் கெழுமயிர்க் கயிறும்
போலும். 4

மூன்றுமதிகரணம்

தத்துவஞ் சத்த சத்துச் சதசத்து மன்றென் றுலே
னுய்த்துணர்ந் துண்டோ வின்றே வென்றவர்க் குண்டேன்
வைத்திடுஞ் சத்தே யாகு மனத்தொடு வாக்கி றந்த [றேதில்
சித்துரு வதுவ சித்தா மனத்தினுற் றோர்வ தெல்லாம். 5

அறிபொரு ளசித்தாய் வேரு மறிவுருப் பொருள் சத்தென்னி
னறிபவ னறியா ஞகி லதுவின்று பயனு மில்லை
யறிபவ னருளி ஞலே யநநிய மாகக் காண்ப
னறிபொரு ளறிவாய் வேரு யறிவரு ளுருவாய் நிற்கும் 6

பாவிப்ப தென்னிற் பாவம் பாவகங் கடக்கிற் பாவம்
பாவிக்கு மதுநா னென்னிற் பாவகம் பாவங் கெட்டுப்
பாவிப்ப தென்னிற் பாவம் பாவனை யிறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும் பரம்பர னருளி ஞலே. 7

அன்னிய மிலாமை யானு மறிவினு ணிற்ற லானு
முன்னிய வெல்லா முண்ணின் றுணர்த்துவ ஞத லானு
மென்னதி யானென் றேது மிருஞ்செருக் கறுத்த லானுந்
தன்னறி வதனுற் காணுந் தகைமைய னல்ல னீசன். 8

ஒன்றெனு மதனு லொன்றென் றுரைப்பதுண் டாகை யாலே
நின்றனன் வேருய்த் தன்னி னீங்கிடா நிலைமை யாலே
பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமைய னறிவி னுள்ளே
யென்றுநின் றிடுத லாலே யிவனவ னென்ன லாமே. 9

சாதனவியல்

ஏழாஞ் சூத்திரம்

அனைத்துஞ்சத் தேன்னி னுன்றை யறிந்திடா தசத்தா
லென்னின்
முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போ
னினைப்பதிங் கசத்தே யென்னிற் சத்தின்முன் னிலாமை
யானுந்
தனக்கோடோன் றுணர்த லானுந் தானசத் துணரா தன்றே.

மூன்றுமதிகரணம்

சத்தசத் தறிவ தான்மாத் தான்சத்து மசத்து மன்று
நித்தனுய்ச் சதசத் தாகி நின்றிடு மிரண்டன் பாலு
மொத்துட னுதித்து நில்லா துதியாது நின்றி டாது
வைத்திடுந் தோற்ற நாற்ற மலரினில் வருதல் போலும் 2

சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபா லசத்தஞ் ஞான
மொத்துரு குற்ற மெல்லா முற்றிடு முயிரின் கண்ணே
சத்துள போதே வேருஞ் சதசத்து மசத்து மெல்லாம்
வைத்திடு மநாதி யாக வாரிநீர் லவணம் போலும். 3

அறிவிக்க வறித லானு மழிவின்றி நிற்ற லானுங்
குறிபெற்ற சித்துஞ் சத்துங் கூறுவ துயிருக் கீசன்
நெறிநித்த முத்த சுத்த சித்தென நிற்ப னன்றே
பிறிவிப்பன் மலங்க ளெல்லாம் பின்னுயிர்க் கருளி னுலே.4

எட்டாஞ்சூத்திரம்

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மேன்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோற்
றுன்னியுவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தோல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன். 1

முதலதிகரணம்

உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்று
முயருஞ்விஞ் ஞானகலர் பிரளயாகலர் சகலர்
நிரையின்மல மலங்கன்ம மலங்கன்ம மாயை
நிற்குமுத லிருவர்க்கு நிராதார மாகிக்
கரையிலருட் பரன்றுவிதா சத்திநிபா தத்தாற்
கழிப்பன்மலஞ் சகலர்க்குக் கன்ம வொப்பிற்
றரையிலா சான்மூர்த்தி யாதார மாகித்
தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்திநிபா
தத்தால். 1

பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமா னதமு
மலகில்சாத் திரம்யோக மவுத்தி ராதி
யநேகமுள வவற்றினவுத் திரியிரண்டு திறனு
மிலகுஞானங் கிரியை யெனஞான மனத்தா
லியற்றுவது கிரியையெழிற் குண்டமண் டலாதி
நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதிதா னின்னும்
நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும். 3

பாலரோடு வாலீசர் விருத்தர்பணி மொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப்
சீலமது நிர்ப்பீசஞ் சமயா சாரங் [பண்ணுஞ்
திகழ்சுத்தி சமயிபுத் திரர்க்கு நித்தத்
தேலுமதி காரத்தை யியற்றித் தானு
மேழினிரதி காரையென நின்றிரண்டாய் விளங்குஞ்
சாலநிகழ் தேகபா தத்தி னேடு
சத்தியநிர் வாணமெனச் சாற்றுங் காலே. 4

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கா நல்ல
வுத்தமர்க்குச் செய்வதுயர் பீசமிவர் தம்மை
நீதியினு னித்தியனை மித்திககா மியத்தி
னிறுத்திநிரம் பதிகார நிகழ்த்துவதுஞ் செய்து
சாதகா சாரியரு மாக்கி வீடு
தருவிக்கு முலோகசிவ தருமிணியென் றிரண்டா
மாதலினு னதிகாரை யாஞ்சமய விசேட
நிருவாண மபிடேக மிவற்றடங்கு மன்றே 5

அழிவிலாக் கிரியையினு னுதல்சத்தி மத்தா
னுதலத்து வாசுத்தி பண்ணிமல மகற்றி
யொழிவிலாச் சிவம்பிரகா சித்தற்கு ஞான
முதிப்பித்துற் பவந்துடைப்ப னரனேருமு
வழுவிலா வழியாரு மந்திரங்கள் பதங்கள் [வர்க்கும்
வன்னனங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்
கழிவிலா துரைத்தமுறை யோன்றினென்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணும்.

மந்திரங்கண் முதலைந்துங் கலையைந்தின் வியாத்தி
மருவுமந் திரமிரண்டு பதங்க ளுலே
ழுந்தநிலை யெழுத்தொன்று புவன நூற்றெட்
டவனிதத் துவமொன்று நிவிர்த்தியயன் றெய்வம்

வந்திடுமந் திரமிண்டு பதங்கண் மூவேழ்
வன்னங்க ளுலாறு புரமைம்பத் தாறு
தந்திடுந்தத் துவங்களிரு பத்து மூன்று
தரும்பிரதிட் டாகலைமா லதிதேய்வந் தானும். 7

வித்தையின்மந் திரமிரண்டு பதநா லைந்து
விரவுமெழுத் தேழுபுர மிருபத் தேழு
தத்துவமு மோரேழு தங்குமதி தெய்வந்
தாவிலுருத் திரனுகுஞ் சாந்தி தன்னின்
னைத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதி னொன்று
வன்னமோரு மூன்றுபுரம் பதினெட் டாகு
முத்தமமாந் தத்துவமு மோருமுன் றுகு
முணரிலதி தேவதையு முயரீச னுமே. 8

சாந்தியா தீதகலை தன்னின்மந் திரங்க
டாமூன்று பதமோன்றக் கரங்கள்பதி னுறு
வாய்ந்தபுர முவைந்து தத்துவங்க ளிரண்டு
மருவுமதி தேவதையு மன்னுசதா சிவரா
மேய்ந்தமுறை மந்திரங்கள் பதினேன்று பதங்க
ளேண்பத்தோன் றக்கரங்க ளைம்பத்தோன் றுகு
மாய்ந்தபுர மிருநூற்றுே டிருபத்து நாலா
மறிதருதத் துவமுப்பத் தாறுகலை யைந்தே. 9

முன்றுதிறத் தணுக்கள் செயுங் கன்மங் கட்கு
முன்னிலையா முவிரண்டா மத்து வாவி
னுன்றமுறை யவையருத்தி யறுத்துமல முதிர்வித்
தரும்பருவ மடைதலுமே யாசா னுகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகள றுத்தங் கத்துவாத் துடக்கறவே சோதித்
தேன்றவுடற் கன்மமனு பவத்தினு லறுத்திங்
கினிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்.

இரண்டாமதிகரணம்

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றுற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர். 11

இம்மையே யீரெட்டாண் டெய்தியேழி லாரு
மேந்திழையார் முத்தியென்று மிருஞ்சுவர்க்க முத்தி
யம்மையே யென்றுமுத்தி யைந்து கந்த
மறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தி யென்று
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
விவேகமுத்தி யென்றுந்தன் மெய்வடிவாஞ் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றுஞ்செப் புவர்கள்
சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங்கி யாமே. 12

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றேடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும். 13

அருமறையா கமமுதனூ லனைத்துமுரைக் கையினு
னளப்பரிதா மப்பொருளை யரனருளா லணுக்க
டருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற்
றர்க்கமொடுத் தரங்களினுற் சமயஞ்சா தித்து
மிருதிபுரா ணங்கலைகண் மற்று மெல்லா
மெய்ந்நூலின் வழிபுடையா மங்கம்வே தாங்கஞ்
சுருதிசிவா கமமொழியச் சொல்லுவதொன் றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணுதே. 14

வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்க
ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினு னுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும். 15

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெறும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி. 16

இறைவனு வான்ஞான மெல்லா மெல்லா
முதன்மையனுக் கிரகமெல்லா மியல்புடையா னியம்பு

மறைகளா கமங்களினு னறிவெல்லாந் தோற்று
மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கு
முறைமையினு லின்பத்துன் பங்கொடுத்த லாலே
முதன்மையெலா மறிதுமுயங் கிரண்டு போகத்
திறமதனுல் வினையறுக்குஞ் செய்தியாலே
சேருமனுக் கிரகமேலாங் காணுதுநாஞ் சிவற்கே. 17

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்ர மார்க்கந்
தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனை யடையு
நன்மார்க்க நாலவைதா ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்ய
சாருப்ய சாயுச்ய மென்றுசதுர் விதமா
முன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதமென்பர். 18

தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வதி
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியு
மியற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுல கிருப்பர். 19

புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த

பத்தியினா லருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினோடு மேரியில்வரு காரியமும் ‡பண்ணல்
நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க
ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே 20

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பேற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே. 22

ஞானநூ றனையோத லோதுவித்த
னற்பொருளைக் கேட்பித்த றான்கேட்ட னன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்த லைந்து
மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை

‡ இப் பாடமே 'புத்திரமார்க்கம்' என்ற எழுவாய்க்குப் பயனிலை அமைந்த சிறந்த பாடம்.

யூனமிலாக் கன்மங்க டபஞ்சேபங்க டியான
மோன்றுக்கோன் றுயருமிவை யூட்டுவது போக
மானமையான் மேலான ஞானத்தா லரனை
யருச்சிப்பர் வீடெய்த வறிந்தோ ரெல்லாம். 23

கேட்டலுடன் சிந்தித்த றெளித நிட்டை
கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்
வீட்டையடைந் திடுவர் நிட்டை மேவினோர்கண்
மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்
கீட்டியபுண் ணியநாத ராகி யின்ப
மினிதுநுகர்ந் தரனருளா லிந்தப் பார்மே
னுட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவான்
ஞானநிட்டை யடைந்தடைவர் நாதன் றாளே. 24

தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ
ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மோடுங்கும்போ தரன்முனிலா தோழியினுற்ப [வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனை யங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றாளே. 25

சிவஞானச் செயலுடையோர் கையிற் றூனந்
திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவகை யெடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்போன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே. 26

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னு
முனத்தா ரேன்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தா
னுனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகு
மீனத்தார் ஞானங்க ளெல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞான மென்பர். 27

சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோ
லாரியனு மாசான்வந் தருளாற் றேன்ற
வடிஞான மான்மாவிற் றேன்றுந் தோன்றத்
தூரியனுஞ் சிவன்றேன்றுந் தானுந் தோன்றுந்
தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளே தோன்று
நேரியனுய்ப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு
நின்றநிலை யெல்லாமுன் னிகழ்ந்து தோன்றும். 28

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாத
மேவுதலு ஞானம்விளங் தோர்குருவி னருளாற்
புக்கநுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றியோட்டிற்
றபநியத்திற் சமபுத்தி பண்ணிச்சங் கரனே
டொக்கவுறைந் திவரவனே யவனிவரை விடாதே
யுடைந்தையாய்ச் சிவன்றேற்ற மொன்றுமே
காண்பர். 29

அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினு னறியாதே யறிந்து

குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்
பிறியாத சிவன்றானே பிறிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாந் தானாய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னாயே. 30

புண்ணியமே னோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத் தினாலே
நண்ணியஞா னத்தினா லிரண்டினையு மறுத்து
ஞாலமோடு கீழ்மேலு நண்ணா னாகி
யெண்ணுமிக லோகத்தே முத்திபெறு மிவன்றா
னெங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதற னிறைவதனிற் கலந்து காயங்
கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன். 31

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையோடு தீமையிலை நாடுவதோன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமோடாச் சிரமச்
சேயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர். 32

தேசமிடங் காலந்திக் காசனங்க ளின்றிச்
சேய்வதோன்று போற்சேய்யாச் சேயலதனைச் சேய்தங்
கூசல்படு மனமின்றி யுலாவ னிற்ற
லுறக்கமுணர் வுண்டிபட் டினியிருத்தல் கிடத்தன்

மாசதனிற் றூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி
ஞசையினின் வேறுப்பினிவை யல்லாது மேல்லா
மடைந்தாலு ஞானிகடா மரனடியை யகலார் 33

இங்கிலே தானில்லேயே லேல்லா மீச
னிடத்தினினு மீசனேல்லா விடத்தினினு நின்ற
அங்கிலேயை யறிந்தந்தக் கரணங்க ளடக்கி
யறிவதோரு குறிகுருவி னருளினு லறிந்து
மன்னுசிவன் றனேயடைந்து நின்றவன்ற ஞலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனிற் றுரியா தீதந்
தோன்றமுயல் சிவாநுபவஞ் சுவாநுபூ திகமாம் 34

சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவே னிம்மையிலே யுயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றே
ஆக்குமுடி கவித்தரசாண் டவர்களரி வையரோ
டனுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற் றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றுலு
நுழைவர்பிறப் பினின்வினைக ணுங்கி டாவே. 35

மூன்றுமதிகரணம்

கருவிகழிந் தாற்காணு ரோன்றுமேனிற் காணர்
காணுதார் கன்னிகைதான் காமரசங் காணுள்
மருவியிரு வரும்புணர வந்த வின்பம்
வாயினுற் பேசரிது மணந்தவர்தா முணர்வர்

உருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலர்காண் சிவனை
யுணராதா ருணர்வின லுணர்வதுகற் பனைகாண்
அருள்பெறினவ் விருவரையு மறிவிறந்தங் கறிவ
ரறியாரேற் பிறப்பும்விடா தாணவமு மருதே. 36

நான்காமதிகரணம்

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போ லுள்ளம்
பலபுலன்க ணிறங்காட்டும் பரிச பார்த்திட்
டிந்நிறங்க ளென்னிறமன் றென்று தன்ற
னெழினிறங்கண் டருளின லிந்நிறத்தின் வேருய்ப்
போய்ந்நிறவைம் புலநிறங்கள் போய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினேடும் போதான் பின்னை
முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி
முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல் 37

எங்குந்தா னென்னின மெய்த வேண்டா
வெங்குமில னென்னின்வே றிறையு மல்லன்
அங்கஞ்சே ருயிர்போல்வ னென்னி னங்கத்
தவயவங்கள் கண்போலக் காண வான்மா
இங்குநா மியம்புந்தத் துவங்களின்வைத் தறிவ
திறைஞானந் தந்துதா ளீதல்சுட ரிழந்த
துங்கவிழிச் சோதியுமுட் சோதியும்பெற் றுற்போற்
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. 38

பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டேறியப்
படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பரக்கும்
ஆசுபடு மலமாயை யருங்கன்ம மனைத்தும்
அரனடியை யுணரும்போ தகலும்பின் னணுகும்

நேசமோடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி
யாசையோடு மங்குமிங்கு மாகியல மருவோ
ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம். 39

ஒன்பதாஞ் சூத்திரம்

பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமோடு முள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதி
ஞசைதரு முலகமெலா மலகைத்தே ராமென்
றறிந்தகல வந்நிலையே யாகும் பின்னு
மோசைதரு மஞ்சேழுத்தை விதிப்படியுச் சரிக்க
வுள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலா மோட. 1

முதலதிகரணம்

வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலா
நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
நணுகியான் மாவிவைகீழ் நாட லாலே
காதலினு னுன்பிரம மென்னு ஞானங்
கருதுபசு ஞானமிவ னுடலிற் கட்டுண்
டோதியுணர்ந் தொன்றேன்று வுணர்த்திடலாற் பசுவா
மொன்றுகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே

கரணங்கள் கேடவிருக்கை முத்தியா மென்னிற்
கதியாகுஞ் சினைமுட்டை கருமரத்தி னுயிர்கண்
மரணங்கோண் டிடவுறங்க மயங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பனைபண்ண வல்விடத்தை யடையச்
சரணங்கள் புகுநிழல்போற் றனையடையுஞ் சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞான மாகு
மரணங்க ளேரித்தவன்ற னடியையறி விறந்தங்
கறிந்திடீர் சேறிந்ததுக ளகற்றி டீரே. 3

சிவனையவன் றிருவடிஞா னத்தாற் சேரச்
சேப்புவது சேயல்வாக்குச் சிந்தை யேல்லா
மவனையணு காவேன்று மாத லானு
மவனடியவ் வோளிஞான மாத லானு
மிவனுமியான் றுவக்குதிர மிறைச்சி மேதை
யேன்புமச்சை சுக்கிலமோ விந்திரியக் கோத்தோ
அவமகல வேனையறியே னேனுமைய மகல
வடிகாட்டி யான்மாவைக் காட்டலானும். 4

கண்டிடுங்கண் டனைக்காணு கரணங்காணு
கரணங்க டமைக்காணு வுயிருங் காணு
வுண்டியம ருயிர்தானுந் தன்னைக் காணு
துயிர்க்குயிரா மோருவனையுங் காணு தாகுங்
கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங் காட்டிக்
கண்ணுகிக் கரணங்கள் காணும னிற்பன்
கோண்டரனை யுளத்திற்கண் டடிகூடிற் பாசங்
கூடாது கூடிடினுங் குறித்தடியி னிறுத்தே. 5

இரண்டாமதிகரணம்

குறித்தடியி னின்றட்ட குணமேட்டுச் சித்தி
கோகநதன் முதல்வாழ்வு குலவுபத மேல்லாம்

வேறுத்துநேறி யறுவகையு மேலோடுகீ ழடங்க
வேறும்போயேன நினைந்திருக்க மேலோடுகீ ழில்லா
னிறுத்துவதோர் குணமில்லான் றன்னையொரு வர்க்கு
நினைப்பரியா னொன்றுமிலா னேர்படவந் துள்ளே
போறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே
புகுந்திடுவ னேங்குமிலாப் போகத்தைப் புரிந்தே. 6

மூன்றுமதிகரணம்

கண்டவிவை யல்லேனு னென்றகன்று காணுக்
கழிபரமு நானல்லே னேனக்கருதிக் கசிந்த
தோண்டினேடு முளத்தவன்று னின்றகலப் பாலே
சோகமேனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலு மலங்களேல்லாங் கருடதியா னத்தால்
விடமோழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னேனே னென்று
பாவிக்கச் சோல்லுவதிப் பாவகத்தைக் காணே. 7

அஞ்சேழுத்தா லான்மாவை யரனுடைய பரிசு
மானுருவு மஞ்சேழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்சேழுத்தா லங்ககர நியாசம் பண்ணி
யான்மாவி னஞ்சேழுத்தா லிதயத் தர்ச்சித்
தஞ்சேழுத்தாற் குண்டலியி னனலே யோம்பி
யணேவரிய கோதண்ட மணேந்தருளின் வழிநின்
றஞ்சேழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்க
னணேயரவம் போற்றுரேன்று மான்மாவி லரனே. 8

நாட்டுமித யந்தானு நாபியினி லடியாய்
ஞாலமுத றத்துவத்தா லேண்விர ளுளத்தாய்

மூட்டுமோ கிநிசுத்த வித்தைமல ரேட்டாய்
முழுவிதழேட் டக்கரங்கண் † முறைமையினி லுடைத்
காட்டுகம லாசனமே லீசர்சதா சிவமுங் [தாய்க்
கலாமூர்த்த மாமிவற்றின் கண்ணுகுஞ் சத்தி
வீட்டையருள் சிவன்மூர்த்தி மானுகிச் சத்தி
மேலாகி நிற்பனிந்த விளவறிந்து போற்றே. 9

அந்தரி யாகந்தன்னே முத்திசா தனமா
வறைந்திடுவ ரதுதானு மான்மசுத்தி யாகுங்
கந்தமலர் புகையோளிமஞ் சனமமுது முதலாக்
கண்டனவே லாமனத்தாற் கருதிக்கோண்டு
சிந்தைதனி லர்ச்சிக்கச் சிவனேஞா னத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமவ் வோளிபோல மருவியர னுளத்தே
வரவரவந் திடுவன்பின் மலமான தறுமே. 10

புறம்பேயு மரன்கழல்கள் பூசிக்க வேண்டிற்
பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கோண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனே ஞானத்தா லங்குச்
சிந்திக்கும் படியிங்குச் சிந்தித்துப் போற்றி
யறம்பாவங் கட்குநா மேன்கடவே மேன்று
மாண்டவனேக் கண்டக்கா லகம்புறமேன் ஞதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றே
சீரடியார் தம்முடைய செய்தி தானே. 11

† முறைமையினின்

இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரத [னிறைவன்
மேள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுள
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே யருளு
மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தாற்
சிந்தனைசெய் தர்ச்சிக்கச் சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன் றன்னைப்
பந்தனையை யறுத்துத்தா னுக்கித்தன் னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே. 12

பயனியல்

பத்தாஞ் சூத்திரம்

இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லா
மிதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையு
மவனிவனாய் நின்றமுறை யேக னாகி
யரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றஞ்
சிவனுமிவன் செய்தியெல்லா மென்செய்தி யென்றுஞ்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே. 1

முதலதிகரணம்

யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னு
மிக்கோணை ஞானவெரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்ரு னேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித் திட்டோடும்
நான்செய்தே னெனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தா னுதிப்பி னல்லா
லொருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே. 2

இரண்டாமதிகரணம்

இந்திரிய மெனைப்பற்றி நின்றேயென் வசத்தி
னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற னுணைவழி நின்றிடலா லென்றுந்
தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் ருள்கள்

வந்தனைசெய் திவற்றின்வலி யருளினுல் வாட்டி
வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேன்
முந்தனுடைச் செயலன்று முடித்தொழுக வினைகண்
முளவாங் காளாகி மீளா னன்றே. 3

சலமிலனுய் ஞானத்தாற் றனையடைந்தார் தம்மைத்
தாணுக்கித் தலைவனவர் தாஞ்செய்வினை தன்னுல்
நலமுடனே பிறர்செய்வினை யூட்டியொழிப் பானுய்
நணுகாமல் வினையவரை நாடிக் காப்பன்
உலகினி லென்செயலெல்லா முன்விதியே நீயே
யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்ரு யென்றும்
நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்றும்
நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந் தானே. 4

நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து
நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்ந்தும்
நீடுபல காலங்க ணித்தரா யிருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
யேறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர். 5

அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகு
மௌடதமந் திரமுடையார்க் கருவிடங்க ளேரு
எங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும் ஞானிக்
கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத்

தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமுங் கந்தித்துச் சுழலு மாபோன்
மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கு மேல்லா
மலங்களும்பின் காயமோடு மாயு மன்றே. 6

பதினொன்றாஞ் சூத்திரம்

காயமோழிந் தாற்சுத்த னாகி யான்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய(ன்) கண்ணுக்
கேயுமுயிர் காட்டிக்கண் டிடுமா போல
வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ னித்தை
யாயுமறி வுடையனு யன்பு செய்ய
வங்நிலமை யிங்நிலயி லடைந்தமுறை யாலே
மாயமேலா நீங்கியரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாறுத சிவாநுபவ மருவிக் கோண்டே. 1

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர். 2

அநாதியுட லோன்றினைவிட் டோன்றுபற்றிக் ‡கன்மா
லாயழிந்து வருதலா லந்த மில்லை
பிறதியருள் பேற்றவர்க ணித்தவுரு வத்தைப்
பேற்றிருக்கை முத்தியேனிற் பேறும்பதமே
[யிதுவும்

‡ கன்மத்தாலழிந்து?

இறுதுநிலை யிதுதானுங் காய முண்டே
லிருங்கன்ம மாயைமல மெல்லா முண்டாம்
மறுதிதரு முடலாதி காரியத்தா லநாதி
மலமறுக்கு மருந்தற்று லுடல்மாயுங் காணே. 3

தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே
சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த ருகு
முரியமல மேளடதத்தாற் றடுப்புண்ட விடமு
மொள்ளெரியி னுளிமுன்ன ரிருளுந் தேற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போ லாகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து காயந்
திரியுமள வும்முளதாய்ப் பின்பு காயஞ்
சேராத வகைதானுந் தேயு மன்றே. 4

ஆணவந்தா னநாதியந்த மடையா தாகு
மடையினந்த வான்மாவு மழியுமெனிற் செம்பிற்
காணலுறுங் களிம்பிரத குளிகைபரி சிக்கக்
கழியுஞ்செம் புருநிற்கக் கண்டோ மன்றே
தாணுவின்றன் கழலணையத் தவிருமலந் தவிர்ந்தாற்
றுன்சுத்த னுயிருக்கை முத்தியரன் றுளைப்
பூணவேண் டுவதொன்று மில்லையெனி னருக்கன்
புகுதவிருள் போமடியிற் பொருந்தமலம் போமே.

நெல்லினுக்குத் தவிடுமிக ளநாதி [1]யாயே
நெல்லைவிட்டு [2]நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடிற் றுகளற்ற வரிசியின்பா லில்லை
தொக்கிருந்து மற்றேருநெற் றேன்றி டாவாம்

---

[1]யாவும். [2]நீங்கியவை,

மெல்லவிவை விடுமறவே யிவைபோல வணுவை
மேவுமல முடல்கன்ம மாதிவிட்டே நீங்கும்
நல்லசிவ முத்தியின்கட் பேத்தான் மாவை
நணுகிநிற்கு மாதலா னுசமுமின் றுமே. 6

முதலதிகரணம்

எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தோன்றை
யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் றானுஞ்
செவ்விதினி லுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்ரு
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிடுவ னுத லானு
மரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே. 7

இரண்டாமதிகரணம்

எங்குந்தா னிறைந்துசிவ னின்ரு னுகி
லெல்லாருங் காணவே வேண்டுந்தா னென்னி
லிங்குந்தா னந்தகருக் கிரவியிரு ளாகு
மீசனருட் கண்ணில்லார்க் கொளியாயே யிருளாம்
பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடையப்
பரிதியலர்த் திடுவதுபோற் பருவஞ்சே ருயிர்க்குத்
துங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளி னுலே
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. 8

சென்றணையு நிழல்போலச் சிவனிற்ப னென்னிற்
சென்றணையு மவன்முதலி சிவத்தையணைந் தோன்ருய்
நின்றதுயிர் கெட்டடென்னிற் கெட்டதணை வின்ரு
நின்றதேற் கேடில்லை யணைந்துகெட்ட தென்னிற்

போன்றினதேன் முத்தியினைப் பெற்றவரார் புகனீ
போன்றுகையே முத்தியெனிற் புருடனித்த னன்ரு
மோன்றியிடு நீரோடுநீர் சேர்ந்தாற்போ லென்னி
னேருபொருளா மதிபதியோ டுயிர்பொருளோன் றன்றே.

செம்பிரத குளிகையினுற் களிம்பற்றுப் பொன்னுய்ச்
செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற் சீவன்
நம்பனுடன் கூடுமெனிற் பொன்போ லல்லன்
நற்குளிகை போலவர னணுகுமலம் போக்கி
யம்பொனடிக் கீழ்வைப்ப னருங்களங்க மறுக்கு
மக்குளிகை தானும்பொன் னுகா தாகும்
உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய
னுயிர்தானுஞ் சிவாநுபவ மொன்றினுக்கு முரித்தே. 10

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்ரு மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்ருன்
பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்ரு
னவன்ருனே யறியுஞ்சித் தாதலினு லிரண்டு
மணைந்தாலு மொன்ருகா தநந்நியமா யிருக்கு
மிவன்ருனும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே. 11

இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னுக்கி
‡ யரும்பித்தீ யிந்தனத்தை யழிப்பதுபோன் மலத்தை
யறுத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து

‡அரும்பித்திந்தனத்தை யனலழிப்பதுபோல்.

விரும்பிப்போன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே.12

பன்னிரண்டாஞ் சூத்திரம்

செங்கமலத் தாளிணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்க ளறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட்
டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லா
மரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
யெங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம்
யாவர்க்கு மேலானோ மென்றிறுமாப் பெய்தித்
திங்கண்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே. 1

இரண்டாமதிகரணம்

ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லா
ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார்
பேசுவதென் னறிவில்லாப் பிணங்களைநா மிணங்கிற்
பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
யாசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்
டவர்கரும முன்கரும மாகச் செய்து
கூசிமொழிந் தருண்ஞானக் குறியி னின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே. 2

மூன்றுமதிகரணம்

அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலினுற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம்பா விக்குமதத்தாற் சிவனு மாவர்
குறியதனு லிதயத்தே யரனைக் கூடுங்
கொள்கையினு லரனுவர் குறியோடுதா மழியு
நெறியதனுற் சிவமேயாய் நின்றிடுவ ரேன்று
*னேசத்தார்த் தொழுதிடுநீ பாசத்தார் விடவே. 3

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
யுருக்கோலி மந்திரத்தா லேனநினையு மவர்க்கு
முளனேங்கு மிலனிங்கு முளனேன் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னேரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிகும்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணுத பால்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே 4

ஞானயோ கக்கிரியா சரியை நான்கு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரிய
னூனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்
யோகிகிரி யாவான்ரு ஞெண்கிரியை யாதி
யானவிரண் டினுக்குரியன் சரியையினி னின்ருே
னச்சரியைக் கேயுரிய னுகலினுல் யார்க்கு
மீனமிலான் ஞானகுரு வேகுருவு மிவனே
யீசனிவன் ருனேன்று மிறைஞ்சி யேத்தே. 5

---

* நேசத்தாற்ருேழுதிடு என்றது பிழைபட்டபாடம்.

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தவியோ கத்தான்
மணியிரத குளிகையினுன் மற்று மற்றுந்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்க டிரிகால ஞான
மந்தமிலா மணிமாதி ஞானங்க ளேல்லா
மடைந்திடுமா சானருளா லடிசேர் ஞானம்
வந்திடுமற் றேன்றுலும் வாரா தாகு
மற்றவையு மவனருளான் மருவு மன்றே. 6

பரம்பிரம மிவனேன்றும் பரசிவன்ற னேன்றும்
பரஞான மிவனேன்றும் பராபரன்ற னேன்று
மரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யேன்று
மருட்குருவை வழிபடவே யவனிவன்ற னுயே
யிரங்கியவா ரணம்யாமை மீனண்டஞ் சினையை
யியல்பினேடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே. 7

அருணந்தி தேவநாயனுர் அருளிய

சிவஞானசித்தியார் சுபக்கம்

முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

அருணந்திதேவ நாயனர்

அருளிச்செய்த

இருபாவிருபஃது

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும் - வேண்ணேய் நல்லூர்
மேய்கண்டா னேன்றொருகான் மேவுவரால் வேறின்மை
கைகண்டா †ருள்ளத்தின் கண். 1

கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் றானேன
வேண்ணேய்த் தோன்றிய மேய்கண்ட தேவ
காரா கிருகக் கலியாழ் வேணைநின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லானு துடையே னேனதுளம்
நீங்கா நிலைமை யூங்கு முளையா
லறிவின் மைமலம் பிறிவின் மையேனி
ஞேராலினை யுணர்த்தும் விராய்நின் றனையேற்

---

† உள்ளத்திற் கண் என்பதும் பாடம்.

றிப்பிய மங்தோ போய்ப்பகை யாகாய்
சுத்த னமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னேனும்பெயர் முடியா
வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றுய்ப்
பேறுமின் றுகு மேமக்கெம் பெரும
*விருநிலங் தீநீ ரியமானன் காலெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற்கி லாதலின்
வேறே வுடனே விளம்பல் வேண்டுஞ்
சீறி யருளல் சிறுமை யுடைத்தா
லறியாது கூறினை யபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளினங் குருமுத லாயேனி
னபக்குவ மருளினு மறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டிற் பயனிலை நின்னுற்
பக்குவ மதனுற் பயனீ வரினே
நின்னைப் பருவ நிகழ்த்தா தன்னே
தன்னைப் பாரிலி யென்பதுங் தகுமே
மும்மலஞ் சடமணு முப்பிள மையினீ
நின்மலன் பருவ நிகழ்த்தியதி யார்க்கோ
**வுணர்வெழு நீக்கத்தை யோதிய தெனினே
யிணையிலி யாயினை யென்பதை யறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டும்
†காண்பாரி யார்கோல் காட்டாக் காலெனு
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்குமெய்ஞ் ஞானத்தி
‡னுட்பா லவர்க்கரு ளேன்பதை யறியே. 2

---

* 'இருநிலனுய்த் தீயாகி நீரு மாகி' என்னும் திருத்தாண்டகம். †'ஆட்டுவித்தா லாரோருவ ராடாதாரே' என்னுந் திருத்தாண்டகம். ‡ 'ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும்' என்னுந் திருப்பாசுரம். ** தணிகைப்புரா. அகத். 159.

அறிவறி யாமை யிரண்டு மடியேன்
சேறிதலான் மெய்கண்ட தேவே - யறிவோ
வறியேனே யாதென்று கூறுகே ணய்ந்து
குறிமாறு கோள்ளாமற் கூறு. 3

கூறிய மூன்று மலத்தின் குணங்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோத மோகங் கோலையஞர் மதநகை
விராயேண் குணனுமா ணவமேன விளம்பினே
யஞ்ஞா னம்போய் யயர்வே மோகம்
[1]மைஞ்ஞால சூந்நிய மாற்சரி யம்பய
மாயவேழ் குணனு மாயைக் கருளினே
யிருத்தலுங் கிடத்தலு மிருவினே யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலேன் [2]றுடுத்த
வறுவகைக் குணனுங் கருமக் கருளினே
யாங்கவை தாமு நீங்காது நின்று
தம்வழிச் சேலுத்தித் தாமே தாமா
யேன்வழி யேன்பதோன் றின்ரு மன்ன
வூரும் பேரு முருவுங் கோண்டேன்
னூரும் பேரு முருவுங் கேடுத்த
பேண்ணே சூழ்ந்த வேண்ணேயம் பதியிற்
சைவ சிகாமணி மேய்யர் மேய்ய
மும்மலஞ் சடமேன மோழிந்தனே யம்ம
மாறுகோள் கூறல் போலுங் தேறுஞ்
சடஞ்சேய லதனேச் சார்ந்திடு மேனினே
கடம்பட மதனுட் கண்டிலம் விடம்படு
முன்றிரள் போன்ற தாயிற் றேன்றி

[1] பைசாசூந்நியம். [2] எடுத்த.

யணீங்தாங் ககறல் வேண்டுங் குணங்களும்
பன்மையின் ருகு மேம்மைவங் தணைதரத்
தாஞே ‡மாட்டாது யாஞே செய்கிலன்
*நீயோ செய்யாய் நின்மல ஞயிட்
டியல்பேனிற் †போகா தேன்று மயல்கேடப்
பந்தம் வந்த வாறிங்
கந்த மாதி யில்லா யருளே.

அருண்முன்பு நில்லா தடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறேன்கோ லேந்தாய் - மருள்கோண்ட
மாலேயா வேண்ணேவாழ் மன்னவா வேன்னுடைய
மாலேயா மாற்ற மதி. 5

மதிநுதல் பாக ஞகி கதிதா
வேண்ணேத் தோன்றி நண்ணியுள் புகுந்தேன்
னுளம்வேளி செய்துன் னளவில் காட்கி
காட்டியேற் காட்டினே யேனினும் நாட்டியே
னுண்மையும் [I]பருமையு நுவலி னண்ணல்
பாதாள சத்தி பரியந்த மாக
வோதி யுணர்ந்த யானே யேக
முழுத்துநின் றனனே முதல்வ முழுத்தும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
யாங்கைங் தவத்தையு மடைந்தன னீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் றூக்கி
யேவ்விடத் துண்மையு மிவ்விடத் தார்தலுஞ்

---

‡ மாட்டா.

*சிவஞான சுவாமிகள் சிவஞான போதம் 2-ம் சூ. 1-வது அதிகாரண வுரையில் இவ்வடியை எடுத்தாண்டிருக்கிருர்கள்,

†போகா. [I] பெருமையும்.

சேல்லிடத் தேய்தலுந் தேரித்த மூன்றினு
ளோன்றேனக் கருளல் வேண்டு மேன்று
மில்ல திலதா யுள்ள துளதேனுஞ்
சோல்லே சோல்லாய்ச் சோல்லுங் காலைச்
சிறுத்தலும் பேருத்தலு மிலவே [2]நிறுத்திய
யானை யேறும்பி ஞனது போலேனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவேனி னற்றன்று
விட்ட குறையி னறிந்து தோன்று
தோட்டுவந் தனவேன வேண்டு நட்ட
பேரியதிற் பேருமையுஞ் சிறியதிற் சிறுமையு
முரியது நினக்கே யுண்மை பேரியோ
யேனக்கின் ருகு மேன்று
மனக்கினி யாயினி மற்றது மோழியே. 6

மோழிந்த வவத்தை முதலடியே னின்ருங்
கோழிந்தன நான்கு முணர - விழிந்தறிந்
தேறிற்றிங் கில்லை யேழில்வேண்ணை மேய்த்தேவே
தேறிற்றேன் கோண்டு தேரித்து. 7

தேரித்ததேன் கோண்டேனே யுருத்திர பசுபதி
சேடிய னேனையு மடிமை சேய்யப்
படிவங் கோண்டு வடிவுகாட் டில்லாப்
பேண்ணை யாளும் வேண்ணை மேய்ய
வவத்தையிற் றேரித்தனே ஞயி னவத்தை
தேரித்தாங் கிரித்தலு மிலனே திருத்துங்
கால முதலிய கருவி யாயின்

[2] நிறுத்தி.

மாலும் பிரமனும் வந்தேனை யடையா
ரோதுங் காலை யோன்றையோன் றுணரா
சேதந மன்றவை பேதைச் செயலிச்
சேதந வானுற் செயல்கோள வேண்டுநற்
போத மிவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரோன்ரு
மோருவுவ தறியே னுணர்வில ளுதலி
னிற்கோடு கண்டனே ளுயி னேற்குக்
கருவி யாயினே பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங்கேண்மோ மன்ன நின்னின்
‡முன்ன மேன்ற னுணர்வில ளுதலி
னேன்னைக் காண்பினுங் காண்பல வுன்னே
டோருங்கு காண்பினுங் காண்பல வருந்துணே
கண்டவா றேதேனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே. 8

கடலமுதே வேண்ணேக் கரும்பேயேன் கண்ணே
யுடலகத்து மூலத் தோடுங்கச் - சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னேன்னே
மருவியா தேன்றுரைக்க மன்.

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களே
யங்ஙிய மாக்கி யருள்வழி யதனு
லேன்னுட் புகுந்தனே யேணினே முன்னேத்
திரிமலங் தீர்த்த தேசிக நின்னே
டோருவுத லின்றி யுடங்தையே யாகும்

‡ இவ்வடி பிழைபட்டிருத்தலின் போருளமைதியில்லே.

பெருநிலை யாகல் வேண்டு மருவிடு
மும்மல மதனா *லெம்முனின் றிலையேனி
னம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பேர்வில னாகும் பெரும தீர்வின்
றமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவேனச் சாற்றி னமைந்த
மாயேயங் கன்ம மாமல மூன்று
மாயா தாகவே யார்ச்சநு மாயையி
னுற்பவந் தீரா தொழுகுமோன் றோன்றி
ணிற்சம மாயி னல்லது நிற்பேற
லில்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகு நாயே னுளத்து
நின்றனை யென்பேனோ நின்றிலை யென்பேனோ
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பேனோ
வொன்றினை யுரைத்தருண் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணைக் கதிபதி
கைகண் டலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேரறப் பறித்த
மெய்கண்ட †தேவ வினையிலி
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே 10

மதிநின்பா லிந்த மலத்தின்பா னிற்க
விதியென்கொல் வெண்ணைவாழ் மெய்ய - பதிநின்பால்
வந்தா லிதில்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலே
னெந்தா யிரண்டாமா றென். 11

* எம்முனின்றிலை என்பதும் பாடம். † தேவே.

எண்டிசை விளங்க விருட்படாம் போக்கி
முண்டக மலர்த்தி முதறி வருளு
மேதினி யுதய மெய்கண்ட தேவ
கோதி லமுத குணப்பெருங் குன்ற
வென்னி ஞர்தலு மகறலு மென்னகோ
‡லுன்னி லுன்னி யுஞவிடிற் பெயர்குவ
மென்னு மதுவே நின்னியல் பேனினே
வியங்கோ ளாளனு மாகி யியங்கலு
முண்டெனப் படுவை யெண்டோண் முக்கண்
யாங்கணும் பிரியா தோங்குநின் னிலையின்
யான்வந் தணைந்து மீள்குவ ஞயி
ஞற்றுத்துய ருற்ரே ரணி[1]நிழ னசைஇ
வீற்றுவீற் றெழுதர வேண்டலும் வெறுத்தலு
மின்றச் சாயைக்கு நன்றுமன் னியல்பே
யனையை யாகுவை நினைவருங் காலை
யிந்நிலை யதனி னேழையேற் கிரங்கி
நின்னை வெளிப்படுத் தோளிப்பை நீயே
லருண்மா ருகும் பெருமவஃ தன்றியு
நிற்பெற் றவர்க்கு முற்பவ முண்டேனுஞ்
சொற்பெறு மஃதித் தொல்லுல கில்லை
யவ்வவ் வமைவுஞ் †சார்பு மயர்வறச்
சொல்லுற் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல்லிறந் தோயே. 12

‡ திருநா. தேவாரம். 'உன்னிற்றுன்னி' [1] நிழலசைஇ,
† சோர்வு (வியாப்பியம்?)

இறந்தோய் கரணங்க ளெல்லா மெனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே - பிறந்துடனுங்
காயங் கொளவுங் கொளாமலுங் கண்டதுநீ
யாயன்கோல் பாதவத் தற்று. 13

அற்றதேன் பாச முற்றதுன் கழலே
யருட்டுறை யுறையும் பொருட்சுவை நாத
வேறென் றிருந்த வென்னை யான்பெற
வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ
விருவினை யென்ப தென்னைகொ லருளிய
மனமே காயம் வாக்கெனு மூன்றி
னிதமே யகித மெனுமிவை யாயிற்
கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா
காரணஞ் சடமதன் காரிய மஃதா
லாரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினுஞ் செயலே வாரா
தியமன் செய்தி யிதற்கெனி னமைவும்
பின்னையின் றுகு மன்னது மிங்குச்
செய்திக் குள்ள செயலவை யருத்தின்
[1]மையறீ ரியமற்கு வழக்கில்லை மன்ன
வொருவரே யமையு மொருவா [2]வொறுவற்
கிருவரும் வேண்டா விறைவனு நின்றனை
நின்னது கருணை சொல்லள வின்றே
யமைத்தது துய்ப்பி னெமக்கணை வின்று
முள்ளது போகா தில்லது வாரா
துள்ளதே யுள்ள தெனுமுரை யதனுற்
கொள்ளும் வகையாற் [3]கொளுத்திடு மாயின்

[1] மையலிரி யமற்கு [2] ஒருவற்கு. [3] கொடுத்திடும்.

வள்ளன் மையெலா முள்ளிட வமையு
மீய வேண்டு மேனும்விதி யின்று
மாயினு மென்னை யருந்துயர்ப் படுத்த
[1]ஞயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமுங் கரும பந்தமுந்
தேருள வருளு சிவபெரு மானே. 14

மானமருஞ் செங்கை மதில்வெண்ணெ வாழ்மன்ன
போனவினை தானே போருந்துமோ - யானதனி
லாவனே வாக்கா யமலனு நின்னருடான்
றேவனே யாதுக்கோ தேர். 15

தோரா துரைப்பன் றெருமர லுளத்தோடு
பேரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்ப தென்னுண் மையெனின்
நின்னது நேர்மை சொன்மனத் தின்றே
யெழுவகைத் தாதுவி னெழுதுளை யிரண்டும்
பெருமுழைக் குரம்பைபிற் பெய்தகத் தடக்கி
நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி
யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கு மனமும் போக்குள தநுவுஞ்
சொல்லும் நினைவுஞ் செய்யுஞ் செயலு
நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றுய்க்
காலமுந் தேசமு மாலற வகுத்து
[2]நடுவுநின் றருத்தலி னடுவனு குதியே

1 (படுத்த)நாயினேற்கு. 2 நடுவுள்.

சான்ரோர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
யத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே யோத்தகன் மத்திடை
[1]நீங்கின வென்னை யூங்கூழ் வினைகளு
மாங்கவை யருத்துவ தாரைகோ லதனுற்
கரும மருத்துங் கடனது வின்ருந்
தருமம் புரத்தல் பேருமைய தன்றே
கண்ணினுண் மணிய கருத்தினுட் கருத்த
வேண்ணை வேந்த மேய்கண்ட தேவ
விடர்ப்படு குரம்பையு ளிருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சோல்லே. 16

சோற்ருேழும்பு கோள்ளநீ [2]சூழ்ந்ததுவும்நற்சேயல்காண்
மற்றவர்கண் ணின்னேக்கில் மாய்ந்தவுயிர்க்-குற்றங்
[3]கோளித்ததியாங் கைய வுயர்வேண்ணை நல்லூர்க்
குளித்தமதுக் கோன்றையேங் கோ. 17

கோலங் கோண்ட வாறுண ராதே
ஞாலங் காவலனி யானேனக் கோளீஇப்
போய்யை மெய்யேனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
வேன்னுட் கரந்தேன் பின்வந் தருளி
யேன்னையுந் தன்னையு மறிவின் றியற்று
மேன்னதி யானேனு மகந்தை யுங்கண்டி
யாவரி யாவையுமி யாங்கணுஞ் சேன்று
புக்குழிப் புக்குப் பேயர்த்துழிப் பேயர்த்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்

[1] நீங்கினது. [2] சூழ்ந்ததுவுநிற் சேயல்கண். [3]ஒளித்தி.

டெற்பணி யாளா யெனைப்பிரி யாதே
யோடி மீள்கென வாடல் பார்த்திட்
டென்வழி நின்றன னெந்தை யன்றே
வருண்மிக வுடைமையி னருட்டுறை வந்து
பொருண்மிக வருடலும் பொய்ப்பகை யாதலுங்
கைகண்டு கொள்ளெனக் கடலுல கறிய
மெய்கண்ட தேவ னெனப்பெயர் விரீஇத்
தன்னுட் கரந்து தான்முன் னாகித்
தன்னதுந் தானுமா யென்னையின் றாக்கித்
‡தன்னையு மென்னையுந் தந்து
தனது செய்யா மையு மெனதுசெய லின்மையு
மெம்மான் காட்டி யெய்த
லம்மா வெனக்கே யதிசயந் தருமே. 18

தருமா தருமத் தலைநின்றாழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப் - பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தா
னுருவென்ன வந்தெடுத்தா னுற்று. 19

உற்றவர் பெற்றவர் மற்றவை முற்றும்
அற்றவர்க் கற்றவ னல்லவர்க் கல்லவ
னந்த மாதி யில்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்

‡ இவ்வடியில் ஒருசீர் இல்லை. (பா. : 13 - 14 பார்க்க).

டிருள்வெளி யாகு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு
மின்றி யொன்ருய் நின்றவந் நிலையி
லொன்ரு காம லிரண்டா காம
லொன்று மிரண்டு மின்ரு மாமற்
றன்னது பெருமை தாக்கா ளுயினு
மென்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியு
மென்னையு மெனக்கே தந்து தன்னது
போராநந்தப் பெருங்கட லதனு
ளாரா வின்ப மளித்துத் தீரா
வுள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்ன னெங்கோன் வார்புனற் பெண்ணை
வெண்ணை காவலன் மெய்கண்ட தேவ
னண்ண லருளா லயத்த னண்ணிய
மலமத லாயின மாய்க்கு
முலக வுயிர்க்கெல் லாமொரு கண்ணே. 20

இருபாவிருபஃது

முற்றிற்று

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

திருவதிகை மனவாசகங்கடந்தார்

அருளிச்செய்த

உண்மை விளக்கம்

வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மை விளக்க முரைசெய்யத் - திண்மதஞ்சே
ரந்திநிறத் தந்திமுகத் தோந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம். 1

போய்காட்டிப் போய்யகற்றிப் போதாநந் தப்பொருளா
மேய்காட்டு மெய்கண்டாய் விண்ணப்பம் - போய்
மெய்யா திருவெண்ணெ வித்தகா சுத்தவினு [காட்டா
வையாநீ தான்கேட் டருள். 2

ஆருறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாரு வினையேது மற்றிவற்றின் - வேருகா
நானேது நீயேது நாதனட மஞ்செழுத்துத்
தானேது தேசிகனே சாற்று. 3

உள்ளபடி யித்தை யுரைக்கக்கே ளுன்றனக்கு
வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்து - தெள்ளியசீ
ராகமங்கள் சொன்ன வடைவிலே யானந்த
யோக நிகழ்புதல்வா வுற்று. 4

மாயை - மாபூதம். 5 - 10. ஆன்ம தத்துவம் 24

நாற்கோணம் பூமிபுன னண்ணுமதி யின்பாதி
யேற்குமனன் முக்கோண மெப்போது - மார்க்கு
மறுகோணங் கால்வட்ட மாகாய மான்மா
வுறுகாய மாமிவற்று லுற்று. 5

பொன்பார் புனல்வெண்மை பொங்கு மனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்றூம - மென்பா
ரெழுத்து லவரயவப் பாராதிக் கேன்று
மழுத்தமதாய் நிற்கு மது. 6

குறிகுலிசங் தோகனதங் கோள்சுவத்தி குன்ரு
வறுபுள்ளி யாரமுத விந்துப் - பிறிவின்றி
மண்புனறீக் கால்வான மன்னு மடைவேயேன்
ஞேண்புதல்வா வாகமமோ தும். 7

பாராதி யைந்துக்கும் பன்னுமதி தெய்வங்க
ளாரா ரயனுதி யைவரா - மோரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்காற் ரேற்றமுத லைந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார் 8

படைப்ப னயனளிப்பன் பங்கயக்கண் மாயன்
றுடைப்ப னுருத்திரனுஞ் சொல்லிற் - றிடப்பெறவே
யென்றுந் திரோபவிப்ப ரீசர் சதாசிவரு
மன்றே யநுக்கிரக ராம். 9

மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமா
மோண்கனல்சுட் டோன்றுவிக்கு மோவாமல் - வண்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காய [கால்
நிரந்தரமாய் நிற்கு நிறைந்து 10

ஐம்புலன் (தன்மாத்திரை)

உள்ளபடி மாபூத மோதினே முன்றனக்குக்
கள்ளமிகு மைம்புலனுங் கட்டுரைக்கின் - மேள்ளவே
யோசை பரிச முருவஞ் சுவைநாற்ற
மாசைதரு மைம்புலனே யாம் 11

ஞானேந்திரியம் 12 - 14.

ஞானேந் திரியங்க ணன்று வுரைக்கக்கே
ளூன மிகுபூத முற்றிடமா - வீனமாஞ்
சத்தா தியையறியுந் தானஞ் செவிதோல்கண்
ணத்தாலு மூக்கென் றறி. 12

வானிடமாய் நின்றுசெவி மன்னு மோலியதனை
யீனமிகுந் தோல்கா லிடமாக - வூனப்
பரிசந் தனையறியும் பார்வையிற்கண் ணங்கி
விரவியுரு வங்காணு மே. 13

நன்றுக நீரிடமா நாவிரதந் தானறியும்
போன்று மணமூக்குப் பூவிடமா - நின்றறியு
மேன்றேது மன்றே யிறையா கமமிதனை
வேன்றுர்சேன் றுரின்ப வீடு. 14

கன்மேந்திரியம் 15 - 16.

கண்ணுதனூ லோதியிடுங் கன்மேந் திரியங்க
ளேண்ணும்வச னுதிக் கிடமாக - நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னு குதமுபத்த
மாக்கருது நாளு மது. 15

வாக்காகா யம்மிடமா வந்துவச னிக்குங்கால்
போக்காருங் காற்றிடமாப் புல்கியன - லேற்கு
மிடுங்கை குதநீ ரிடமா மலாதி
விடும்பா ரிடமுபத்தம் விந்து. 16

அந்தக்கரணம்

அந்தக் கரண மடைவே யுரைக்கக்கே
ளந்தமனம் புத்தியுட ணுங்காரஞ் - சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கா லேழுந்திருந்தங்
குற்றதுசிந் திக்கு முணர். 17

வித்தியாதத்துவம் 18 - 21

ஒதியிடு நாலாறு முற்ருன் மதத்துவமேன்
ருதி யருணூ லறையுங்காண் - டீதறவே
வித்தியா தத்துவங்க டம்மை விளம்பக்கே
ளுத்தமனே நன்ரு வுனக்கு. 18

கால நியதி கருதுங் கலைவித்தை
யேலவிரா கம்புருட னேமாயை - மாலறவேழ்
சொன்ஞே மடைவாகச் சொன்னவிவை தம்முண்மை
யுன்னி யுரைக்கநா முற்று. 19

எல்லே பலம்புதுமை யெப்போது நிச்சயித்த
லல்ல றருங்கிரியை யான்மாவுக் - கொல்லே
யறிவாசை யைம்புலனு மாரவருங் காலங்
குறியாய் மயக்கென்று கோள். 20

சிவதத்துவம் 21 - 22

வித்தியா தத்துவங்க ளேழும் விளம்பினேம்
சுத்தமாந் தத்துவங்கள் சொல்லக்கே - ணித்தமாஞ்
சுத்தவித்தை யீசுரம்பின் சொல்லுஞ் சதாசிவநற்
சத்திசிவங் காணவைக டாம். 21

சுத்தவித்தை ஞானமிகுந் தோன்மையா மீசுரந்தா
னத்தன் றொழிலதிக மாக்கியிடு - மொத்தலிவை
சாதாக் கியமென்றுஞ் சத்தி சிவங்கிரியை
யாதார ஞானவுரு வாம். 22

ஆணவம் கன்மம்

ஆறாறு தத்துவமுஞ் சொன்னோ மடைவாக
மாறு மலமிரண்டும் வாசொல்லக் - கூறி
லறியாமை யாணவம்நீ யானசுக துக்கங்
குறியா வினையென்று கோள். 23

நான் (ஆன்மா) 24 - 28.

ஆறாறு தத்துவமு மாணவமும் வல்வினையு
மாறு வருளால் வகுத்துரைத்தீர் - வேறுகா
வென்னை யெனக்கறியக் காட்டீ ரிவைகண்டே
னுன்னரிய தேசிகரே யுற்று. 2

நன்று வுரைக்கக்கே ணல்லசித்தின் முன்னசித்திங்
கோன்றுது சித்தசித்தை யோராது - நின்றிவற்றை
யன்றே பகுத்தறிவ தான்மாவே யென்றுமறை
குன்றும லோதுங் குறித்து. 25

தத்துவங்க ளாறுறுந் தம்மைத்தா மென்றறியா
வேத்தன்மை யென்னி லியம்பக்கேள் - சுத்தமா
மாறு சுவையு மறியாவே தம்மைத்தாங்
கூறி லவையிவைபோற் கோள். 26

ஆறு சுவையு மருந்தி யவைதம்மை
வேறுருவன் கூறியிடு மேன்மைபோ - லாறுறு
மோன்றேன்றுய் நாடியுணர்ந் தோதிலதி லுற்றறிவாய்
நின்றபோரு டானேகா ணீ 27

நீ (சிவம்)

குன்று வருளாலே கூறினீ ரேன்வடிவு
போன்றுத நும்முருவம் போதியீர் - நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமா போலே யுனதறிவி
னண்ணியறி வித்திடுவோம் நாம். 28

அன்றியுங்கே ளான்மாவா லாய்ந்தறியு மைம்போறிக
ளின்றி யறியா விவையென்ன - நின்றதுபோ
லோவாம லுன்னே யுணர்த்துவோ முன்னறிவின்
மேவாமன் மேவிநா மே. 29

அக்கரங்கட் கேல்லா மகரவுயிர் நின்றுற்போன்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினே - மேக்கண்ணு
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவேன்று
நல்லா கமமோது நாடு. 30

நாதாந்த (பஞ்சாக்கர) நடனம் 31 - 40

நற்றவத்தோர் தாங்காண நாதாந்தத் தஞ்செழுத்தா
லுற்றுருவாய் நின்ருட லுள்ளபடி - பெற்றிடநான்
விண்ணுர் போழில்வேண்ணெ மேய்கண்ட நாதனே
தண்ணு ரருளாலே சாற்று. 31

நடம் ஆடும் இடம், கருவி

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம வேன்னுந் திருவேழுத்தஞ் சாலே
யவாயமற நின்ருடு வான் 32

ஊனநாடகம்

ஆடும் படிகேணல் லம்பலத்தா ணயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். 33

ஞானநாடகம்

சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம் - பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனுர்
தங்கு மகரமது தான். 34

ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வேழுத்தே நிறைசுடரா - மாங்கார
மற்ரு ரறிவரணி யம்பலத்தா ஞடலிது
பேற்ருர் பிறப்பற்ருர் பின். 35

பஞ்சகிருத்திய தாண்டவம்

தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. 36

ஞானத்தின் ஞானநடனம்

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியரு டானெடுத்து - நேயத்தா
லாநந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்த
ருனெந்தை யார்பரதந் தான். 37

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடு - மாநந்த
மோண்டருந்த நின்ருடல் காணுமருண் மூர்த்தியாக்
கோண்டதிரு வம்பலத்தான் கூத்து. 38

பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா வொருவன் - வரைமகடான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு. 39

ஐந்தெழுத்துண்மை

நாதாந்த நாடகத்தை நன்ரு வருள்செய்தீ
ரோதீ ரெழுத்தஞ்சு முள்ளபடி - தீதறவே
யஞ்செழுத்தீ தாகி லழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச வருட்குருவே சாற்று. 40

உற்ற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சற்றும் போருடான் சலியாது - மற்றதுகே
ளீசனரு ளாவி யேழிலார் திரோதமல
மாசிலேழுத் தஞ்சினடை வாம். 41

சிவனரு ளாவி திரோதமல மைந்து
மவனேழுத் தஞ்சி னடைவா - மிவனின்று
நம்முதலா வோதிலரு ணுடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சேன்று. 42

அண்ணல் முதலா வழகா ரேழுத்தைந்து
மேண்ணி லிராப்பகலற் றின்பத்தே - நண்ணி
யருளா னதுசிவத்தே யாக்கு மணுவை
யிருளா னதுதீர வின்று. 43

ஆதி மலமிரண்டு மாதியா வோதினுற்
சேதியா மும்மலமுந் தீர்வாகா - போத
மதிப்பரிதா மின்பத்தே வாழலா மாறி
விதிப்படியோ தஞ்சேழுத்து மே. 44

அஞ்சேழுத்தே யாகமமு மண்ண லருமறையு
மஞ்சேழுத்தே யாதிபுரா ணம்மனைத்து - மஞ்சேழுத்
யாநந்த தாண்டவமும் யாவைக்கு மப்பாலா [தே
மோனந்த மாமுத்தி யும். 45

முத்திநிலை யநுபவம்

முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை யிவையிற்றி - னேத்த
விரதமணம் வேம்மை யேழினுதம் போல
விரவுவரேன் றேதும் விதி. 46

தத்துவங்க ளெல்லாஞ் சகசமா யான்மாவிற்
பேத்தத்தி னிற்கின்ற பேற்றிபோன் - முத்திதனிற்
சித்தமல மற்ருர் சேறிந்திடுவ ரேன்றுமறை
சத்தியமா வோதியிடுந் தான் 47

ஆதவன்றன் சந்நிதியி லம்புலியி ஞர்சோதி
பேதமற நிற்கின்ற பேற்றிபோ - ஞதாந்தத்
தண்ண றிருவடியி லான்மா வணைந்தின்பக்
கண்ணி லழுந்தியிடுங் காண். 48

சேன்றிவன்ரு ஞேன்றிற் சிவபூ ரணஞ்சிதையு
மன்றவன்ரு ஞேன்றுமேனி லந்நியமா - மின்றிரண்டு
மற்றநிலை யேதேன்னி லாதித்த னந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கோள். 49

முப்பொருளும் முத்தியில் நிற்கும் முறைமை

வாக்கு மனமிறந்த வான்கருணை யாளனுருத்
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா - நீக்காப்
பதியினைப்போ னித்தம் பசுபாச மேன்ருய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு. 50

முத்திதனின் மூன்று முதலு மோழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலணு - மேத்தவே
யின்பங் கோடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடனே கண்டுகோளப் பா. 51

முத்திகாரணம்

அப்பாவிம் முத்திக் கழியாத காரணந்தான்
சேப்பா யருளாலே சேப்பக்கே - ளோப்பில்
குருலிங்க வேடமேனக் கூறிலிவை கோண்டார்
கருவோன்றி நில்லார்கள் காண். 52

கற்று மனம்போற் கசிந்துகசிந் தேயுருகி
யுற்றுசான் லிங்க முயர்வேடம் - பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனி னின்றிடுவர் பார். 53

முத்திலாபம்

வாழ்ந்தே னருட்கடலே வற்றுப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமன் மேதினியிற் - சூழ்ந்துவிடா
வெண்ணைச் சுவேதவன மெய்கண்ட நாதனே
யுண்மைத் தவப்பயனே யுற்று. 54

நூலாசிரியரும் முதனூலும்

மன்னதிகை வாழு மனவா சகங்கடந்தான்
மின்னனைய வாழ்விலுறு மெய்கண்டான் - பன்மறைகள்
வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மைவிளக் கஞ்செய்தா னுற்று. 55

உண்மைவிளக்கம்

முற்றிற்று.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

கொற்றவன்குடி உமாபதிதேவ நாயனர்

அருளிச்செய்த

சிவப்பிரகாசம்

பாயிரம்

காப்பு

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழலுளு மறவாம
லளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான
வேளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

நடராசர்

ஓங்கோளியா யருண்ஞான மூர்த்தி யாகி
யுலகமேலா மளித்தருளு முமையம்மை காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து



அடியார்க் கெளியனேன் றம்பலவ னேஎழுதும்
படியாஞ்சீர் பெற்றஉமா பதிதேவ நாயனுர்.

நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்று
ணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினு முறவணங்கிப் போற்றல் செய்வாம். 1

சிவகாமியம்மை

பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானங் கிரியைபர போக ரூபந்
தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்க டாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்றாய்
விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்று ளாடல் காணு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். 2

விநாயகர்

நலந்தரல்நூ லிருந்தமிழின் செய்யுட் குற்ற
நண்ணுமை யிடையூறு நலியாமை கருதி
யிலங்குமிரு குழையருகு பொருதுவரி சிதறி
யிணைவேல்க ளிகழ்ந்தக்யற் கண்ணியொடு மிறைவன்
கலந்தருள வருமானை முகத்தான் மும்மைக்
கடமருவி யெனநிலவு கணபதியி னருளா
லலர்ந்துமது கரமுனிவர் பரவவளர் கமல
மனையதிரு வடியிணைக ணினைதல் செய்வாம். 3

முருகக்கடவுள்

வளநிலவு குலவமர ரதிபதியாய் நீல
மயிலேறி வருமீச னருண்ஞான மதலை
யளவில்பல கலையங்க மாரணங்க ளுணர்ந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்விற லேண்ணு

வுளமருவு சூரனுர மேமதிடும்பை யோங்க
லோன்றிரண்டு கூறுபட வோளிதிகழ்வே லுகந்த
களபமலி குறமகடன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மல ரடியிணைகள் சிந்தை செய்வாம். 4

சந்தான பரம்பரை

தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வேண்ணேய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாரு
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தேமையாளுந் தன்மை யோரே. 5

குரு வணக்கம்

பார்திகழ வளர்சாம வேத மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி யெம்மை யாண்ட
சைவசிகா மணிமருதைத் தலைவ னந்தண்
கார்மருவு போழில்புடைசூழ் மதின்மீதே மதியங்
கடவாமை நேடுங்கோடியின் கரந்தகையுங் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்த னேந்தை
திருவளரு மலரடிகள் சேன்னி வைப்பாம். 6

நுதலிய போருள்

புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தோளியாய்ப்
புகலளவைக் களவாகிப் போற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வேளிபோற் பேதமுஞ்சோற் போருள்
பேதாபே தமுமின்றிப் பேருநூல் சோன்ன [போற்

உளமார் திருவருளை உமாபதியார்க்கும் அளித்த
வளமார் கடந்தை மறைஞான சம்பந்தர்.

வறத்திறனுல் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
 னறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
 சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்ரும். 7

தீட்சாக்கிரமம்

மூவகையா ருயிர்வருக்க மலத்தார் கன்ம
 மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமா மெனவுருவாய் வந்து நாதன்
 றிருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்காற்
பாவனையான் மிகுநூலாலி யோகப் பண்பாற்
 பரவிவரு மவுத்திரியாற் பாச நாச
மேவவரு ளுதவுமவுத் திரியிரண்டு திறனும்
 வியன்கிரியை ஞானமென விளம்பு மாறே. 8

விரும்பியமந் திராதிகார மார்ச்சனு திகார
 மேவுமியோ காதிகார மெனச்சமய விசேடம்
வரும்பொருவி னிருவாண மந்திரங்கள் பதங்கள்
 வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைக
ளிரங்கடைவிற் ருேகைபதினுேன் றெண்பத்தோண் றைம்பத்
 றிருநூற்ருே டிருபத்து நாலாரு றைந்திற் [தோன்
பரந்தநெறி யறுவகையு மொருவிநினை வரிதாம்
 பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று மன்றே. 9

கிரியையென மருவுமவை யாவும் ஞானங்
 கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கு முண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
 சாலோக சாமீப சாரு பங்கண்

மருவியிடு முயர்ஞான மிரண்டா மாரு
மலமகல வகலாது மன்னு போதத்
திருவருளோன் ரேன்றதனைத் தேளிய வோதுஞ்
சிவாகமமேன் றுலகறியச் சேப்பும் நூலே. 10

—

நூல்வழியும் நூற்பேயரும்

தேரித்தகுரு முதல்வருயர் சிவஞான போதஞ்
சேப்பினர்பின் பவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற் றவர்கடிரு வடிகள் போற்றி
விளம்பியநூ லவையிரண்டும் விரும்பி நோக்கிக்
கருத்திலுறை திருவருளு மிறைவ னூலுங்
கலந்துபோது வுண்மையேனக் கருதி யானு
மருத்திமிக வுரைப்பன்வளர் விருத்த நூறு
மாசில்சிவப் பிரகாச மாகு ‡மேன்றே. 11

அவையடக்கம்

தோன்மையவா மேனுமேவையு நன்ருகா வின்று
தோன்றியநூ லேனுமேவையுந் தீதாகா துணிந்த
நன்மையினுர் நலங்கோண்மணி போதியுமதன் களங்க
நவையாகா தேனவுண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினுர் பழமையழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் போருளின்கட் சார்வாராய்ந் தறித
லின்மையினுர் பலர்புகழி லேத்துவரே திலருற்
றிகழ்ந்தனரே லிகழ்ந்திடுவர் தமக்கேனவோன் றிலரே.

---

‡ "அன்றே" என்றது உரைப்பன் எனும் வினையைத் தழுவாது.

பொது வியல்பு

முதற் சூத்திரம்

பதி யியல்பு

பலகலையா கமவேதமி யாவையினுங் கருத்துப்
 பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே யதுதா
னிலவுமரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி
 நின்மலமா யேகமாய் நித்த மாகி
யலகிலுயிர்க் குணர்வாகி யசல மாகி
 யகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
 திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே 13

நீடுபரா சத்திநிக ழிச்சா ஞான
 நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
 நவின்றுபல கலைநாத விந்து வாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
 கொடுவினைகொ டனுகரண புவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
 பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே. 14

ஈங்கிதுவென் றதுகடந்த வியல்பி னானு
 மீறுமுத னடுவொன்று மிலாமை யானு
மோங்கிவளர் ஞானமய னுத லானு
 முண்மைபிறர்க் கறிவரிய வொருமை யானுந்

தாங்கரிய வேறுப்பிஞேடு விருப்பு மேல்லாஞ்
சார்வரிய தனிமுதல்வ ஞுத லானு
நீங்கலரு முயிர்க்குயிராய் நிற்ற லானு
நிறுத்திடுவ னிணைந்தவுரு நிமலன் ருனே. 15

உலகமேலா மோருவனே டோருத்தி யோன்றேன்
றுளதாகி நின்றளவி லோடுங்கும் பின்னு
மலமதனு லுளதாகு முருவ மாறி
வருவது†பேர் வதுசேல்வ தாத லானு
மலைவிலசே தனமாயை யாத லானு
மணுக்களுரு வடையுமறி விலாமை யானு
நிலவுதோழின் மருவியுரு நிற்ற லானு
நின்றேவையு மளித்திடுவ னிமலன் ருனே. 16

கந்தமல ரயன்படைக்கு முலக மேல்லாங்
கண்ணனளித் திடுமவையேங் கடவு டானே
யந்தமுற வழித்திடுவ ஞுத லாலே
யயனரியு மவனதுய ரதிகா ரத்து
வந்தமுறை தன்ருேழிலே மன்னுவிப்ப னேல்லாம்
வருவிப்பன் விகாரங்கண் மருவான் வானின்
முந்திரவி யேதிர்முளரி யலர்வுறுமோன் றலர்வான்
முகையாமோன் ருேன்றுலரு முறையி ஞுமே. 17

ஏற்றவிவை யரனருளின் றிருவிளையாட் டாக
வியம்புவர்க ளணுக்களிடர்க் கடனின்று மேடுத்தே
யூற்றமிக வருள்புரித லேது வாக
வுரைசேய்வ ரோடுக்கமிளைப் போழித்தன் மற்றைத்

† போவது

தோற்றமல பாகம்வரக் காத்தல் போகந்
துய்ப்பித்த றிரோதாயி ‡ தக நிறுத்த லாகும்
போற்றவரு மருளருளே யன்றி மற்றுப்
புகன்றவையு மருளோழியப் புகலோ ணுதே. 18

இரண்டாஞ் சூத்திரம்

பசு வியல்பு

எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி னழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
யண்ணலரு ளானண்ணி யவையவரா யதனு
லலகினிகழ் போகங்க ளருந்து மாற்ருற்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருண் மலபாகம் போருந்தியக்கா லருளா
லுண்ணிலவு மோளியதனு லிருளகற்றிப் பாத
முற்றிடுநற் பசுவருக்க மேனவுரைப்ப ருணர்ந்தோர். 19

பாச வியல்பு

ஏகமாய்த் தங்கால வேல்லேகளின் மீளு
மேண்ணரிய சத்தியதா யிருளோளிர விருண்ட
மோகமாய்ச் சேம்பிலுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையு மறைக்கும்
பாகமாம் வகைநின்று ‡ திரோதான சத்தி
பண்ணுதலான் மலமேனவும் பகர்வரது பரிந்து
நாகமா நதிமதியம் போதிசடையா னடிக
ணணுகும்வகை கருணேமிக நயக்குந் தானே. 20

---

‡ தவ † திரோதாயி·

உன்னலரும் பரசிவன்ற னருளாலே நாத
முதிக்கு ‡ மிருங் குடிலைதனில் விந்துவரு நாதந்
தன்னிலதி னுளிவளருஞ் சதாசிவரா மவரிற்
றயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனுன்
மன்னுவரிவ் வகையைவர் வாய்மையினுன் முன்னே
வந்திடுமேன் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவுஞ் சூக்குமாதி யோருநான்கு மேன்று
மோழிந்திடுவ ரருங்கலைகண் முதிர்ந்து ளோரே. 21

உருவாதி சதுர்விதமா யோன்ருேன் றுேவ்வா
வுண்மையதாய் நித்தமா யோன்ரு யேன்று
மருவாகிக் † கன்மாந்த மணுக்களி யார்க்கு
மாவார மாயசித்தா யசல மாகி
விரிவாய தன்சேயலின் வியாபியா யேல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யோடுங்க
வருகால முயிர்களேல்லா மருவிடமாய் மலமாய்
மன்னியிடு மரனருளான் மாயை தானே. 22

என்னையிது வேனினுலகுக் குபாதான மில்லை
யிறைவனல தேனினசித்துச் சித்தினிடத் துதியா
மன்னியுள தேன்முதல்வ னேன்கோ லேன்னின்
மாயைதா னசித்துருவாய் மருவ மாட்டா
தன்னவனு மிதுவோழிய வாக்க மாட்டா
னசத்தனு மேனினதுவு மவன்போ னித்த
முன்னவனவ் வசித்தைவிரித் தேவையு மாக்கு
முதன்மையது கோடுத்ததேன மோழிந்தி டாரே. 23

‡ மிகுங் † கன்மமார்

படைத்ததொரு படியின்றிப் பறவைபசு நராராப்
பண்ணியதென் முன்னைவினைப் பான்மை யென்ப
ரடுத்தவினை யுளதாயி னிறையே னென்னி
லசேதனமற் றவையாவிக் கமைந்த தாகு
மெடுத்தவினை யுருவுறுவ துயிரேற் றுனே
யிருவினைக்குத் தக்கவுட லெய்து மென்னிற்
சடத்திரளு மகர்த்தாவா யறிவோன் றில்லாத்
தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே. 24

அல்லன்மிக வுயிர்க்கிவைதா னணைத்த தீச
னருவினைக ளருந்துதற்கோ வினையோ வன்றிச்
சொல்லிவரு மாயையோ வணுவை முந்தச்
சூழ்ந்ததெனு முரைமுதலோர் தொடக்கி லார்பா
லொல்லைவரு மெனினுளதா முயிருண் டாவே
யுளதுமல மலமுளதா வொழிந்த வெல்லா
நெல்லின்முளை தவிடுமிபோ லநாதி யாக
நிறுத்திடுவ ரிதுசைவ நிகழ்த்து மாறே. 25

அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை
யராகமிவை யனந்தரான் மாயைதனி லாகு
முருத்திரராற் கலையதனிற் பிரகிருதி குணங்க
ளுளவாகு மாங்காரம் புந்திதனி லுதிக்குந்
தெரித்தவிது திரிவிதமாந் தைசதம்வை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்தகுண மனம்புத்தி யிந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே.

மன்னியகன் மேந்திரிய மானவிரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவருஞ் சத்தந்
தன்னைமுத லாகியதா மதமிகுமாத் திரைபின்
றரு ‡ மதனின் வானநில மனல்புனன்மண் சத்த
முன்னதனில் வேளியாதி யோன்றேன் † ருக
முறையிலுறு மிருமையயன் முடிவா முன்னே
யுன்னுசதா சிவராதி யதிபதிக ளோடுக்க
முதித்தவடை வேனவுரைப்ப ருணர்ந்து ளோரே. 27

நண்ணியிடு முருவதனுக் கேது வாகி
நானுபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரு மாதலா லநாதி யாகிப்
பலவாகி யணுக்கடோறும் படர்வ தாகி
யேண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பினதாய் மதிகதமா யிருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
போருந்துமிது கன்மமலம் புகலு மாறே. 28

கன்மநேறி திரிவிதநற் சாதியாயுப் போகக்
கடனதேன வருமுன்று முயிரோன்றிற் கலத்த
றேன்மையதூ ழல்லதுண வாகா கானுந்
தோடங்கடைவி னடையாதே தோன்று மாறித்
தன்மைதரு தேய்விகமுற் பௌதிகமான் மிகமாந்
தகையிலுறு மசேதனசே தனத்தாலுஞ் சாரு
நன்மையோடு தீமைதரு சேதனனுக் கிவணூ
ணுடிலத னூழ்வினையா நணுகுந் தானே. 29

---

‡ மிதனின் † ஆகும்

மேலைக்கு வருவினையே தென்னி னங்கண்
விருப்புவெறுப் பேனவறியவ் விளைவு மெல்லா
மூலத்த வினைப்பயில்வா மென்னி னுமேன்
முற்றியதன் பயனுனக்கு முளைக்கு மென்பர்
ஞாலத்து வினைகளிரு திறனாகும் புந்தி
நண்ணாத வினைநணுகும் வினையெனவொன் றிரண்டா
யேலத்தா னிதமகித மாமிதனால் வழுவா
தெய்தியிடும் புண்ணியபா வங்க ளென்றே. 30

உற்றதொழி னினைவுரையி னிருவினையு முளவா
மொன்றென்று லழியாதூ ணொழியா துன்னின்
மற்றவற்றி னொருவினைக்கோர் வினையால் வீடு
வைதிகசை வம்பகரு மரபி லாற்றப்
பற்றியது கழியுமிது விலையா லேற்கும்
பான்மையுமாம் பண்ணுதும் பலிக்கு முன்னஞ்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி சொருஞ்
சொராதங் கதுமேலைத் தொடர்ச்சி யாமே. 31

மோகமிக வுயிர்கடொறு முடனாய் நிற்கு
மூலவா ணவமொன்று முயங்கிநின்று
பாகமிக வுதவுதிரொ தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரு மாமாயைத் திரட்சி யொன்றென்
றுகமல மைந்தென்ப ரைந்து மாறு
தருளென்ப தரிதென்ப ரறிந்து ளோரே. 32

அவத்தை வியல்பு

ஓங்கிவரும் பலவுயிர்கண் மூன்றவத்தை பற்றி
யுற்றிடுங்கே வலசகல சுத்தமென வுணர்க
வீங்குவருங் கலாதியோடு குறியுருவ மோன்று
மின்றிமல மன்றியொன்று மில்லையெனு மியல்பா
†யாங்கறிவை யறிவரிதாய் அறிகருவி யணையா
வாதலினு லிருண்மருவு மலர்விழிபோ லதுவாய்
நீங்கும்வகை யின்றி நித்த வியாபகமா யங்க
ணிற்பதுகே வலமென்று நிகழ்த்து நூலே. 33

இன்மைமல மாயைகன்ம மென்றிரண்டே யிறைதா
னிலங்குபல வுயிர்களுமுன் புரிந்தவிரு வினையின்
றன்மைகளா லெவர்களுக்குந் தனுகரண புவனந்
தந்திடுமிங் கதனுலே யிருபயனுஞ் சார்ந்து
கன்மமெலா நேராக நேராதன் மருவக்
கடவுளரு ளாலெவையுங் கழித்திடுவ னதனுற்
பின்மலமா னவையணுகா பெருகொளிமுன் புளதே
பெற்றிடுமென் றித்திறமென் பேசு மாறே. 34

மாயைமுத லெனவினையின் பான்மைமுத லெனவே
மன்னுபனை விதைமரபின் மயங்குமலஞ் சுத்தற்
கேயுநெறி யென்கொலத னியல்பாயின் முத்தி
யென்பதென்மற் றிவைநிற்க விருங்கலாதி யுணர்வாய
மேய‡பினர்த் தன்னுருவம் விளங்காமை விளக்கு
மிகுமுலகந் தனிலென்னி லிவைவிடுங்கா லுணர்வுட்
டோயுநெறி யிலதாத லறியாமை யெனநீ
சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே. 35

---

†ஆங்கறிவை யறிவரிதா, யறிவரியன் ‡பினற்றன்.

அந்நியமா னவையுணர்த்தி யநந்நியமாய் நிறைந்த
வறிவறியா மையினுனு மருணிலவுங் காலந்
தன்னிலவ னேயாவு மாய்நின்ற தோன்மை
தாமுணர்த லானுமுயிர் தானேனவோன் றிலதாய்
மன்னியிடு மலமாயை கன்மங்கண் மாறி
வந்திடுமிங் கிதுவழுவா தாதலினுன் மனத்தா
லுன்னரிய திருவருளே யோழியமல முளதேன்
றுணர்வரிதா மதனுண்மை தேரிவரிதா முனக்கே. 36

புகலுமல மோழித்தற்குக் கலாதிமுதன் மாயை
போருந்தியிடு மானருளாற் போதந் தீபஞ்
சகலமேலா முடனுய வாறு போலுந்
தருமருளே மலமுயிர்கள் சாராமன் மறைக்கு
மிகலிவரு மிவையுணரி னிருள்வேளியாந் தன்மை
யேய்தும் † வகை தன்சேய்தி யிலங்கும் விந்து
பகர்வரிய வுணர்வாகி யோளியா யுள்ளப்
பான்மையினு லோருநாதம் படருந் தானே. 37

வந்தடைந்து பின்னமாய் வன்னங்க டோற்றம்
வருமடைவு படவோடுக்கி மயிலண்ட சலநேர்
சிந்தைதனி லுணர்வாகும் பைசந்தி யுயிரிற்
சேர்ந்துவரு மவைமருவு முருவேவையுந் தேரித்து
முந்தியிடுஞ் சேவியிலுரு துள்ளுணர்வா யோசை
முழங்கியிடு மத்திமைதான் வைகரியி லுதானன்
பந்தமுறு முயிரணேந்து வந்தமோழி சேவியின்
பாலணேய நினேந்தபோருள் பகருந் தானே. 38

† இவைதஞ்

இத்தகைமை யிறையருளா லுயிரறியு மறிவுக்
கீடாக வாடாதே [1] யீரிரண்டா னுரைத்த
வித்தைமுத லவரான் விளங்கு ஞான
மேவியிடு மேனவுரைப்ப ரசுத்த மாயை
வைத்தகலை தான்மூல மலஞ்சிறிதே நீக்கி
மருவும்வகை தேரிவிக்கும் வாயில்களின் பயனைப்
புத்திதர வித்தையிடை நின்றறிவை யுயிர்க்குப்
போருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே.

பேசரிய வராகந்தன் கன்மத்துக் கீடாப்
பேற்றதனி லாசைதனைப் பெருகுவிக்கு நியதி
தேசமிகு மரசர்தரு மாணை செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்குஞ் [2] செய்கை போல
நேசமுறு தங்கன்ம நிச்சயித்து நிறுத்து
நிகழ்காலங் கழிகால மேதிர்கால மேன்றே
யோசைதர வருங்கால மேல்லைபுலம் புதுமை
யுறுவிக்கு மிறைசத்தி யுடனுய் நின்றே. 40

[3] ஐவகையா லுறுபயன்க ளுகரவருங் கால
மதுபுருட தத்துவமேன் றறைந்திடுவ ரறிந்தோர்
மேய்வகைய கலாசுத்தி தனினிதற்குஞ் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பியநூல் விளம்புஞ்
சேய்வகையின் றேடர்ச்சியிங்குத் தோற்றுவிக்குங் குணத்
சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமா மவைதா [தின்
மிவ்வகையிற் சாத்துவித ராசததா மதமா
யியம்புவர்க ளோன்றிரண்டு [4] குணமேற்கையுடைத்தே.

---

[1] ஈரிரண்டிலு. [2] செய்தி. [3] ஐவகையால். [4] இயற்கையு; ஏற்கவுடைத்தே.

அலகில்குணம் பிரகாசம் லகுதைவியா விருதி
யடர்ச்சிமிகுங் [1]கவுரவம நியமமிவை யடைவே
நிலவியிடு மும்மூன்று முயிரோன்றிற் கலந்தே
நிற்குமிவை நிறைபுலனின் பயனேவையுங் கவருங்
குலவிவரு [2]போகங்கோ ளிடமா மாருக்
குறைவிலொளி யாமலகில் புலனிடத்தி னேருமை
பலவகையு முடையதாய்ப் பரனருளாற் புந்தி
பஞ்சாசற் பாவகமும் பண்ணுவிக்குந் தானே. 42

ஆனதனு வதனிலுறு மநிலனையு மியக்கி
யாங்கார நீங்காத வகந்தைக்கு வித்தா
யானலது பிறரோருவ ரேனையோப்பார் புவியி
னில்லையெனு மியல்பினதா யிந்திரியம் புலன்க
டானுகரு மளவிலதின் முந்தியுறு மிச்சை
தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியுந் தந்து
மானதமா னதுநிற்குஞ் சிந்தைநினை வையம்
வந்துதரு மனமொழிய வகுப்போ ணுதே. 43

சொன்னமுறை சேவிதுவக்கு நோக்கு நாக்குத்
துண்டமிவை யைந்திற்குந் தோகுவிடய மாக
மன்னியசத் தப்பரிச ரூபரச கந்த
மருவியிடு மிவையடைவே வாக்குப் பாதம்
பின்னர்வரு பாணிமிகு பாயுவினே டுபத்தம்
பேசலுறு மைந்திற்கும் பிறங்கோலிகோள் வசன
முன்னரிய கமனதா னவிசர்க்கா னந்த
முற்றதொழில் பேற்றிடுவ துண்மை யாமே. 44

---

[1] கவுரவம் நியமம் இவைகள் அடைவே. [2] போகங்கள்.

முந்தியவைம் பூதங்கள் வானுதி யாக
முயங்கியாற் செவிமெய்கண் ஞூாசி முறையா
லிந்தவயி னின்றுவரு மைம்புலனு முயிர்தா
மெய்தும்வகை தம்முருவி னிலங்கியிடும் புறத்து
வந்தடைய விடங்கொடுக்கு மிரந்தரமாய் வானம்
வாயுமிகச் சலித்தேவையுந் திரட்டுந்தீ வெம்மை
தந்தவைசுட் டொன்றுவிக்கு நீர்குளிர்ந்து பதமே
தருமுரத்துத் தரிக்குமிகு தரணி தானே. 45

இந்நிரையி லேந்துசுத்த மேழ்சுத்தா சுத்த
மெண்மூன்று மசுத்தமெனு மிவைமுப்பத் தாரு
மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடுந் துயர்தா
மருவுமுரு நிலையழிய வரும்பொழுது வரியார்
பன்னகமண் டசங்கனவு படர்வகையே முன்னம்
பகரவருங் கலாதிநிலை பரவியசூக் குமமாந்
தன்னுருவி லணைந்துபய னருந்தியர னருளாற்
றரையினிடை வருமென்று சாற்று நூலே. 46

தோற்றியிடு மண்டசங்கள் சுவேதசங்கள் பாரிற்
றுதைந்துவரு முற்பீசஞ் சராயுசங்க ளுன்கி
னூற்றமிகு தாபரங்கள் பத்தொன்ப தென்று
மூர்வபதி னைந்தமரர் பதினேன்றே டுலவா
மாற்றருநீ ருறைவனாற் பறவைகளுற் காலி
மன்னியிடும் பப்பத்து மானுடரோன் பதுமா
வேற்றியோரு †தோகையதனி லியம்புவர்கள் யோனி
யேண்பத்து நான்குநூ ருயிரமேன் றேடுத்தே. 47

† தோகையாக.

இனையபல் பிறவிகளி னிறந்துபிறந் தருளா
லிருவினைகள் புரிந்தருந்து மிதுசகலம் அகலா
முனமருவு மிருபயனு மொருகாலத் தருந்த
முந்துநுக ருந்துபய னந்தமுற வந்த
வினையுமெதிர் வினையுமுடி வினையுதவு பயனு
னேராக நேராதன் மேவுங் கான்முற்
சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே. 48

நாடியசத் திநிபாத நாலு பாத
நண்ணும்வகை யெண்ணரிய ஞான பாதங்
கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக்
கூத்தனொரு மூர்த்திகொடு குறுகி மோக
நீடியகே வலசகல நிகழா வாறு
நிறுத்திமல மறுக்குமிது நிலையார் சுத்தங்
கேடில்புகழ் தருஞ்சரியை கிரியா யோகக்
கேண்மையரே லிவையுணர்த்தக் கிளக்கு நூலே. 49

முத்தி பேதங்களதியல்பு

அரிவையரின் புறுமுத்தி கந்த மைந்து
மறுமுத்தி திரிகுணமு மடங்கு முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம்போ முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தியிவை பழிசேர் முத்தி
திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி
திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே. 50

உண்மை யியல்பு

இவ் வியலின் வகை

இங்கிவை போதுவி யம்பு மேன்பர்க ளிதன்மேல் [1]ஆன்மாத்
தங்கிய [2]அஞ்ச வத்தை [3]தன்னுண்மை [4]உணர்த்துந்
தன்மை
போங்கோளி [5]ஞான வாய்மை [6]அதன்பயன் [7]புனித னும
மங்கதில் [8]அணைந்தோர் தன்மை யறைகுவ னருளி னூலே.

மூன்றுஞ் சூத்திரம்

1. ஆன்மா

சேறிந்திடு முடலுண் மன்னிச் சேர்புலன் வாயில் பற்றி
யறிந்ததி லழுந்து மோன்று மறிந்திடா தறியுந் தன்மை
பிறிந்தடை வஞ்ச வத்தை பேருகிய மலத்தாற் பேணி
யுறுந்தனி யதீத முண்மை யுயிர்க்கேன வுணர்த்து மன்றே.

உருவுணர் விலாமை யானு மோரோரு புலன்க ளாக
மருவிநின் றறித லானு மனுதிக டம்மின் மன்னித்
தருபய னுகர்த லானு முயிர்சட மாதலானு
மருவினை யுடலு ளாவி யறிவினு லறியு மன்றே.

அறிவேனில் வாயில் வேண்டா வன்றேனி லவைதாமேன்னே
யறிவவை யுதவு மேன்னி லசேதன மவைதா மேல்லா
மறிபவ னறியுந் தன்மை யருளுவ னேன்னி லான்மா
வறிவில தாகு மீச னசேதனத் தளித்தி டானே. 54

அறிவினு லறிந்த யாவு மசத்தாத லறிதி யேன்று
மறிவினு லறியோ ணுதே லாவதோன் றின்மை தோன்மை
யறிவுதா னேன்றை முந்தி யதுவது வாகக் காணு
மறிவுகா ணசத்து மற்ற தறிவினுக் கறியோ ணுதே. 55

எவ்வறி வசத்த றிந்த தேனிலுயி ரறியா தீச
னவ்வறி வறியா னல்ல தசேதன மறியா தாவி
சேவ்விய கருவி †கூடிற் றேரிவுரு தருளிற் சேரா
*துவ்விரு வகைய தேன்னி லோளியிரு ளோருங்கு ருவே.

சத்தது வேன்ற சத்துத் தானறி யாத சத்தைச்
சத்தறிந் தகல வேண்டா வசத்தது சத்தி தேன்றோர்
சத்திரு ளோளிய லாக்கண் டன்மைய தாம சத்தைச்
சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சதசத் தாமே. 57

கண்ணேளி விளக்க ளித்துக் காட்டிடு மேன்னின் முன்னங்
கண்ணேளி யோன்று மின்றும் விளக்கோளி கலந்தவற்றைக்
கண்ணேளி யகல நின்றே கண்டிடும் வேறு காணுக்
கண்ணேளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத்தோன் றன்றே 58

† கூடித்தேரி. * ஒவ்விரு.

[1]ஓரிடத் திருத்தன் மாயா வுருநிறைந் திடுத லொன்றும்
பேரிடத் துறைத ருனே பிறங்கறி வாகி நிற்றல்
சோர்வுடைச் சடநி கழ்த்த லெனுமிவை சொல்லார் நல்லோ
[2]ரோரிடத் துணரு முண்மை யோளிர்தரு முபலம் போலும்.

நான்காஞ் சூத்திரம்

2. அஞ்சவத்தை

எண்ணவோன் றிலாத தீத மெய்திய துரியத் தோன்று
நண்ணிடுஞ் சுழுத்தி தன்னி னயந்துள தோன்று பின்னு
மண்ணிடுங் [3]கனவு தன்னி லாறேழாஞ் சாக்கி ரத்திற்
கண்ணுறு மஞ்சா ருய கருவிகள் [4]மருவுந் தானே. 60

இவ்வகை யவத்தை தன்னி லெய்திடுங் கரண மெல்லா
மெய்வகை யிடத்தி லுற்று மேவுமா கண்டு மிக்க
போய்வகைப் பவம கற்றப் புரிந்திடி லருளா லாங்கே
யைவகை யவத்தை யுய்க்கு மறிவினு லறிந்து கொள்ளே.

நீக்கமி லதீத மாசு நிறைந்தகே வலமா நீர்மை
சாக்கிரங் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகு
மூக்கமி லிரண்டுங் கூடா தொழியவோர் நிலையி னீடுஞ்
[5]சாக்கி ராதீதஞ் சுத்தத் தகைமைய தாகுந் தானே. 62

---

[1] பண்புத்தொகை. [2] வினைத்தொகை. [3] கனவிலாறே ழோன்பதாஞ். [4] காணும். [5] சாக்கிரவதீதம்.

ஐந்தாஞ் சூத்திரம்

3. தன்னுண்மை

மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங்
கருவிக ளுன்கு நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி
யொருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத்
தெரிவுரு தவனே ழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே. 63

தனக்கென வறிவி லாதான் ருனிவை யறிந்து சாரான்
†றனக்கென வறிவி லாத வாயிரு னறியா சாரத்
தனக்கென வறிவி லாதான் றத்துவ வன்ன ருபன்
றனக்கென வறிவா னுலிச் சகலமு நுகருந் தானே. 64

4. உணர்த்துந் தன்மை

‡கண்டுணர் புலன்கள் காணுங் கருத்தினு லொருத்தன் ஞானங்
கொண்டுள மறியு மென்னிற் கொள்பவன் முதலி யாகு
மண்டிய வுணர்வு யிர்க்கா மன்னிநின் றறியு மென்னி
லுண்டிட வேண்டு வானுக் கொருவன்வே றுண்ட லாமே.

இருணனி யிரவி தான்வந் திரித்தலு மிரவி லெண்ணும்
பொருணிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறு போல
மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்துயிர் தன்னுண் மன்னு
மருளையு மொழிய ஞாலத் தறிந்தவா றறியு மன்றே. 66

---

† தனக்கறிவிலாத வாயில்தான் அறியாது சாரா
‡ கண்டறி 3. 4. பிரிவு சிந்தனையுரைப்படியாம்.

அறிந்திடு மனுதி வாயி லானவை யவன்ற னாலே
யறிந்திடு மேன்று மோன்று மறிந்திடா வவைபோலி யாவு
மறிந்திடு மறியுந் தன்மை யறிந்திடா கன்மத் தோன்மை
யறிந்தவை நுகரு மாறு மருளுவ னமலன் றனே. 67

ஆறுஞ் சூத்திரம்

5. ஞான வாய்மை

காட்டிடுங் கரண மோன்று மில்லையேற் காணே ணுதா
[1]னுட்டிய விவற்றுன் ஞான நணுகவு மோண்ண முன்ன
மீட்டிய தவத்தினுலே யிறையரு ளுருவாய் வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குரைகழல் குறுகு மாறே. 68

ஏழாஞ் சூத்திரம்

பன்னிறங் கவருந் தோன்மைப் படிகநீ டோளியும் பன்மை
மன்னிலங் கியல்புந் தந்த வளரோளி போல வையந்
தன்னகம் பயிலு நற்சிற் சடங்களின் றன்மை தாவா
நன்னலம் பேறநி றைந்த ஞானமே ஞான மேன்பர் 69

மாயை[2]மா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளேனி லிருளாய் நிற்கு
மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளேனி லோளியாய் நிற்கும். 70

---

[1]நாட்டிய. [2] மாயேயம் என்று திருத்தல் வேண்டுமேன் பது போருந்தாமையைச் சிந்தனையுரை முதலியவற்றிற் காண்க.

எட்டாஞ் சூத்திரம்

6. ஞானவாய்மையின் பயன்

தேசுற மருவு மான்ம தேரிசன மான்ம சுத்தி
வாசிலா வான்ம லாப மாகமுன் ருகு மூன்றும்
பாசம தகல ஞானம் பற்றருன் பணியை நீத்த
லேசினே யத்த ழுந்த லேனுமிவற் றடங்கு மன்றே. 71

தன்னறி வதனு லேதுந் தனக்கறி வில்லை யேனுந்
தன்னறி வாக வேல்லாந் தனித்தனி பயன ருந்துந்
தன்னறி வறியுந் தன்மை தன்னுலே தனைய றிந்தாற்
றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே. 72

தத்துவ மான வற்றின் றன்மைக ளுணருங் காலை
யுய்த்தறிந் திடவு திப்ப தோளிவளர் ஞான மாகு
மத்தன்மை யறியு மாறு மகன்றிட வதுவா யான்மா
சுத்தமாஞ் சுத்த ஞானத் தோருமுத ரேன்று மன்றே. 73

உறைதரு முணர்வு மன்றி யதன்முத லுள்ள தேன்றிங்
கறைவதே னேன்னி லண்ண லருளேனு மதுவே யன்றி
நிறையோளி முதல தன்றி நின்றிடா நிமல னுகு
மிறையவன் முதல வன்ற னிலங்கருள் சத்தி யாமே. 74

சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடராகுஞ் சிவமோ ழிந்தச்
சத்திதா னின்ரு முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி
யத்தனை யருளு மேங்கு மடைந்திடு மிருள கற்றி
வைத்திடு மிரவி காட்டும் வளரோளி போன்ம கிழ்ந்தே. 75

ஒன்பதாஞ் சூத்திரம்

பேய்

புகலரு மசத்தர் தம்பாற் பொருந்திய வலகை யேபோ
லகிலமு முணரு மீச னருளுயிர் மேவ லாலே
சகலமு நிகழ வேண்டுந் தலைவனுந் தொழிலுந் தானே
யிகலற வியற்றல் வேண்டு மென்றது நன்றி யின்றே. 76

இன்றுநோக் குரைநடக்கு மியல்பிலோற் கினைய வாய்ந்து
நின்றதோ ரலகை நேர்ந்தா னிகழ்வதே னதுபோ லுள்ளத்
தோன்றிய வுணர்வு தம்பா லுள்ளது நிகழ்த்து மீசன்
றன்றொழி னடத்து மேனி தனக்கெனக் கொண்டுதானே. 77

இந்நிலை தன்னின் மன்னி யெய்திடுங் கலாதி போதந்
தன்னள வறிந்து நிற்குந் தகவிலா மலங்க ணீத்த
வந்நிலை கரண மாகா வகையதி லறிவ டங்கி
மன்னிட வியாபி யாய வான்பயன் றேன்று மன்றே. 78

அடைபவர் சிவமே யாகு மதுவன்றித் தோன்று மென்ற
கடனதே னென்னின் முன்னுங் கண்டிடார் தம்மைப் பின்னுந்
தொடர்வரு மருளி னுலுந் தோன்றுமா காணு ராயி
னுடையவ னடிசேர் ஞான முணர்தலின் றணைத லின்றே. 79

பத்தாஞ் சூத்திரம்

பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவி லாமைச்
சொற்பெறு மதீதம் வந்து தோன்றுமே தோன்றி நின்ற
சிற்பர மதனு லுள்ளச் செயலறுத் திடவு திக்குந்
தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே. 80

ஒடுங்கிடா கரணந் தாமே யொடுங்குமா றுணர்ந்தொ டுக்க
வொடுங்கிடு மென்னி னின்ற தொடுங்கிடா கரண மெல்லா
மொடுங்கிட வொடுங்க வுள்ள வுணர்வுதா னொழியும் வேறு
யொடுங்கிடி னன்றி மற்றவ் வுண்மையை யுணரொ ணாதே.

பற்றிடுங் கருவி யாவும் படர்ந்துணர் வளிக்குங் காலை
யுற்றறிந் திடுவ தொன்றி னுணர்வினி னுண்மை யாகு
மற்றது பகல்வி ளக்கின் மாய்ந்திட வருவ துண்டேற்
பெற்றிடு மதனை மாயப் பிறப்பினை யறுக்க லாமே. 82

முந்திய வொருமை யாலே மொழிந்தவை கேட்டல் கேட்ட
சிந்தனை செய்த லுண்மை தெளிந்திட லதுதா னாக
வந்தவா றெய்த னிட்டை மருவுத லென்று நான்கா
மிந்தவா றடைந்தோர் முத்தி யெய்திய வியல்பி னாரே. 83

பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலு
மீசனை யுணர வொண்ணா திறையருண் ஞான நண்ணின்
தேசுறு மதனுன் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமொ டுயர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை. 84

விளம்பிய வகையி னிட்டை மேவிட லரிதேன் முன்ன
மளந்துணர் வளித்த வற்றி னளவுமற் றவற்றி னாலே
யுளங்கொளுந் தனையு முள்ள படியுமுற் றுணர்ந்து செவ்வே
தளர்ந்திடா துவப்ப மற்றத் தன்மைய தாகுந் தானே. 85

பாவிக்கின் மனாதி வேண்டும் பயனிலை கரண நீத்துப்
பாவிப்ப னென்னி லென்ன பழுதுள பாவ கத்தாற்
பாவிக்க வொண்ணா னென்று பாவிப்ப னென்னி னீயேன்
பாவிக்க வேண்டா வாண்ட பரனருள் பற்றி னோர்க்கே. 86

ஒன்றிரண் டாகி யொன்றி னொருமையா மிருமை யாகி
யொன்றினோன் றழியு மொன்று தென்னினோன் றுகா தீயி
னொன்றிரும் புறழி னின்று முயிரினைந் தொழிலும் வேண்டு
மொன்றிநின் றுணரு முண்மைக் குவமையா ணவத்தோ
டொன்றே. 87

அழிந்திடும் பாச மேன்னி னித்தமேன் றுரைத்தல் வேண்டா
வழிந்திடா தென்னின் ஞான மடைவது கருதல் வேண்டா
வழிந்திடுஞ் சத்தி நித்த மழிந்திடா வொளியின் முன்ன
ரழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்தி டாவே. 88

எல்லையில் பிறவி நல்கு மிருவினை யெரிசேர் வித்தி
னெல்லையி னகலு மேன்ற உடற்பழ வினைக ளூட்டுந்
தொல்லையின் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டே
லல்லொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே. 89

7 புனித ளுமம்

பந்தமா னவைய றுத்தும் பவுதிக முழலு மெல்லைச்
சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரு
மந்தமா திகளில் லாத வஞ்செழுத் தருளி னாலே
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே. 90

திருவெழுத் தைந்தி லான்மாத் திரோதமா சருள்சி வஞ்சூழ்
தரநடு நின்ற தோன்றுந் தன்மையுந் தோன்மை யாகி
வருமந மிகுதி யாலே வாசியி லாசை யின்றிக்
கருவழிச் சுழலு மாறுங் காதலார்க் கோத லாமே. 91

ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன் னுக
வோசைகோ ளதனி னம்மே லோழித்தரு ளோங்கு மீள
வாசியை யருளு மாய மற்றது பற்ற வுற்றங்
கீசனி லேக மாகு மிதுதிரு வெழுத்தி னீடே. 92

பதினொன்றுஞ் சூத்திரம்

8 அணைந்தோர் தன்மை

தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தா
னீங்கிட நீங்கா மூல நிறையிரு ளிரிய நேயத்
தோங்குணர் வகத்த டங்கி யுளத்துளின் போடுங்க நேரே
தூங்குவர் தாங்கி யேகத் தோன்மையிற் றுகளி லோரே. 93

குறிப்பிடங் காலந் திக்கா சனங்கோள்கை குலங்கு ணஞ்சீர்
சிறப்புறு விரதஞ் சீலந் தபஞ்சேபந் தியான மெல்லா
மறுத்தற வொழிதல் செய்தன் மருவிடா மன்னு செய்தி
யுறக்குறு பவர்போல் வாய்மை யோழிந்தவை யோழிந்து
[போமே. 94

அகம்புற மென்றி ரண்டா லருச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டு மின்றித் தமோமய மாகி யெல்லா
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மையார் போல ஞானந்
திகழ்ந்தகம் புறமே னுத சேம்மையார் நன்மை யாரே. 95

அண்டமே விடவ னைத்து மனைத்தையு மண்ட மேவிக்
கோண்டல்போ லேவையு ஞானங் குறைவிலா நிறைத லாலே
கண்டதோர் போருளை யந்தக் கருத்தினுற் காணிற் றுனே.
யண்டநா யகனு மேனி யானதே லைய மின்றே. 96

---

92. அகலுமா என்பதுபோல அருளுமா என்பதும், யகரம் ஆன்மா.

மண்முதற் கரண மெல்லா மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினி லூன்றி யந்தக் கருத்தினு லேவையு நோக்கி
யெண்ணியஞ் செழுத்து மாறி யிறைநிறை வுணர்ந்து [போற்றல்
புண்ணியன் றனக்கு ஞான பூசையாய்ப் புகலு மன்றே. 97

பன்னிரண்டாஞ் சூத்திரம்

தொண்டர்கள் தாமும் வானோர் தொழுந்திரு மேனி தானு
மண்டருங் கண்டி லாத வண்ணலே யெனவ ணங்கி
வெண்டர ளங்கள் சிந்த விழிமொழி குழற மெய்யே
கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தி னேரே. 98

நூற்கருத்து

நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி வேதத்
தலைதரு பொருளா யின்பாய்த் தாவில்சற் காரி யத்தாய்
மலைவறு முணர்வாற் பெத்த முத்திகண் மதித்தா மன்றே.

கேட்போன்

திருவருள் கொடுத்து மற்றிச் சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியு மாற்ருல் விளம்பிய வேது நோக்கிப்
பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறுவிப் பின்முன்
றருமலை வொழியக் கொள்வோன் றன்வயிற் சாற்ற லாமே.

சிவப்பிரகாசம்

முற்றிற்று

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

உமாபதி தேவநாயனுர்

அருளிச் செய்த

திருவருட்பயன்

கணபதி வணக்கம்

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

1 பதிமுதுநிலை

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து. 1

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான். 2

பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மை யான். 3

ஆக்கி யெவையு மளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல் 4

அருவு முருவு மறிஞர்க் கறிவா
முருவு முடையா னுளன் 5

பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ
னில்லாதா னெங்க ளிறை. 6

ஆனா வறிவா யகலா னடியவர்க்கு
வானாடர் காணாத மன். 7

எங்கு மெவையு மெரியுறுநீர் போலேகந்
தங்குமவன் றானே தனி. 8

நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன் 9

*உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது
மன்னுபவந் தீர்க்கு மருந்து. 10

* 'மணஞ்சேரி மருந்தினை உன்னுவார் வினையாயின ஓயும்' (அப்பர்)

2 உயிரவைநிலை

பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலுந்
துறந்தோர் துறப்போர் தொகை. 11

திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்க ளன்றி
யொருமலத்தா ராயு முளர். 12

மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்க
டோன்றலர்தொத் துள்ளார் துணை. 13

கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கிடுந்
திண்டிறலுக் கென்னோ செயல். 14

பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறிவென்ற பேர்நன் றற. 15

ஒளியு மிருளு முலகு மலர்கட்
டெளிவி லெனிலென் செய. 16

சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
யுய்த்தசத சத்தா முயிர். 17

இருளி லிருளாகி யெல்லிடத்தி னெல்லாம்
பொருள்க ளிலதோ புவி. 18

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
யாமன்கண் ‡ காணா அவை. 19

அன்றளவு மாற்றுமுயி ரந்தோ வருடெரிவ
தென்றளவொன் றில்லா விடர். 20

---

‡ காணாதவை

3 இருண்மலநிலை

துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொருளு
மின்றென்ப தெவ்வாறு மில். 21

இருளான தன்றி யிலதெவையு மேகப்
பொருளாகி நிற்கும் பொருள். 22

ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
மிருபொருளுங் காட்டா திது. 23

அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி
யின்றளவு நின்ற திருள். 24

பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்
†கணவர்க்குந் தோன்றாத கற்பு. 25

பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத
தன்மையிரு ளார்தந் தது. 26

இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்
பொருளுண்டே லொன்றாகப் போம். 27

ஆசாதி யேமலமாவ காரணமென் முத்திநிலை
பேசாது கவ்வும் பிணி. 28

ஒன்று மிகினு மொளிகவரா தெலுள்ள
மென்று மகலா திருள். 29

விடிவா மளவும் விளக்கனைய மாயை
விடிவாதி கன்மத்து வந்து. 30

† கணவற்குந்

4 அருளதுநிலை

அருளிற் பெரிய தகிலத்தில் வேண்டும்
பொருளிற் றலையிலது போல். 31

பெருக்க நுகரவினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள். 32

ஊனறியா தென்று முயிரறியா தோன்றுமிவை
தானறியா தாரறிவார் தான். 33

பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கண்
மாலாழி யாழு மறித்து. 34

அணுகு துணையறியா வாற்றேனி லைந்து
முணர்வை யுணரா வுயிர். 35

தரையை யறியாது தாமே திரிவோர்
புரையை யுணரா புவி. 36

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானந்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம். 37

வெள்ளத்து ணுவற்றி யாங்கு விடிந்திருளாங்
கள்ளத் தலைவர் கடன். 38

பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூனை
கரப்பருந்த நாடுங் கடன். 39

இற்றை வரையியைந்து மேதும் பழக்கமிலா
வேற்றுயிர்க்கு வீடு மிகை. 40

5 அருளுருநிலை

அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாக நீங்காத கோ. 41

அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்
சகத்தவருங் காண்பரோ தான். 42

அருளா வகையா லருள்புரிய வந்த
பொருளா ரறிவார் புவி. 43

பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமா
மெய்யிரண்டுங் காணர் மிக. 44

பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் ‡காணர் புவி. 45

† எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வ
தமக்கவனை வேண்டத் தவிர்ம் 46

விடனகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதிவன் கண். 47

அகலத் தருமருளை யாக்கும்வினை நீக்குஞ்
சகலர்க்கும் வந்தருளுந் தான். 48

ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின். 49

ஞான மிவனொழிய நண்ணியிடு நற்கலனல்
பானு வொழியப் படின். 50

---

† எவ்வ தெரியும் அவ்வ தவிரும் என்க. ‡காண

6 அறியுநெறி

நீடு மிருவினையு நேராக நேராதல்
கூடுமிறை சத்தி கோளல். 51

ஏக னநேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாருதி யில். 52

சேய்வானுஞ் சேய்வினையுஞ் சேர்பயனுஞ் சேர்ப்பவனு
முய்வா னுளனேன் றுணர். 53

ஊனுயிரால் வாழு மோருமைத்தே யூனேடுயிர்
தானுணர்வோ டோன்ருந் தரம். 54

தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
போன்னிறம்போன் மன்னிறமிப் பூ. 55

கண்டோல்லை காணுநேறி கண்ணுயிர் ‡நாப்பணிலை
யுண்டில்லை யல்ல தோளி. 56

புன்சேயலி னேடும் புலன்சேயல்போ னின்சேயலை
மன்சேயல தாக மதி. 57

ஓராதே யோன்றையுமுற் றுன்னுதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனைப் பார். 58

களியே மிகுபுல னுக்கருதி ஞான
வோளியே யோளியா வோளி. 59

கண்டபடி யேகண்டு காணாமை காணாமை
கோண்டபடி யேகோண் டிரு. 60

‡ நாப்பணேளி.

7 உயிரவை விளக்கம்

‡தூண் நிழல்ஆர் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
றுனதுவாய் நிற்குந் தரம். 61

தித்திக்கும் கைக்கும் பால்காணுந் திருந்திடுநாப்
பித்தத்திற் றுன்றவிர்ந்த பின். 62

காண்பா ஞெளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவம் †எந்நாள் விடும். 63

ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியாச் செயல். 64

கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கேல்லா
மேடுத்துச் சுமப்பானே யின்று. 65

வஞ்ச முடனெருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனே போயினனே சொல். 66

தனக்குநிழ லின்று வொளிகவருந் தம்ப
மேனக்கவர நில்லா திருள். 67

உற்கைதரும் போற்கை யுடையவர்போ லுண்மைப்பி
னிற்கை யருளார் நிலே. 68

ஐம்புலனுற் றுன்கண்ட தன்று லதுவொழிய
வைம்புலனுர் தாமா ரதற்கு. 69

தாமே தருமவரைத் தம்வலியி ஞற்கருத
லாமே யிவனு ரதற்கு. 70

---

‡ தூண்-தம்பம். (படிகம்) 67, † என்னுய்; விழும்,

8 இன்புறுநிலை

இன்புறுவார் துன்பா ரிருளி லெழுஞ்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின். 71

இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின். 72

இன்பதனை யெய்துவார்க் கீயு ‡மவற்குருவ
மின்பதன மாதலினா லில். 73

தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள். 74

ஒன்றாலு மொன்றா திரண்டாலு மோசையேழா
†தென்றாலொன் றன்றிரண்டு மில். 75

உற்றாரும் பெற்றாரு மோவா ருரையொழியப்
பற்றாரு மற்றார் பவம். 76

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமினி
நீயொன்றுஞ் செய்யாது நில். 77

ஒண்பொருட்க ணுற்றார்க் குறுபயனே யல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போற் காண். 78

மூன்றாய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத வின்பமதென் சொல். 79

இன்பி லினிதென்ற லின்றுண்டே லின்றுண்டா
மன்பி னிலையே யது. 80

---

‡ அவர்க்கு. † என்றாலு மோரிரண்டுமில்.

9 ஐந்தெழுத்தருணிலை

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் புகின். 81

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள். 82

ஊன நடன மொருபா லொருபாலா
ஞானநடந் தானடுவே நாடு. 83

விரியமந மேவியவை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும். 84

மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசி மீளா விடின். 85

ஆராதி யாதார மங்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று. 86

சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி. 87

வாசி யருளியவை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு. 88

ஆசின்நவா நாப்ப ணடையா தருளினல்
வாசியிடை நிற்கை வழக்கு. 89

எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைந்து. 90

10 அணைந்தோர் தன்மை

ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்போடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சோல். 91

ஐந்தோழிலுங் *காரணர்க ளாந்தோழிலும் போகநுகர்
வேந்தோழிலு மேவார் மிக. 92

எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரோன்
றல்லா தறியா ரற. 93

புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலனடக்கு மாமை தக. 94

அவனையகன் றேங்கின்ரு மாங்கவனு மேங்கு
மிவனையோழிந் துண்டாத லில். 95

உள்ளும் புறம்பு மோருதன்மைக் காட்சியருக்
கேள்ளுந் திறமேது மில். 96

உறுந்தோழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தோழிற்கு வாய்மை பயன். 97

ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை
தோன்றி லருளே சுடும். 98

மும்மை தரும்வினைகண் மூளாவா முதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம். 99

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வேள்ளத் தலைவர் மிக. 100

---

* காரணங்கள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

உமாபதி தேவநாயனுர்

அருளிச் செய்த

விஞ வெண்பா

—

நேரிசை வெண்பா

நீடு மொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூட லரிது கொடுவினையேன்—பாடிதன்மு
னென்றவார் சோலை யுயர்மருதைச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ 1

இருளி லொளிபுரையு மெய்துங் கலாதி
மருளி னிலையருளு மானும்—கருவியிவை
நீங்கி லிருளா நிறைமருதைச் சம்பந்தா
வீங்குனரு ளாலென் பெற. 2

புல்லறிவு நல்லுணர்வ தாகா போதுஞான
மல்லதில துள்ளதெனி லங்கியமாங்—தொல்லையிரு
ளுனமலை யாவா றுயர்மருதைச் சம்பந்தா
ஞானமலை யாவாய் நவில். 3

கனவு கனவென்று காண்பரிதாங் காணி
னனவி லவைசிறிது நண்ணு—முனைவனரு
டானவற்றி லொன்று தடமருதைச் சம்பந்தா
யானவத்தை காணுமா றென். 4

அறிவறிந்த தெல்லா மசத்தாகு மாயின்
குறியிறந்த நின்னுணர்விற் கூடா—பொறிபுலன்க
டாமா வறியா தடமருதைச் சம்பந்தா
யாமா ரறிவா ரினி. 5

சிற்றறிவு முற்சிதையிற் சேர்வாரின் றுஞ்சிறிது
மற்றதனி னிற்கிலருண் மன்னுவாங்—துற்றமுகின்
மின்கொண்ட சோலை வியன்மருதைச் சம்பந்தா
வென்கொண்டு காண்பெனி யான். 6

உன்னரிய நின்னுணர்வ தோங்கியக்கா லொண்கருவி
தன்னளவு நண்ணரிது தானகு—மென்னறிவு
தானறிய வாரா தடமருதைச் சம்பந்தா
யானறிவ தெவ்வா றினி 7

அருவே லுருவன் றுருவே லருவன்
றிருவேறு மொன்றிற் கிசையா—வுருவோரிற்
காணி லுயர்கடந்தைச் சம்பந்தா கண்டவுடற்
பூணுமிறைக் கென்னும் புகல் 8

இருமலத்தார்க் கில்லை யுடல்வினையென் செய்யு
மொருமலத்தார்க் காரை யுரைப்பென்—றிரிமலத்தா
ரொன்றுக வுள்ளா ருயர்மருதைச் சம்பந்தா
வன்றுகி லாமா றருள். 9

ஒன்றிரண்டாய் நின்றேன்றி லோர்மையதா மோன்றாக
நின்றிரண்டா மேன்னிலுயிர் நேராகுந்—துன்றிருந்தார்
தாங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா யானாகி
யோங்கியவா றேவ்வா றுரை. 10

காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை
காண்பார்க ணன்முத்தி காணார்கள்—காண்பானுங்
காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநேறி வாரா தவர். 11

ஒன்றி நுகர்வதிவ னூனா முறுதொழிலு
மேன்று மிடையி லிடமில்லை—யோன்றித்
தேரியா வருண்மருதைச் சம்பந்தா சேர்ந்து
பிரியாவா றேவ்வாறு பேசு. 12

அருளா லுணர்வார்க் ககலாத சேம்மைப்
போருளாகி நிற்கும் போருந்தித்—தேருளா
வினாவெண்பா வுண்மை வினாவாரே லூமன்
கனாவின்பா லேய்துவிக்குங் காண். 13

வினாவெண்பா

முற்றிற்று

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

உமாபதி தேவ நாயனர்

அருளிச் செய்த

போற்றிப்பஃறொடை

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்ப - னுமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கஞ்சேய் விந்துவுட
னுதநா தாந்த நடுவேதம் - போதத்தா
லாமளவுந் தேட வளவிறந்த வப்பாலைச்
சேம வொளியெவருந் தேறும்வகை - மாமணிசூழ்
மன்று ணிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி - குன்றாத
பல்லுயிர்வெவ் வேறு படைத்து மவைகாத்து
மெல்லை யிளைப்பொழிய விட்டுவைத்துந்-தொல்லையுறும்
அந்தமடி நடுவேன் றெண்ண வளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி - முந்துற்ற
நேல்லுக் குமிதவிடு நீடுசேம்பிற் காளிதமுந்
தொல்லைக் கடன்றேன்றத் தோன்றுவரு - மெல்லா
மொருபுடை யொப்பாய்த்தா னுள்ளவா றுண்டா

யருவமா யெவ்வுயிரு மார்த்தே - யுருவுடைய
மாமணியை யுள்ளடக்கு மாநாகம் வன்னிதனைத்
தானடக்குங் காட்டத் தகுதியும்போன் - ஞானத்தின்
கண்ணை மறைத்த கடியதோழி லாணவத்தா [டிக்
லெண்ணஞ் சேயன்மாண்ட வெவ்வுயிர்க்கு - முண்ணு

கட்புலனுற் காணுர்தங் கைக்கோடுத்த கோலேபோற்
போற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பாற்
றனுகரண மும்புவன முந்தந் தவற்ருன்
மனமுதலா வந்தவிகா ரத்தால் - வினையிரண்டுங்
காட்டி யதனுற் பிறப்பாக்கிக் கைக்கோண்டு
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி - நாட்டுகின்ற
வேப்பிறப்பு முற்சே யிருவினையா னிச்சயித்துப்
போற்புடைய தந்தைதாய் போகத்துட் - கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக் குட்படுங்கா
லெல்லைப் படாவுதரத் தீண்டியதீப் - பல்வகையா

லங்கே கிடந்த வநாதியுயிர் தம்பசியா
லெங்கேனு மாக வேடுக்குமேன - வேங்கும்பிக்
காயக் கருக்குழியிற் காத்திருந்துங் காமியத்துக்
கேயக்கை கான்முதலா யெவ்வுறுப்பு - மாசறவே
சேய்து திருத்திப்பின்பி யோகிருத்தி முன்புக்க
வையவழி யேகோண் டணைகின்ற - போய்யாத
வல்லவமே போற்றியம் மாயக்கா ருன்மறைப்ப
நல்ல வறிவோழிந்து நன்குதீ - தோல்லையுரு
வக்காலந் தன்னிற் பசியையறி வித்தழுவித்
துக்காவி சோரத்தா யுண்ணடுங்கி - மிக்கோங்குஞ்

சிந்தை யுருக முலையுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த

பாசப் பெருங்கயிற்றுற் பல்லுயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறிபோற்றி - யாசற்ற
பாலைப் பசும்பதத்தும் பாலனு மப்பதத்து
நாளுக்கு நாட்சகல ஞானத்து - மூள்வித்துக்
கொண்டாள வாளக் கருவிகொடுத் தோக்கநின்று
பண்டாரி யான படிபோற்றி - தண்டாத
புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையி
25 லன்புசேர் கின்றனகட் டைந்தாக்கி - முன்புள்ள

வுண்மை நிலைமை யொருகா லகலாது
திண்மை மலத்தாற் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூலவருங் கட்டிலுயிர் மூடமா யுட்கிடப்பக்
கால நியதி யதுகாட்டி - மேலோங்கு
முந்திவியுன் கட்டிலுயிர் சேர்த்துக் கலைவித்தை
யந்த வராக மவைமுன்பு - தந்த
தொழிலறி விச்சை துணையாக மானி
னெழிலுடைய முக்குணமு மெய்தி - மருளோடு
மன்னு மிதயத்திற் சித்தத்தாற் கண்டபொரு
30 ளின்னபொருளென் றியம்பவொண்ணு - வங்நிலைபோய்க்

கண்டவியன் கட்டிற் கருவிகளீ ரைந்தொழியக்
கொண்டுநிய மித்தற்றை நாட்கொடுப்பப் - பண்டை
யிருவினையான் முன்புள்ள வின்பத்துன்,பங்கள்
மருவும்வகை யங்கே மருவி - யுருவுடனின்
றோங்கு நுதலாய வோலக்க மண்டபத்திற்
பொங்கருவி யெல்லாம் புகுந்தீண்டி - நீங்காத
முன்னை மலத்திருளுண் மூடா வகையகத்துட்
டுன்னுமிரு ணீக்குஞ் சுடரேபோ - லங்நிலையே
சூக்கஞ் சுடருருவிற் பெய்து தொழிற்குரிய
35 ராக்கிப் பணித்த வறம்போற்றி - வேட்கைமிகு

முண்டிப் பொருட்டா லொருகா லவியாது
மண்டியெரி யும்பெருந்தீ மாற்றுதற்குத் - திண்டிறல்
வல்லார்கள் வல்ல வகையாற் றொழில்புரித [சேர்
லெல்லா முடனே யொருங்கிசைந்து - செல்காலை
முட்டாமற் செய்வினைக்கும் முற்செய்வினைக் குஞ்
பட்டோலை தீட்டும் படிபோற்றி - நட்டோங்கு [செலவு
மிங்கிலைமை மானுடருக் கேயன்றி யெண்ணிலா
மன்னுயிர்க்கு மிந்த வழக்கேயாய் - முன்னுடைய
நாணாள் வரையி லுடல்பிரித்து நல்வினைக்கண்
40 வாணாளின் மாலா யயனாகி - நீணாகர்

வானுடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானு விதத்தா னலம்பெறுநாள் - தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட - விற்றைக்கு
மில்லையோ பாவி பிறவாமை யென்றெடுத்து
நல்லதோ ரின்சொ னடுவாகச் - சொல்லியிவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு - மையறருஞ்
செக்கி னிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்துந்
45 தக்கநெருப் புத்தூண் டழுவுவித்து - மிக்கோங்கு

நாராசங் காய்ச்சிச் செவிமடுத்து நாவரிந்து
மீராவுன் னூனைத்தின் னென்றடித்தும் - பேராம
லங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோப மாறாத வேட்கையரா - யிங்கொருநா
ளெண்ணிமுதற் காணாத வின்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு - முன்னடிக்
கண்டு கடன்கழித்தல் காரியமா மென்றெண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் - மண்டெரியிற்

காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதிய
50 மீய்த்துத்தாய் தந்தைதம ரின்புறுதல் - வாய்த்தநெறி

யோடியதே ரின்கீ ழுயிர்போன கன்றுலே
நீடுபெரும் பாவமின்றே நீங்குமென - நாடித்தன்
மைந்தனையு மூர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சனைய சிந்தை நமன்றூதர் - வெஞ்சினத்தா
லல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி - பல்லுயிர்க்கு
மின்ன வகையா லிருவினைக்க ணின்றருத்தி
முன்னைமுத லென்ன முதலில்லோ - னல்வினைக்க
ணேல்லா வுலகு மேடுப்புண் டேடுப்புண்டு
55 சேல்காலம் பின்னரகஞ் சேராமே - நல்லநெறி

யெய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுத
லுய்யு நெறிசிறிதே யுண்டாக்கிப் - பையவே
மட்டாய் மலராய் வருநாளின் முன்னைநாண்
மொட்டா யுருவா முறைபோலக் - கிட்டியதோர்
நல்ல பிறப்பிற் பிறப்பித்து நாடும்வினை
யெல்லை யிரண்டு மிடையொப்பிற் - பல்பிறவி
யத்தமதி லன்றே வளவென்று பார்த்திருந்து
சத்தி பதிக்குந் தரம்போற்றி - முத்திதரு
நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமல மொன்றினையு
60 மந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப் - பின்னன்பு

மேவா விளங்கும் ப்ரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப் - பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை - யன்ன
காதிகுண மாதலினு லாடுந் திருத்தொழிலுஞ் [வனுக்

சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியு மதிக்கொழுந்து - மச்சமற
வாடு மரவு மழகார் திருநுதன்மே
னீடுருவ வன்னி நெடுங்கண்ணுங் - கேடிலயங்

கூட்டுந் தமருகமுங் கோல வெரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும் - வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தா ளினுமடியா
ருள்ளத் தினும்பிரியா வொண்சிலம்புங் - கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலு
மொன்றுமுருத் தோன்றும லுள்ளடக்கி - யென்று
மிறவாத வின்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நறவாருந்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதனொரு பேர்புனைந்து - பாரோர்த

முண்டி யுறக்கம் பயமின்ப மொத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி - மிண்டாய
வாறு சமயப் பொருளுமறி வித்தவற்றிற்
பேறின்மை யெங்களுக்கே பெருக்கித் - தெருத
சித்தந் தெளியத் திருமேனி கொண்டுவரு
மத்தகைமை தானே யமையாமல் - வித்தகமாஞ்
சைவ நெறியிற் சமய முதலாக
வெய்து மபிடேக மெய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளா னோக்கிக் கடியபிறப் பாற்பட்ட
புண்ணு மிருவினையும் போயகல - வண்ணமலர்க்

கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி - [யொத்தொழுகுஞ்

சேணு ரிருள்வடிவுஞ் செங்கதிரோன் பானிற்பக்
காணு தொழியுங் கணக்கேபோ - லாணவத்தி
னுதி குறையாம லென்பா லணுகாம
னீதி நிறுத்து நிலைபோற்றி - மேதக்கோர்
செய்யுஞ் சரியை திகழ்கிரியா யோகத்தா
லெய்துஞ்சீர் முத்திபத மெய்துவித்து - மெய்யன்பாற்
காணத் தகுவார்கள் கண்டாற் றமைப்பின்பு
நாணத் தகுஞான நன்னெறியை - வீணே

யெனக்குத் தரவேண்டி யெல்லாப் பொருட்கு
மனக்கு மலரயன்மால் வானோர் - நினைப்பினுக்குந்
தூரம்போ லேயணிய சுந்தரத்தா ளென்றலைமே
லாரும் படிதந் தருள்செய்த - பேராளன்
றந்தபொரு ளேதென்னிற் றுன்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி - முந்தியென்ற
னுள்ளமென்று நீங்கா தொளித்திருந்து தோன்றி நிற்குங்
கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி - வள்ளன்மையாற்
றன்னைத் தெரிவித்துத் தன்றுளி னுட்கிடந்த
வென்னைத் தெரிவித்த வெல்லையின்கண் - மின்னுரும்

வண்ண முருவ மருவுங் குணமயக்க
மெண்ணங் கலைகால மெப்பொருளு - முன்னமெனக்
கில்லாமை காட்டிப்பின் பெய்தியவா காட்டியினிச்
செல்லாமை காட்டுஞ் செயல்போற்றி - யெல்லாந்
தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி [பொய்த்
யெம்மைப் புறங்கூறி யின்புற்றுச் - செம்மை
யவிகாரம் பேசு மகம்பிரமக் காரர்
வெளியா மிருளில் விடாதே - யொளியாய்நீ
நின்ற நிலையே நிகழ்த்தி யொருபொருள்வே
றின்றியமை யாமை யெடுத்தோதி - யொன்றுகச்

சாதித்துத் தம்மைச் சிவமாக்கி யிப்பிறவிப்
பேதந் தனிலின்பப் பேதமுருப் - பாதகரோ
டேகமாய்ப் போகாம லெவ்விடத்துங் காட்சிதந்து
போகமாம் பொற்றுளி னுட்புணர்த்தி - யாதியுட
னிற்க வழியா நிலையிதுவே யென்றருளி
யொக்க வியாபகந்தன் னுட்காட்டி - மிக்கோங்கு
மாநந்த மாக்கடலி லாரா வமுதளித்துத்
தான்வந்து செய்யுந் தகுதியினு - லூனுயிர்தான்
முன்கண்ட காலத்து நீங்காத முன்னேனை
யென்கொண்டு போற்றிசைப்பேன் யான்.

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றியவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல் - போற்றியெங்
வெம்பந்த வாழ்க்கைவிட வேருய்வந் துண்ணின்ற [கள்
சம்பந்த மாமுனிபோற் றுள்.

போற்றிப் பஃறொடை

முற்றிற்று.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

உமாபதி தேவநாயனர்

அருளிச் செய்த

உண்மை நெறி விளக்கம்

மண்முதற் சிவம தீருய் வடிவுகாண் பதுவே ரூப
மண்முதற் சிவம தீருய் மலஞ்சட மென்றல் காட்சி
மண்முதற் சிவம தீருய் வகையதிற் ருனி லாது
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருத லாமே. 1

பாயிரு ணீங்கி ஞானந் தனைக்காண்ட லான்ம ரூப
நீயுநின் செயலொன் றின்றி நிற்றலே தரிச நந்தான்
போயிவன் றன்மை கெட்டுப் பொருளிற்போ யங்குத் தோன்ரு
தாயிடி லான்ம சுத்தி யருணூலின் விதித்த வாறே. 2

எவ்வடி வுகளுந் தானு யெழிற்பரை வடிவ தாகிக்
கௌவிய மலத்தான் மாவைக் கருதியே யொடுக்கி யாக்கிப்
பௌவம்விண் டகலப் பண்ணிப் பாரிப்பா னொருவ னென்று
செவ்வையே யுயிரிற் காண்டல் சிவரூப மாகு மன்றே. 3

பரையுயிரில் யானெனதேன் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமா
முரையிறந்த சுகமதுவே முடியாகு மென்றிவ்
வுண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறொன் [றின்றித்
தரைமுதலிற் போகாது தன்னிலைநில் லாது
தற்பரையி னின்றழுந்தா தற்புதமே யாகித்
தெரிவரிய பரமாநந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாச் செப்பு நூலே. 4

எப்பொருள்வந் துற்றிடினு மப்பொருளைப் பார்த்தங்
கெய்துமுயிர் தனைக்கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா
மொப்பிலருள் கண்டுசிவத் துண்மை கண்டிங்
குற்றதெல்லா மதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச்செய் வதுமதுவே நினைப்புமது தானே
தருமுணர்வும் புசிப்புமது தானே யாகு
மெப்பொருளு மசைவில்லை யெனவந்தப் பொருளோ
டிசைவதுவே சிவயோக மெனுமிறைவன் மொழியே. 5

பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ்
சாதிநெறி தப்பிடினுந் தவறுகள்வந் திடினுந்
தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கி
னுதனவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து
நானுபோ கங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே. 6

எண்ணும் அருள்நூல் எளிதின் அறிவாருக்(கு)
உண்மை நெறிவிளக்கம் ஓதினன் - வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனார் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவநா தன்.

என்னும் வெண்பாவைக் கொண்டு இந்நூலைத் தத்துவ நாதர்அருளியதென்பர்.

உண்மை நெறி விளக்கம்

முற்றிற்று

———

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

உமாபதி தேவ நாயனர்

அருளிச் செய்த

கோடிப்பாட்டு†

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலோன்
ருெளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தேளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிகோடி கட்டினனே. 1

போருளாம் போருளேது போதேது கண்ணே
திருளாம் வேளியே திரவே—தருளாளா
நீபுரவா வையமேலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கோடி. 2

வாக்காலு மிக்க மனத்தாலு மேக்காலுந்
தாக்கா துணர்வரிய தன்மையனே—நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிறியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கோடி. 3

---

† சிவஞான பாடியம் சூ. 9, அதி. 3

அஞ்செழுத்து [2]மெட்டெழுத்து [3]மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் [6]பெருவெழுத்து—நெஞ்சழுத்திப்
[7]பேசு மெழுத்துடனே [8]பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கோடி. 4

அந்த மலமறுத்திங் கான்மாவைக் காட்டியதற்
கந்த அறிவை அறிவித்தங்—கிந்தறிவை
மாறாமல் மாற்றி மருவுசிவப் பேறென்றுங்
கூறாமல் கூறக் கோடி. 5

கோடிப்பாட்டு

முற்றும்.

[2]சித்தியார் காப்புரை. தணிகைப். குமாரேசப். 31-33. [3]ஷை அகத்திய. 150. [6]திருவெறும்பியூர்த் திருத்தாண்டகம் 6 [7]திருவருள். [8]சிவம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

உமாபதி தேவநாயனார்

அருளிச்செய்த

நெஞ்சு விடு தூது

கலிவெண்பா

இறைவனியல்பு

பூமேவு முந்திப் புயல்வண்ணன் போற்பமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன் - றூமேவிப்
பன்றியு மன்னமுமாய்ப் பாரிடத்தும் வான்பறந்து
மேன்று மறியா வியல்பினா - னன்றியு
மிந்திரனும் வானோரு மேனோரு மேப்புவியு
மந்தர வேற்பு மறிகடலு - மந்திரமும்
வேதமும் வேத முடிவும்விளை விந்துவுட
னாதமுங் காணா நலத்தினா - னோத
வரியா னெளியா னளவிறந்து நின்ற
பேரியான் சிறியான்பெண் பாகன் - றேரியா

வருவா னுருவா னருவுருவு மில்லான்
மரியான் மரிப்பார் மனத்தான் – பரிவான
மெய்யர்க்கு மெய்யன் வினைக்குவினை யாயினன்
பொய்யர்க்குப் பொய்யாய்ப்போய் யாயின - னயன்
படநாகம் பூண்ட பரமன் பசுவி
னிடமாய் நிறைந்த விறைவன் - சுடரொளியான்

உயிரியல்பு

என்றுமுள னன்றளவுமி யானு முளனாகி
நின்றநிலை யிற்றரித்து நில்லாமற் - சென்றுசென்று
தோற்றியிடு மண்டஞ் சுவேதசங்கண் மண்ணின்மேற்
சாற்றுமுற் பீசஞ் சராயுசங்கட் - கேற்றபிறப்

பெல்லாம் பிறந்து மிறந்து மிருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் - கல்லா
வுணர்வின் மிசையோ டுலகா யதனைப்
புணர்வதொரு புல்லறிவு பூண்டு - கணையிற்
கொடிதெனவே சென்று குடிபழுதே செய்து
கடிய கொலைகளவு காமம் - படியின்மிசைத்
தேடி யுழன்று தெரிவைத் தெரியாமல்
வாடி யிடையு மனந்தனக்கு - நாடியது
போன ‡வழிபோகும் புந்திக்கும் புந்தியுட
னான திறலா ரகந்தைக்கு - மேனி

யயர வயர வழிய வழியு
முயிரின் றுயர முரையேன் - வயிரமே

---

‡ வழியோடும்.

தளையினியல்பு

கொண்டதொரு காமனுக்குங் கோபனுக்கு மோகனுக்கு
மண்டு மதமாச் சரியனுக்குந் - திண்டிறல்சே
ரிந்திரியம் பத்துக்கு மீரைந்து மாத்திரைக்கு
மந்தமிலாப் பூதங்க ளைந்தினுக்குஞ் - சிந்தைகவர்
மூன்றுகுற்ற மூன்றுகுண மூன்றுமல மூன்றவத்தை
யென்றுநின்று செய்யு மிருவினைக்குந் - தோன்றாத
வாயுவொரு பத்துக்கு மாறாத வல்வினையே
யாய திளைக்கு மருநிதிக்கு - நேயமா

மிச்சை கிரியை யிவைதரித்திங் கெண்ணிலா
வச்சங் கொடுமை யவைபூண்டு - கச்சரவன்
சீரினிலை நில்லாமற் றிண்டாடும் பல்கருவி
வாரியகப் பட்டு மயங்கினேன் - றேருங்கா
லுன்னை யொழிய வுறவில்லை யென்னுமது
தன்னை யறிவைத் தனியறிவை - முன்னந்
‡ தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவரென்று - நிலைத்தமிழின்
றெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாம - லைவர்க்கு

மாவதுவே செய்தங் கவர்வழியைத் தப்பாமற்
பாவமெனும் பௌவப் பரப்பழுந்திப் - பூவையவர்தங்
கண்வலையிற் பட்டுக் கலவிக் கலைபயின்றங்
குண்மை யறிவுணர்ச்சி யோராமற் - றிண்மையினா
னாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறுஞ்
சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங் - காவிநிலை

---
‡ திருக்குறள் 348

நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே
போற்பினுடன் யானே புகலக்கேள் - வேற்பின்மிசை

இறைவனது நிலை

வந்திருக்க வல்லான் மதியாதார் வல்லரணஞ்
சேந்தழலின் மூழ்கச் சிரித்தபிரா - னந்தமிலா

வேத முடிவில் விளைவில் விளைவிலொளி
யாதி யமல னிமலனருட் - போத
வறிவி லறிவை யறியு மவர்கள்
குறியுள் புகுதுங் குணவ - னெறிகோள்
வெளியில் வெளியில் வெளியன் வெளியி
லொளியி லொளியி லொளிய - னொளியி
லளியி லளியி லளிய னளியி
லளவி லளவி லளவ - னளவிறந்து
நின்றா னனைத்து நிறைந்தா னினைப்பவர்பாற்
சென்றான் றெரியத் தெரியாதான் - குன்றா

விளக்காய் நிறைந்த விரிசுடரான் விண்மேற்
றுளக்காம னின்றபெருஞ் சோதி - யுளக்கண்ணுக்
கல்லாது தோன்றா வமல னகிலமெலா
நில்லாம னின்ற நிலையினான் - சொல்லாரு
மீசன் பெருமை யிருவினையே னுன்றனக்குப்
பேசுந் தகைமையெலாம் பேணிக்கேள் - பாசம்

தசாங்கம் :—

1. மலை

பலவுங் கடந்து பரிந்தருள்சேர் பண்பாற்
குலவி விளங்குகுணக் குன்றே - னிலகவே

2. ஆறு

செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
வையம் பரவ மகிழ்ந்தெழுந்தங் - கையங்

களவுபயங் காமங் கொலைகோபங் காதி
யளவில்வினை யெல்லா மழித்திங் - குளமகிழத்
தோம்மெனவே யெங்கு முழங்கிச் சுருதிபயில்
செம்மைதரு மாகமங்கள் சேர்ந்தோடி - மும்மலத்தின்
காடடங்க வேர்பறித்துக் கல்விக் கரைகடந்தங்
கோடுபல பூதத் துணர்வழித்து - நீடுபுகழ்
மெய்வாய்கண் மூக்குச் செவியென்னப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவழித்து - நையுமியல்
வாக்குப்பா தம்பாணி பாயுருபத் தம்பலவு
நீக்கிச் செறிந்து நிறைந்தோடிப் - போக்கரிய

பந்தமெனுஞ் சோலை பறித்துப் பரந்தலைக்கு
மந்தமனம் புத்தியுட னங்காரஞ் - சிந்தைவிழ
மோதி ‡ யலைக்கு மருணீர்மை முக்குணமுங்
காதி யுரோமமெலாங் கைகலந்து - சீதப்
புளக மரும்பிப் புலன்மயக்கம் போக்கி
விளைவில் புலன்முட்ட மேவிக் - களபதன
மாதர் மயக்க மழித்துவளர் மண்டலத்தின்
சோதியொரு மூன்றினையுஞ் சோதித்து - நீதியினு
லாதார மாறினுஞ்சென் றுறியடல் வாயுக்கண்
மீதான பத்து மிகப்பரந்து - காதிப்

பிறுதிவியப் புத்தேயு வாயுவா காய
வுறுதி நிலமைந்து மோடி - மறுவிலா

‡ யருணீர்மையோங்கி விறன் முக்குணமும்.

நான்முகன்மா லீசன் மகேச னலஞ்சிறந்த
தான்முக மைந்தாஞ் சதாசிவமு - மானதொரு
விந்துநா தங்கடந்து சுத்த வெறுவெளியி
லந்தமிலாப் பாழடங்கத் தேக்கியபின் - முந்திவரு
மவ்வறிவுக் கப்பாலுஞ் சென்றகண்ட முள்ளாக்கிச்
செவ்வறிவே யாகித் திகைப்பொழிந்தங் - கெவ்வறிவுந்
தானுய வீடருளித் தன்னிற் பிரிவில்லா
வூனுகி யெவ்வுயிர்க்கு முட்புகுந்து - † மேனியிலா

வஞ்சவத்தை யுங்கடந் தாயபெரும் பேரொளிக்கே
தஞ்சமெனச் சென்று *தலைப்பட்டு - வஞ்சமறத்
தானந்த மில்லாத தண்ணளியா லோங்கிவரு
மானந்த மென்பதோ ராறுடையா - னனந்தம்

3. நாடு

பண்ணும் பயன்சுருதி யாகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண வரியதொரு நாடுடையா - னெண்ணெண்

4. ஊர்

கலையா லுணர்ந்து கருத்தழிந்து காம
நிலையான தெல்லாமும் நீத்தங் - கலைவறவே
தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தா
லோட்டற்று வீற்றிருக்கு மூருடையா - னுட்டத்தாற்

† 'வடிவிலா முடிவில் வாழ்க்கைக்கு இம்மை நின்று உருகுகின்றேன்' (திருமுறை 4-78-5.) * தலைப்பெய்தி.

5. தார்

றெண்ணீ ரருவிவிழச் சிந்தைமயக் கந்தெளிந்
துண்ணீர்மை யெய்தி யுரோமமேலா - நண்ணும்
புளகம் புனைமெய்யர் பொய்யிற்கூ டாம
லுளகம்பங் கொண்டுள் ளுருகி - யளவிலா
மாலா யிருக்கு மவர்மனத்தை வாங்கவருண்
மேலாய் விளங்கலங்கன் மெய்யினுன் - றேலாத

6. குதிரை

வானம் புவன மலைகடலேழ் பாதாள
மூனைந்து பூதத் துயிருணர்ச்சி - ஞானமா
யெல்லாமா யல்லவா யெண்ணுவா ரெண்ணத்
ணில்லாம னிற்குநீள் வாசியான் - சொல்லாரும்

7. யானை

பாதாள முடுருவிப் பாரேழும் விண்ணேழு
மாதார மாகி யகண்டநிறைந் - தோத
வரிதா யெளிதா யருமறையா றங்கத்
துருவா யுயிரா யுணர்வாய்ப் - பெரிதாய
வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித்
துய்ய கடலைத் துகளெழுப்பி - யையமுறுங்
காமக் குரோத*மத மாச்சரியங் காய்ந்தடர்த்துச்
சாமத் தொழிலின் றலைமிதித்து - நாமத்தாற்
கத்துஞ் சமயக் கணக்கின்விறற் கட்டழித்துத்
தத்தம் பயங்கொலைகள் தாங்கழித்தே - தத்திவரும்

* லோபமோக மதங்காய்ந்தடர்ந்து.

பாசக் குழாத்தைப் படவடித்துப் பாவையர்தம்
மாசைக் கருத்தை யறவீசி - நேசத்தா
லானவே கங்கோண் டருண்மும் மதத்தினு
லூனையார் தத்துவங்க ளுள்புகுந்து - தேனைப்
பருகிக் களித்துயர்ந்து பன்மறைநாற் கோட்டான்
மருவித் திகழ்ஞான வானையா - னிருமுச்

8. கோடி

சமையங் கடந்து தனக்கோப் பிலாத
சுமைதுன்ப நீக்குந் துவசன் - கழையோன்றித்

9. முரசு

தம்மை மறந்து தழலோளியுள் ளேயிருத்தி
யிம்மை மறுமை யிரண்டகற்றிச் - செம்மையே

வாயுவை யோடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையு மாங்கே யுறவமைத்துத் - † தேயுறவே
யென்று மொருதகைமை யாயிருக்கு மின்பருளே
நின்று முழங்கு நெடுமுரசோ - னன்றியு

10. ஆணை

மாலு மயனும் வகுத்தளித்த வையமேலாஞ்
சாலுமிதற் கப்பாலு மேப்பாலு - மேலை
யுலகு முலகா லுணரவோண்ணு வூரு
மிலகி நடக்குமெழி லாணையா - னலகிறந்த

† தேயுவால்.

இறைவன் பெருமை

காட்சியான் காட்சிக்குந் ‡ காணான் கலைஞான
வாட்சியா னாட்சிக்கு † மாயிலான் - சூட்சியான்

பாரும் திசையும் படரொளியா லேநிறைந்தான்
றூருந் தலையுமிலாத் தோன்றலான் - வேராகி
வித்தாகி வித்தின் *விளைவாகி மேவுதனுச்
சத்தாதி பூதங்க டாமாகிச் - சுத்த
வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பா
லுறுபொருளாய் நின்ற வொருவன் - பொறியிலியேன்

ஞானாசாரியர்

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனியென் றம்பிரா - னம்புவியோர்
போற்றுந் திருவடியென் புன்றலைமீ தேபொறித்தோ
னேற்றின் புறத்தமைத்த வெங்கோமான் - சாற்றுவார்

சாற்றும் பொருளான் றனிமுதல்வன் றானல்லான்
வேற்றின்ப மில்லா விளங்கொளியான் - போற்றுங்
குருவேட மாகிக் குணங்குறியோன் றில்லாப்
பெருவேட மாய்நிறைந்த பெம்மான் - கருவேடங்
கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையா
னெட்டுமவர்க் கெட்டா வியல்பினான் - மட்டவிழ்தார்

குருபதேசம்

வானோன் பவனி வரக்கண்டு வல்வினையே
னேனொரு மேத்துதல்கண் டேத்தினேன் - றானென்னைப்

‡ காணாக். † ஆயினான். * முளையாகி.

பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கோத்தையேல்
90 நீத்தா னினைவுவே ருக்கினு - னேத்தரிய [லா

தோண்ணூற் றறுவர்பயி ரேக்கிற் றுவக்கறுத்தான்
கண்ணூறு தேனமுதங் காட்டினுன் - வெண்ணீறும்
வேடமும் பூசையுமே மெய்யென்றான் பொய்யென்றான்
மாடையும் வாழ்க்கை மனையுமே - நாடரிய
வஞ்செழுத்தி னுள்ளீ டறிவித்தா னஞ்செழுத்தை
நெஞ்சழுத்தி நேய மயலாக்கி - யஞ்செழுத்தை
யுச்சரிக்குங் கேண்மை யுணர்த்தியதி லுச்சரிப்பு
வைச்சிருக்கு மந்த *வழிகாட்டி - யச்சமறச்
சென்று விளக்கை யேழத்தூண்டிச் செஞ்சுடரி
95 ஞென்றி யொருவிளக்கி னுள்ளொளியாய் - நின்ற

பெருவிளக்கின் பேரொளியி னுள்ளே பிரச
மருவு மலர்போன் மதித்தங் - கருவினுருக்
கோள்ளா வருளைக் கொளுத்திக் குணங்குறியோன்
றில்லா விடத்தே யினைப்பாற்றி - விள்ளாத
வுள்ள முதலாக வுற்றதெல்லாம் வாங்கவருள்
வெள்ள மயலளித்து மேவினுன் - கள்ள
மறப்பித்தான் மெய்ஞ்ஞான மாக்கிமன மெல்லா
மிறப்பித்தா னென்பிறவி யீர்த்தான் - விறற்சொல்லுக்
கேட்டானை யார்க்கு மெழுதா வியற்குணங்க
100 ளேட்டானை யாற்று வெழுத்தினுன் - மட்டாரும்

பாடலா ராடலார் பண்பலார் நண்பலா
ராடலா ராட லகன்பதியாங் - கூடலார்
காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்

* வழியாக்கி

பாணர்க் கிலகு பலகையிட்டான் - சேணிற்
சிறந்த வுருவான் றிருமாலுக் கேட்டா
னிறைந்த திருவுருவாய் நிற்போன் - கறங்குடனே
சூறைசுழல் வண்டு சுழல்கொள்ளி வட்ட†மன
மாறில் கருணையினன் மாற்றினு - ணீறணிந்த
மெய்ய னமல னிமலனருள் வீடளிக்கு
105 மையனறி வுக்கறி வாயினன் - பொய்யர்பாற்

பொய்மையாய் நின்றான் புரிந்தவர்தந் நெஞ்சத்துண்
மெய்மையாய் நின்று விளங்கினன் - கைமழுவா
னத்தன்பா னீசென் றடையு மிடத்தையெல்லாஞ்

அடையும் இடம்

சித்தஞ்சேர் நெஞ்சமே செப்பக்கே - ணித்தலுமே
பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி
யாசைதனிற் பட்டின்ப வார்கலிக்கு - ணேசமுற
நின்று திளைக்கு மிதுமுத்தி யல்லதுவே
ரென்று திளைக்கு மதுமுத்தி - யன்றென்
றிலகா விருளலகை போலிகலே பேசு
110 முலகா யதன்பா லுறாதே - பலகாலுந்

தாம்பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே
நான்பிரம மென்பவர்பா னண்ணுதே - யூன்றனக்குக்
கொன்றிடுவ தெல்லாங் கொலையல்ல வென்றுகுறித்
தென்றுமற மேதெய்வ மென்றென்று - வென்றிப்
பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன்சொன்
மிறையே விரும்பி விழாதே - நிறைமேவி

† - அன்ன பிறப்பிறப்புச் சுழல்களை என்பது கருத்து.

வாழ்பவர்போன் மண்ணுடலின் மன்னுமுரோ மம்பறித்துத்
தாழ்வுநினை யாதுதுகி ருனகற்றி - யாழ்விக்கு
மஞ்சு மகற்று மதுமுத்தி யென்றுரைக்கும்
வஞ்சமணன் பாழி ‡மருவாதே - செஞ்சொல்புனை

யாதிமறை யோதி யதன்பயனென் றும்மறியா
வேதியர்சொன் மெய்யென்று மேவாதே - யாதியின்மே
லுற்றதிரு நீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே - நற்றவஞ்சேர்
வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே - நீட
வழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே - விழித்தருளைத்
தந்தெம்மை யாண்டருளுஞ் சம்பந்த மாமுனிவ
னந்தங் கடந்தப்பா லாய்நின்றே - னெந்தைபிரான்

வீற்றிருக்கு மோலக்க மெய்தியடி வீழ்ந்திறைஞ்சிப்
போற்றி சயசய போற்றியென - வார்த்தகரி
யன்றுரித்தாய் நின்பவனி யாதரித்தா ரெல்லாரும்
வென்றிமத னம்புபட வீழ்வரோ - நின்றிடத்து
நில்லாத செல்வ நிலையென் றுனைநீங்கிப்
பொல்லா நரகம் புகுவரோ - பல்லாருங்
கத்துஞ் சமயக் கணக்கிற் படுவரோ
சித்தம் பலகாற் றிகைப்பரோ - முத்தம்
பொருத நகைமடவார் புன்கலவி யின்ப
மருவி மயங்கி வருவரோ - விருபொழுது
நாளிருபத் தேழு நவக்கிரக மும்நலியுங்

‡ மதியாதே

கோளிதுவேன் றெண்ணிக் குறிப்பரோ - வேளை
யெரித்த விழியாய்நின் னின்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல் - வருத்தமெலாந்
தீரா யெனவுரைத்துச் செங்கமலப் பூந்திருத்தா
டாரா யெனப்பலகாற் ருழ்ந்திறைஞ்சி - யோரும்
பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
யீங்கோன்ற வாரா யினி.

———

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் ருர்வாங்கி—யம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினையேல் லாமகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

நெஞ்சுவிடு தூது

முற்றிற்று.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

உமாபதி தேவநாயனார்

அருளிச்செய்த

சங்கற்ப நிராகரணம்*

விநாயகர் வணக்கம்

(1) திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சு
நிகரில் சேர்க்கப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந் தேசுறு மெயிறொன்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்கதங் கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

---

* இச்சங்கற்ப நிராகரணம் அந்தாதித் தொடையாய்ப் பதின்மூன்றகவலாலாகியது. பதின்மூன்றினும் மிக்கதாகக் கொண்டதும் உண்டு.

பாயிரம்

(2) பெருங்கட லுதவுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
லருளிய கலைக ளலகில வாலவை
பலபல சமயப் பான்மைத் தன்றே யஃதா
லந்நூற் றன்மை யுன்னிய மாந்த
ரிதுவே பொருளென் றதனிலை யறைதலின்
வேற்றோர் பனுவ லேற்றோர்க் கிசையா
மாறு பாடு கூறுவ ரதனாற்
புறச்சம யங்கள் சிறப்பில வாகி
யருளின் மாந்தரை வெருளுற மயக்கி
யலகைத் தேரி னிலையிற் றீரு
மீங்கிவை நிற்க நீங்காச் சமய
முவிரு தகுதி மேவிய தாமு
மொன்றோ டொன்று சென்றுறு நிலையி
லாறும் மாரு வீறுடைத் திவற்று
ளெவ்வ மில்லாச் சைவநற் சமயத்
தலகி லாகம நிலவுத லுளவவை
கனக மிரணியங் காஞ்சன மீழந்
தனநிதி யாடகந் தமனிய மென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி
யாசா ணுகி வீசிய சமத்துட
னெழஞ் சிருநூ றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்

போற்போது மலிந்த வற்புத ஞனி
யாரும் விழவிற் போற்றே ராலயத்
தேரு வேண்மர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட வோருதலை முதுவேதிர் மணிசேர்
பேண்ணை சூழ்ந்த வேண்ணையம் பதிதிகழ்
மேய்கண் டவனருள் கைகண் டவர்களி
லோருவ ரோருதலை மருவி யிருப்ப
வஞ்சப் பிறவிக் கஞ்சிவந் தோருவ
னேதிறை யருளேன வீதேனு மாயா
வாதியை யயலினர் மறுதலைத் தருடர
மற்றவ ரயலின ரவருரை மறுத்துச்
சோற்றர வயலின ரவருந் தோலைவுற்
றின்னே யேவரு முன்னே கழியுழி
யாங்கய லிருந்த வருளின ரழகிது
நீங்கள்சங் கற்ப நிராகரித் தமையேன
மற்றவ ருரைத்த சோற்றரு போருள்கோடு
வாத சேற்ப விதண்டையு மேதுவு
மோது † நால்வகை யுவமையுந் திகழ்தர
வருள்சேர் மாந்தர் வேருள்சே ராமற்
றற்கமும் விடையமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.

---

† சிவப்பிரகாசம் 100

நூல்

மாயாவாதி சங்கற்பம்

பேத்தத்தியல்பு

(3) நவிற்றிய நிரையி னவித்தையி னேனுரை
நித்த னறிவன் சுத்த னகண்டித
னிருவி கற்பனிர்த் தத்துவ னிரஞ்சனன்
சொல்வகை யெவையுந் தொடராத் தூய்மணி
வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள்
சத்தா யெவையுந் தானு யவித்தை
தொத்தா துயர்ந்த தொல்சுடர் மூவா
வின்ன தன்மைய னேக னநேகன்
கன்னற் பெருஞ்சுவை தன்னிற் பிறவாப்
பெற்றியி னிருந்து பொற்பணி யியல்பினின்
வான்வளி யனனீர் மண்மருந் தன்ன
மான தாது வாறைங் கோசத்
தொகுதி யாக்கைப் பகுதிய தொருபுடை
சுத்தி வெள்ளி யொத்தென மித்தையிற்
றுனென லாகுந் தன்மைத் துலூதையிற்
சின்னூற் றகைமையின் வேற்றுமை மரீஇய
தென்னப் பன்மைய தெனினிலை பழம்பூத்
தோனுர் வயிரந் தருத்தருந் தோன்மையின்
வானு ரந்திரை நுரைதரு வாய்மையிற்
கூடு மசித்தைச் சித்துத வாதெனி
னேற்பதர் பலாலத்திற்பரந் தருமிது
தன்னியல் பென்றும் விளையாட் டென்றும்
முன்னுள மறைகண் மொழிதலி னொருநூற்
பன்மணி நிலையும் பசுப்பாலெனவும்
பலவக னீரி லலர்கதி ரெனவுங்

கூவ லாழி குளஞ்சிறு குழிகால்
வாவி யாவையும் வருபுன லெனவு
மவ்வவற் றடங்கி யாடியு ணிழலெனத்
தோன்றி யாக்கைநற் காந்தத் திரும்பும்
கனவிற் றீங்குங் கங்குலிற் கயிறும்
புனலிற் ரேன்றும் பேய்த்தேர்ச் செய்தியு
மன்ன துன்பி னன்னிறப் பளிங்கெனப்
பதினுற் கரணத் தோருமுன் றவத்தை
நாளு நாளு நயந்துறு மிருபயன்
றன்னிற் சாராத் தோன்மைத் தன்மை
தர்ப்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்றே

சீவன்முத்தியியல்பு

இவ்வியற் பந்தப் பேளவம தகல
விண்முத றந்த கோண்முப் படலத்
திருளற வுதித்த காறக விவேகந்
தன்னிற் ரேன்றிச் சாதக மனத்தையு
மன்னகப் பிரிப்பு மடியிழை வாங்கலும்
போல ஞானம் போய்யறக் கழீஇத்
தானே தாஞய்த் தன்னிற் றன்னைத்
தானே கண்டு தன்னல முற்று
வசையி றத்துவ மசிபதத் தேளிவா
லகமே பிரம மாயின னேனவறிந்
தசல ஞகிநற் சலம்சல மதியேனக்
கண்டிடும்

பாரமுத்தியியல்பு

உடலம் விண்டகல் கடத்து
மங்குலஃ துடைதர வேங்குமாந் தகைத்தே
யிவ்வகை யுணர்ந்து செய்தோழி லருத

மடவோர் தாமுங் கடனு வியற்றுங்
கன்ம காண்டத் தோன்மைப் புரிவாற்
ரேற்றிய வித்தை மேற்கடை யரணியி
லேழுந்தேரி யவற்றை விழுங்கிய தேன்னத்
தன்னேழிங் துள்ள தானு யழியு
மங்ஙிலே யன்றி யழிவறு முத்தி
யேயா தேன்றுதன் னியல்பை
மாயா வாதி வகுத்துரைத் தனனே. 3

மாயாவாதி சங்கற்ப நிராகரணம்

பிரமாணமறுப்பு :-

வேதம் சுயம்பன்று

(4) உரைதரு பிரம மோன்றேனு முரைக்கண்
வருபிர மாண மறையேனி லருமறை
யோன்றேன்ற தன்றி யிருபோரு ளுரைத்த
னன்றன் றபேத நாடிய போருளேற்
பேதமு மபேதமு மோத வேண்டா
பேத மேனினு மபேத மேனினும்
பேதா பேத மேனினு மமையுநின்
னேயமி லுரையிற் பையவங் துளதாங்
திகழ்பிர மாண விகழ்வுமுண் டன்றிப்
பேத்தம் பேத முத்தி யபேதமே
லாஙவத் திதமா மவையிரு திறனு
மினியப் பழமோழி யிரண்டல வோன்றே
யன்றியும் பேத்தம் பேதத் தறைதலு
மோன்றிய முத்தி யபேதத் துரைத்தலும்
பழுதா மித்திறம் பதையா தாய்கமற்

றெழுதா மறையெனு மிப்பிர மாண
மாருரை தானே யாயின தேலுன
தேக மநேக முறுமியம் பாமற்
சத்த ரூபந் தகாதெனில் வானத்
தோத்தொலி யுறழு மெனில்வறி துதியா
தன்றியும் பதமும் பாழியு மனைத்து
மின்றியோ ரொலியா யெழுந்திடு மதனுக்
கறிவில துருவில தறியா தறையா
தன்றியு மவ்வகை யகண்டித மதுவிது
வென்றது குறிப்ப தெவ்வகை யாவு
மொன்றெனு முரையு மொழிந்தனை யன்றே
யருமறை பிரம வுரையெனி லதற்குத்
தந்த தாலு முதனவில் பொறியில
தென்னிலோ ருடற்கண் மன்னிய வலகை
யறைந்தற் றென்ப தார்சொல தமலத்
திறம்பெற் றின்றே செய்தோர் பெயராற்
சுயம்பு வென்றுல கியம்புமென் றறியினித்
‡ தற்கீட் டலைவரைத் தான்றெழு துரைக்குஞ்
சொற்கேற் புரவல னேவ லமைச்சரை
யடிகண் மற்றெங் குடிமுழு தாண்மினென்
றேத்தி யிறைஞ்சிக் காப்பர்க ளென்றுங்
கீச ஞுஞ்செயப் பேசின னன்றி
யினையவை பிறரிற் கனவினு மிலனே
தன்னைத் துதிக்குஞ் சொன்னலந் தானுமத்
துறையறி வாணர்க் கறைவதொன் றன்றியுந்
தனக்குத் தானே தன்னலம் பகரா
தசத்துக் குரையா தார்க்குரை யுயிர்க்கெனி

‡ தற்கீழ்த் தலைவரை

லுரைபிர மாண மிறைபிர மேய
நீபிர மாதா நின்பிர மிதியென
நால்வகை யுளதுன தேகநன் றன்றே
நற்பிர மாண நிற்பதோன் றன்று
லப்பிர மேயமு மதனியல் பன்றே

பிரமேயமறுப்பு :-

பிரமம் பிரமேயமன்று

கன்னற் சுவையி லங்கிய மிலதா
லினிமை தோன்றுத் தனிமைத் தேன்றனை
யறிவிற் குவமை யசத்தாங் கட்டி
பிறிவித் தோட்டினும் பேற துருதே
தற்பர விரிவு போற்பணி தகுமேனிற்
† செய்வோ ரின்றிச் செய்வினை யின்மையிற்
போன்பணி யாகை தன்பணி யன்றே
செய்வோர் போலாச் செயப்படு போருண்முதற்
செய்வோ ரேயாச் செய்யவும் படுமே
சுத்தி வெள்ளியிற் றோன்றிற் றுயினுஞ்
சத்துல கேதுந் தாரா தருமேனி
னுலக மித்தையேன் றோரா துரைத்தனை
நிலவுநின் மரபு நினைந்திலை யாங்கோல்
விவகா ரத்தில் வேண்டுது முலகம்
பரமார்த் தத்திற் பகரா மேன்னிற்
பரத்துள தேலிவை யும்பர மார்த்தம்
பரத்தில தேலொழி முன்பகர் மாற்ற
மதன்முத லிதுவேன வுதவுக வன்றியும்

---

† சிவஞானபோதம் சூ. 1, உரை.

விவகரிக் குங்காற் றிகழ்பர மார்த்த
நிலையது தெரியி னிதுநீ நீயேற்
றெரியா தாயி னஃதுந் தெரியா
துரையா ரளவையு மொழிந்தனை யன்றே
யளவை காண்டல் கருத லுரையென
வுளதவை மூன்றின் மொழிவழி நுழையி
னின்பிர மேய மென்ப தெனுங்கோல்

பிரமிதி மறுப்பு

பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாநின்
றற்பர மசித்தைத் தருமா றென்னெனிற்
சிலம்பி நூறரு நலம்போற் றென்று
மென்றனை யதுவ தன்றோழி லன்றியு
மொன்றத னியல்புல கோரியல் பன்றெனப்
பலமில பழம்பூப் பாதவந் தருநீர்
திரைநுரை திவலை சிலதரு மிவைபோற்
றுனே பலவா மெனநீ சாற்றினை
சத்தசத் தாகவுஞ் சத்தினி லசத்தின்
கோத்துள தாகவுங் கூறின ரிலரால்
வித்திலை கனிநனி விழுதா றருநெறி
சத்தல தோன்று தான்றர வேண்டு
நெற்பதற் பலாலத் திற்குபா தானமென்
காரண மின்றிக் காரியம் பிறவா
பாரிடை யொருபடம் பண்ணவும் படுமே
யந்தமில் பிரம மவித்தைகா ரணமெனத்
தந்தனை யவித்தை தானெய் துறுத
றன்னியல் பென்னில் வன்னிதன் வெம்மையிற்

சத்தின தியல்புஞ் சத்தே யசத்தேனில்
வைத்தத னியல்பேனும் வழக்கோழி யன்றியு
மிருள்போதி விளக்கேன வருமரு விளக்கிற்
கருமை பயந்த பேருகோளி தகுமேனிற்
றன்னியல் பன்றத னுபாதி வசத்தான்
மன்னிய தன்றிமை தான்றனின் மாயா
தோன்ரு னசுத்த னன்ரு மன்றே
யாங்கோரு காலத் தோங்கிய தாயி
னந்தமி லவித்தை வந்தணே வதற்கோ
ரேது வேண்டும் புயலியல் பேனின்வீ
டோத வேண்டா வோழிந்தோ ரினுமுறுங்
களங்கம துறவுறு மவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளேயாட் டாயி
னவித்தை யேன்பதோன் றன்னியந் தன்னி
லுதிக்கு மேன்றமுன் னுரையு மறந்தனே
நுண்ணூற் குடம்பை நுந்துழி போலுட்
படுநேறி யதனுல் விடுநேறி யிலதாற்
தலேமையு மறிவு மிலதேன வித்தையை
விடுத்தேடுத் தாணரும் வேற்ரே ரன்றே
யோளிகோ டாமிரங் குளிகைபேற் ருங்கத
னவித்தையை வித்தை தவிர்க்குமேன் றுரைக்கி
னித்த னறிவன் சுத்தனேன் றுரைத்த
வித்தக மேன்னீ வித்தையும் வேருேன்
றேம்ம ஞேரி லோருவ னின்னிறை
யம்ம சைவந் தவனீ யன்றே

பிரமாதா மறுப்பு:—பேத்தம்

பன்மணி பசுநற் பரத்திர மேனவு
நன்னூல் பானீர் நற்கதி ரேனவு

முடலையு முணர்வையு முவமித் தணையேற்
றடமணி சரடோடு தாங்கூ டலவே
யுணர்வுணர் வொழியி னுலகுணர் வுறினின்
பாலும் பசுவுஞ் சாலுஞ் சாலக்
கலம்பல வன்றிச் சலம்பல விலதெனக்
காணுந ரின்றி வீணின் விளம்பினை
யாடியு ணிழல்போற் கூடுதல் கூறிற்
றன்னிழல் கொண்டு தற்பணஞ் சலிக்கின்
மன்னிழல் கொண்டுடல் வந்தகன் றிடுமே
மன்னயக் காந்த மென்னவுடல் பிரம
சன்னிதி யளவிற் சலித்திடு மாயி
னகண்டிதன் சன்னிதி யலதில தெவையு
நடந்திட வேண்டுங் கிடந்திடப் பெருவே
காந்தத் திரும்பு காட்டுநர்ப் பெறிலயஞ்
சேர்ந்திடு நீக்குஞ் செயலதற் கிலதே
கனுத்துயர் கயிற்றர வெனுச்சில தொடுத்தனை
கனவின் பயனு நனவின் பயனும்
வினையின் பயனவை பொய்யென வேண்டா
வுடன்மா ருட்டக் கடனது கருதுக
வுற்ற புற்று மற்றதிற் கயிறு
முடலுங் கூடச் சடமென வறிதி
யறிவு கயிறென் றறியா தன்றே
யச்சம தடைதல் கொச்சமை யுடைத்தே
யின்னுமக் கனவி லிருளுறு கயிற்றிற்
பின்னுநின் பிரமம் பிரமித் திடுமே.
துன்னிய வினையிற் செம்மலர்ப் பளிங்கெனத்
தானுந் தகைமை யானுன் மலரென
வொருபய னன்றிப் பலபயன் மரீஇய

திருவினை தருபய னெனநனி வேண்டி
லாண்ட வித்தையு மவித்தைகோ டாக்கையு
மீண்டிரு வினையு மியம்பினை பரத்தைக்
கள்வரைப் பிணிக்குங் காவல ரேனமுய
றேல்வினைத் தொடக்கிற் றேன்றுடற் சிறையிட்

டிருவினை யூட்டு மெம்மா னம்மா
னருவினை யுடற்க ணவத்தைக ளுரைத்தனை
யாருறு பவர்பர மகண்டித மடங்கா
தோர்வில துடல்சட முறுநெறி யாதெனின்
மன்னிய கரண மாருட் டத்திற்

பன்னின மென்னி னிவையோ பரமோ
முதலிய தாயி னிவைபிறழ் வெய்தா
திவையெனி லுனது மொழிபழு துளதே
யுடற்படு பிரம முறுமெனிற் சாளரத்
திடத்தகு முறுவிர னுதியளி யேறிதுய

ரங்குலி தானே யருந்திடி லுடற்கட்
டங்கிய வறிவு தனித்துறு மன்றே
தற்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்ரு
ணற்கணிற் றுயர நணுகாத் தகைத்தேனி
னின்மொழி விரோதமுங் காட்சி விரோதத்

தன்மையு முறுமவை தவறில வாகா
யாமுடைப் பதிவகை யாவரும் பலகலை
‡சொல்லுத லெளிதரி தத்தொழில் புரிவெனப்
புல்லிய பழமொழி புதுக்கினை யன்றே
யகண்டித மெனநீ பகர்ந்தமை தனக்குப்

‡ 'சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்' என்பது திருக்குறள். 664

பந்த மிதுவெனத் தந்தமை கருதில்
வானி னடக்குங் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட வொருவனி யன்றே

சீவன்முத்தி மறுப்பு

பந்தம தகல வுந்து விவேகம்
வான்வளி யெனத்தனிற் ருனே தோன்றின்
முன்புள தாயின் மயங்கா திலதெனிற்
பின்புள தாகா திலதுள தெனின்வெளி
மலராது தருமனல் மரக்கணின் ருகித்
தருவது தகுமெனிற் ருனே தோன்ரு
விறகி னுதித்த கனறகு மாயி
னவித்தையி னுதித்த வித்தை யம்மரத்
துதித்த விவேகம் வித்தையென் றுரைத்த
வெந்தழ லனைய விவேக முதித்த
திந்தன மனைய திறையிலன் றற்றே
யிற்படப் பிரிப்பின் மெய்ப்படு மேவற்றையு
மிதுவன் றிதுவன் றெனக்கழி காலை
யதுவே தானே யாயின தென்றனை
வித்தை முன்ன ரவித்தையு மவித்தைமுன்
வித்தையு நில்லா வியனொளி யிருளென
விருளல வொளிக்கு மொளியல விருட்கு
மொருகா லத்து மொருபய னிலதா
லிரண்டையு நுகரு முரண்டரு விழியென
வித்தையு மவித்தையு முய்த்ததொன் றுளதே
தானே தானு மானுற் பயனென்
றன்னிற் றன்னைத் தானே காணிற்
கண்ணிற் கண்ணைக் காணவும் படுமே
தன்னல மதனைத் தானே நுகரு

மேன்னின் முன்னல மேய்தா திருந்ததேன்
கட்டி போலேனக் கதறினே யின்பம்வந்
தோட்டிடும் வித்தை யுடையயா யிடினே
தத்துவ மசியேன வைத்தமுப் பதத்திற்
கோன்றே போருளேன் றன்றே பகர்வது
நீபுலி யாயினே யேன்ருங் குணரி
லாயினே யேன்றது மாகுவ மைத்தா
ஞேயா யினமே லாயா யேன்ரு
லகமே பிரம மாயின தேன்ருற்
சகமே யறியத் தான்வே றன்றே
யுண்மையிற் சலமில வுடற்சஞ் சலமுறும்
வேண்மதி போல விளங்கிடு மேன்றனே
யசல ஞகிச் சஞ்சல சலத்துச்
சலன மேவின மேனமதி காண
வேண்டும தன்றிக் காண்பவர் பிறரே
லீண்டுன தேக மேன்சேய்த தியம்புக

பரமுத்தி மறுப்பு

உடல்விடக் கடத்துட் படுவேளி போலேனில்
விட்டேன் பேறவுடற் பட்டேன் படமற்
றிகலற வோருவ னிவ்வகை தேளியி
லகிலமு முத்தி யடைந்திட வேண்டு
மறிந்தோர் முத்தி யடைந்தோ ராயின்
பிறிந்தோ ருயிர்பல பேதத் தன்றே

பிரமஞானம் வாரா தேன்றது

கன்ம காண்டங் காரண மாக
மன்னும் விவேக மேன்னி லவித்தைக்

கேது காரண மோதினை யில்லை
யிதற்குங் காரணம் விதித்தல்வேண் டின்றே
யரணியி லுதித்த கனலவை கவர்வென
விரதத் துதித்த விவேக மழித்தல்
வருந்தி யாயினுந் திருந்திய வேத
நீதி யெல்லா நீத்துப் போதமோன்
றறியார் தாமு மவ்வழி நடத்தல்
பொறியோ போத நெறியோ விதுபவ
நீங்கிடு நெறிதரு பாங்கினைப் பழித்த
னன்றி கொன்ற லன்றே யன்றியு
ஞால நீதியு நான்மறை நீதியும்
பாலருன் மத்தர் பசாசரி லெனவு
முறங்கி னேன்கை வெறும்பாக் கெனவுந்
தானே தவிரா தானுற் புரியா
தொழிந்திடி னிரயத் தழுந்துத றிடமே
யுய்த்தோ னன்றி முத்தி யுரைத்தல்
பித்தோ பிரமஞ் சேத்தோ பெறுவ
துடலையு நீயே சடமெனச் சாற்றுனை
வையினும் வாழ்த்தினுங் கொய்யினுங் கொளுத்தினும்
வணங்கினு முதைப்பினும் பிணங்குதல் செய்யாப்
பிரமத் தன்மை பெறுவதெக் கால
மிருக்கு நாள்சில வெண்ணினூல் கதறித்
தருக்கம் பேசித் தலைபறி யுற்றுக்
கண்டோ ரீந்த பிண்டமுண் டலறிப்
பன்னே யாக்கை தன்னே யுற்றுடல்
விடவரு மென்று நடுநடு நடுங்கி
விட்டோர் தெய்வத் தொட்டின் றன்றியும்
யானே யெவரு மானே னென்றலி
னவ்வவர் சீறி யவ்வவர் வாளுட்

சேவ்விதி னிரயஞ் சேர்த்துவ ரதனுல்
மாயா வாதப் பேயா வுனக்குத்
தேவரி லோருவருண் டாக
மேவரு நரகம் †விடுத்தலோ வரிதே. 4

ஐக்கியவாதி சங்கற்பம்

பேத்தநிலே

(5) அரிதேர்ந் துணராப் பேரியோ னுரைத்த
பதிபசு பாச விதிமுறை கிளக்கி
லீச னேக னேண்ணிலி பசுக்கள்
பாச முருவகைப் பரிசின துலகத்
தாயவ னுயிர்க்கு மாயையி னருளா
லிருவினைத் தோகையி லுருவினைத் தருமாற்
கருமுகி லடர விரிதரு கதிர்போன்
றறிவா முயிரிற் பிறியா தேயு
மீட்டு மிருபய னூட்டிடு நியதிக்

முத்திநிலே

கோருபோழு திருபய னுகர்வுற மருவுத
லின்மை யாதன் முன்னிய காலேச்
சத்தி நிபாத முற்றிறை யருளா
லுருவுகோ டுலகு தேரிவுற மருவி
மாசுறுந் தூசு தேசுற விளக்குந்
தன்மையி னுணர்த்தும் புன்மைக ணீங்கி
நீரு நீருஞ் சேருந் தகைமையி
னறிவினே டறிவு சேறிவுறப் போருந்தி
யோன்ரு மேன்பதை யுலகோர்
நன்ரு முத்தி யேன‡நவின் றனரே. 5

† விடுதலோ. ‡ நவிற்றினரே.

ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம்

பேத்தநிலே மறுப்பு

(6) முத்தி யேன்ப தேவனே சுத்த
வறிவேனிற் பாசஞ் சேறியா மாயை
யுருவிரு வினேயால் வருமிரு வினேயு
முருவா லன்றி மருவா திவற்றின்
முந்திய தேதோ வந்தணே வதற்கோ

ரேது வேண்டுந் தானியல் பேன்னின்
வீடுற் றவரினுங் கூடக் கூடு
மீங்கிவை நிற்க நீங்காக் கருவிகள்
கோண்டறி வறியக் கண்டது மன்றி
மருவிய வுருவு துயில்பேறுங் காலேச்

சிறுபோறித் தறுகட் கறையணற் சுடிகைத்
துத்திக் கடுவுட் டுளேயேயிற் றுரகக்
கோத்தயல் கிடப்பினுங் குவைதரு நவமணி
யோருபாற் றுதையினும் பேருகார் வத்திஞே
டச்சமு மணுகாக் கோச்சமை யேன்னே

கருவி யாவும் பிரிவுறு நிலேயேற்
போறிபுல ஞதி குறைவற நிறைந்து
காட்சிய தளிக்கு மூட்சியின் முன்னர்க்
கோடுத்தோ ராழி விடுத்தவர் நாடிக்
கோள்வோர்க் காணு துள்கி மீண்டுழித்

தந்தவர் கண்டாங் கந்தமி லதனேத்
தருக வேன்னும் பேருமதி பிறங்கும
தறிவி லாமையேன் றனேயது மலமாக்
குறிகோ ளாள ரறைகுவ ரன்றே

முத்திநிலை மறுப்பு

அறிவிற் கறிவு செறியவேண் டின்றே
யுண்மையி லிருமையு மொளியே யெனிலொரு
தன்மை யாகமுன் சாற்றின ரிலரே
முன்பு நன்றுட ஞொன்றிய காலை
யின்ப மெய்துதற் கிலதுயி ராதலி
னீயலை பொருத மாயா வாதி
யாயினை யமையு மருணிலை கேண்மதி

பாடாணவாதி சங்கற்பம்

பேத்தநிலை

மூல மலத்தாற் சாலு மாயை
கருமத் தளவிற் றருமுரு விறைவன்
செறிந்திரு பயனு நுகர்ந்திடு முயிர்க
ளிருளுறு மலத்திற் பருவரற் படுதலி
னிடையிரு நோக்குந் தடைபட் டோரிற்
றுயருறு மதனுற் செயிருறு துன்பம்

முத்திநிலை

கோத்தை மாந்த ருய்த்துறுந் துயில்போற்
காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் தனரே. 5

பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்

(7) வகுத்துரை பெருகத் தொகுத்திடு முத்தி
நன்று நன்றிரு ளொன்றிய மலத்தா

முளத்திற் குறுபோறி சேறிபுல னுகர்தல்
விளக்கிற் றிகழு மேன்மைய தன்றே
கருவிக ளகல்வுழி மருவிய துயரமு
நன்றேன லாகுந் துன்றிய படலத்
திடைதடைப் பட்ட சுடர்விழி மாந்தர்
படல நீங்குதல் கடனு தலினே
காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் துரைக்கிற்
†கரணு பாவ மரணங் கருமர
மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவ ரன்றே
யனைய கதிக்கோர் முனைவரும் வேண்டா
தனிதரு துயர மேனுமிது திடமே
பாடாணத்திற் கூடா முத்தி

பேதவாதி சங்கற்பம்

யீசன தருளாற் பாசத் தோகுதி
சேறிவுறு சேம்பிற் கறையுறு களிம்பு
குளிகை தாக்க வொளிபேற் றுங்கு
நித்த சுத்த முத்த ராக
வைத்தன ருலகின் மறைவல் லோரே. 7

பேதவாதி சங்கற்ப நிராகரணம்

(8) மறைக ளாகமத் துறைகண்மற் றேவையு
நாசமில் பதிபசு பாசமேன் றுரைத்த
லயர்த்தோர் குளிகைச் சயத்தாற் றும்பிரக்
காளித நாசம் பாசத் தேய்த்தல்
கூடா தன்றியுங் குளிகை சீருண

† 'கரணந் தப்பிஞல் மரணம்' என்பது ஒரு பழமொழி.

நீடா தழித்த நிலைநிலை யாதலிற்
பேத வாத மோதுதல் பிழையே
யின்னு மின்னுயி ரேமங் குளிகை
தன்னி லங்கியந் தருவது திடமே
வீடித் திறத்தினிற் கூடக் கூடா

சிவசமவாதி சங்கற்பம்

பாசமும் பசுவு மீசனு மென்றிம்
மூவகை யுணர்வுந் தான்முதன் மையவாய்ப்
பாச வைம்புலன் றேசுற வுணர்த்தப்
பசுத்தனி ஞானம் புசித்திடு மன்றே
யினைய ஞானம் பிரிவுற வேரியாச்
சேந்தழ றகுநேறி யந்தமி லுயிரு
மறிவா யோன்று மறியா தன்றே
யிவ்வா றேழுகு மேனை யுயிர்க்கு
முன்னுேன் றனது முதிரோளி ஞான
மறியாப் பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த
வண்டேன வுயிரைக் கோண்டிடு முயிரது
தன்னை நோக்கித் தானது வாகி
யைவகைத் தோழிலு மேய்வகை யுணர்வும்
பிரியா வாறு பேற்றுத்
திரியாப் பேரியோர் திரட்சிசேர்ந் திடுமே. 8

சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்

பேத்தநிலை மறுப்பு

(9) சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமு
மோருகா லன்றித் தேரிவுற நிற்கி
லோண்பொருள் காணும் பண்பினுக் கோருகாற்
பரிதியு மதியு மேரிதரு விளக்கும்
வேண்ட லின்றே காண்டகு காலை

யோன்றேன் றாக நின்றறி வுறுமேனி
லங்ஙிய மறியா மன்னுயிர் போறிபுலன்
றானே வறியா தலைவர்க் குலகினை
யானா வறிவா லறியவேண் டின்றே
கோழுந்தழ றகுமேனி லழுந்திடு மவத்தையிற்
றிரியாத் தலைவர் தேரியாத் தன்மைவங்
தேய்தலாகா மேய்யுறு போருட்கு
முன்னர்க் கீடந் தன்னேன வேடுத்த
வேட்டுவ னியல்பு கூட்டல் பேறாதே
வண்டிறும் பேடாவுட் கோண்டது தனக்கு
மந்திர வாதந் தந்தது மிலதே
யேடுத்திடு மதனா லடுத்ததேன் றறையிற்
கருமயிர்க் குட்டி யிருசிறைப் பறவை
யாயின தேடுத்த தாயர்சாற் றிலரே
பிறவிப் பேதத் துறையிவை கிடக்க
வேயு மித்திர னாயுங் காலை
யோகத் தகுதி யாகத் தகுமே
ஞான மின்மையேன் றோதுவ தேவனேனி
லுயிரு முணர்வும் பயிலுத லின்றி
வேட்டுவ னுருவ மேன்புழு வுணர்வு
கூட்டுத லாலுருக் கூடுத லானு
முத்தியி லிறையிற் பற்றுத லின்றித்
தன்னுரு வணைந்த பின்னத னுணர்வு
மாறுத லானு முறுடைத் தன்றே
யீசன தியல்பரு ளேய்துயி ரியற்றல்
பேசுத றவறேனப் பேருமறை யறைய
வைந்தோழி லுயிருந் தந்திட றகுமோ
யாவதேன் முன்னா † னாவலர் பேருமான்

† நாவலர் பெருமான் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண்டொரு முதலை யுண்டமைந் தனைவர
வழைத்தன னென்றுய் பிழைப்பில ததூஉந்
தந்திட வேண்டு மென்றன ரன்றே
யின்னவை கிடக்க முன்னவன் றன்மை
யெய்தின ரெல்லாச் செய்தியுஞ் செய்வ
ரிரும்பெரி யெய்தித் தருஞ்செய றகவெனிற்
பொருணிலை கிடக்க வொருதிட் டாந்தப்
பேறே யாயிற் சீருக் கதுவிய
புனலொரு புடைசேர் கனறகு மாயினும்
வேறுரு பொருளை நீருக் கிலதே
நெருப்பெனு மிதனி னுருத்தனி காட்டுக
வங்கியு மொன்றிற் றங்கினின் றல்லது
தன்றொழி னடத்தா தென்றறி யினிநி
யிரும்பனற் செய்தி தரும்பரி சுளதோ
வதுவேனு ரலகை போதிதருங் காலை
யதன்செய லனைத்து மிவன்செய லாமா
லவனிவ ணுகி லிவனவன் செய்திக்
கென்னவை யென்னிற் பின்னுறு செயலு
மதன்செய லன்றி யிவன்செய லாகி
லிவன்செயல் பேயின் றன்செய லாகி
யிருந்த வாவெளத் தெரிந்திட வேண்டுந்
தெரியா தாகிற் புரியிற் கடுங்கன
லெரிந்த தென்னு மிதுதகு மன்றியு
மவனிவ ணுகி லிவனவன் செய்தி
யென்று செய்வா னென்றிய மதத்தா
யெல்லா மறிதல் செல்லா துயிர்கள்
சிற்றறி வெனுமிச் சொற்றவ ருகு
மென்பதே னலகை தன்பத மடைந்தோர்
கொண்ட வாறு கண்டன மென்னின்

முங்கை யந்தருற் றோங்கிய குணங்குறி
செய்வதே னின்னும் † பௌவறுற் றழுந்தினு
நாழி கொள்ளா தாழியி னலைபுன

லதனாற் கருத்து முதலுள தாக
வேண்டு மன்றே யீண்டினி யமையு
மெல்லா மெனுமிச் சொல்லாற் படும்பொரு
ளனைத்துந் தாக்காத் தனிப்பரத் துற்றவர்க்
கெவ்வகை யுணர்வு செய்வதேன் செப்புக

வொன்றி னொன்றா மொன்றா துலகி
னின்ற போதுயிர் நேரா மன்றே
முத்தி யுற்ற நற்றவ ரவையிடைச்
சேர்வ ரென்றனை சார்தரு முத்தி
சாலோக் கியமோ சாயுச் சியமெனிற்

பந்த முற்ற கந்தல் கழித்த
வறிவினோ டறிவு பிறியாப் பெற்றி
வேண்டு மென்றதற் கீண்டிவ ரிவ்வா
றிருப்ப ரென்பதற் குருத்தான் வேண்டு
மண்ணல தருளி னண்ணி யிருப்பினுஞ்

சீவன் முத்தரென் றோதின ரகன்று
நீங்கியு முருவ நீங்கா தாயி
னோங்கிய முத்தி யாவதென் னுரைக்க
செடியுட லணுகாக் குடிலை கொடுக்குமென்
றோதினை நீயே பேதாய் பகட்டுர
லொளிர்சினை முச்சித் தளிரெனு மிதுதகு
மிச்சா ரூப நச்சின ரென்னின்

---

† 'ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலி, னாழிமுகவாது நானாழி' என்னுஞ் செய்யுள்.

மும்மலத் தேது மின்மைய தன்றே
யிதுவளர் முத்திப் பதமென வியம்புவ
ரீங்கிவை நிற்க

சங்கிராந்தவாதி சங்கற்பம்

நீங்கா தோளிருயிர்
விளக்கென நிற்கு மளப்புறு மறிவின்
றிறைவர்க் கேது மறியவேண் டின்றே
மன்னு மான்ம சந்நிதி யளவிற்
காந்த பசாசத் தேய்ப்ப வாய்ந்த
வுயிருட லியக்குஞ் செயலுறு பூட்டைப்
பலவகை யுறுப்பு மிலகிய தோழில்போ
லைம்போறி புலன்க ளின்புறு மன்றே
யினைய வாய்தலி னிகழ்தரு பயனவை
யந்தக் கரண முந்தி யுணர்ந்திடு
மிவையகல் வுழியைம் போறிபுல னிகழா
வுயிர்நீங் கிடிலுடல் செயலில தன்றே
யிவ்வகை வினையின் செவ்விதி நடத்தும்
பழமல நீங்க நிகழுங் காலை
யேற்றோர் முகவோளி தோற்றுங் கலனெனத்
தலைவன தருளுயிர் நிலவிடு நிலவக்
காட்டத் தங்கி மாட்டத் தங்கிய
தன்மையு மளத்துப் புல்வையி னீப்பும்
போன்றது வாகித் தோன்றிடு மதனுற்
பசுகர ணங்கள் சிவகர ணங்க
ளாக மாறி யறிவு
மேக மாமுயி ரியானென தின்றே

சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்

(10) இன்றுன துரையி னன்றி யுயிரோளிர்
தீபம் போலத் தாபந் தரினிருள்
சேறியுந் தன்மையே னறிவில தாகி
லோளியேன † வுரைத்த தேளிவதற் கேதாஞ்
சந்நிதி யளவின் மன்னுஞ் செயலுடல்
காந்தம் போல வாய்ந்த தேன்ற
தன்மையு முணராப் புன்மைய தன்றே
யுயிருட லியக்கிற் றுயில்பேறுங் காலைச்
சேய்ததேன் மனுதி யேய்துயிர் போறிபுல
னடத்த வாவியுஞ் சடத்தன வாயிற்
பூட்டையிற் பூணி கூட்டல் பேருதே
புலனைம் போறியி னிலவிடு மேன்றனை
யஞ்சு மோருகாற் றுஞ்சா தறிதற்
கழிவேன் றருச்சேழு மலரிலை யோடுபலங்
கனிதரு வதுபோ லினையவை யைந்து
மோன்றேன் றுக நின்றறி வுறுமேனி
லோன்றின் பயனனி யோன்றறி யாதா
லிதுவே யல்லது கதுமேன விருசேவி
யிருகூற் றேருகாற் றேரியாத் தன்மைவந்
தேய்து மனுதியு மேய்யுயிர்ச் சேயலுந்
தனக்கில தோருவற் கேனத்தேளி கிலையே
நோக்கு முகவோளி நீக்கா தானேனக்
கவருந் தன்மை முகுரம் போலக்
கோடுத்தது கோடற் கடுத்துதுண் டன்றே
காட்டத் தங்கி கூட்டக் கூடு

† உரைத்தல்

மிந்தனத் தியற்கை வேந்தழ ருங்கா
வுப்பளத் தடுத்த புற்பலா லங்கள்
சடத்த வேனுங் கொடுத்தது கொள்ளுந்
தன்மை யுண்டுனக் கின்மைய தன்றே
யவமுறு கருவி சிவமய மாமெனக்
கூறினை யாகம் வேறுருக் கவரா
தேன்பதே னவைமுற் றுன்பந் துடைக்குந்
திருவருண் மருவ வுரியன வேன்னி
லருளுரு மாயா விருளின தாங்கோல்
சத்த பரிச ரூப ரசநறை
யேத்திறத் தினதரு ளியம்புக வன்றியு
* நிறைந்து நீயாய் நின்றனை யேனு
மறைந்தைம் புலனுய் வாரா யென்றுங்
‡ கரண மேல்லாங் கடந்தனை யென்று
† மரணமை யைந்தி னப்புறத் தேன்று
முன்னருட் டலைவர் பன்னின ரேனவு
மினையவை யோழிய வறிகுவ தேவ்வா
றேன்ற நிற்கலிக் கொன்றிய வின்பங்
கூறுத றகுமருட் பேறினை யன்றே
யேக முயிரறி வாக மோழிந்தனை
யிருபோரு ளோருமை மருவிய திலதே
யிவ்வகை கிடக்க மேய்வகை கேண்மதி

ஈசுவர வவிகாரவாதி சங்கற்பம்

பஃறுளைக் குடத்தி னுள்விளக் கேய்ப்ப
வறிவுள தாகு முருவுறு முயிர்கள்
கண்ணு லோசையுங் கந்தமுங் கருத

* கைலை பாதி காளத்தி பாதி யந்தாதி. 48. ‡ திருக் கோத்தும்பி. 9, † திருநாவு. திருவாரூர். பண்-காந்தாரம். 10.

வோண்ணு தேன்னு முணர்வுடை மையினு
லவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகள்
சேவ்விதி னிறுவிச் சேர்ந்தவை நுகரு
முல மலத்தின் பாகம்வந் துதவுழீஇ
யிருடரு மிற்புக் கோருபோருள் கவரத்
தீபம் வேண்டு மானவா போல
மோக மாமலம் போக ஞான
விளக்கர னருளாற் றுளக்கறப் போருந்தி
நீர்நிழ லனைய சீர்பேறு கடவுளைச்
‡சலமில னுகிச் சார்ந்தவர்க் கேன்று
நலமிக நல்கு நாதனை யணைந்து
பூழி வேம்மை போருந்தா துயர்ந்த
நீழல் வாழு நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுறு துயரங் களைந்திருந் திடுமே. 10

ஈசுவர வவிகாரவாதி சங்கற்ப நிராகரணம்

(11) இருந்ததுன் கேள்வி திருந்திடு முயிர்க
ளறிவேனில் வாயிற் போறிபுல னேன்னை
மற்றவை பற்றி யுற்றறிந் திடுதலி
னறிவேன வழங்கு முயிரேன வுரைத்தல்
காணுங் கண்ணினன் கைகோடு தடவிப்
பூணும் போருளின் பேயர்பல புகற
லேன்னுங் கிளவி தன்னேடு தகுமே
யவ்வப் புலன்கட் கவ்வப் போறிகளைச்
சேவ்விதி னிறுவலி னறிவேனச் சேப்பினே
யறிவி லாமைகண் டனமணே புலற்குப்

‡ 'சலமிலன் சங்கரன்' என்று தோடங்கும் தேவாரம் - திருநாவுக்கரசு. பஞ்சாக்கரப்பதிகம்.

பொறிக ளேவலி னறிவொடு பொருந்திற்
கண்டதோர் பொறியாற் கொண்டிட வேண்டு
முதவிய தோன்றுற் கதுமென வியற்றின
ருண்டோ வென்னிற் கண்டன மேனுட்
கடவுளிற் கடிமலர் முடுகிய மதன
னங்க மனங்கந் தங்கிடக் கிடந்தது
வையின் றிரளிற் செய்ய சிறுபொறி
மாட்டி முட்டின தன்றே மீட்டுந்
தேனமர் தவிசி ஞன்முக னுச்சி
யறுத்ததுங் கருவி பொறுத்தோ வன்றே
யீசன தியல்பு பேசுத றவிர்க
காழி மாநகர்க் கவுணியர் கடவுண்
ஞான மாகிய நற்பதி கங்க
ளெழுதுறு மன்பர்த மின்புறு மொழியாற்
களிறென வணங்த கன்மனப் புத்தன்
முருட்டுச் சிரமொன் றுருட்டின ரன்றி
வாய்ந்த வாளொன் றேந்தின ரிலரே
யென்றது மீர்வாள் கொன்றதென் பதுபோற்
றனித்துணை யருளாற் றுணித்தன ரேன்ப
வாதலின் வாயி லளவினி லறிதலி
லேதமி லறிவுயிர்க் கெய்துத லிலதே
யிருட்கு விளக்கொன் றேந்தினர் போல
மருட்கு ஞான மன்னுத லுளதே
யென்றனே கருவிக ளியாவு மசேதனந்
துன்றிய வுயிருந் துரியத் தன்மைய
ஞதலி னந்த ரனேவருங் கூடித்
தீதற வருநெறி தெரியுமென் றற்றே
நீர்நிழ லனேய சீர்பெறு கடவுளேச்
சேர்ந்தவர்க் கின்பம் வாய்ந்திடு மென்றனே
பாதவ மென்றுஞ் சேதன மின்மையி

னிளைத்தோர் வம்மி னென்பதுந் துன்பம்
விளைத்தோர் தம்மில் வெறுப்புமொன் றிலதே
பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியி னுள்ளுற வழுங்கி
யாற்றுத லின்றி யாறியங் கினர்முன்
றேற்றிடு மென்று சொல்லவு மிலதா
லிவ்வகை கடவுட் கியம்புத றவறே
பாச ஞானப் பழிவழி யொழிக
வீசன தருள்வழி யியம்புவன் கேண்மதி

நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம்

புவன மியாவையும் புனிதன துருவாஞ்
சிவமுஞ் சத்தியு மெனத்தெளி யவற்று
ளசேதன மென்றேன் றறைதற் கிலதது
சேதந நுகர்பொழு திரண்டுமோர் திறத்தே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையி னிற்கும் போதமென் றறிக
பொற்பணி பேதம் புரைவழி யொருவழி
நற்பொனிற் றிகழ்வென நயப்பதொன் றன்று
லாவது மாகா தொழிவது மெனுமிப்
பாவக முண்மை பாரா தோர்க்கே
பாரா தோரெனப் பல்லுயிர் பகர்தலி
ஞாய்ந் துரைக்கி னவைபிற வல்ல
பலபல பேத மிலவென் பொருமில்
கண்ணின தொளியைக் கண்ணின தெனிலது
திண்ணிய விருளிற் செறிபொரு டெரித்தலு
மின்மை மின்மினி யெனவிரு கண்மணித்
தன்மை தானுந் தாவில ததனுற்
கண்ணின துருவு மதிற்கதி ரொளியு

நண்ணருஞ் சத்தி சத்தர்க ணடிப்பே
[1] யுலகே ழெனத்திசை பத்தென வொருவன்
பலவாய் நின்ற படியிது வென்று
[2] மூனு யுயிரா யுணர்வா யென்று
[3] மானக் கண்ணே மணியே யென்றுந்
[4] தாமே தாமாய்ச் செய்தன ரென்று
[5] நாமே சிவமாய் நண்ணின மென்றுங்
[6] காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வு
மோயா துண்போன் றனே யென்று
[7] மறிவோன் றனு மறிவிப் போனு
மறிவா யறிகின் றேனு மறிவுறு
மெய்ப்பொரு டானும் வியந்திது வெனப்படு
மப்பொரு ளியாவு மவனே யென்றுந்
[8] தாய்தலைப் பட்டங் கொன்றுய்த் தென்று
[9] மேதம தறநான் கெட்டே னென்று
மின்னு மின்னு மிறையோ னளித்தவை
பன்னி லெண்ணரும் பான்மைத் தாதலிற்
றருபொருள் கொள்பொரு டருவோன் கொள்வோ

1 திருவாசகம். திருத்தோணோக்கம். 5
2 திருநாவு. தே. திருவானைக்காத்தாண்டகம். 2
3 ஷை திருவாவடுதுறை ஷை 1
4 திருஞான. திருப்பிரம. திருத்தாளச். 7
5 திருவாசகம். திருத்தெள்ளேணம். 4
6 திருநாவு, தே, நின்ற திருத்தாண்டகம் 5
7 பதினொராந் திருமுறை. காரைக்காலம்மை. அற்புதத்திருவந்தாதி. 20
8 கருவூர்த் தேவர் திருவிசைப்பா. கங்கைகொண்ட
9 திருவாசகம். திருத்தெள்ளேணம். 18 [சோ. 7

ஞெருபோரு ளிவ்விய லுவப்பேன வுணர்க
நுகர்போருள் சத்தி நுகர்வோன் சத்தனேன்
றிகலறு முணர்வுவந் தேய்துத லரிதே
நானவ னேனுமிது நவைவழி நல்வழி
தானவ ஞகை யிதுசா யுச்சிய
மித்திறன் றேளிய வுய்த்திடு மளவு
மியாதோரு வகையி னீதிய தாகத்
தானறி வழியே தலேநின் றேன்று
மூனுயிர் சிவத்தி லோடுங்கிட நடத்தி
மூடு முழுமலம் வீடுங் காலேக்
கருவிக ளளவிற் புரிதரு மறிவு
சாக்கிரங் கனவு நீக்கமில் சுழுனே
துரிய மேன்றவை பயிறரு மறிவு
துரியா தீதந் திரியாத் தன்மையி
லிறையரு ளுதவுங் கறையற மாறி
யறிவே யாகும் பிறியாக் கருவிக
ணிறைமுத லவத்தையி லறிவில தாகத்
துரியா தீதத் தோற்றந்
திரியா தநுநற் சிவகதித் திறனே 10

நிமித்தகாரண பரிஞமவாதி சங்கற்ப நிராகரணம்

(12) திறம்பேற நீயிங் கறைந்தமை கருதிற்
புவன மியாவையும் புனிதன துருவேனி
லவன்முதற் காரண மன்ரு மேன்னி
னிமித்த காரண நிகழ்த்துக வேனநீ
யவனே காரண மனேத்துமேன் றறைந்தனே
மண்டனிக் குலாலன் றண்டசக்க ராதி
காரண மூன்று மோர்பே ரணேந்ததித்

தாரணி யதனிற் கண்டது சாற்றுக
வத்த னியற்று மித்தொழில் பிறர்க்கோ
தனக்கோ வீணே வெனக்கீ தியம்புக
வீணெனிற் பித்தர் மாண்பறுந் தொழில்போற்
றலைமையு மறிவு மிலதென விகழ்வர்
தனக்கெனி லஃதுமு னிற்பதொன் றன்றே
தன்போ லறிஞருந் தலைவரு மிலரான்
மின்போ னிலைமையை வேண்டலும் பழுதே
பிறர்க்கெனிற் பிறரும் பிறர்க்காம் பொருளும்
பொருட்கமை கருவியு மதற்குபா தானமுஞ்
செய்கையு மென்றோ ரைவகைத் தானொடு
மாறாச் சைவர் கூறா ரென்றா
னின்சித் தாந்த மவசித் தாந்த
மென்சித் தான்ற வசித்தைமற் றீனு
தசித்தில தென்னி லசித்ததென் னுலகி
லுலகா யதனும் பூதக் கூட்டஞ்
சலமேற் கொப்புட் டகுமெனச் சாற்றினன்
றீய கருமச் சீனர்சா வகர்பிறர்
நேய மில்லென நிகழ்த்தின ரிலரே
காண்டல் விரோத நிற்பிறர் கணித்தில
ரீண்டுன துரைக்குமற் றியார்கரி யுடலுஞ்
சித்தோ சித்தின் சேர்வாற் சித்தெனிற்
கடப டாதியு முடற்கட் சிதைவென்
தாபர வுயிர்போற் றநுவொழிந் திவற்றின்
மேவிய வுணர்வு விரவிடு மென்னிற்
சடத்துயிர் போலெனச் சாற்றினை யாகலி
னுடற்குயி ரிறையை யொழிந்துண் டன்றே
தருதிட் டாந்தமுந் தாட்டாந் திகமு

மொருபொரு ளாகி லுவமை பெருதே
யொன்றே யாகி லுடற்கிறை தாபரத்
தோன்றிய நிலையில் விசேடமென் னுரைக்க
பூதச் சேர்வைப் பேதமென் றறையிற்
சேர்வைப் பேத மென்கொடு செப்புக
கருமத் தளவில் வருமெனிற் பித்த
ருரையிற் றிகழு முணர்வொழிந் தனையே
கருமஞ் செய்வோன் கடவுளன் றுடலு
மருவினின் றிருவினை வளரா நுகரா
கடவுளு முடலின் கண்பட றுஞ்ச
லிடர்நல முறுத லிறங்குத லேறுத
லெவ்வகை யேனுஞ் செய்கையின் ருதலும்
பலகலை யுலகி னிலவுத லானு
மெண்ணரும் பொருளு மிரவியு மொழியக்
கண்ணென வொன்று காண்கையி னாலும்
பாசப் பகுதியு மீசனு மொழியப்
பசுவு முண்டென் றிசையவெண் டின்றே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையி னிற்கு மாயையின் பொற்பெனப்
பொற்பணி யாவும் பொன்னுந் தன்மையி
னிட்கள சகளத் திருவுரு நிலையு
மீச னேயெனப் பேசுவ ரன்றி
யருவுரு வாகி வருமுல கென்னி
லனைத்து மாயை யெனத்தெளி கிலையே
யாவது மாகா தொழிவது மிலதெனும்
பாவக முலகா யதனது பான்மை
கட்கொலை வெகுளி காமங் களவுக
ளுட்படு மிவைவிட மொழியா தாரிலர்

சோம பானஞ் சுராபா னங்க
ளாமென மறைக ளார்செவிப் பறைந்தன
மறையோன் புலைச்சியை மருவு மென்பது
முறையோ வெனிலது புனைமொழி யென்னிற்
சாதி பேத நீதிநீ தவறினு
மேதியை யேறு விழையா விரும்புங்
கண்ணின துருவு மதிற்கதி ரொளியு
நண்ணருஞ் சத்தி நாடக மெனிலதற்
கேதுவும் பயனு மோத வேண்டு
நின்மொழி விரோதமு நீடுல கியற்கையுந்
தன்மசாத் திரமுஞ் சகலமு மென்சேயு
‡ முலகே ழெனவிறை பலவாந் தன்மை
கடமோடு சாரவங் கலச மாதிக
ளடலுறு குயவ ஞயின னென்றுற்
றுனே யாகா வவைதா ஞகா
ஞயின னென்ப தாக்கின னெனவே
யாஞ யென்ப தனைத்து மவ்வகை
தாஞ காமையைச் சாற்றிடு மென்க
தாமே யெனுமித் தனியே காரம்
அழிந்தில ரதுவே யாய்த்தில ரதுவிட்
டொழிந்திலர் பிரிவில ரெனுமிவை யுணர்த்துங்
காயும் பழமுஞ் சுவையு நுகர்வ
தாயவன் றுனு மவன்முதற் றென்னு
மகிலமுந் தெளிய வறிவோன் றுனு
மகிலமு மறிஞரை யறிவிப் போனு
மறிஞர்க் கறிவா யறிகின் றேனு
மறிவிற் கறிபொரு ளாவோன்றுனு

‡ திருவாசகம் திருத்தோணேக்கம். 5

மகிலமு மேனி யானவ னென்னுந்
தருபொருள் கொள்பொருள் தருவோன் கொள்வோ
னொருபொரு ளாயி னுவப்புண் டென்க
நுகர்வோன் றனக்கு நுகர்பொருள் வேண்டிற்
றிகலறக் கிடையா திருந்ததே னிரையமும்
வேண்டா ராயினு மெய்யுறு வியாதிக
ளீண்டா தொழியா திறைக்கிவை யீடல
சத்தியுஞ் சிவமுந் தாமே நுகருமென்
றித்திற னுணர்வுவந் தெய்துவ தேவர்க்கோ
தமக்கே யென்னிற் றாமுண ராமையு
மமைப்பற வுணர்தலு மவர்க்கடை வன்றே
நானு மவனு நவையு நலனுந்
தானவ னுகையு நின்சா தனத்தில்
சகயோ கத்தைச் சாயுச் சியமெனப்
பகர்வது பதிபசு பாசத் தவர்க்கே
யாதொரு வகையென வோதிய திறைநூல்
சொன்னவற் றொன்றன் றென்னில்வீ டெளிதே
தானறி வழியே தலைப்பொருள் பிடித்து
மேனிகழ் பலமும் வீடளித் திடுமே
நிலையாக் கருவியை நிலையாக் கருதிப்
புலையா டுதலு முலகா யதன்பொருள்
குட்டிய மின்றிநற் கோல மெழுதுத
லிட்டம தாயிற் கருவியு மிடங்களுங்
கருத்துற வுரைக்கத் தெரித்திடு மதீதத்
தறிவோன் றில்லோர்க் கிறையரு ளுதவுதல்
பிறிவறி வரிய செறியிரு ளிடத்தோ
ரந்தகர்க் காண வந்தோ ரெம்மை
நீவிருங் காண வேண்டு மென்றுங்
கெடுத்தோர் தீபங் கொடுத்ததை யொக்கு
மிச்செயற் கிறைவன் கொச்சைய னன்றே

கருவி வசத்திற் றெரிவுறக் காண
வேண்டுந ரிலரா லீண்டறி வியாவுஞ்
சிவமே யென்று செப்பினை யவமுறு
பொறிபுல னறியா வறிவது பிரம
மென்றோர்க் குன்போ லிடர்ப்பட லிலதே

யேற்றங் கருவி யிருபதோ டிரண்டும்
போற்றுமைந் தவத்தையும் புகறிரி மலமு
மீசனு முயிரும் பேசினை யஃதொழிந்
தொன்றே யாகு மென்றநின் னியல்பு
தாயர் மனைவியர் தாதியர் தவ்வைய

ராயவ ரெவரையு மோர்மையிற் காணுங்
கோகழி தூர்த்தர் கொடுந்தொழி றகுமே
யாக மற்றத ன்றுணிலை தன்னிலை
யேக நாயக னாகிய விறைநிலை
நாசமில் பாசம் வீசிய வியனிலை

யினையவை யொன்று நினைவினு மின்றி
யுண்டெனு முணர்விற் கண்டது கருதி
லிழுக்கெனும் புலன்வழி யொழுக்கமு மதுவாக்
கொண்டு பண்டையி லெண்டரு மடங்கு
வந்தவர் செய்த தந்தையை யன்றே
புன்மைக ணீங்க வுண்மை கேண்மதி

சைவவாதி சங்கற்பம்

அறிவா யறியு மறிவுயிர் கேவலத்
தறிவில னிருளொடும் பிரிவில னண்ணல்
கலைமுத லாக நிலவிய கருவிகள்
விளக்கென வுதவுந் துளக்கறப் பொருந்தி

யிருவினை நுகர்வில் வருவினை செய்து
மாறிப் பிறந்து வருநெடுங் காலத்
திருண்மல பாகமுஞ் சத்தி நிபாதமு
மருவுழி யருளுரு மன்னவ னணைந்து
சேல்கதி யாய்ந்து பல்பணி படுத்திக்

கருவியு மலமும் பிரிவுறப் பிரியா
ஞான நல்கலுந் தானது நோக்கித்
தன்னையு மதனையுந் தன்முதற் பொருளையு
மின்னவேன் றறியா விருவரு முயங்கி
யொன்று யுறுபய னுவப்பு
மின்றுய் நிற்கு மிதுசிவ கதியே. 12

சைவவாதி சங்கற்ப நிராகரணம்

(13) இதுகதி யாக முதலறி வுயிரேற்
பொறிபுல னீங்க வறிவுயி ரன்றே
யடைகாய் நூறி னிடைசேர் சிவப்பென
விந்தியத் தொகையின் வந்தறி வொன்றுநின்
றின்று மென்ற லன்றே யெந்தை

யறிவில னதீதச் சேறிவிலேன் றுரைத்த
நின்மொழி விரோதமும் பின்முன் மலவு
மன்வயி னிகழா மலமிரு ளிறையொளி
யான்மா விளக்கிற் றகுமருட் கலாதிக
ளீனமி லிவனிடத் தேவ்வா றிசைந்தன

விசைந்த தாயினு மிசையா தாயினு
மசைந்திடு முத்தி சாதன மவமே
சத்தி நிபாதமோ தகுமல பாகமோ
வுய்த்த காரண காரிய மோதுக
பாகங் காரண மாகின் மற்றது

காலா வதியிற் காயா வதியின்
மேலா மேன்னும் வினையுறு மவதியிற்
றுயரேன வுயிர்க்குத் தோன்றிடு மவதியி
னயமிகு மிறைவ னல்கிடு மவதியி
லேதிற் கூடு மோதுக விருவினை

யோத்த வேல்லையில் வைத்தன ரேன்னி
லருவினை தூக்க வருவினை நில்லா
வோருவினை புரிகா லிருவினை யாகா
வோப்புறு மாறு சேப்புக தேசிக
னருளுரு வேன்ற போருளினை யாயின்

மாயா வோருவன் மாயா வுருவினை
யேயா னேய்ந்தவ ரேம்ம னோரே
பல்பணி ஞான காரண மேன்னிற்
றேல்பணி தோறும்பயன் றேடுப்பத னாலு
மோருபணி சேய்யாச் சிரபுரச் சிறுவரு

மரச ராய தருணத் தலைவரு
முதிர்பர சமயத் திதமுறு மரசரு
ஞானம் பேற்ற நன்மையி னாலு
மீனமில் பணியருட் கேதுவன் றேன்றான்
ஞானோற் பத்தி நிமித்தமித் தோழிலேன

வேனோர்க் கிறைநூ லியம்பிற் றேன்னுங்
கருவியு மலமும் பிரிவுற வருடரு
மேன்றனை கேவலத் தேது மறிவிலன்
றுன்றிய சகலத் தருணிலை தோன்றா
வேவ்வ வத்தையி லிறையருள் பேறுகுவஞ்

சேவ்விய ஞான தரிசன மாவது
நால்வகை மாயைப் பால்வரு ஞானம்

பண்டை ஞான மிதுவறி தாவரக்
கண்ட ஞான மிதுவரக் காணி
லீன ஞானிக ளென்போர் யாருமின்
ஞான வேற்றுமை நாடலு மரிதே
தானு ஞானமுந் தலைவனு மென்றனை
ஆனபி னிவனு மிவனது ஞானமும்
பாசமும் பாச ஞானமு மென்றிவை
பேசுவ ரொன்றாப் பெற்றிய வாகலின்
மும்மைப் பொருட்கு மும்மைத் தன்மை
செம்மைத் தென்னிற் செலவுக ளெழுதுக
விருவருங் கூடி யொருபய னாய்த்தென்
றருளினை யிவ்வா றபேதிக ணிலையே

சித்தாந்த சைவாசாரியர் அநுக்கிரகம்

பதிபசு பாச முதிரறி வுகளுட
னாறு முன்னர்க் கூறாப் பின்னை
ரிருபொரு ணீத்துமற் றொருநால் வகையு
மீனமின் ஞாதுரு ஞான ஞேயமென்
றிசைய மூன்றாய்ப் பசுபதி யென்றவற்
றிரண்டா யிரண்டு மொன்றினொன் றாகத்
திரண்டாம் பயனெனுந் திருவரு டெளியிற்
‡ சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றா
மென்றிறை யியற்கை யியம்புத றகுமே
யொன்றா மென்ற லன்றியு முவப்பு
மின்றா மென்றா லென்பய னியம்புக
வென்றனை வினாவு மியாவும் விளங்க

‡ திருவாசகம் 392.

வென்றிகொள் கருத்தின் விரும்பினை யாயி
னதிக்கரை யானெனக் கோதித்தல மந்து
வெண்ணெயம் பதிதிகழ் மெய்கண்ட வனரு
ளுண்ணிலை யுடையோ னொருவ னுரைத்த

தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமி ழுண்மையை
யருளுட னுய்ந்து கொள்ளத்
* திருவருள் வினவ றிருந்திடு மன்றே. 12

சங்கற்ப நிராகரணம்

முற்றிற்று

மெய்கண்ட சாத்திரம்

பதினான்கும்

முற்றும்.

* திருவருட் கேள்வி என்றுணர்க.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

துகளறு போதப் பொருள்வைப்பு முறை

திருவருள் விளையுந் திறம்பல வேனினும்
ஒருவகை யிருபத் தேட்டுடன் பிறவும்
ஆமவை பூதம் ஐந்தின் பழிப்பே
தாமிட மாகச் சார்போறி யறுத்தல்
எழுவளி முயற்சியி னியைந்திடும் பொருள்களிற்
சுழல்வுறு மந்தக் கரண சுத்தியும்
பலகுணம் விடுக்கும் பகுதியைத் தோற்றும்
கலைமுத லேழும் கழன்ற நிலையும்
சுத்த தத்துவ தூடண மைந்தும்
தத்துவா தீதமுஞ் சார்முத்திச் சகலமும்
சகல தேரிசனந் தானருட் கேவலம்
திகழ்கே வலத்தின் தேரிசன மதீதம்
தன்னுண்மை யோடுசை தன்னிய தேரிசனம்
என்னும் பன்முன் றேனவரு மவத்தையும்
உரைதரு ஞான தேரிசனத் தோடும்
பரைதேரி சனமே பரையில் வியாத்தி

---

17 ஆவது அடி பரையில் யோகம் பரையில் போகம் என்றிருத்தல் வேண்டும்.

நிருமல சாக்கிரஞ் சாக்கிரா தீதம்
பகர்சுத் தாவத் தைசுக ருபத்
தோடு சோல்சுகா தீதம் பகர்சிவப்
பேறு பரமா னந்த தெரிசனம்
பரமா னந்த யோகம் போகம்
பரமா னந்த மேலீ டவசம்
ஆனவிப் பதினேந் தவத்தை கூடத்
தான் எழுநான்கு எனச் சாற்றிய பின்னர்
அஞ்சேழுத் தியல்பும் அருளாந் தேசிகர்
தஞ்சிறப் பறிந்து சாரும் புதல்வர்
அவர்பணி நிற்றலு மாதியி லியற்றும்
தவநேறி மூன்றுஞ் சதமேனு மளவில்
துகளறு போதச் சுருதியிற் சேன்ற
அகலிடத் தவருக் கருள் கூர்ந் துரைத்தனன்
கங்கைமேய் கண்ட கடவுளர் கருணையின்
இங்கேமக் கருளிய விறையோ னிருவகைத்
துறவும் பூண்ட தோன்றலோர் கணத்தின்
அறுபது முனிவர்க் கழகிய மன்றுள்
ஆடிய பாதம் அருள்சிற் றம்பல
நாடி யேன்றுயர் ஞானதே சிகனே.

அவதாரம் இருபத்தேட்டு எனக் கோண்டவர் அவத்தை ஐந்தனுள் அடக்கும் வகை

சாக்கிரந்தான் ஈராறு சர்சோப் பனம்ஆறு
நீக்குஞ் சுழுத்தியோன்று நேர்துரியம்—நோக்கி
ஒருமுன் றதீதந்தான் ஓராறும் நாலேழ்
தருமே துகளறுபோ தம். 1

துகளறு போதப் பாடற்பகுப்பு

பாயிர மூன்றும் பூத மேழும்
பொறியின் மூன்றுங் கரணங் கலாதி
சுத்த தத்துவம் தத்துவா தீதம்
சகலம் கேவலம் தரிசனம் அதீதம்
தன்னுண்மை யாம் ஒன் பதும் இவ் விரண்டாம்
சைதன்னிய மூன்றும் ஞான மாறும்
பரையி னுலும் வியாத்த மொன்றும்
யோக மொன்றும் சாக்கிர மிரண்டும்
அதீத மொன்றும் பரையா தீதம்
இரண்டும் சுத்த வவத்தை யொன்றும்
சுகசொ ரூபம் நாலும் அதீதம்
இரண்டும் சிவப்பே ருறும் பரமா
நந்தம் நாலும் யோகம் இரண்டும்
போகம் அஞ்சும் மூன்றுமே வீடாம்
அவசம் இரண்டும் அணுவும் அட்சரம்
குருதுதி சீடன் முத்தன் குருவழி
திருமேனி யருமை குருவே குருபணி
அதுவது ஒன்றும் யோகம் மூன்றும்
கிரியை நாலும் சரியை மூன்றும்
ஆக நூருய் அறைந்தனர் போதம். 2

முப்பது அவதரமாக் கொண்டவர்
ஐந்தவத்தையுள் அடக்கும் வகை

சாக்கிரம் பத்தொன் பதுகனவு தான்ஒன்று
தூக்குசுழி ஒன்று துரியம் எட்டு—நீக்கித்
துரியாதீ தம்ஒன்று சுத்தவத்தை முப்பான்
சரியித் துகளறுபோ தம். 3

காப்புடன் சேரின் நூறுபாடல் ஆகும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

சீகாழிச் சிற்றம்பல நாடிகள் அருளிய

துகளறு போதம்

காப்பு

எல்லாம்போய் என்றே எனைக்காட்டி எம்பிரான்
சொல்லாத பேரறிவு தான்சொல்லி—நல்லதொரு
அற்புதமாம் ஆனந்தம் ஆங்கருத்தல் செப்புதற்குக்
கற்பகத்தின் தாளிணையேன் கண்.

நூல்

பாயிரம்

பதிபசு பாசந் தெரிந்தந்தப் பாச
விதிவழியை வென்றதனின் வேரும்—கதிவழங்கும்
மெய்கண்டான் சந்தானம் மேவிச் சிவானந்தம்
கைகண்டார் காணுர் கரு. 1

உற்ற சரியை ஒழியாத நற்கிரியை
குற்றமிலா யோகக் குறிநெறியும்—முற்றிப்
பிறந்தார்கள் தாம்அறியப் பேசுகே னன்றிப்
பிறந்தார் அறியாத பேறு. 2

எல்லாம் கழற்றி இறைவ னுடுங்கலக்க
வல்லார்கள் சொன்ன வழிபலவும்—சொல்லரிய
தம்பிரான் ஆகமத்தில் சாற்றும் அவதாரமும்
எம்பிரான் தந்தான் எமக்கு. 3

1. சன்மார்க்கம் (சாக்கிரம் 1-19)

1. பூதப்பழிப்பு

மண்ணுக் குயிராகி வந்துரத்துத் தான்தரிக்கும்
எண்ணும்உரோ மாதிஇதன் காரியமாம்—கண்ணில்
பிறவுங் கடினமாய்ப் பேசியது தானும்
துறவுமுதற் பூதத் தொழில் 4

நீர்க்குயிராய் நின்றே நெகிழ்ந்து குளிருமே
பார்க்கில்நீ ராதி பகர்கருமம்—கார்க்குரிய
வெள்ள முதலாகும் மெய்யுணரில் அப்புத்தான்
அள்ள விடப்படா தாம். 5

வன்னிக் குயிராகி வந்துசுட்டு ஒன்றுவிக்கும்
பன்னுபசி யாதி பயில்கருமம்—மன்னும்
விளக்காகிப் பந்தமாய் வேருகி நிற்கும்
துளக்கமிலாத் தேயுத் தொழில். 6

தேடப் பிரித்துத் திரட்டுவிக்கும் செய்கருமம்
ஓடல்முதல் ஒவா உயிர்மருத்து—நாடில்இவை
அல்லவாம் வாயு அருட்குருவால் காண்பதன்றிச்
சொல்லவா ராதே துணிந்து. 7

இரந்தரமாய் நின்றே இடங்கொடுக்கும் வானம்
பரந்த குரோதமுதல் பார்க்கின்—விரிந்த
கருமமாய் வேருகும் காணலாம் உண்மைக்
குரவனுல் என்றே குறி. 8

வட்டம் அறுகோணம் மாயாத முக்கோணம்
இட்ட பிறைசதுர மேவடிவம்—எட்டரிய
வேதன்மால் மிக்க விடையோன் மகேசனுடன்
ஆதி அதிதெய்வ மாம். 9

இப்படியே பூதத் தியல்பு தனைத்தெளிந்தே
அப்படிநீ நில்லாமல் ஆங்கறிந்திட்—டேப்படியும்
தோன்ருமல் தேசிகன்ருன் சொன்னபடி கண்டிருந்தால்
ஊன்ருய் அதுவாம் உடம்பு. 10

2. பொறியறவுணர்தல்

பூத வுடம்பாய்ப் பொருந்தும் பொறிபுலன்கள்
நாதனரு ளாலேநீ நாடிஅவை—ஏதமெனத்
தத்தம் உருவுணரத் தான்அகலும் அப்போதே
சத்தமுத லாகிவிடும் தான். 11

சத்தாதி ஐந்தினையும் சந்தித்து நீஅகல
அத்தால் வரும்பயன்கள் ஆங்ககலும்—எத்தாலும்
காணுமல் அவ்விடயம் கைகழலக் கைகழலும்
நாணுப் பிறப்பின் நவை. 12

வாக்காதி அத்துடனே நீங்கவச ஞுதிவிடும்
நீக்காத உட்கரணம் நீங்குமே—தாக்கி
மனது முதலாக வந்தவந்த போது
தனது செயல்உணரத் தான். 13

3. அந்தக் கரண சுத்தி

மன்னும் மகாரம் மனஞ்செலுத்தும் புத்தியினை
உன்னும் உகாரம் உபகரிக்கும்—முன்னுகும்
ஆங்காரந் தன்னை அகாரம் செலுத்தியிடும்
நீங்காத சித்தம்விந்து நேர். 14

அந்தக் கரணம் அகல அதிற்கூடுந்
தோந்தக் கலாதித் துரிசறுமே—பந்திக்கும்
சித்த மயலறுத்துத் தீர உனக்கேறல்
ஒத்த படியே உணர். 15

4. கலாதி ஞான நிராகரணம்

போங்கு புலனருந்தப் போதந் தருமாயை
தங்குகலை யாதி தருஞானம்—இங்கிதனை
நீங்குபடி மாணவக நின்போதம் ஒன்றிரண்டு
தூங்குபடி நில்லாய் துணிந்து. 16

காலம் நியதி கலையாதி தத்துவங்கள்
சாலஅறி விச்சைதொழில் தான் பூத்தல்—மூலமா
மாயை மயக்கல் வரைத்தல் வினைகூட்டல்
ஆயவிட லாமென் றறி. 17

5. சுத்த தத்துவ தூடணம்

ஆன அதனுல் அழுந்திஞல் ஆசதற்கேன்
ஈன வயிந்தவத்தின் எல்லைகாண்—ஊனமிலாப்
போகம் தருமாஞல் போல்லாதோ புண்ணியத்தின்
ஆகம் துணையாஞர்க் காம். 18

சுத்தவித்தை யாதிமுதற் சோன்னஏழ் தத்துவமும்
ஒத்து நடத்தியிடும் ஒவாமல்—வித்தைசெயல்
ஏறிக் குறைந்தோத்தல் எப்போதும் பார்த்திடவே
மாறிப் பிறந்தகலு மாறு. 19

6. தத்துவாதீதம்

மண்முதலா நாதாந்த மாய்வந்த தத்துவத்தின்
உண்மையறிந் தேல்லாம் ஒழிந்தாயே—எண்ணில்இவை
தத்துவா தீதமேனச் சாற்றுங்காண் சைவமறை
அத்துவா எல்லாம் அற. 20

இப்பரிசே ஐந்துசுத்தி எய்தியதால் எப்போதும்
சேப்பரிய மாயாதி தீருமே—அப்பரிசே
ஆங்கவற்றி ஞேடே அழியும் வினை மலந்தான்
நீங்கவற்ருே நீங்கா நிலை. 21

7. சகல தரிசனம்

நின்றுநின்று வந்த நிலைதோறும் நீஅறிந்த
தன்றிஅவை தன்னை அகன்ருயே—இன்றிவைதான்
முத்தி படுஞ்சகலம் முன்னம் படுஞ்சகலம்
பேத்தமது என்றுநீ பேசு. 22

அஞ்சு வகையாக ஆருறும் நீத்ததற்பின்
விஞ்சிவரும் ஆணவத்தின் மேலீடு—வஞ்சமறச்
சாற்றில்அது கேவலமாம் தான்கழித்துப் போங்நிலை
சாற்றில் அதுசகலந் தான். 23

8. கேவலம்

அன்றிவந்த தத்துவங்கள் எல்லாம் அகன்றிடவே
ஒன்றிநின்ற ஆணவந்தான் ஒன்றுமே—என்றுந்தான்
நீங்கா இருள்விழிபோல் நிற்குமே ஆன்மாவும்
பாங்காக ஆங்கே பதிந்து. 24

பகலிழந்த வான்போல் பரவுமலம் நீயாய்
இகலறவே நின்ருய் இழந்தாய்—அகலறிவு
வாடாத முத்தியினில் வாய்த்தஅருட் கேவலம்நீ
நாடாத கேவலமுன் னுள். 25

9. கேவல தரிசனம்

ஒன்றுந் தெரியா ஒழியா இருளாகி
இன்றளவும் நின்ற திதுவோதான்—ஒன்ருகிச்
செம்பிற் களிம்புபோற் சேர்ந்துநின்ற ஆணவந்தான்
அம்புநிழல் போலென் றறி. 29

கருவி கரணம் கழன்றும் கழலா
இருளின் பெருமையிது என்னே—இருள்தான்
விடிகைக் கிருண்ட மிகுதிபோல் மாசு
மடிகைக் கிருண்டதுகாண் மற்று. 27

10. கேவலாதீதம்

வானில் இரவிவர வல்லிருள்போ மாறுபோல்
ஈன இருள் அகல்வ தேக்காலம்—மானே
அறிந்தாய் இருளேன் றறியாமை தன்னைப்
பிறிந்தாயோ இல்லையோ பசு. 28

இந்த இருள்ஒழிய ஏதும்நான் காண்கிலேன்
இந்த இருள் அகல்வ தேப்படியோ—இந்த
அறியாமை நின்றுல் அதனைநீ காணுய்
அறியா தறிந்தனையோ அன்று. 29

11. தன்னுண்மை

அந்த மலமாம் அறியாமை கண்டாயே
அந்த அறிவுநீ ஐயனே—தோந்தஇருள்
போனதே உன்னைவிடப் போக்கித் திரோதைஅரு
ளானதே கண்டாய் அறி. 30

வைத்த அவதரங்கள் எல்லாம் உடன்வந்தும்
அத்தகைமை கண்டும் அறியாயால்—முத்தனுய்ப்
பாச அறிவும் பதியறிவும் அன்றியே
ஆசறவே நின்றவன்நீ யாம். 31

12. சைதன்னிய தரிசனம்

கண்ணில்இருள் போனுலும் கண்தன்னைக் காணுபோல்
எண்ணும்இருள் போனுல் எனைஅறிய—வோண்ணுதோ
கண்போற சடமோநீ காட்டியதுங் கண்டறிந்த
ஒண்போதம் நீயேன் றுணர். 32

இருட்கும் ஒளிக்கும் இடமாகும் வான்போல்
அருட்கும் மருட்கும் அகமாய்ச்—சுருக்கமிலா
நீசத் தசத்தன்று நேரே சதசத்த
ஞய்சத் ததுஅசத்த தாம். 33

அறியும் அறிவுநீ அன்ருே உனக்குச்
சேறியுமலம் நின்றதோ செப்பாய்—அறிவுதனைப்
பாராதே பார்த்தறிந்து பாசப் பழக்கமதில்
வாராத தன்ருே வழக்கு. 34

13. ஞான தரிசனம்

அறிந்தறிந்து வந்த அவதரங்கள் தோறுஞ்
சேறிந்தறிய நின்றதேது தேரின்—பிறிந்ததனின்
நின்றதறி யாமை நிகழ்த்தியது நீக்கிஉனே
இன்றறிய வைத்ததருள் என். 35

அந்த அருள்உனக்கிங் காதார மாய்அல்லின்
இந்துஎன எறித்திட் டேகமாய்—முந்தி
உனேஉனக்குத் தான்விளக்கி ஒவா துணர்த்தும்
தனே உனக்குக் காட்டுமே தான். 36

எல்லாம்போய் என்றிங் கிருந்தேனும் நானன்ருே
நல்லாய் எனேஅறிந்தேன் நானன்ருே—சொல்லாடும்
நான்பிரமம் அன்றி நடுவே உணர்த்துதற்கு
வான்பிரமம் உள்ளதோ மற்று. 37

அன்றுமுதல் இன்றளவும் அண்ணல்அறி விப்பதன்றி
இன்றறிவேன் நான்என் றியம்புவதேன்—என்றும்
அவத்தை தனில்உணர்த்தி ஆங்கருத்தி இன்றித்
தவத்தில் உணர்த்தினர்ஆர் தான். 38

உன்அறிவை நீயே உணர்வையே யாமாகில்
இங்நேடுநாட் பாசத் தியையாயே—உன்அறிவை
நீங்கா அறிவாகி நீரும் இரதமும்போல்
ஆங்காண் அரனுர் அருள். 39

உன்அறிவுக் குள்ளே உணர்வாய் ஒழியாத
தன்அறிவு தான்உனக்குத் தாரகமாய்ப்—பின்னமற
ஒன்ருய் ஒழியாமல் உள்ளடங்கி உள்ளபடி
நின்ருல் அதுஆவை நீ. 40

14. பரைதரிசனம்

இச்சை உயிர்க்கிரங்கல் ஞானம் இசைந்துணர்த்தல்
வைச்ச கிரியை வயனடத்தல்—நிச்சயமாஞ்
சத்தியிவை முன்றினையுந் தந்ததோரு சத்திகாண்
முத்தனே பார்நீ முயன்று. 41

கிரியைஅறி விச்சை கிளர்ந்தசத்தி ஏதோ
பேரியபரா சத்தியேனப் பேசாய்—தேரியிலதிங்
காரும் அறியா அகண்டபரி பூரணமாய்ப்
பேரறிவாய் நிற்கும் பேற. 42

அந்த அறிவும் அறிவன்ரே இப்போது
தந்த அறிவும்அது தானன்ரே—அந்த
அறிவிற் கிளேத்ததுகாண் அவ்வறிவிங் கேதோ
நிறைவிற் கிளேப்பற்ற நேர். 43

அறிவார்க் கறிவித்தங் கல்லாத தாகா
அறிவாய் விகற்பம் அறியா—அறிவேகாண்
கண்பேற்ருர் கண்ட கதிரோளிபோல் கண்டதனே
விண்பற்ருய் நில்லதிலே மேல். 44

15. பரையில் வியாத்தம்

விண்ணில் கதிரோன் விளங்கி விரிந்ததுபோல்
கண்ணில் கதிரோன் கலந்ததுபோல்—நண்ணிப்
பரைநிறைவில் நீயும் பதிவையே யாகில்
உரையிறந்திட் டோன்ருவை உற்று. 45

16. பரையில் யோகமும், 17. பரையில் போகமும்

விண்ணில் விகற்பமற மேவியகால் நின்றதுபோல்
நண்ணும் பரையதனில் நண்ணியே—எண்ணிறந்து
நீருறங்குந் தன்மைபோல் நிற்கைபரை யோகம்அதில்
சீருறலே போகமேனச் செப்பு. 46

18. சுத்தபராயோகமும், 19. சுத்தபராபோகமும்

முத்திசாக்கிரம்

நீங்காத பேரறிவின் நீங்காமற் கண்டநீ
நீங்காமல் நின்றபடி நின்றதனின்—நீங்காமல்
நின்றுவிட லன்ருேதான் நின்மலன்றன் பேரறிவில்
ஒன்றுபடல் என்றறிநீ உற்று. 47

எத்திசையும் ஒன்ருய் இறையறிவி லேஅழுந்தல்
சுத்தபரா போக மேனத்துணிநீ—சத்தியமே
அத்தன்மை கண்டால் அதுமுத்தி சாக்கிரமாம்
சித்த மயல்அறவே தேர். 48

20. சாக்கிராதீதம் (முத்தி) சொப்பனம்

நின்ற அறிவறிகை நீங்காமை சாக்கிரமாம்
அன்றி அவிழ்தல் அதீதமாம்—சென்றறிவின்
நீங்காமல் நின்று நேடிது துயில்கோளவே
வாங்கா தறிவாய் வர. 49

21. பரையிலதீதம் (முத்தி) சுழுத்தி

இவ்வறிவு காண்டல் இருள்தீருஞ் சாக்கிரமாம்
அவ்வறிவு காணு ததீதமாம்—இவ்விரண்டும்
பாராமல் நிற்றல் பரையி லதீதமாம்
ஆரா அறிவகன்ற தால். 50

ஈசனறி வாகிஎலாம் இன்று கழன்றகன்ருய்
பாசமிக வைத்ததனிற் பற்ருதே—கூசாமல்
நேராக நீங்கிஅதில் நின்ற சுவடறவே
வாராய் சிவமேல் வர. 51

22. சுத்தாவத்தை (முத்தி) துரியம் 22-29

அறிவடையச் சென்றங் கதீதமாய் நின்ற
குறியிறந்திட் டோன்றுங் குறியா—நேறியேது
சுத்தவத்தை மைந்தாஉன் தோல்லேமலம் இல்லேஇல்லே
அத்துடனே செல்வதது வாம். 52

23. சுகருபம்

பைய இருந்து பதைப்பற்ற பின்உனக்குத்
துய்ய சுகப்பிரபை தோன்றுமே—ஐயனே
கண்டாய் சிவபூமி காட்சி யறக்கலந்து
கோண்டாள்வன் கண்டாய் குறித்து. 53

விழுந்த அவதரத்தில் விஞ்சு சுகந்தான்
எழுந்ததிது எங்கே இறைவா—மொழிந்தருளாய்
மாமணியிற் சோதி மலர்ந்த பிரபைபோல்
ஆமரன்றன் பாலே அது. 54

துன்பமற்ற இந்தச் சுகப்பிரபை தன்னேயே
இன்பசத்தி என்றறிநீ எப்போதும்—அன்புறவே
நின்றதிலே ஆறி நிலாவும் நிலாவும்போல்
மன்றல் தரமணந்து வாழ். 55

தேனுரும் இன்பச் சிவவடிவம் இப்படியோ
வானுடர் காணுத மன்னவனே—ஞானு
இதுவும் ஒரு சத்தி இறைவர்க்கங் கானுல்
எதுமுத்தி சொல்லாய் இனி. 56

24. சுகாதீதம்

இந்தச் சுகத்தில் இனிநீ விழியாமல்
அந்த அறிவின் அயர்ந்ததுபோல்—தோந்தமறப்
போதாய் இதுவே சுகாதீதம் போய்யற்ருேர்க்
காதார மான அருள். 57

ஒன்றுஞ் சுகவடிவுக் குள்ளான தம்பிரான்
அன்றி ஒருபொருளும் ஆகாதே—நின்றமுந்திச்
சொல்லரிய இந்தச் சுகத்துக் கதீதமாய்
நில்லவன்தா ளுமே நிலை. 58

25. சிவப்பேறு

எல்லாம் கழன்ற இடமே சிவமென்று
சொல்லா டுவர்கழன்ற தூயோர்கள்—நல்லாய்கேள்
நின்றபடி தானே நிலையா நிலையதனில்
நின்றுவிடு நேராக நீ. 59

வானகத்தில் வானும் மணத்தில் மணமும்போல்
ஆனசிவப் பேற்றில் அழுந்திஅது—தானுகும்
ஆண்டகுரு நாதா அடியேன் பெருவாழ்வை
மீண்டுசொல உண்டோ விதி. 60

நீயுஞ் சிவமாகி நின்ருயோ நின்றிலேயோ
ஆயஅடி யேனே அதிகாரம்—நாயனே
ஒன்றன் றிரண்டன் றிரண்டோன்று தானன்று
நின்றதோரு தன்மை நிலே. 61

சாற்றில் அதற்குவமை தாடலேபோற் சன்மார்க்க
வேற்று விதிபலவும் வேண்டாவே—போற்றரிய
நித்தனே சுத்தனே நித்தியா னந்தனே
அத்தனே முத்தனே ஆங்கு. 62

அந்தச் சுகத்துக் கதீத அவத்தையேன்பர்
பந்தமற்ற முத்திப் பயனறியார்—அந்தோ
பிறியாத இன்பப் பெருமானேப் பேற்றும்
அறியாத வாதனையால் ஆங்கு. 63

நின்ற நிலேசிவமாய் நின்ருயே நின்மலனும்
என்றும் பயனுய் இருந்தானே—அன்றே
அவனுக் கிதமே தவனுகி நின்ற
இவனுக் கிதமே தினி. 64

26. பரமாநந்த தேரிசனம்

அன்றே தோடங்கி அனேத்துயிரும் தானுகி
ஒன்ருகி நின்றவருக் கின்பூட்டிக்—குன்ருமற்
கோண்டுவிட லன்ருேநம் கோமாற் கிதமேன்று
[1] பண்டைமறை சோல்லும் பரிந்து. 65

---

[1] 'கண்டுகோள் நீ இந்தக் கருத்து'.

பார்க்கரிய இந்தப் பரம சுகந்தனையே
சேர்ப்பன்உயிர்க் கென்றிறைவா செப்பினையே—மாற்றரிய
ஆனந்தம் ஆருயிர்கட் கண்ணல் அருத்துவது
தானெங்குப் பெற்றவா சாற்று. 66

பெற்றருந்தி இன்பம் பிறக்கும் அருத்தின்றே
உற்றபர மானந்தம் உள்ளதோ—மற்றிதுதான்
என்றுநீ கேட்கில் இறையுருவம் ஆனந்தம்
[2] என்றுரைக்கும் ஆகமநூல் இன்று. 67

ஆனபர மானந்தம் ஆகின்ற எல்லையே
ஊனமிலா உண்மைதனில் ஒன்றுபடல்—ஈனமறத்
தானுன போது தணவா தெழுந்தசுகம்
மானே அதுவா மதி. 68

27. பரமானந்த யோகம்

விளைந்தபர மானந்த வெள்ளந் தனிலே
துளைந்துதுளைந் தாடிஅதில் தோன்று—வளைந்துன்னை
நீர்போல் அமிழ்த்தியதன் நீள்நிழல்போ லேகரந்து
பார்போல் தரிப்பாகும் பார். 69

பாராதே அந்தப் பரம சுகந்தன்னை
நேராகத் தாணு நிழல்போலத்—தீராச்
சுபாவம் அதுவாகித் தோன்றிமறை யாதே
அபாவமாய் நில்லாய் அதில். 70

---

2 'அன்றிவே றுென்றில்லை யாம்'

28. பரமானந்த போகம்

நின்றபர மானந்தம் நேரே யனுபவித்தங்
கோன்றுபட உள்ளுருகி ஓவாமல்—என்றும்
மதுவுண்ட வண்டுபோல் மாளாச் சுகத்தைப்
புதிதுண் டிருந்துவிடிப் போது. 71

பருகத் தொலையாப் பரபோகந் தன்னை
உருகிஅடி யேன்அருந்த ஊட்டும்—குருவே
அழியாத இன்பம் அரன்அருந்தான் என்னும்
வழிஏது சொல்லீர் மகிழ்ந்து. 72

சர்க்கரைதான் ஆர்க்கும் தரும் இரதம் அவ்விரதம்
சர்க்கரைதான் கொள்ளுமோ சாற்றுங்கால்—சர்க்கரைக்கின்
றின்புருவம் அன்றி எழிலுருவம் வேறுண்டோ
இன்புருவ மேஇறைக்கும் என். 73

நாவார் இரதமது நாஅருந்தல் அல்லாதிங்
காவா இரதம் அறியுமோ—ஓவாப்
பரமசுகம் உன்பால் பலிப்பதே அன்றிப்
பரமசுகங் கொள்ளா பயன். 74

இந்தச் சுகம் ஆன்ம லாபம் எனஅறிநீ
அந்தச் சுகம் ஒழிந்திங் காராதே—இந்தச்
சுகமேலாம் அந்தச் சுகமாக்கில் உன்றன்
அகமேலாம் ஆனந்த மாம். 75

29. பரமாநந்த மேலீடு

அண்ணலும் ஆ னந்தம் அருளும்ஆ னந்தம்உயிர்
எண்ணிலா ஆனந்தம் எவ்வுலகும்—பண்ணி
அளித்தழிப்பா ராகும் அவர்களும்ஆ னந்தம்
களித்ததுவே எப்போதும் காண். 76

எங்குநிறைந் தானந்தம் எல்லாம் அமிழ்த்திமிகப்
போங்கிக் கரைபுரண்டு பூரணமாய்—எங்கும்
வளைத்த உலகுயிரும் வாய்த்த சுகமாம்
அளத்திற் புகுந்ததுபோல் ஆங்கு. 77

கண்டஇட மெல்லாம் கருணைக் கடலமுதம்
மோண்டுகோள லாய்நிறைந்த முத்திதனைப்—பண்டே
திருமால் அயனறியாத் தேசிகனுர் பாதம்
தருமாம் அடியேற்கும் தான். 78

30. பரமாநந்த அவசம்

(முத்தி) துரியாதீதம்

பரமபர மானந்தம் பார்கீழ்மேல் மற்றும்
அரவம்வா ராதே அகலும்—புரணமாய்
ஆங்கே அமிழ்ந்தி அவசமாம் ஆனந்தம்
நீங்கா ததுவாகி நில். 79

உற்றபர மானந்தத் தோன்ருய் அதில்உறங்கி
முற்றுவதே முத்திமுடி வேன்றுரைக்கும்—குற்றமிலா
வைதிக சைவம் வழிநூல் புராணமற்றுஞ்
சேய்வனநூ லேல்லாம் தேளி. 80

அணு வகை

ஒன்றிரண்டு மூன்றுமலம் உள்ளஉயிர் மூவர்க்கும்
சேன்றிவன்போல் நேரே சிவமாகி—நின்றநிலே
இவ்வகையே ஆளும் எழிற்குருவாம் ஈசனே
அவ்வகையை நீஇங் கறி. 81

பஞ்சாக்கர தெரிசனம்

அஞ்செழுத்தும் அண்ணல்அருள் ஆன்மாத் திரோதமலம்
மிஞ்சி நமத்துரந்து மெய்யருள்வாத்—தஞ்சச்
சிகாரத்தில் யவ்வைவிடுந் தீதிலா இன்பப்
புகாரில் புகுந்தருந்தப் போய். 82

குரு துதி

பற்றிநின்ற பாசம் பறித்தகல வேவிழித்திட்
டுற்றஉயிர் காட்டி உணர்வுணர்த்தி—மற்றுஞ்
சிவப்பேறு தந்து சிவபோக வாரி
புகப்பே றளித்தவரைப் போற்று. 83

சீடரிலக்கணம்

இரவு பகல்நிழல்போல் இட்டபணி செய்து
குரவர்புகழ் வாயாரக் கூறித்—திருமுன்
விழுந்துவிழி நீர்பொழிய மெய்விதிர்த்து நின்று
தொழுந்தவத்தோர் காணுஞ் சுகர். 84

முத்தனுக்கும் முத்தியின்மைக்கு ஏது

ஆகமுதல் நீங்கி அருளிற் கலந்துசிவ
போகம் விளையப் புணர்ந்தாலும்—வேகத்
தெரிவாய் நிரயத் திருப்பர் குருசொற்
பிரிவார் உலகிற் பிரிந்து. 85

குரு வழிபாடே பொருளெனக் கூறல்

ஆகம் உயிர்பொருள்கொண் டன்றே அருள்அளித்துச்
சோகமெனப் பாவிக்கச் சொன்னுரைத்—தாகத்தோர்
வேண்டு பொழுதெல்லாம் வேண்டுபொருள் வந்ததுபோல்
பூண்டுதொழ லன்றே பொருள். 86

திருமேனியருமை கூறல்

அன்றுமுத லாகவே ஆருயிர்கட் காருயிராய்
நின்றருளும் தம்பிரான் நீங்காமல்—என்றும்
கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ தாமே
குருவாய் அருளாமற் கூறு. 87

குருவே சிவமேனல்

பாசம் பசுபதியைப் பாரித்துப் பார்த்தனரே
ஆசில் அகலறிவாய் ஆங்ககன்று—பேசரிய
ஆனந்தம் பெற்ருர் அருட்குருவே ஈசனேன்பர்
மோனமே முற்றும் முயன்று. 88

குருபணி செய்வாரை வழிபடுதல்

கருவேலை தன்னைக் கடப்பர் உலகில்
மருவாத இன்பத்துள் வைத்த—குருவின்
அடியார் அடியார் அடியார் அடியார்
அடியாரைச் சார்ந்த அவர். 89

2. சக மார்க்கம்

யோகம்

சன்மார்க்கம் ஈதாம் சகமார்க்கம் சாற்றுங்கால்
பன்மார்க்கம் வாயுப் பகர்கருவி—தன்மார்க்கஞ்
சால ஒடுக்கித் தடுத்து வளியிரண்டும்
மாலறவே நிற்கை மகிழ்ந்து. 90

அந்த மனத்தாலே ஆதாரம் ஆறினையும்
சந்தித் ததிற்பொருள்கள் தான்அறிந்திட்—டிந்துவிலே
ஓவா ஒளிவைத் துருகும்அமு துள்நிறைக்கில்
ஓவா ஒளியாம் உரு. 91

நின்ற ஒளியுருவின் நீங்காமல் நிற்கவே
என்றும் அழியாமல் இன்புற்றுக்—கொன்றையந்தார்த்
தாணுவுருப் போலேபின் சாருப்பி யத்திலே
மாணவக வாழ்வாய்காண் மற்று. 92

3. சற்புத்திர மார்க்கம்

கிரியை

புத்திர மார்க்கம் புகைஒளி மஞ்சனம்பூ
வைத்தமுது தாம்பூலம் மற்றேவையும்—உத்தமமாய்த்
தேடிவைத்துப் பின்னைச் சிவபூசை செய்வதற்கு
நாடவத்திற் செல்லாமல் நாள். 93

சுத்திஐந்துஞ் செய்து துகள்தீரும் மந்திரத்தால்
அத்தமது பத்துமுகம் ஐந்தாக—வைத்துவைத்து
வித்தியா தேகம் விதிப்படியில் தாபித்துப்
பத்தியால் மேனிதனைப் பார். 94

பார்த்ததிரு மேனிப் படிகந் தனில்பரனைக்
கோத்ததிரு மந்திரத்தால் கொண்டுவந்து—பார்த்தருளச்
சொல்லிற் பராக்கறுத்துச் சோதிச் சிவாகமத்தின்
சொல்லிற் படியே தொடங்கு. 95

சோராமல் பூசித்துச் சொன்னபடி நில்இதழித்
தாரார் சமீபத்தில் தான்இருந்து—வாராமல்
தானே பரன் அளிக்குஞ் சங்கரனுர் இம்முத்தி
தானே தரினுந் தரும். 96

4. தாச மார்க்கம்

சரியை

தாதமார்க் கம்சாற்றின் சங்கரனுர் இன்புற்ற
பூதி திருவேடம் போற்றியே—நீதியினுல்
பூங்கா வனஞ்சமைத்துப் பூமாலை புண்ணியற்குப்
பாங்காகச் செய்கை பரிந்து. 97

அலகு திருமெழுக்கிட் டாலயத்தில் அன்பாய்
இலகு திருவிளக்கும் ஏற்றிப்—பலகாலும்
சென்று வணங்கித் திருவடிவா ரஞ்சேர்த்தி
நின்றிடுகை தொண்டர்பணி நேர். 98

கொன்றையந்தார் வேணியற்குக் கோயில் பலசமைத்துப்
பொன்றியவை முற்றும் புதுக்குவித்து—நின்ருர்
அவலோகந் தன்னில் அடையார் அடைவர்
சிவலோகந் தன்னிற் சிறந்து. 99

(காப்போடு நூறு திருவெண்பாக்கொண்ட)

துகளறுபோதம்

முற்றிற்று.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

துகளறுபோதம்

துகள் - போதவிகாரம், அறு - அற்ற, போதம் - பரஞானம். அஃது இங்கு அதைப்போதிக்கும் நூலைக் குறித்தது. இதன் பொருளைத் தெளிவிக்கும் 'துகளறு போதக் கட்டளை' என்னும் வேறொரு நூலும் உளது. அதைக்கொண்டு இதை உணரலாம்.

இது காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பல நாடிகளால் செய்தருளப்பெற்றது. அவர் கங்கை மெய்கண்டார்க்கு மாணுக்கர் என்று சிவாநந்தபோத சாரத்தின் முன்னுரை யாலும் அறியலாம்.

இது திருவருள் விளையும் திறம் உணர்த்துவது. அத் திறமே முப்பதவதரமென்று முற்குறித்ததாகும்.

இந்நூலின் தலைப்புக்கள், எல்லாப் பதிப்புக்களிலும் பிறழ்ந்திருக்கின்றன. அப்பிறழ்ச்சியும் வெவ்வேறுயுளது. இந்நூலின்கண் உள்ள அவதரம் இருபத்தேட்டு முப்பது என்பாராகப் பல திறத்தர் உளர். அவற்றை ஒன்பது இங்குக் குறித்தல் இன்றியமையாததாகும்.

	இருபத் தேட்டு	சிவாநந்த போதசாரத்தின் அட்டவணை	முப்பது	உண்மைநெறி விளக்கம் உரை
1 சாக்கிரம்	12	15	19	13
2 சோப்பனம்	6	9	1	4
3 சுழுத்தி	1	...	1	4
4 துரியம்	3	4	8	6
5 துரியாதீதம்	6	1	1	3
	28	29	30	30

உண்மைநெறி விளக்கத்தின் உரையில், பாச அவதரம் ஏழு, பசு அவதரம் பதினைந்து, பதி அவதரம் எட்டு என்றும் ஞான தரிசனமாம் சாக்கிரத்தில் பதின்மூன்று, பரை தரிசனமாம் சோப்பனத்தில் நான்கு, சுத்தபரா யோகமாம் சுழுத்தியில் நான்கு, பரமாநந்த யோகமாம் துரியத்தில் ஆறு, பரமாநந்த போகமாம் துரியாதீதத்தில் மூன்று ஆக 5 அவத்தையுள் 5 பகுப்பாய் அடங்கிவரும் என்றும் உள்ளன.

அவற்றுள் இருதிறத்தார் கோள்கையும் வெவ்வேறு வெண்பாவால் விளக்கப்பட்டமை இதன் முன் பகுதியில் அறியலாம். இவ் வேளியீட்டில், இரண்டு அகவற்பாக்கள் உள்ளன. அவற்றுள் முதலாவது, துகளறுபோதம் என்னும் ஞான நூலின் இருபத்தேட்டு அவதரங்களையும் பதின்மூன்றும் பதினைந்துமாகப் பிரித்து, இருபத்தேட்டு என்னும் வரையறையை முதலிலும் முடிவிலும் கோண் டுணர்த்துகின்றது. அதில், 'பரையோகம்+போகம்' காணப் பட்டில. அவை இக்காலத்து அநுட்டானத்தில் இல்லாது

போனவாறே, அவ் வகவற் பாடலிலும் நில்லாது அகன் றமை வருத்தம் விளைவிப்பதாகும். அங்கு, யாப்பமைதியும் கெட்டு நிற்கின்றது. எதுகையும் மோனையும் சிறப்புற அமைத்துப் பாடிய அவ் வருளாசிரியர் பாட்டில் அவ்வாறு அமைதி கெட்டிருத்தல் கருதத்தக்கது. வேறு யாண் டேனும் அப்பாடலின் தொல்லமைதி கிடைப்பின் நினைவு கூர்தற்குத் துணையாகும். பதியவதாரத்தில், பதினைந்து எனப்பட்டவற்றுள், இரண்டு குறைதலும் அவை 'பரையோ கம்' 'போகம்' ஆதலும் இந்நூலோடு அவ்விரண்டகவற்பாக் களையும் ஒருங்குவைத்து நோக்கி ஆராய்வர் தெளிவுறுவர்.

இவ் வெளியீட்டில் முப்பது அவதாரம் என்னும் கொள்கையை உணர்த்தும் அகவற்பாட்டில் உள்ளவாறே வெண்பாப் பகுப்பு அமைந்திருத்தல் குறிக்கத்தக்கது. 47-ஆவது வெண்பாவின் தலைப்பில் இருக்கத்தக்க 'முத்திசாக்கிரம்' என்பது, அதன்கீழ் இருப்பது ஏட்டில் எழுதியவர் செயலாயிருக்கலாம். ஆயினும், அது பதினேழாவதுஅவதாரமாகவே கொள்ளப்பட்டதென்றுணர்க. அதற்குரியனவே 47, 48-ஆம் இரு வெண்பாவும் என்பது, துகளறுபோதப் பாடற் பகுப்பு உணர்த்தும் அகவற்பாவுள் 'சாக்கிரம் இரண்டும்' என்றதால் விளங்கும். அகவ லீற்றின் உள்ள பாத்தொகை நூறு. தொகையுணர்த்தும் வகைப்படி கூட்டின், வருவன தொண்ணூற்றென்பது.

இந்நூலின் செய்யுள் காப்புடன் நூறுகும். பிறபதிப்புக் களின் முடிவில் உள்ள திருவெண்பா கோடிப்பாட்டுள் ஒன்றுதல் வெளிப்படையாகும். இந்நூலுக்குப் பழைய வுரை இதுவரையில் வெளியிடப்படவில்லை. 1898-இல் நாகப்பட்டினம் வேதாசலம்பிள்ளை என விளங்கியகாலத்தில்

மறைமலே அடிகள் அவர்கள் புத்துரை எழுதி வெளியிட்டார்கள். அதன் இயல்பை 19-ஆவது வெண்பாவின் உரையாலும் அறியலாம்.

யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவர் எழுதிய புத்துரையும் உண்டு. துகளறுபோதக் கட்டளையினும் விளக்கம் செய்வது ஒன்றும் இல்லே.

இந்நூலே சிவாநந்தபோதம், சிவாநந்தபோத சாரம், சித்தாந்த சாரம் முதலியவற்றிற்கு ஆதாரமான தலேமையுடையது. இதன் விளக்கமே அவை எல்லாம். இதனேடு அவற்றை வைத்து உணர்வார்க்கு அவ்வுண்மை நன்கு புலனுகும்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 25 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் இந் நூல்களே நன்கு ஆராய்ந்து எழுதிய தருமபுர ஆதீனம் முதுபெரும் புலவரும், பல்கலேக்கல்லூரி பிரின்ஸிபாலுமாகிய சித்தாந்த ரத்நாகரம் வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் ஆராய்ச்சி முன்னுரையுடன், 330-ஆவது தருமையாதீனத்து வெளியீடாகிய ‘ சாத்திரங்களும் தோத்திரங்களும் ’ என்னும் நூலே நோக்கி உணர்க.

உ

ஸ்ரீ சிவஞானபோதம்

(சுருக்க விளக்க அட்டவணை)

- போதுவியல்பு
  - பிரமாணவியல் — 1, 2, 3 சூ.
  - இலக்கணவியல் — 4, 5, 6 சூ.
- சிறப்பியல்பு
  - சாதனவியல் — 7, 8, 9 சூ.
  - பயனியல் — 10,11,12சூ.

பதி:- உண்மை: 1 ஆவது சூத்திரம்; போது விலக்கணம்; 2 ஆவது சூத்திரம்; சிறப்பிலக்கணம்; 6 ஆவது சூத்திரம்.

பசு:- உண்மை: 3 ஆவது சூத்திரம்; போது விலக்கணம்; 4 ஆவது சூத்திரம்; சிறப்பிலக்கணம்; 7 ஆவது சூத்திரம்; ஞானம் உணருமுறை; 8 ஆவது சூத்திரம்; ஆன்மசுத்தி; 9 ஆவது சூத்திரம்; சிவத்துவமடைதல்; 11 ஆவது சூத்திரம்; சீவன்முத்தி; 12 ஆவது சூத்திரம்.

பாசம்:- உண்மை: 2ஆவது சூத்திரம்; இலக்கணம். 5 ஆவது சூத்திரம்; நீக்கம்; 10 ஆவது சூத்திரம்.

பதி பசு பாச உண்மையை ஒன்று, மூன்று, இரண்டு சூத்திரங்களாலுரைத்து. அவற்றினிலக்கணத்தை ஆறு, நாலு, ஏழு, ஐந்து சூத்திரங்களால் விளக்கி, எட்டு, ஒன்பது, பத்து சூத்திரங்களால் முறையே ஞானம் உணருமுறையையும் ஆன்ம சுத்தியையும் பாச நீக்கத்தையும் சிவயோகத்தையும் விவகரித்து, பதினொன்ருஞ் சூத்திரத்தில் ஆன்மா சிவத்துவம் பெறுதலைக்காட்டி, அணைந்தோர் தன்மையை இறுதிச் சூத்திரத்தால் உணர்த்தியுள்ளார்.

அதிகரண அடைவு

1	2	3	4				5
			வார்த்திகம்				
சூத்திரம்	கண்ணழிவுரை அதிகரணம்	குரணி	அதிகரணப் பொழிப்புரை 4 a	சூத்திரக் கருத்துப் பொழிப்புரை 4 b	அதிக. அதிகாரணப் பொழிப்புரை 4 c	ஆக 4 d	வெண்பா
1	3	3	3	1	1	5	5
2	4	4	4	1	...	5	10
3	7	7	7	1	2	10	7
4	3	3	3	1	...	4	7
5	2	2	2	1	...	3	4
6	2	2	2	1	...	3	6
7	3	3	3	1	...	4	5
8	4	4	4	1	...	5	9
9	3	3	3	1	...	4	8
10	2	2	2	1	...	3	6
11	2	2	2	1	...	3	6
12	4	4	4	1	...	5	8
	39	39	39	12	3	54	81

அவையடக்கம் 1 }
மங்கல வாழ்த்து 1 } ஆ௳ 2

ஆ௳ 83

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

சிவஞானபோதம்

நூற்சிறப்பு

வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதுந் தமிழ்அதனின் உள்ளுறுநெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.

சூத்திரக் கருத்து

முதற்பதி அரனே ஐந்து முன்னத்து விதமி ரண்டே
இதன்பினே யனுமா னத்தால் எண்ணிலா உயிர்கள் மூன்றே
அதன்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே ஐந்தே
செகற்பதி பிரித்த லாறே தெரிவித்தல் உயிரை ஏழே.

மறைப்பினை நீக்கி ஞான வாரியை நினைத்தல் எட்டே
சிறப்புடை உபாயந் தம்மால் தெளிவித்தல் உயிரை ஒன்பான்
அறுத்திடல் மலங்கள் பத்தே அழுந்தலே சிவத்தில் ஒன்றே
திறப்பணி கோளலி ரண்டே சிவஞான போதஞ் சித்தி.

— ஈசானதேசிகர் தசகாரியம்

அதிகரண வெண்பாத் தொகை

ஐயொருப தேழேழும் ஆங்கமைந்த நாலாறும்
ஐயொன்ப தோரெட்டோ டாருறும் - துய்யஎட்டோ
டேண்பஃது மோன்றுஞ் சிவஞான போதத்தின்
மன்னருளும் வேண்பா வகை.

சூரணை - சிவஞானபோதம் இரண்டன் தொகை

சூத்திரமீ ராறினுக்குச் சூரணைமுப் பானேன்பான்
ஏற்றவேண் பாஎண்பா னிரண்டனைத்துஞ் - சேர்த்த
தோகை
நூற்றுமுப்பான் மூன்றிவற்றை நுண்ணுணர்வி னுய்ந்து
வேற்றுருக்கோள் ளாருறுவர் வீடு. [ணர்ந்தோர்

சூர்ணித்தொகை

மூன்றுநான் கேழு மூன்றே முடிந்தபின் இரண்டி ரண்டே
மூன்றுநான் மூன்று நன்ருய் முடிந்தபின் இரண்டி ரண்டே
ஏன்றநான் கீறு தாமே இவையீரா றிலக்கத் துள்ளே
ஏன்றமுப் பானேன் பானே எனக்கரன் இரங்கி னனே.

மேய்கண்டதேவ நாயனுர் துதி

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர்இ தயகமல முகைக ளேல்லாங்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் போழில்புடைசூழ் வேண்ணேய் மேவு
மேய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
போற்பாதம் எப்போதும் போற்றல் சேய்வாம்.

— சிவஞான சித்தியார்

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி [நல்லூர்
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் - வெண்ணெய்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்தின் கண்.

— இருபா இருபது

அல்லாத பரசமய வலகைத் தேர்விண்
டகலவகல் புனற்பெண்ணை யயல்சூழ் வெண்ணெய்ப்
பொல்லாத இபமுகத்துப் புத்தேள் தன்பாற்
புனிதசிவா கமப்பொருண்மை பொருந்த ஆய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய்
நிற்குநிலை யிதுவெனமெய்ந் நெறிதேர்ந்தி யாரும்
வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன
மெய்கண்டான் சரணமுடி மீது கொள்வாம்.

— சேது புராணம்

வேதத்தி னரும்பொருளை விமலனரு ணந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமரபால்
ஓதித்தேர்ந் தருந்தமிழால் எமக்குணர்த்தி எம்மனஞ்
சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம்.

—அருணகிரி புராணம்

சிறிய வாடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்
கறிவு நூல்களின் முடிபெலாம் அகத்தடக் கியதோர்
நெறியின் நீடிய நிகழ்சிவ ஞானபோ தத்தைக்
குறிய தீந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம்.

மூன்று மலங்கெடுத்து மூலமா மப்பொருளுந்
தோன்ற அருளுந்தன் தொண்டர்க்கிங் - கான்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடல்ஞாலத் தெப்பொருட்கும்
மெய்கண்ட தேவன்விரைத் தாள்.

நண்ணும் பொருள்மூன்றும் நானறிந்து நானறஎன்
கண்ணுந் தனதாகக் காட்டினான் - வெண்ணெயிலே
மெய்கண்ட தேவனொரு மெய்கொண்டு வந்திலனேல்
பொய்கொண்டு போமே புவி.

“ சிவஞான போதம் ” என்பதன் பொருள்

என்றலுமே சிவமேது ஞான மேதிங்
கியம்பியிடும் போதமே தியம்பு வீரேல்
அன்றுவட நீழலில்வந் திருந்தார் நீரே
அடியேனும் உமக்கடிமை ஆவேன் என்ன
நின்றசிவம் ஒன்றதனைத் தேர்தல் ஞானம்
நிகழ்போதம் தேர்ந்ததனைத் தெளிதல் ஆமென்
றோன்றியநற் பொருள்வினவி நிற்பார் சிந்தை
உருகும்வகை உரைசெய்தார் உவமை யில்லார்.

—வாதவூரடிகள் புராணம்

சைவ சித்தாந்த சாத்திரம்

பதினான்கனையும் (வைத்த முறையை) உணர்த்தும் வெண்பா

உந்தி[1] களிறு[2] உயர்போதம்[3] சித்தியார்[4]
பிந்திருபா[5] உண்மை[6] பிரகாசம்[7]—வந்தவருள்[8]
பண்புவினா[9] போற்றி[10] கொடி[11] பாசமிலா நெஞ்சுவிடு[12]
உண்மைநெறி[13] சங்கற்பம்[14] உற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

ஸ்ரீ சிவஞான போதம்

கருத்து விளக்கச் செய்யுட்கள்

1 பதிபசுவும் பாசமேனப் பகர்ந்த மூன்றிற்
பதியதுதா னேன்றேடு பகரா தேன்னும்
முதுமறைநூல் அவனேடவள் அதுவேன் றேது
மூவகையுஞ் சேய்யவோரு முதலுண் டாகும்
அதுபதிதான் சகந்தனேயும் அழித்துக் காத்திட்
டாக்குதலால் அவனரனே யாவன் மற்றும்
விதிதனேயும் மதிதனேயுங் காட்டி யோன்றாய்
விளேந்தழியக் கண்டிருப்பன் விமலன் தானே.

2 விமலனரு ளான்மாவை வேரு யேங்கும்
வியாபியாய் எவ்வுயிர்க்கும் உயிராய் வேறற்
றமையவே நின்றபரன் கிரியா சத்தி
யகலாதா னுன்மாவை யான்ம [1]வத்தால்

---

[1] ஆன்மவத்தால்; வத் - உடைமைத் தன்மை.

சமையவே யனுபவிக்கப் பண்ணுவித்துச்
சங்கரித்துத் தற்பரனுய்த் தாணு வாகி
நிமலனு யானந்த ரூப னுகி
நித்தனுமா யேகனுமாய் நிற்குநிலை யதுவே.

3 அதுவல்ல திதுவல்ல வேன்கை யாலும்
அறிந்துமேன்கை யேன்காலேன் றறைத லாலும்
இதுவேன்ன திதுவேன்ன தேன்கை யாலும்
இந்திரிய மோடுங்கியசோல் இயம்ப லாலும்
சதிவல்ல கனவகத்தில் அறித லாலும்
சாக்கிரத்தே அறிவுதனேத் தருத லாலும்
மதிவல்லீர் இவ்வுடலுக் குள்ளே யான்மா
மன்னிநிற்கு மேன்றறிவு வளேக்குந் தானே.

4 வளேக்கின்ற கரணங்கள் நான்கன் ருயும்
மன்னுமவை தம்மோடு மருவிச் சேர்ந்து
கிளேக்கின்ற மலத்தின்மறைந் திச்சா ஞானக்
கிரியைதனே யுடையதுமாய்க் கேழுமி யாங்கே
விளேக்கின்ற அஞ்சவத்தைப் படுவ தாகி
வேந்தனுடன் மந்திரிக்கு விளேவந் துற்ருல்
இளேக்கின்ற இருவருக்கு மோக்கு மாபோல்
ஏகமா யுயிர்பிரிந்திங் கிருக்குந் தானே.

5 இருந்தறியுஞ் சத்தாதி விடய மைந்தும்
இந்திரியந் தானறியா வான்மா வாலே
திருந்தஅறிந் திடுமந்த ஆன்மாத் தானும்
சிவத்துடனே சேர்ந்தறியும் அவத்தை சேர்ந்தால்
கரந்துடனுஞ் சிவனவத்தைப் படுவ னேன்னிற்
காந்தபசா சம்போலுங் கலந்து நீங்கிப்
போருந்தியபோ துடனுகி வேறு மாகிப்
போக்குவர வான்மாவைப் புரிவன் தானே.

6 புரிவுறவே காணப்படா தேனிலா காயப்
பூவுமுயற் கோம்புமெனப் புகல்வர் மேலும்
விரிதரவே காணப்பட் டுள்ள தேன்னின்
மேவுகட படாதியேன விளம்பல் வேண்டும்
கருதியது காணுத போருளு மற்றைக்
காண்கின்ற போருளுமிவை கழிய நோக்கித்
தேரிதரவே காணப்பட் டுள்ள தந்தச்
சிவமேனவே யறிந்தடைதல் சித்தந் தானே.

7 சித்தறிந்த சந்நிதியிற் சடமோ இல்லே
சேடமறியா சித்தினுக்கும் அறிய வேண்டா
ஒத்தசட மேன்றசகத் தினேயுஞ் சித்தேன்
றுரைக்கின்ற சிவன்றனேயு முண்மையறிந்துடனுய்
நித்தமேனுஞ் சித்துடனே சடமே கூடி
நில்லாதேன் றுண்மைதனே நினேந்து நோக்கி
அத்துவித வேறுபா டறிவான் யாவன்
அவனேயவ் வான்மாவை அறிந்து ளானே.

8 அறியாம லிந்திரிய வேடரிடத் தணேந்த
ஆன்மாவாம் புதல்வனேமுன் னறிவிப் பான்போற்
குறியாத குருபரன்வந் தருளி னுலே
குறிப்புணர்த்த வேடருடன் கூடா னுகி
நேறியான நகரினுடன் படையுந் தானே
நிருபனுமாய் நின்றபடி நிலேமை கண்டு
சேறிவான தறிந்துபழஞ் செல்வ மான
சிவனடியிற் சேன்றணேவன் சீவன் தானே.

9 சீவனுந்தான் ஞானக்கண் ணுலே யந்தச்
சிவனேக்கண் டந்தக்கண் ணுலே கண்ட
பாவநேடுங் கானலேவிட் டிறைவன் சேம்போற்
பாதநிழற் கீழிருந்து பரம ஞான

மேவியவஞ் செழுத்ததனை அருளால் உன்னி
மேலிருளும் ஆணவமுங் கீழே யாக்கி
யாவையுமாம் அருளின்ப மேலே யாகி
அந்நிலையாய் மூவகையா யெய்தும் அன்றே.

10 எய்தரிய பரமசிவத் தோன்று பட்டால்
இவனவனு மிதுவோழிந்திட் டவனிவனு காதே
செய்திகளும் ஐவகையும் அவனுக் காக்கிச்
சிவானுபவ மோனமே இவனுக் காக்கி
மைதிகழு மூலமலந் தானுய் நிற்கும்
வல்லிருளாங் கேவலத்தின் மாயா கன்மம்
எய்தரிய வாறுபோற் சிவமே யாகும்
எல்லையிலாப் பேரின்ப முணர்வன் தானே.

11 இசையவரு கண்களுக்குத் தரிசிப் பானு
யிருக்கின்ற ஆன்மாப்போல் ஆன்மா வுக்கும்
அசைவில்சி வன்தரிசிப் பிக்கு மென்ப
தறிந்த வன்றனடி யிணையிற் சேரக்
கசியவரு மனத்தினுடன் கம்பத் தாகுங்
கண்ணருவி சோரவுரை கழல ஞானப்
பசையினராய் மெய்புளகக் காடு மெய்திப்
பாவியா மெய்ப்பத்தி மேவு மன்றே.

12 மேவரிய மெய்ஞ்ஞானத் தலைமை யான
வித்தகரை யடைந்தவர்தம் வேட முண்மை
தேர்வரிய சிவலிங்கந் தேசி கன்றன்
தேய்க்கவோண்ணு மும்மலத்தைத் தேய்க்க வின்ப

முவகையால் நம்போருட்டால் வந்த தேன்று
மூர்த்திகளால் வினேகுருவால் மாயா மூலப்
பாவனேயாற் சிவபூசை யதனுற் பார்க்கப்
பரனருளாற் சிவாநுபவம் பதியுமன்றே.

[திரு. T. S. காந்திமதிநாதன் அவர்கள், B. A., ஸ்ரீ சிவஞான போதப் போழிப்புரை வேளியீடு, 1928, திருநேல்வேலி.]

———

[இச்சிவஞானபோதம், சிவபேருமான் திருக்கரத்துட் கோண்டது. நந்திதேவருக்கும், சனகாதிகளுக்கும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் உபதேசிக்கப்பேற்றது. சிறந்த சைவ சித்தாந்த ஞான முழுமுதல் நூலாய் விளங்குவது. விரிந்த போருள்களேயுடையது. எந்நூல்களிலும் இல்லாத மேலானஉண்மைகளேத் தன்னகத்துட்கோண்டது. பன்னிரண்டு (12) சூத்திரங்களேயுடையது. நாற்பது (40) அடிகளுடையது. இருநூற்றுப் பதிறுை (216) சோற்களுடையது. அச்சோற்களுள் அறுநூற்று இருபத்து நான்கு (624) எழுத்துக்கள் பேற்றது. எண்பத்தோரு (81) வேண்பாக்களேயுடையது. ஒவ்வோரு வீட்டிலும் பூசித்துப் போற்றப்படுவது. ஒவ்வோருவரும் கேட்டுச் சிந்தித்துத் தேளிந்து முடிவான அத்துவித முத்தியைப் பேறுவித்தற்குரியது. சிவஞான சுவாமிகளால் சிற்றுரையும் பேருரையாகிய மாபாடியமும் எழுதப்பேற்றது. எவர்களாலும் மறுக்கப்படாதது. எச்சமய நூல்களுக்கும் அரசாய் விளங்குவது.—மகாவித்துவான் - கா. மு. சுந்தர முதலியார்.]

———

கடவுள் வாழ்த்து—உரை

பொதுவதிகாரத்தாலும் சிறப்பதிகாரத்தாலும் இரண்டாக வேறுபடுத்திக் காட்டி, சிவஞான போதத்தை அருளிச் செய்யுமாறு தொடங்கிய மெய்கண்ட தேவ நாயனுர், நின்மல சாக்கிராதீத சிவானந்தசாகரத்தில் மூழ்கிய தமக்கு எவ்வித இடையூறும் சிறிதாயினும் நணுகாது என்று உணர்ந்தாரேனும், ஆன்ருேர் செய்த பிரகாரம் தாமும் செய்து அந்த ஆன்ருேர் ஒழுக்கத்தைப் பேணவேண்டும் என்றும், அதனைத் தமது மாணுக்கர்க்கு அறிவுறுத்தவேண்டும் என்றும் கொண்டே, முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய விநாயகக் கடவுளை வாழ்த்துதலாகிய மங்கல வாழ்த்துக் கூறுகின்ருர்.

மங்கல வாழ்த்து

(1) கல்லா னிழல்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

(2) (இதன் பொருள்) திருக்கைலாசத்தின் கண்ணேயுள்ள அருள் வடிவாகிய கல்லால விருக்ஷத்தின் கீழே வீற்றிருந்தருளி, இந்தச் சிவஞானபோத சாத்திரம் வாயிலாகச், சிவாகமப்பொருள்கள் ஒன்ருேடொன்று மாறுபடுவனவாக மலைவுற்று வினவிய நந்திபெருமானுக்கு உளவாகிய சந்தேகங்களை நீக்கி யருளிய, ஸ்ரீகண்ட ருத்திரப் பெருமான் மேன்மேலும் கருணைகூர்ந்தருளும் பொருட்டு,

சுயம்பு மூர்த்தியாகிய விநாயகக் கடவுளுடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் மெய்யன்பர்கள் தமது சிரசின் கண்ணே சூடுவர் என்பதாம்.

(3) அவரது திருவடிகள் இரண்டனுள் வலத்திருவடி சேதனுசேதனப் பொருள்களை யெல்லாம் ஒருவர் அறிவிக்க வேண்டாது தானே அறியும் அறிவாகிய முற்றறிவு என்றும் இடத் திருவடி அந்தப் பொருள்களை யெல்லாம் செயற் படுத்தும் முற்றுத் தொழில் என்றும் உணர்தற்பாலனவாம்.

(4) ஆகவே, அவரது முற்றறிவே ஒரு திருவடி எனவும், முத்தொழிலே மற்றைத் திருவடி எனவும் ஓர்க.

(5) ஆன்மாக்களுடைய அறிவு எப்பொருளையும் ஒவ்வொன்ருக அறியும் சிற்றறிவாயும், அவர்களுடைய தொழில் எப்பொருளையும் நினைத்தவாறு செய்ய இயலாத சிறுதொழிலாயும் உள்ளன.

(6) ஆதலால், அவரது முற்றறிவாகிய திருவடியை யின்றி ஆன்மாக்களாகிய நாம் ஒன்றை அறியவும் இயலேம், அவரது முற்றுத் தொழிலாகிய திருவடியை யின்றி நாம் ஒன்றையும் செய்யவும் இயலேம் என்று உணர்ந்து நிற்றலே அவரது திருவடியைச் சூடுதல் என்பதன் பொருளாம்.

(7) தாள்தலை என்னும் இரண்டும் வேறு சொற்களா யும், அவ்விரண்டும் புணருங்கால் தாடலை என ஒன்ருயும் நிற்குமாறுபோல, சீவான்மா பரமான்மா என்னும் இரண்டும் வேறு பொருள்களாயும், முத்தித் தசையிலே ஆன்மபோத மும் கண்ணொளியும்போல வேறுபடாது அநந்நியமாயும் நிற்கும்.

(8) உலகத்திலே புதல்வனிடத்திற் செய்யும் வழிபாடு தந்தையர்க்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைவிக்குமன்றோ? அந்த முறைமைபற்றி விநாயகக் கடவுளை வழிபடுதல் சிவபெருமானை மகிழ்விக்கும் என்பதும், அவ்விருவர்க்கும் பேதமின்றும் என்பதும் போதர, வில்லார் அருளிய பொல்லார் இணைமலர் புனைவரே என்றார்.

(9) மேலே கூறிய "கல்லால்" என்றற் றொடக்கத்த வஞ்சித்துறைச் செய்யுள் கல், ஆல், நிழல், மலைவு, இல்லார், அருளிய, பொல்லார், இணை, மலர், நல்லார், புனைவர், ஏ என்னும் பன்னிரண்டு சொற்களையுடையது.

(10) இந்தப் பன்னிரண்டு சொற்கள் கொண்டு இந்த நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் அமைக்கப்பெற்றது எனவும்,

(11) கல், ஆல், நிழல், மலைவு, இல்லார், அருளிய என்னும் முன் ஆறு சொற்கள் கொண்டு பொதுவதிகாரமாகிய பொது வியல்பு முன் ஆறு சூத்திரங்களாற் கூறப்பட்டது எனவும்

(12) பொல்லார், இணை, மலர், நல்லார், புனைவர், ஏ என்னும் பின் ஆறு சொற்கள் கொண்டு உண்மையதிகார மாகிய சிறப்பியல்பு பின் ஆறு சூத்திரங்களாற் கூறப் பட்டது எனவும்,

(13) கல், ஆல், நிழல் என்னும் மூன்று மொழிகள் கொண்டு பதி, பாசம், பசு என்னும் முப்பொருள்களுக்குப் பிரமாணம் கூறுவதாகிய பிரமாணவியல் முதலாம், இரண்டாம், மூன்றும் சூத்திரங்களாற் கூறப்பட்டது எனவும்,

(14) மலைவு, இல்லார், அருளிய என்னும் மூன்று மொழிகள்கொண்டு அந்தப் பசு பாசம் பதி என்னும் முப் பொருள்களுக்கு இலக்கணம் கூறுவதாகிய இலக்கண வியல் நான்காம், ஐந்தாம், ஆறும் சூத்திரங்களாற் கூறப் பட்டது எனவும்,

(15) பொல்லார், இணை, மலர் என்னும் மூன்று மொழிகள் கொண்டு, அப் பதி, பசு, பாசங்களின் இலக் கணத்தை அறிந்து அதனாலாகிய பயன் பெறுதற்கு ஏதுவா யுள்ள சாதனம் கூறுவதாகிய சாதனவியல் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் சூத்திரங்களாற் கூறப்பட்டது எனவும்,

(16) நல்லார், புனைவர், ஏ என்னும் மூன்று மொழிகள் கொண்டு அச்சாதனத்தானாகிய பயனை வகுத்துக் கூறுவ தாகிய பயனியல் பத்தாம், பதினோராம், பன்னிரண்டாஞ் சூத்திரங்களாற் கூறப்பட்டது எனவும் குறிப்பால் உணரக் கிடந்தது.

(17) இங்ஙனம் நூலிலே கூறப்படும் பொருள்களை யெல்லாம் குறிப்பால் தன்னகத்தே அடக்கி நிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமாம் என்று ஓர்க.

[ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் செய்த சிவஞானபோத வசனாலங்கார தீபம் - ஸ்ரீ பாஷ்யம்]

சிவஞானபோதம்:— சூத்திரம், கருத்துரை, கண்ணழிவு, அதிகரணம் வார்த்திகப் பொழிப்பு, சூரணி, விவரண சூசீபத்திரம்

I பொது அதிகாரம் - 1. பிரமாண இயல்

முதற் சூத்திரம் (பதி உண்மை)

அவள்அவள் அதுஎனும் அவைமு வினைமையின்[2] என்பது சூத்திரம்.
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்[2]
அந்தம்ஆதி என்மனூர் புலவர்[3]

கருத்துரை:— என்னுதலிற்றோ வெனின், சங்காரகாரணனாயுள்ள முதலையே முதலாக வுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துத னுதலிற்று.

கண்ணழிவுரை அதிகரணம்	வார்த்திகப் பொழிப்புரை	சூர்ணி
1. [1]அவன் அவள்அது எனும் அவை முவினைமையின்	[1]ஈண்டு, உளதாய் ஒருவனொருத்தியோன் றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத் தென்றது:— தோற்றமு மீறும் உள்ளதன்பாலே கிடத்த லின்.	[1]சகம் பிறப்பிருப் பிறப்பாகிய முத்தொ ழிலை யுடையது.

கண்ணழிவுரை அதிகரணம்	வார்த்திகப் பொழிப்புரை	சூர்ணி
2. [2]தோற்றிய திதியே ஒடுங்கி மலத் துளதாம்.	[2]இனி, ஒடுங்கின சங்காரத்தி னல்லது உற்பத்தியில்லை யென்றது:— இல்லதற்குத் தோற்ற மின்மையின், உள்ள தற்குச் செய்வோறின்றிச் செய்வினையின்மை யின்.	[2]அது அரனுலே உடையது.
3. [3]அந்தம் ஆதி	[3]இனி, சங்காரமே முதலென்றது;— சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர் வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்தரமின்றி நிற்றலான்.	[3]மற்றிருவரும் முத் தொழிற்படுவர்கள்.

இரண்டாஞ் சூத்திரம்

(பாச உண்மை – பதியின் போது இலக்கணம்)

அவை தானே யாய்[1] இரு வினையின்[2]
போக்கு வரவு புரிய[3] ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.[4]

என்பது சூத்திரம்.

கருத்துரை:— என்னுதலிற்றே வெனின், புனருற்பவம் வருமா றுணர்த்துதனுதலிற்று.

4. [1]அவையே தானே ஆய்	[1]ஈண்டு, இவ்வான்மாக்கள் பலவும் முதல் வன்ருனேயாய் நிற்குமென்றது:— அத்துவிதமென்ற சோல்லானே ஏகமேன்னில், ஏகமென்றுசுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சோல்லே அந்நியநாத்தியையுணர்த்து மாயிட்டு.	[1]அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.
5. [2]ஆணையின் இருவினையின்	[2]இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனுணையின் வருமெனறது:-— ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினை யாகலான்.	[2]உயிர்களுக்குக் கன்ம பலனை அரனே கோடுப்பன்
6. [3]போக்கு வரவு புரிய	[3]இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது:— தோற்றமு மீறும் உள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.	[3]உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.
7. [4]ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும்	[4]இனி, நீக்கமின்றி நிற்குமன்றே யேன்றது. அவன் ஏகாநேகமிரண்டு மின்றிச் சருவ வியாபியாய் நிற்றலான்.	[4]அரன் சருவ வியாபகன். (ஆதலின் தனது ஆணையின் நீக்கமின்றி நிற்பன்)

மூன்ருஞ் சூத்திரம் (பசு உண்மை)

உளதில தேன்றலின்[1] எனதுடல் என்றலின்[2]
ஐம்புலன்[3] ஒடுக்கம் அறிதலின்[4] கண்படில்
உண்டிவினை யின்மையின்[5] உணர்த்த உணர்த
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா[7]. [லின்[6]

என்பது சூத்திரம்.

கருத்துரை:- என்னுதலிற்ருேவெனின், ஆன்மப் பிரகாச முணர்த்துதனுதலிற்று.

கண்ணழிவுரை அதிகரணம்	வார்த்திகப் பொழிப்புரை	சூர்ணி
8. [1]இலது என்றலின் ஆன்மா உளது.	[1]ஈண்டு, இலதேன்றலின் ஆன்மா வுளதேன்றது எவற்றினையும் அன்றன் றேனவிட்டு ஆன்மா இலதேன்று நிற்பதுளதாதலின் அதுவே அவ்வான்மாவா மேன்றது.	[1]இல்லை யேன்கிற அறிவுடனே சோல்லுகையிஞலே அறிவுயிர் உண்டு.
௯. [2]எனதுஉடல் என்றலின் ஆன்மா உளது	[2]இனி, எனதுட லேன்றலின் ஆன்மா உளதேன்றது:— என் பதி என் மனையேன்ருற்போல' என்கை என்காலேன நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மேன்றது.	[2]எனது உடல் என்று போருட்பிறிதின் கிழமையாகச் சோல்லுகையிஞலே, உடற்கு வேருய் உயிர் உண்டு.
10. [3]ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது	[3]இனி, ஐம்புலனறிதலின் ஆன்மாவுளதேன்றது: ஐம்புலஞகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தோன்றறியாமையின் இவ்வைந்திஞலும் ஐம்பயனுமறிவதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மேன்றது.	[3]ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வோன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேருய் உயிர் உண்டு.

11. [4]ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது.	இனி, ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென்றது;— நனவின்கட் கனவு கண்டாமேன்றுங் கண்டிலமேன்றும் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மேன்றது.	[4]கனவுடலை விட்டு நனவுடலிலேவருகையினுலே, அக்கனவுடற்கு வேருய் உயிர் உண்டு.
12. [5]கண்படில்உண்டி வினை இன்மையின் ஆன்மா உளது.	[5]இனிக் கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா வுளதேன்றது:— ஒடுங்கினவிடத்து இன்பத் துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத் துன்பஞ் சீவியா நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மேன்றது.	[5]நித்திரையிலும் பிராணவாயுத் தோழில் பண்ணவுஞ் சரீரத்துக் குப் புசிப்புந் தோழிலும் இல்லாத படியினுலே, பிராண வாயுவுக்கு வேருய் உயிர் உண்டு.
13. [6]உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது.	[6]இனி, உணர்த்த உணர்தலின் ஆன்மா உளதேன்றது:— அவன் அறிந்தாங் கறிவனேன் றறிவிக்க வறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மேன்றது.	[6]மறந்து மறந்து நினைக்கிற படியினுலே, மறவாமல் இருக்கிற அரனுக்கு வேருய் உயிர் உண்டு.
14. [7]மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது.	[7]இனி, மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளதேன்றது;— அவை தாம் வேவ்வேறு பேயர் பேற்று நிற்றலான்.	[7]எல்லாத் தத்துவங் களுக்கும் வேறு வேறு பேயர்இருக்கையினுலே அந்தந்தத் தத்துவங்களுக்கு வேருய் உயிர் உண்டு.

2. இலக்கண இயல்

நான்காஞ் சூத்திரம் (பசு இலக்கணம் போது)

அந்தக் கரணம் அவற்றிஞேன் றன்றவை[1]
சந்தித்த தான்மாச் சகசமலத் துணராது[2]
அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.[3]

என்பது சூத்திரம்.

கருத்துரை:— என்னுதலிற்ருே வேனின், இதுவுமது.

கண்ணழிவுரை அதிகரணம்	வார்த்திகப் பொழிப்புரை	சூர்ணி
15. [1]அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று.	[1]ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக் கரணங்களாயுள்ள மஞேபுத்தி யகங்கார சித்தங்களிலோன்றன் றேன்றது:— அவைதாம் பிரகாசமாய் நின்றே அப் பிரகாசமாய் நிற்றலான்.	[1]அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினு லன்றித் தொழில் இல்லாதபடியினுலே, அந்தக் கரணங்களுக்கு வேருய் உயிர் உண்டு.
